# நான் கிருஷ்ண தேவராயன்



வானதி பதிப்பகம்

1

ரா.கி. ரங்கராஜன்

மின்னூலாக்கம் - சீயான்

# நான், கிருஷ்ண தேவராயன்

(முதல் பாகம்)

ரா.கி. ரங்கராஜன்

வானதி பதிப்பகம்
13. தீனதயாளு தெரு
தி.நகர், சென்னை-17.

முதற் பதிப்பு அக்டோபர், 1998
இரண்டாம் பதிப்பு ஜுன் 2001
உரிமை ஆசிரியருக்கு

திருநாவுக்கரசு தயாரிப்பு

---

விலை ரூ. 70.00



| | | |
|---|---|---|
| ☐ | TITLE | NAAN, KRISHNADEVARAYAN PART – I |
| ☐ | AUTHOR | Ra.Ki. RANGARAJAN |
| ☐ | LANGUAGE | TAMIL |
| ☐ | SUBJECT | HISTORICAL NOVEL |
| ☐ | EDITION | SECOND EDITION, JUNE , 2001 |
| ☐ | No. OF PAGES | xxiv + 344 |
| ☐ | PUBLISHED BY : | VANATHI PATHIPPAKAM, 13, DEENADAYALU STREET, THYAGARAYA NAGAR, CHENNAI – 17. |
| ☐ | PRICE | Rs. 70.00 |

---

Laser Typeset at : LKM Computer Prints, Chennai – 17

PRINTED AT M.S. PRINTING WORKS, CHENNAI - 14.



திருப்பதியில் உள்ள சிலை
சின்னாதேவி, திருமலா தேவியுடன்



விஜயநகர
சாம்ராஜ்யம்
நகரங்களும் துறைமுகங்களும்
R. NARMADA
R. TAPTI
R. GODAVARI
R. PENGANGA
AHMADNAGAR
R. BHIMA
BIDAR
GOLKONDA
BIJAPUR
R. KRSNA
KONDAVIDU
MOTUPALLI
GOA
KARWAR
HONAVAR
BHATKAL
IKKERI
VIJAYANAGAR
R. NORTH PENNAR
BARKOR
ULLAL
R. KAVERI
BANGALORE
VELLORE
TIRUPATI
PULKAT
MADRAS
CATURANGAPATTINAM
JINJI
MT. DELLY
CALICUT
DEVANAMPATTINAM
R. KAVERI
NAGAPATTINAM
COCHIN
MADURAI
TUTICORIN
CAPE COMORIN
TALAIMANNAR
KANDI

# அணிந்துரை

## வித்யாவாசஸ்பதி, கலைமாமணி, சிலைமீட்ட செம்மல் டாக்டர் இரா. நாகஸ்வாமி

ஆறுகளில் புதுப்புனல் வரும் நாட்களில் மக்கள் உணர்ச்சிப் பெருக்கிலே திளைப்பார்கள். புது நோக்குடனே புதுப்பொலிவுடனே அனைத்தையும் கண்டு மகிழ்வார்கள். புதுப்புனலிலே பாய்ந்து விளையாடுவார்கள். புதுப்புனலை அவ்வளவு ஆர்வத்துடன் எதிர்பார்ப்பார்கள். எனினும் அவ்வெள்ளம் இரு கரைக்குள் பெருக்கெடுத்து ஓடும் போதுதான் எழிலாய் இருக்கும். கரையை அழித்துக் கொண்டு பாய்ந்தால் ஊருக்கும் மக்களுக்கும் மாக்களுக்கும் மரஞ் செடிகொடிகளுக்கும் அழிவுதான். அதுபோல் கவிதையை, கதையை எழுதும் ஆசிரியனிடம் மக்கள் புதுமையை எதிர்பார்க்கிறார்கள். அப்புதுமைப் படைப்புகளில் உணர்ச்சிப்பெருக்கைக் காண்கிறார்கள்.

மக்களின் உணர்ச்சிகளை நன்கு உணர்ந்து எண்ணிலா எழுத்துக்களைப் படைத்துள்ள முதுபெரும் எழுத்தாளர் ரா.கி. ரங்கராஜன் அவர்கள், 'நான், கிருஷ்ண தேவராயன்' என்னும் இந்நவீனத்தைப் படைத்துள்ளார்கள்.

இந்திய வரலாற்றில் ஒப்பரும் மேதைகளில் சிறந்த அரசன் கிருஷ்ணதேவராயர். தோல்வி என்பதையே அறிந்திராத தீரன். சமயத்துக்கும், கலைக்கும், அரசியல் பண்புக்கும், நாட்டின் முன்னேற்றத்துக்கும், பொருளா தாரத்துக்கும் இம்மாமன்னன் செய்துள்ள பணி

மகத்தானது. அவனது புகழைப் பறைசாற்றும் கல்வெட்டுகள் அவனது சிறப்பைத் தெளிவாக எடுத்துரைக்கின்றன. அவனைப்பற்றி வெளிநாட்டார்கள் வியந்து எழுதிய குறிப்புகள் ஏராளமாக உள்ளன. அவனது உருவச்சிலையும் அவனது தேவியர் திருமலாம்பா, சின்னாதேவி ஆகியோர் சிலைகளும் திருப்பதி கோயிலில் இன்றும் உள்ளன. ஹம்பி, காளத்தி, காஞ்சிபுரம், தில்லை ஆகிய இடங்களில் அவன் கட்டிய கோபுரங்கள் அவனது வானளாவும் புகழை இயம்பி இன்றும் நம்மிடையே திகழ்கின்றன. அம்மாமன்னனது வரலாற்றைப் பின்னணியாகக் கொண்டு இந்நாவலை உருவாக்கியுள்ளார் ரா. கி. ர. அவர்கள்.

இது ஒரு நாவல் தான். ஆனால் இதுகாறும் வந்திராத ஒரு புதுமை அமைப்பிலே தோன்றியுள்ள நாவல் இது. மாமன்னன் கிருஷ்ணதேவராயனே தனது கதையை சொல்வதுபோல் அமைத்திருக்கிறார் ஆதலின் இது புதுமையிற் புதுமை.

ஒரு நாவலைப் படிக்கும்போது எப்படி சுவைத்து படிக்கின்றோமோ, அத்தனை சுவையும் குன்றாது விறுவிறுவெனப் பிரவாகமாக ஓடுகிற நடை, திருப்பங்கள், ஆயினும், இதை மற்ற நாவல்களைப் போல் அல்லாமல் ஒவ்வொரு வரியும் உண்மைச்சம்பவமாகவே நினைக்கும் அளவுக்கு வரலாற்றுச் செய்திகளைப் பின்னி எடுத்துச் செல்கிறார்.

கிருஷ்ண தேவராயனின் ஆட்சிக்காலம் ஈடு இணையற்ற காலம். அவரது ஆட்சியில் சிறந்த அமைச்சர்கள் திகழ்ந்தனர். கவிஞர்கள் திகழ்ந்தனர். நாட்டியக் கலைஞர்களும் கட்டிட கலைஞர்களும் விளங்கினர் வெளிநாட்டோர் வந்தனர் அத்தனை பேருடைய பாராட்டுதலையும் பெற்ற அரசன் கிருஷ்ண

தேவராயர். அவரது பாத்திரத்தை ஒரு குறையின்றி நாவலில் வடிப்பது என்பது எளியது அல்ல. அதிலும் தானே தன் வரலாற்றை கூறுவதுபோலப் படைப்பது மிக மிகக் கடினம். ரா. கி. ர. இப்புதிய மரபில் ஒரு மகத்தான வெற்றியை நிறுவிக் காட்டியுள்ளார்.

அம்மன்னன் காலத்தில் வாழ்ந்த மேதைகள் அத்தனை பேரும் இக்கதையில் உயிரோடு நம் முன் தோன்றுகிறார்கள். அவரவர் இடம் பெறும் இடமும், பெறும் பங்கும் அவரவர் குணத்துக்கும் சிறப்புக்கும் ஏற்ப அமைந்துள்ளன. அக்காலத்துப் பழக்கவழக்கங்களும் அப்படியே சித்தரிக்கப்பட்டுள்ளன. மன்னனின் தாய், அப்பாஜி, அரிதாசர் தெனாலி ராமகிருஷ்ணகவி என ஒரு நீண்ட பட்டியலே போடலாம். இந்நாவலில் புனைந்துரைப் பாத்திரங்கள் எனக் கூறுவதே கடினம். ஆதலின், இது ஒரு வரலாற்று நூல் என்றே கூறவேண்டும். ஆனால் வரலாற்று நூல்கள் சுவையின்றிக் காணப்படும். இது சுவை நிறைந்த வரலாற்று நூல்.

கிருஷ்ணதேவராயரைப் பற்றி இனித் தமிழில் இந்நூலைத்தான் ஆதாரமாகக் காட்டுவார்கள் என்று கூறுகிற அளவுக்குச் சிறந்த நூல். இதை நான் ஒரு புதிய இலக்கியமாகக் கருதுகிறேன். ஆசிரியர் இந்நூல் ஒரு இலக்கியமாகத் திகழவேண்டும் என்பதற்காக எத்தனை வரலாற்றுச் செய்திகளைத் தேடிச் சேகரித்துத் தொகுத் துள்ளார் எனக் காணும்போது வியப்பாக உள்ளது. அராபியக் குதிரைகள் வந்தமை, காகிதம் முதன் முதலில் வந்தமை, போர்த்துக்கீசியர் வருகை, படையெடுப்புகள், மன்னனுக்கு நாட்டியத்தின் பாலிருந்த ஈடுபாடு, வெளிநாட்டோர் குறிப்பிட்டுள்ளது எனப் பல வரலாற்றுச் செய்திகள் மிக அழகாக இடம்பெற்றுள்ளன. புதியதோர் இலக்கியத்தைத் தந்துள்ள ஆசிரியரின் ஆற்றலைப் போற்றுகிறேன்.

புதுமை, புரட்சி என்ற தலைப்பில் நினைத்ததை எல்லாம் கரைகடந்து எழுதுவது எழிலற்று, பயனற்று, சுவையற்று, சமுதாயத்துக்கும் தீங்கு விளைவிக்கும். ஆதலின் அதைத் தவிர்த்து, புதுமை என்னும் **"நோக்கிலே"** என வருங்கால எழுத்தாளர்கட்கு வகுத்துள்ள பழமையில் புதுமை இது. ஆசிரியர் தமிழுக்குச் செய்துள்ள பெரும் தொண்டு என்பதில் ஐயமில்லை. ரா. கி. ரங்கராஜன் அவர்கள் நீடு வாழ்ந்து இது போன்ற பல புதிய பாணிகளைத் தமிழுக்கு அளிக்க இறையருளை இறைஞ்சுகிறேன்.

**இரா. நாகசாமி**

# மூன்று பாராட்டுக்கள்

திரு. ரா. கி. ரங்கராஜனின் இந்த நவீனத்தை சுஜாதா தமிழில் சம்பிரதாயமான சரித்திரக்கதைகளுடன் சேர்க்க முடியாது. கல்கி, சாண்டில்யன், விக்ரமன் போன்றவர்கள் துவக்கி வைத்த ஒரு பாணியில்தான் இப்போதும் சரித்திரக் கதைகள் எழுதி வருகிறார்கள். அவைகளின் இலக்கணத்தை ஓரிரண்டு கதை படித்தாலே அறிந்து கொள்ளலாம். நீண்ட வாக்கியங்கள், செந்தமிழ் நடை, ஒற்றர்கள், குதிரைகள், பட்டோலைகள், தீப்பந்தங்கள், கரிய கண்களுடைய பெண்கள், சோழ ராஜாக்கள் அல்லது குறைந்தபட்சம் பாண்டிய மன்னர்கள், ஓரிரு பல்லவர்கள் (நிச்சயமாகத் தமிழரசர்கள்), அங்கங்கே அடிக்குறிப்புக்கள், இவ்வாறான தடுமாற்றமில்லாத இலக்கணம் சரித்திர நாவல்களுக்கு உண்டு. ரா. கி. ரங்கராஜன் இந்த இலக்கணத்தை முற்றிலும் மீறியிருக்கிறார். அதற்கு முதல் பாராட்டு.

முதலில் தன்மை ஒருமையில் (first person) சொல்லப் படும் கதை. சம்ஸ்கிருதத்தில் பெரும்பாலும் பிராமணர் களைக் கொண்டு தர்பார் நடத்திய தெலுங்கு, கன்னட மன்னனைப் பற்றிய கதையைச் சிறிய சிறிய வாக்கியங்களில் தமிழில் எழுதுவதற்குக் களம் அமைத்துக் கொள்கிறார்.

> "தமிழில் நான் எழுதுவது இதுவே முதல் தடவை யாகையால் அழகழகான சொல்லாட்சியோ கவிதை நயம் பொருந்திய வாக்கியங்களோ இருக்காது. சாதாரண ஜனங்களின் பேச்சுத் தமிழில் நான் எழுதுகிறேன். அதுவும் கூட, தமிழ்ப் புலவர்களுடன் பழகியதால் கிடைத்த பாக்கியம். வில்லிபுத்தூரார் இயற்றிய பாரதத்தைப் பலமுறை திரும்பத் திரும்ப

படித்ததால் சிற்றறிவு பெற்றிருக்கிறேன். அரிச்சந்திர வெண்பாவை இயற்றி ஆசுகவி பாடுவதில் வல்லவராகத் திகழும் வீர கவிராயர் என் சிநேகிதர்."

— இதைச் சொல்வது கிருஷ்ணதேவராயரா அல்லது ரா. கி. ரங்கராஜனா என்கிற பிரமை ஏற்படுகிறது.

சரித்திரக் கதைகளில் எவ்வளவு சரித்திரம் இருக்க வேண்டும் என்பது பற்றிய சர்ச்சைகள் உள்ளன. எழுதுபவர் கட்டாயமாக அந்தக் காலகட்டத்தில் இருந்தவரல்ல, மற்றொரு காலத்தவர். சரித்திர ஏடுகளும் குறையுள்ளவை, வேறுபடுபவை. எனவே சரித்திர சம்பவங்களின் இடைவெளியை நிரப்ப வேண்டியது கட்டாயமாகிறது. அதில்தான் சவாலும் உள்ளது. அப்படி எழுதும்போது நடையும் சம்பவங்களும் 'இப்படித்தான் நடந்தது' என்றில்லாமல் 'இப்படி நடந்திருக்கலாம்' என்று காட்டும் சாகசம் தான் முக்கியம்.

இந்த உத்தியின்படி கிருஷ்ணதேவராயர் தெலுங்குக் காரராக இருந்தாலும் தமிழ் அவருக்கு தெரிந்திருக்க சாத்தியம் உள்ளது என்பதை மிக அழகாகக் கொண்டு வந்து இவருக்கு எப்படித் தமிழ் தெரியும் என்பதைப் பற்றி மேற் கொண்டு சிந்திக்கவே விடாமல் கதையைச் செலுத்தி யிருக்கிறார். அதேபோல்தான் தனக்குப் பிடித்தமான திருமங்கையாழ்வார் பாசுரங்களையும் த்வய மந்திரங் களையும் சரம ஸ்லோகத்தைக்கூடச் சாமர்த்தியமாக உள்ளே கொண்டு வந்து விடுகிறார்.

கதாநாயகன் ஒரு சிறந்த அரசன். அவனே தன் கதையைச் சொல்வதாக எழுதும்போது எழுத்தாளனுக்குப் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. கதை அவனை விட்டு விலக முடியாது. மற்றவர் பற்றிச் சொல்லும்போது அதை அவன் கேட்டுத் தெரிந்திருக்கிறான் அல்லது தெரிந் திருக்கலாம் என்பதற்குத் தக்க சந்தர்ப்ப சாட்சியங்கள் இருக்க வேண்டும். மேலும் தன்மை ஒருமையில் அலங்காரமான வருணனைகளைப் பயன்படுத்துவதில்

கட்டுப்பாடு தேவை. தற்பெருமையாக இல்லாமல் ஒரு யதார்த்தப் போக்கு கொண்டு வரவேண்டும். இவ்வாறான பல இடைஞ்சல்களுக்கிடையே சுவையாகக் கதை சொல்வதில் ரங்கராஜனின் அனுபவமும் திறமையும் ஆராய்ச்சி மனப்பான்மையும் உதவியிருக்கின்றன. ரா, கி. ரங்கராஜன் அவர்கள் குமுதம் இதழில் ஆசிரியர் எஸ்ஏபி அவர்களுடன் பணிபுரிந்த அனுபவம் எந்த வகை எழுத்தையும் பயப்படாமல் முயற்சிக்கும் தன்னம்பிக்கையை அவருக்கு அளித்திருக்கிறது. அதற்காக இரண்டாவது பாராட்டு.

தன்மை ஒருமையில் சரித்திரக் கதை இதுவரை தமிழில் வந்ததே இல்லை. கு.ப.ரா. ஓரிரு சிறுகதைகளில் பயன்படுத்தியிருப்பதாக ஞாபகம். ஆங்கிலத்தில் கூட I, Claudius என்கிற ஒரே ஒரு நாவல்தான் ரோமாபுரி மன்னன் க்ளாடியஸ் தன் கதையைச் சொல்வதாக எழுதப்பட்ட நாவல் என்று நினைக்கிறேன். சரித்திரக் கதைகளை எழுதுவதற்கு ஒரு புராதன நடையைப் பயன்படுத்த வேண்டும் என்கிற விதியும் அர்த்தமற்றது. காலப் பிசகு இல்லாதவரை (anachronism) ஒரு எழுத்தாளன் தன் நடையை சரித்திரக் கதைக்கென்று பழமைப்படுத்தத் தேவையில்லை என்பதையும் ரங்கராஜன் நிருபித்துள்ளார்.

ஆங்கிலத்தில் John Fowlesன் The French Lieutenant's Womanக்குப் பிறகு அதிகம் பேர் அன்றாட நடையில் சரித்திரக் கதைகள் எழுதத் துவங்கினார்கள். அந்த வகையில் ரங்கராஜன் தமிழுக்கு ஒரு முன்னோடி என்று சொல்லத் தோன்றுகிறது. சரித்திரக்கதை எழுதும் பாணியில் ஒரு புதுமையைக் கொண்டு வந்திருக்கிறார்.

> "இருட்டிக் கொண்டிருந்தது. இடியும் மின்னலும் ஓசைப் படுத்துவது வானத்திலா அல்லது என் மனத்திலா என்று தெரியவில்லை... மறுகரை தெரியவில்லை இருந்தாலும் அங்குள்ள நாகரவேடு கிராமம்

தெரிவது போலவும் ஆசாரிய வெங்கட தாத்தை யாவின் மடம் புலப்படுவது போலவும் மடத்தின் வாசலில் சின்னாதேவி நின்று கொண்டு மாயப் புன்சிரிப்புடன் என்னை நோக்கி இரு கைகளையும் நீட்டி வா வா என்று அழைப்பது போலவும் ஒரு பிரமை தோன்றியது."

அந்தப் பிரமை நமக்கும் தோன்றுவதற்கு மூன்றாவது பாராட்டு.

இந்த நாவலின் 'நான்' கிருஷ்ண தேவராயர். அவருடைய கதையை எழுதுவதற்கு ரங்கராஜன் எவ்வளவு உழைத்திருக்கிறார், எத்தனை புத்தகங்கள் படித்திருக்கிறார் என்பதை 'நன்றி சொல்லும் நேரம்' என்கிற கட்டுரையில் தந்திருக்கிறார். ஏறத்தாழ நூறு புத்தகங்களின் ஆயிரக் கணக்கான பக்கங்களைப் புரட்டிப் படித்து, பல அறிஞர்களுடன் பேசி, இடங்களுக்குச் சென்று பார்த்து, ஏன், கிருஷ்ண தேவராயர் பற்றிய தெலுங்கு திரைப்படங் களைக் கூட விட்டு வைக்காமல் ஆராய்ந்து எழுதப்பட்ட நாவலில் பண்டிதத்தனம் தலை தூக்காமல் இருப்பது ஆச்சரியமே. தேவதாசிகளையும் அன்றாட மக்களையும் அமைச்சர்களையும் மன்னர்களையும் நூற்றுக்கணக்கான கதை மாந்தர்களாக மிகச் சுலபமாக கதையுள் இழைத்துப் பின்னியிருக்கிறார். அந்தப் பாத்திரங்களில், ராஜியக் காரணங்களுக்காக மணந்து கொள்ளும் திருமலா தேவியும் சக்ரவர்த்தியின் மனத்தை ஆக்ரமிக்கும் சின்னாதேவியும் சிறந்த பாத்திரப் படைப்புகளுக்கு உதாரணங்கள்.

இந்த நாவலுக்கு முன்னுரை எழுதச்சொல்லி ஒரு முக்கியமான, இன்பமான வாசிப்பு அனுபவத்தை ஏற்படுத்திக் கொடுத்ததற்கு நண்பர் ரா. கி. ரங்கராஜன் அவர்களுக்கு நன்றி.

**சென்னை – 18**

**சுஜாதா**

# நன்றி சொல்லும் நேரம்

இந்த நவீனத்தை எழுத முடிந்தது குறித்து ஏராளமான பேருக்கு நான் நன்றி சொல்ல வேண்டும்.

இப்படியொன்றை எழுதும் எண்ணத்தை என்னுள் விதைத்தவர் கமல்ஹாசன். ஐந்து ஆண்டுகட்கு முன், 'I, Clandius' என்ற ஆங்கிலப் புத்தகத்தைக் கொடுத்து, அதன் முகப்புப் பக்கத்தில் 'அன்புடன் திரு. ரா.கி.ர. அவர்கட்கு, தமிழில் சொல்லுங்கள். உலகைப் புரிந்து கொள்வோம்' என்று எழுதித் தந்தார். தன்னை மிகவும் கவர்ந்த புத்தகம் அது என்றும் சொன்னார். இலக்கிய ரசனை மிகுந்தவர் சொல்வது சரியாகத்தான் இருக்கும் என்று ஆர்வத்துடன் படித்தேன்.

ரோமானியச் சக்கரவர்த்தியான க்ளாடியஸ், தன் வாழ்க்கையைத் தானே எழுதியதாகக் கற்பனை செய்து மிக அருமையாக அந்த நாவலை எழுதியிருந்தார் ஆசிரியர். க்ளாடியஸின் காலத்தையும் க்ளாடியஸுக்கு முற்பட்டவர் களின் காலத்தையும் ஆழமாக ஆராய்ந்தறிந்து சரித்திரப் பின்னணிகளுடன் சொந்தக் கற்பனையையும் கலந்து, நவீன காலத்து நாவலைப் போலப் படைத்திருந்தார். வரலாற்று அறிஞர் கிப்பன் எழுதிய The Rise and Fall of the Roman Empire என்ற மாபெரும் புத்தகமும், வேறு பல நூல்களும், பிரயாண வசதிகளும் உதவியாளர்களின் துணையும் அவருக்குக் கை கொடுத்திருக்கும்.

கமல்ஹாசனின் யோசனைப்படி அந்த நவீனத்தை மொழிபெயர்க்கலாமென்று தான் முதலில் நினைத்தேன்.

ஆனால் அது மிகவும் சிரமமான வேலையாகத் தோன்றியது. ரோம சாம்ராஜ்யத்தைப் பற்றி முதலில் எனக்குத் தெரிந்திருக்க வேண்டும். படிக்கும் வாசகர்களுக்கும் சிறிது தெரிந்திருக்க வேண்டும். இரண்டும் சந்தேகமாக இருக்கையில் எடுத்துக்கொள்ளும் முயற்சி வெற்றி பெறுமா என்ற அச்சம் ஏற்படடது.

'நான்' என்று சொல்வது போலத் தமிழில் இதுவரை யாரும் சரித்திரக் கதை எழுதவில்லை என்பதால், அது மாதிரி ஒன்று நாமே எழுதினால் என்ன என்ற அசட்டுத் தைரியத்துடன் எண்ணத் தொடங்கினேன். (வேறு இந்திய மொழியில் வந்திருக்கிறதா என்று தெரியவில்லை.) சேர, சோழ, பாண்டியர்களை வைத்து நிறையப் பேர் சிறப்பாக எழுதியிருப்பதால் அந்த வழிக்குப் போகாமல், வேறு சரித்திரங்கள் யோசித்தேன். மீரா, அக்பர், சிவாஜி என்று பலர் கண்முன் தோன்றினார்கள். கடைசியில் கிருஷ்ண தேவராயரைத் தேர்ந்தெடுத்தேன்.

அது நல்லதோ, கெடுதலோ, இஸ்லாமியர்களின் ஆதிக்கம் வட இந்தியாவில் வேரூன்றிய அளவுக்குத் தென்னிந்தியாவில் புக முடியாமல் தடுத்து நிறுத்தியவர் மாமன்னர் கிருஷ்ணதேவராயர் என்பதில் சந்தேகமில்லை. (காலம்: கி.பி. 1509-1530) சுமார் இருபத்தொன்பது ஆண்டு மட்டுமே ஆட்சி புரிந்த இவர், ஏறத்தாழத் தென்னிந்தியா மொத்தத்தையும் தன் பிடியில் வைத்திருந்தார். தென்னிந்தியர்களின் சமூக, அரசியல், கலாசாரத் துறைகளில் விஜயநகரப் பேரரசு செலுத்திய செல்வாக்கைப் போல் வேறு எந்த ஆட்சியும் செய்யவில்லை. ஆகவே அவரைக் கதாநாயகனாகத் தேர்ந்தெடுத்தேன்.

கிருஷ்ண தேவராயரைப் பற்றி வரலாற்றுக் குறிப்புக்களும் புத்தகங்களும் நிறையவே கிடைத்தன. ஆனால் எல்லாம் ஆங்கிலத்தில்தான். கன்னடமும்

தெலுங்கும் எனக்குத் தெரிந்திருந்தால், இந்த நாவலில் தென்படக்கூடிய பல குறைகளைத் தவிர்த்திருக்க முடியும்.

கிருஷ்ண தேவராயரைக் கதாநாயகனாக வைத்து எழுதுவது என்று முடிவு செய்து கொண்டதும், அதற்கான தகவல்களைச் சேகரிக்கத் தொடங்கினேன். கையில் கிடைத்த புத்தகமெல்லாம் படித்தேன் கன்னிமரா நூலகத்திலும் அயனாவரம் வட்டார நூலகத்திலும் கிடைத்த பழைய புத்தகங்களிலிருந்து ஜெராக்ஸ் பிரதிகள் எடுத்துக் குவித்தேன். இந்த வேலையிலேயே மூன்றாண்டுக் காலம் சென்றது. நாவல் எழுத வேண்டும் என்கிற ஆர்வத்தைக் காட்டிலும், இப்படித் தகவல் திரட்டுவதே சந்தோஷமான பொழுது போக்காகவும் பெருமைக்குரிய சாதனையாகவும் தோன்றியது. குவிந்திருக்கும் குறிப்புக்களை நண்பர்களிடம் பெருமையுடன் காடடி, மார் தடடிக் கொண்டேன்.

அடுத்த வேலையாக அந்தக் குறிப்புக்களைத் தொகுக்கத் தொடங்கினேன். சரளா என்ற உழைப்பாளியான ஒரு பெண் உதவி செய்தார். அவருடைய துணையில், தமிழ்ப் புலவர்கள், கிருஷ்ண தேவராயரின் படையெடுப்புக்கள், பாமினி சுல்தான்கள், விஜயநகர ஆடசியில் வரி வசூல், உடன்கட்டை, நாட்டியம், கோவில்கள், போர் முறைகள், படங்கள் இப்படி, சுமார் நாற்பது தலைப்புக்களில் எல்லாத் தகவல்களையும் பிரித்து, ஒவ்வொன்றுக்கும் ஒரு மணிலாக் காகிதப் பை தயாரித்து, உள்ளே என்னென்ன விவரங்கள் உள்ளன என்பதை அந்தப் பைகளின்மீது எழுதி வைத்தேன்.

'நான், கிருஷ்ண தேவராயன்' என்ற தலைப்பில் நாவல் எழுதப் போகிறோம் என்பது ஓர் இனிய கனவு என்ற அளவில் நின்றதே தவிர, நிஜமாக எழுதுவேனா என்று எனக்கே சந்தேகமாகத்தான் இருந்து வந்தது.

ஒருநாள் ஆனந்த விகடன் ஆசிரியர் திரு. எஸ். பாலசுப்பிரமணியத்தைப் பார்த்தபோது, 'நான், கிருஷ்ண தேவராயன்' என்கிற தலைப்பில் ஒரு சரித்திரக் கதை எழுத நினைத்திருக்கிறேன் என்று பேச்சோடு பேச்சாய்ச் சொன்னேன். 'அருமையாக இருக்கும், உடனே எழுதுங்கள்' என்று அன்புக் கட்டளையிட்டு, விகடனில் அறிவிப்பும் கொடுத்துவிட்டார் என்னைப் பாராட்டிப் புகழ்ந்து, உற்சாகப்படுத்தி அவர் சொன்ன வாக்கியங்களை இங்கே எழுத எனக்குக் கூச்சமாக இருக்கிறது.

ஆனந்த விகடனில் தொடர்கதையாக எழுத ஆரம்பித்தேன். முதல் அத்தியாயத்திலிருந்து கடைசி அத்தியாயம் வரையில் விகடன் அலுவலகத்தினர் எனக்குப் பல வகையிலும் கைகொடுத்தார்கள். ஒவ்வொரு வாரமும் நான் எழுதிக் கொடுத்த குறிப்புக்களின்படி ஓவியர் மாருதி சித்திரங்கள் வரைந்து அழகுபடுத்தினார்.

கதை வளர வளரத்தான் எவ்வளவு கஷ்டங்கள் இருக்கின்றன என்பது புரிந்தது. அதே சமயம், எனக்கு அன்புடன் வழிகாட்ட எவ்வளவு அறிஞர்களும் நண்பர்களும் இருக்கிறார்கள் என்ற உண்மையும் புரிந்தது.

பதினாறாம் நூற்றாண்டு சம்பந்தப்பட்ட பல புத்தகங்களைத் தனது நூலகத்திலிருந்து தேடி எடுத்துத் தந்தவர் திரு. ஸ்ரீவேணுகோபாலன் (புஷ்பா தங்கதுரை). அனுபவமுள்ள கதாசிரியராகையால், கதையை எப்படிக் கொண்டு செல்ல வேண்டுமென்று யோசனை களும் கூறினார். குறிப்பாக, ஸஸ்பென்ஸை மறந்து விடாதீர்கள்,' என்று எச்சரித்தார். கடைசி வரை அதை ஞாபகம் வைத்துக் கொண்டேன்.

தொல்பொருள் ஆராய்ச்சிகளில் புகழ் பெற்று விளங்கும் திரு. ஆர். நாகசாமி, அந்தக் காலத்துச் சாலைகள், சத்திரங்கள், உணவு வகைகள் முதலியன பற்றிச் சுவையான தகவல்களைச் சொன்னார். கன்னிமரா நூலகர் திரு. ஆவுடையப்பனும் அரசு தொல்பொருள் துறை அதிகாரி

திரு. டி. சத்தியமூர்த்தியும் எனக்குத் தேவைப்படும் புத்தகங்களை உடனுக்குடன் எடுத்துத் தந்து உதவினார்.

பாகவதமேளா, குச்சுப்புடி ஆகியவற்றைப் பற்றி, மியூசிக் அகாடமி செயலாளர் திரு,. டி.எஸ். பார்த்தசாரதி விவரம் சொன்னார். பரத நாட்டியம் குறித்து பத்மா சுப்ரமணியத்திடம் விசாரித்தபோது, சம ஸ்தானம், மண்டல ஸ்தானம் ஆகியவை பற்றிப் போன் மூலம் விவரித்தார். ஸ்ரீநிதி ரங்கராஜன் (இப்போது ஸ்ரீநிதி கார்த்திக்) 'அரைமண்டி' என்பது என்னவென்று விளக்கிய தோடு, எனக்காகக் கொஞ்ச நேரம் தன் இல்லத்தில் ஆடியும் காட்டினார்,

கர்னாடக சங்கீதம் சம்பந்தப்பட்ட தகவல்களைத் திருமதி மணி கிருஷ்ணஸ்வாமியிடம் கேட்டறிந்தேன்.

தமிழிலும் தெலுங்கிலும் புலமை பெற்ற அறிஞர் திரு. மு. ஜகன்னாத ராஜா, கிருஷ்ண தேவராயரின் 'ஆமுக்த மால்யத' காவியத்தைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டிருக்கிறார். அந்தப் புத்தகம் எனக்கு மிகவும் பயன்பட்டது. அதன் வரிகளைச் சில இடங்களில் அப்படியே சேர்த்துள்ளேன். அத்துடன் நேரிலும், தபால் மூலமும் பல செய்திகளைக் கொடுத்தார்.

என் மதிப்புக்குரிய நண்பர் குன்றத்தூர் டாக்டர் ஜே.ஆர். கிருஷ்ணமூர்த்தி, சித்த வைத்தியத்தைப் பற்றிப் பல அரிய தகவல்களைச் சொன்னார். எம்ஜிஆர் மெடிக்கல் லைப்ரரியின் நிர்வாகி, நூலகத்தில் பல குறிப்புக்கள் எடுத்துக் கொள்ள உதவினார்.

வட இந்தியக் காவியங்கள், கலைஞர்கள் குறித்த விஷயங்களைப் பன்மொழிப் புலவர் ரா, சௌரிராஜன் (சௌரி) சொன்னார்.

முகம்மதியர்களா? இஸ்லாமியர்களா? முகலாயர் களா? எப்படிக் குறிப்பிடுவது சரியாக இருக்கும் என்று என்

நெடுநாளைய நண்பர் மௌல்வி எம்.ஏ. அப்துல் வஹ்ஹாப்பிடம் கேட்டபோது, பொதுவாக முசல்மான்கள் என்று குறிப்பிடுவதே சரியாக இருக்கும் என்று அன்புடன் அறிவுரை கூறினார்.

கை ரேகை பற்றிக் காலம் சென்ற சோதிட வல்லுனர் புலியூர் பாலுவும், குஹ யோகம் பற்றிச் சோதிட திலகம் டாக்டர் கே. பார்த்தசாரதியும் குறிப்புத் தந்தார்கள். எந்த நட்சத்திரம், எந்த மாதத்தில், இரவு நேரத்தில் எந்த இடத்தில் இருக்கும் என்பது குறித்து வானவியல் விஷயங்களில் தேர்ச்சி பெற்ற எழுத்தாள நண்பர் மகரம் கூறினார்.

வைணவ சம்பிரதாயங்களையும் சடங்குகளையும் தெரிந்து கொள்ளத்தான் மிகவும் சிரமப்பட்டுப் போனேன். அந்த விஷயத்தில் அக்னிஹோத்ரம் ராமானுஜ தாத்தாசாரிய ஸ்வாமிகளும், சென்னை பல்கலைக் கழக வைணவத் துறை பேராசிரியரும் 'கீதாசாரியன்' பத்திரிகை ஆசிரியருமான திரு. எம். ஏ. வேங்கடகிருஷ்ணன் அவர்களும் எனக்குப் பெரிதும் உதவி செய்தார்கள். கொஞ்சம் கற்பனை சேர்த்திருக்கிறேன். என்றாலும், கிருஷ்ண தேவராயரும் சின்னாதேவியும் வைணவ சம்பிரதாயப்படி எப்படி இணைய முடியும் என்ற அடிப்படையைத் திரு வேங்கடகிருஷ்ணன்தான் சொல்லித் தந்தார்.

கிருஷ்ண தேவராயரின் அரண்மனை, அலங்காரம் பற்றி சிறிது தெரிந்து கொள்வதற்கு உதவியாகத் திரு. ஏவிஎம். சரவணன் இரண்டு தெலுங்குத் திரைப்படங்களின் வீடியோ கேசட்டுகளை எங்கெங்கோ கேட்டுப் பெற்றுத் தந்தார். அவற்றைத் திரையில் போட்டுப் பார்த்தும் சில விஷயம் தெரிந்துகொண்டேன்.

எனக்கு நினைவு உள்ளவரையில் மேற்கண்ட அன்பர்களின் பெயர்களை நன்றியுடன் குறிப்பிட்டுள்

ளேன். எவர் பெயரேனும் விட்டுப் போயிருந்தால் பொறுத்தருள வேண்டும்.

'கிருஷ்ண தேவராயனை மாமன்னன், சக்கரவர்த்தி என்று சித்திரிப்பதோடு மனிதனாகவும் காட்டுங்கள். அவனுக்கு முதுகு அரித்தது, சொறிந்து கொண்டான் என்று எழுதுங்கள்' என்று நண்பர் சுஜாதா சொன்னார். நடுநடுவே அவரை ஞாபகப்படுத்திக் கொண்டேன். ஓரிடத்தில், தான் உட்கார்ந்திருக்கும் சிம்மாதனத்தின் அசௌகரியம் பற்றிக் கிருஷ்ணதேவராயர் சலித்துக்கொள்வதாகக்கூட எழுதியிருக்கிறேன்.

கிருஷ்ண தேவராயர் நல்ல ரசிகர். தமிழ்ப் புலவர்கள் உட்படப் பல கவிஞர்களிடம் நெருங்கிப் பழகி நடபுப் பூண்டிருந்தார். அதைச் சாக்காக வைத்து, அவர் பல தமிழ்ப் பாசுரங்களைப் பாடுவதாகவும் நினைத்துக் கொள்வதாகவும் எழுதியிருக்கிறேன்.

'நான்' என்று எழுதியதால், கதையின் நடுவே ஆதாரத்துக்கான அடிக்குறிப்புக்களை கொடுப்பது பொருத்தமாகப் படவில்லை. ஆனால், சுவையாகத் தோன்றும் எந்த விஷயத்துக்கும், புதுமையாகத் தெரியும் எந்தச் சம்பவத்துக்கும் ஆதாரம் இருக்கிறது (படடியல் பார்க்கவும்). அன்றைய சமூக, கலாசார வரலாற்றுத் தகவல்களின் அடிப்படையில்தான் கதையைக் கட்டியுள்ளேன்.

கிருஷ்ண தேவராயரின் காலத்துக்குப் பிறபடட நபர்களோ, விவரங்களோ, போர்களோ இடம் பெற்றால் நான்' என்று எழுதியது கேலிக் கூத்தாகிவிடும். ஆகவே கூடுமான வரையில் எச்சரிக்கையாக இருந்திருக்கிறேன். அப்படியும் ஏதேனும் ஒன்றிரண்டு தவறுகள் நேர்ந்திருக்கக் கூடும்.

வாள் போரைப் பற்றி நன்கு தெரிந்து கொள்ள வேண்டுமென்று பழைய சினிமா ஸ்டண்ட் நடிகர்களிடம் கேட்டேன். யாரும் சரியாகச் சொல்லவில்லை.

ஹம்பிக்கு நேரில் சென்று பார்க்க ஆசைப்பட்டேன். பயங்கரமான வெய்யில் காலமாக இருந்ததால் உடல் நிலை ஒத்துக்கொள்ளவில்லை. புத்தகங்களையும் படங்களையும் வைத்தே சரி செய்ததால், சிற்சில பிழைகள் ஏற்படடிருக்கும்.

கிருஷ்ண தேவராயரின் காலத்து நகரங்கள் பலவற்றுக்கு, அன்றிருந்த பெயர் வேறு. பிற்காலத்தில் வந்த பெயர்கள் வேறு. தெலுங்கு மொழியோ கன்னட மொழியோ தெரிந்திருந்தால், பழைய பெயர்கள் என்னவென்று புரிந்துகொண்டிருக்க முடியும். நான் படித்ததோ ஆங்கிலப் புத்தகங்கள். அவற்றில் இந்தக் காலத்துப் பெயர்களைத்தான் கொடுத்திருக்கிறார்கள். இதனால் சில தவறுகள் நேர்ந்திருக்கலாம்.

கிருஷ்ண தேவராயரின் படையெடுப்புக்களையும் போர்களையும் பற்றி வரலாற்று ஆசிரியர்கள் விவரமாகவே தந்துள்ளார்கள். எனினும், கதையின் சௌகரியத்தை முன்னிட்டு அந்தப் போர்கள் நடந்த வருடங்களை முன்பின்னாகச் சிறிது மாற்றியிருக்கிறேன். ஆனால் நடந்த யுத்தங்களை விடவுமில்லை. நடக்காத யுத்தங்களைச் சேர்க்கவுமில்லை. எனினும் தமிழ் நாட்டில் அவர் நடத்திய போர்களைக் குறித்தோ, செய்த பயணங்களைப் பற்றியோ விவரமான தகவல்கள் கிடைக்கவில்லை. இன்னும் தீவிரமாக முயன்றிருந்தால் கிடைத்திருக்குமோ என்னவோ.

இந்த நாவலை எழுதுவதில் சில சங்கடங்கள் இருந்தன. கிருஷ்ண தேவராயரின் அரசில் எல்லாப் பெரிய பதவிகளிலும் அந்தணர்கள்தான் இருந்தார்கள் என்பது வரலாற்று உண்மை. படைத் தலைவர்களாகக்கூடப் பிராமணர்களை மட்டுமே நியமிக்கவேண்டுமென்று அந்த மாமன்னர் கொள்கை வைத்திருந்தார் கிருஷ்ண

தேவராயரின் காலத்தில் மேல் சாதியினரின் ஆதிக்கம் மிக அதிகமாகவும் தாழ்த்தப்பட்ட சாதியினரின் கஷ்டங்கள் மிக மிகுதியாகவும் இருந்தன. அன்று 'இந்து மதம்' என்ற பெயர் ஏற்படவில்லை. 'சனாதன மதம்' என்றே நூல்களில் குறிக்கப்பட்டு வந்தன. நான் இன்றைய மக்களின் உணர்வுகளை மனத்தில் கொண்டு இந்த விவரங்களைப் பூசி மெழுகிவிட்டேன். சமூக, அரசியல் வரலாற்றை மட்டுமே எழுதும் ஆசிரியர்களின் பொறுப்பு அது.

சிறிய துணுக்கானாலும் சரி பெரிய நாவலானாலும் சரி, என் ஆசிரியரும் ஆசானுமான எஸ்.ஏ.பி. அவர்கள் கற்றுத் தந்த வழிகளின் படிதான் எழுதி வருகிறேன்., இந்த நாவலும் அப்படித்தான். ஆனால் ஒரே ஒரு விஷயத்தில் அவருடைய அறிவுரையைத் தவற விட்டுவிட்டேன். 'முடிந்த அளவு தகவல்கள் சேகரித்து வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் அவ்வளவையும் கொட்ட வேண்டுமென்று ஆசைப்படாதீர்கள்' என்று அவர் சொல்லியிருக்கிறார். 'நான், கிருஷ்ண தேவராயன்' நாவலில் அந்தக் கட்டளைகளை மீறி, சுவாரஸ்யமாகத் தோன்றிய எல்லா விஷயங்களையும் பேராசையுடன் கொட்டி விட்டேன். இன்னும் சொல்லப் போனால் சேகரித்த சுவையான துணுக்குகளைச் சொல்வதற்காகவே சில சம்பவங்களை வலியச் சேர்த்திருக்கிறேன். இது காரணமாகக் கதை கொஞ்சம் போரடிக்கக் கூடும். மன்னியுங்கள்.

அழகிய முறையில் இந்த நாவலை வெளியிட்டுள்ள வானதி பதிப்பகத்துக்கும், அணிந்துரை அளித்து உதவிய டாக்டர் இரா. நாகஸ்வாமி அவர்களுக்கும், சுவையான முன்னுரை தந்த திரு. சுஜாதாவுக்கும், இந்த நாவல் எழுதும் போது எனக்கு ஏற்பட்ட எரிச்சல்களுக்கும் கோப தாபங்களுக்கும் ஈடு கொடுத்து உதவி செய்த என் மனைவி கமலாவுக்கும் என் நன்றி.

**ரா.கி. ரங்கராஜன்**

## இந்த நாவலுக்குத் துணை செய்த புத்தகங்கள்:

1. A Forgotten Empire – Robert Sewell
2. Sources of Vijayanagar Empire – Dr. S. Krishnaswamy Iyengar.
3. Understanding Kuchipudi – C.R. Acharya, Mallika Sarabai.
4. The Village Gods of South India – Henry Whitehead
5. Never To Be Forgotten Empire – B. Suryanarain Rao
6. Hindu Feasts, Fasts and Ceremonies – Pandit S.M. Natesa Sastri
7. A Historial Sketch of Telugu Literature– T. Rajagopal Roa
8. Great Composers – Prof. P. Sambamurthy
9. Political and Cultural History of Karnataka – Phalaksha
10. Devotional Poets and Mystics – Publications Division, Government of India.
11. Devadasi System – K.C. Tarachand
12. Devadasi System in Medieval Tamil Nadu – Dr. K. Sadasivam
13. Hampi Ruins – A.H. Longhurst
14. Sri Krishna Devarayana Dinachari (Kannada) – Edited by Dr. V. S. S. Acharya
15. History of Medieval India – L.P. Sharma
16. Telugu Proverbs
17. The Suryavamsi Gajapathis of Orissa – Dr. R. Subramaniam
18. Sculpture Art of Tirumala Tirupathi Temples – K.V. Raman
19. Castes and Tribes of Southern India – Edgar Thurston
20. History of Tirunelveli – Bishop Caldwell
21. Religions in Vijayanagar Empire – Konduri Sarojini Devi

22. Tamil Temple Myths – David Dean Schulman
23. Studies in the History of India with Special Reference to Tamil Nadu – Dr. K.K. Pillai
24. Medical Education and Research – Prof. O.P. Jaggi
25. History of Indian Medicine – Gribindranath Mukhopadyaya
26. Indian System of Medicine – O.P. Jaggi
27. History of Siddha Medicine – N. Kandasami Pillai
28. The Mysore Archaelogical Survey – Karnataka Government
29. Mysore Gazettee : Medieval – C. Hayavadana Rao
30. The Position of Women during Vijayanagara Period – Dr. N. Saraswati Nanniah
31. History of Christianity in India – Joseph Thekkedath
32. Administrative and Social Life under Vijayanagar – T. V. Mahalingam
33. A Study of Prostitutes in Bombay – S.D. Punekar and Kamala Rao
34. Music of Madhva Monks of Karnataka – Dr. R. Satyanarayana
35. History of the Nayaks of Madura – R. Sathyanatha Iyer
36. History of South India – Medieval Period – P. N. Chopra, T. K. Ravindran, N. Subramanian
37. Hindu Manners, Customs and Ceremonies – Abbe J.A. Dubois.
38. *ஆபாணகமஞ்சரி (சம்ஸ்கிருதப் பழமொழிகள்) — டி.வி. பரமேசுவர ஐயர்*
39. *பர்த்ருஹரி நீதி சதகம் (தமிழ் மொழிபெயர்ப்பு) — வி, கோபால ஐயங்கார்*

40. சிதம்பரம் ஸ்ரீ நடேச ஸஹஸ்ரநாம ஸ்தோத்திரம் — ஆங்கீரஸ எஸ். வேங்கடேச சர்மா

41. 108 ஸ்ரீவைஷ்ணவ திவ்விய தேசங்கள் — டாக்டர் ஆர். இராமானுஜம்

42. ஸ்ரீ அன்னமாச்சார்யா கீர்த்தனைகள் — தமிழ் மொழியாக்கம்: சீமகுர்த்தி சந்த்ரய்ய செட்டி

43. இர்ாமாயண வாக்கிய ரத்னங்கள் — வங்கீபுரம் ரங்கஸ்வாமி ஐயங்கார்

44. தென்னக இசையியல் — பி.டி. செல்லத்துரை சே.ச.

45. தமிழ் இலக்கிய வரலாறு (பதினாறாம் நூற்றாண்டு) — மு. அருணாசலம்

46. ஸ்ரீ ஹரிதாஸ பஜன மஞ்சரி — மத்வ சங்கம், சென்னை

47. ஸ்ரீ புரந்தரதாஸரின் கீர்த்தன மாலைகள் — சித்தூர் அப்பண்ணா பாகவதர்

48. தமிழர் ஆடைகள் — கே. பகவதி

49. ராயவாசகம் (தெலுங்கு) — தொகுப்பு: டாக்டர் சி.வி. ராமச்சந்திர ராவ்

50. ஆமுக்தமால்யத — கிருஷ்ண தேவராயர் தெலுங்கில் எழுதிய காவியத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு — மு. ஜகன்னாத ராஜா, ராஜபாளையம்.

51. தமிழ்நாட்டு மாவட்டங்கள் — மணிமேகலைப் பிரசுரம்.

52. வெற்றித் திருநகர் அகிலன்.

**ரா. கி. ரங்கராஜன்**

**சென்னை—23**

# நான், கிருஷ்ண தேவராயன்

## 1

என் பெயர் கிருஷ்ணன். முன்னோர்களுக்கு மதிப்புக் கொடுப்பதற்காகத் தேவராயன் என்று சேர்த்துக் கொண்டிருக்கிறேன். முழுப் பெயர் கிருஷ்ண தேவராயன்.

என்னை மகா முரடன் என்று சொல்வார்கள். மகா அப்பாவி என்று சொல்வார்கள். இந்து வெறியன் என்று சொல்வார்கள். முஸல்மான்களின் அடிமை என்று சொல்வார்கள். என்னைத் தெலுங்கன் என்று கன்னடியர்கள் சொல்வார்கள். கன்னடியன் என்று தெலுங்கர்கள் சொல்வார்கள். இரண்டுமில்லை, துளுமொழி பேசும் துளு வம்சத்தவன் என்றும் சொல்வார்கள். சந்திரகுப்தருக்கும் ஹர்ஷவர்த்தனருக்கும் ஈடானவன் என்று என்னைச் சொல்வார்கள். ஒரு சின்னப் பாளையக்காரனாக இருக்கக்கூடத் தகுதி இல்லாதவன் என்றும் சொல்வார்கள்.

அரசவைக்கு நான் போகும்போது கட்டியக்காரன் நீட்டி முழக்கும் விருதுகள் அலாதி.

ஸ்ரீமத் ஸமஸ்த புவனாச்ரய ராஜாதிராஜ ராஜ பரமேசுவரர் வருகிறார்! பூர்வ பஸ்சிம தட்சிண சமுத்ராதீச்வரர் வருகிறார்! வார்த்தை தவறாத ராயரகண்டர் வருகிறார்! சத்ருக்களுக்குச் சிம்மசொப்பன

மான வீராதிவீரர் வருகிறார்! கஜகண்ட பேருண்ட யானைப் படைகளின் அதிபதி வருகிறார்! யதுகுலத்தைக் காக்கப் பிறந்த ரட்சகர் வருகிறார்! துளுவ குலத்தின் ஆதவன் வருகிறார்! நரசபூபாலரின் தனயன் வருகிறார்! ஸ்ரீ விரூபாட்ச பாதபத்ம ஆராதகர் வருகிறார்! தர்ம பிரதிஷ்டாபனாசாரியர் வருகிறார்.

இப்படி என்னென்னவோ விருதுகள் உண்டு. அவ்வளவையும் சொன்னால் நீங்கள் இதைப் படிப்பதை நிறுத்திக்கொண்டு விடுவீர்கள்.

இது நான் எழுதும் முதல் புத்தகமல்ல... ஏற்கெனவே தெலுங்கிலும் சம்ஸ்கிருதத்திலும் கொஞ்சம் கொஞ்சம் எழுதியிருக்கிறேன். விதியும் முதலமைச்சர் அப்பாஜியும் என்னை இழுத்து வந்து இந்தச் சிம்மாசனத்தில் உட்கார்த்தி வைத்திருக்காவிட்டால், நான் இந்நேரம் முழுக் கவிஞனாக மாறியிருப்பேன்.

தமிழில் நான் எழுதுவது இதுவே முதல் தடவையாகையால் அழகழகான சொல்லாட்சியோ கவிதை நயம் பொருந்திய வாக்கியங்களோ இருக்காது. சாதாரண ஜனங்களின் பேச்சுத் தமிழில் இதை எழுதுகிறேன். அதுவும் கூடத் தமிழ்ப் புலவர்களுடன் பழகியதால் கிடைத்த பாக்கியம். வில்லிபுத்தூரார் இயற்றிய பாரதத்தைப் பல முறை திரும்பத் திரும்பப் படித்ததால் சிற்றறிவு பெற்றிருக்கிறேன். அரிச்சந்திர வெண்பாவை இயற்றி, ஆசுகவி பாடுவதில் வல்லவராகத் திகழும் வீரகவிராயர் என் சிநேகிதர்.

சத்தியம் தவறக்கூடிய சந்தர்ப்பம் வரும் போதெல்லாம், 'பதியிழந்தனம், பாலனையிழந்தனம், படைத்த நிதியிழந்தனம்... இனி எமக்குளதென நினைக்கும் கதியிழக்கினும் கட்டுரையிழக்கிலேம்' என்று சந்திரமதி சொன்ன வார்த்தைகளை நினைத்துக் கொள்கிறேன்.

தமிழில் சிறிது ஞானம் இருக்கிறபோதிலும் என் நடையிலோ, நான் சொல்லும் விவரத்திலோ, ஊர்கள், சாதிகள், மக்களின் பெயர்களிலோ பல பிழைகள் இருக்கக்கூடும். இதைப் படிக்கும் பெரியோர்கள் என்மீது அன்புகாட்டி மன்னிக்க வேண்டும்.

அன்று காலை கண்விழித்த போது காற்று குளிர்ச்சியாகத்தான் வீசிக்கொண்டிருந்தது. இரண்டு பக்கமும் இரண்டு பணியாட்கள் பிரம்மாண்டமான விசிறிகளால் எனக்கு விசிறிக் கொண்டிருந்தார்கள். கையை அசைத்து அவர்களைப் போகச் சொல்லிவிட்டு எழுந்து உட்கார்ந்தேன்.

இன்னதென்று விளங்காத ஒரு பாரம் மனசை அழுத்திக் கொண்டிருந்தது.

காரணம், சின்னாதேவி.

காலைக் கடன்களை முடித்துக்கொண்டதும், பணியாள் நான் வழக்கமாக அருந்தும் நல்லெண்ணெயை எடுத்து வந்தான். இரண்டு கிண்ணம் அருந்தினேன். ஆனால், அதிலே புத்தி செல்லாமல் யந்திரமாகக் குடித்தேன்.

காரணம், சின்னாதேவி.

என் சேனையில் இருக்கும் முஸல்மான் வீரர்களுக்காக விஜயநகரத்தில் ஒரு மசூதி கட்டித் தருவதாக வாக்களித்திருந்தேன். அதைப் பற்றிக் கட்டிடக் கலைஞர்களுடனும் அறிஞர்களுடனும் இன்று விவாதிக்க எண்ணியிருந்தேன். அதிலும் மனம் செல்லவில்லை.

காரணம் சின்னாதேவி.

காபூலிலிருந்து பாபர் என்ற அந்நிய மன்னனை லாகூர் சுல்தான் தன் உதவிக்கு வரும்படி அழைத்திருப்ப

தாகச் செய்தி கிடைத்திருந்தது. அதைக் குறித்து விசாரித்து வரும்படி ஒற்றர்களை அனுப்பியிருந்தேன். அவர்கள் திரும்பியிருக்க வேண்டும். அதைப்பற்றிக் கேட்கவும் புத்தி செல்லவில்லை.

காரணம், சின்னாதேவி.

உடற்பயிற்சியை அரைகுறையாகச் செய்து முடித்தேன். தொடர்ந்து குதிரையேற்றத்துக்காகப் புறப்படுவது வழக்கம். இன்று போகவில்லை.

காரணம், சின்னாதேவி.

கண்விழித்ததும் முதல் வேலையாக, மஞ்சத்திலிருந்து எழுந்து நின்று என் குலகுரு வியாசதீர்த்தரை ஸ்மரித்து மனதுக்குள் ஒரு ஸ்தோத்திரம் சொல்வேன். அது இன்று மறந்துவிட்டது. அவசர அவசரமாகச் சொல்லிக் கொண் டேன். பிறகும் இதயத்திலிருந்த பாரம் குறையவில்லை.

காரணம், சின்னாதேவி.

போர்த்துக்கீசிய கவர்னரான ஆல்புகர்க் தனது தூதராக லூயி பாதிரியார் என்பவரை அனுப்புவதாகத் தெரிவித்திருந்தார். பாதிரியாரிடம் என்னென்ன பேச வேண்டியிருக்கும் என்று யோசித்துப் பார்த்தேன். ஒன்றும் தோன்றவில்லை.

காரணம், சின்னாதேவி.

சாம்ராஜ்யத்தின் வட எல்லையில் பாமனி சுல்தான்கள் ஐந்து பேர் ஒருவரோடொருவர் சண்டை யிட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஐந்துபேரும் ஒன்று சேர்ந்துவிடாமல் இருக்க வேண்டுமே என்ற கவலை சதா என் அறிவை அரித்துக்கொண்டிருக்கும். இன்று அதுவும் நினைவு வரவில்லை.

காரணம் சின்னாதேவி.

வீணையை எடுத்துக்கொண்டு உட்கார்ந்தேன். என் ஆசான் லக்ஷ்மிநாராயணா ஒரு மாபெரும் வித்வான். 'சங்கீத சூரியோதயம்' என்ற நூலை இயற்றி இசைக்குப் பெருந்தொண்டு ஆற்றியவர். அவர் ஒரு முறை சொல்லித் தந்தால் போதும், மனசில் பதிந்துவிடும். அது என் சக்தியினால் அல்ல. லக்ஷ்மிநாராயணாவுக்கு அப்படியொரு ஆற்றல் உண்டு. சென்ற வாரம் சங்கராபரண ராகத்தின் லட்சணங்களைச் சொல்லித் தந்திருந்தார். அப்போது ஆழப் பதிந்திருந்தது மனசில். ஆனால், இப்போது வீணையில் வாசித்துப் பார்த்தால், நாதமே எழும்பவில்லை. செவியை ரணப்படுத்தும் அபஸ்வரங்கள் தான் ஒலித்தன.

காரணம், சின்னாதேவி.

நேற்று இரவு, நகர சோதனைக்காகப் புறப்பட்டவன், விட்டலஸ்வாமி கோயிலில் நடனமாடிக் கொண்டிருந்த அவளைப் பார்த்தது முதல் இப்படி ஆகிவிட்டேன்.

நாலு வருட காலமாக ராஜ்யத்தின் மூலைமுடுக்குக் கெல்லாம் ஆள் அனுப்பித் தேடிப் பார்த்தும் அவள் எங்கிருக்கிறாள் என்பதே தெரியாமல் மனம் வெறுத்திருந்த நிலையில்

நேற்று சின்னாதேவியைக் கண்டேன்.

ஆடிக்கொண்டிருந்த அவளுக்கும் நடனத்தை ரசித்துக் கொண்டிருந்த அவையோருக்கும் என்னை அடையாளம் தெரியவில்லை. - நான் பரதேசிக் கோலத்தில் மறைவாக நின்றிருந்ததால்.

ஓடிப்போய் அவளை நெஞ்சோடு அணைத்துக் கொண்டு, 'சின்னாதேவி... சின்னாதேவி' என்று அவள் மார்பில் என் கண்ணீரைக் கொட்ட வேண்டும் போல் இருந்தது.

ஐயோ! நாலு வருடங்களுக்கு முன்பு ஊர் ஊராகச் சுற்றிக் கொண்டிருந்த சாதாரணக் கிருஷ்ணனா நான்? இல்லையே!

விஜயநகர சாம்ராஜ்யத்தின் சக்ரவர்த்தி என்ற இரும்புக் கவசத்தைப் பூட்டிக் கொண்டிருக்கிறேனே! என் இஷ்டத்துக்கு உடம்பையும் அசைக்க முடியாது. மனசையும் அசைக்க முடியாது.

உள்ளத்தில் பாரத்துடன் அரண்மனைக்குத் திரும்பியபோதும் திரும்பி வெகு நேரமான பின்னரும் ராத்திரி முழுவதும் அந்தப் பாரம் அப்படியே இருந்தது. 'சின்னாதேவி... சின்னாதேவி... சின்னாதேவி' என்று யாருக்கும் கேட்காதவண்ணம் என் வாய் ஜபித்தது.

என்ன செய்யலாம்?

சட்டென அம்மாவின் நினைவு வந்தது.

தாயை மிஞ்சிய சுமைதாங்கி கிடையாது. அங்கே ஒரு தனயன் எத்தனை பாரத்தை வேண்டுமானாலும் இறக்கலாம். அன்னையின் அறிவுக்கு மிஞ்சிய சாத்திரம் கிடையாது. அங்கே எந்தப் பிரசினைக்கும் விடை காணலாம். அம்மாவின் முகத்துக்கு மிஞ்சிய சந்தனம் கிடையாது. அங்கே எந்த வெப்பத்துக்கும் குளிர்ச்சி பெறலாம்.

தெம்பு பெற்றவனாக அறைக்கு வெளியே வந்தேன்.

வந்ததும், என் முன்னே இளம்பெண் ஒருத்தி விரைந்து வந்து மண்டியிட்டாள். ஆனால் எனக்கு நமஸ்காரம் செய்வது போல என் முன்புறமாக அல்ல. எனக்கு முதுகைக் காட்டிய வண்ணம், நான் செல்ல வேண்டிய திசையை நோக்கினாற் போல் குனிந்து அமர்ந்து

"ஏறிக்கொள்ளுங்கள், சக்ரவர்த்தி" என்றாள்.

எனக்குத் தூக்கிவாரிப்போட்டது. எதுவும் புரியாமல் ஒரு விநாடி திகைத்தபோது, எட்டத்தில் வாசல்காரியம் வீரண்ணா நின்றிருப்பதைக் கண்டேன். அரண்மனையில் பணியாட்களை அமர்த்துவதும் வேலை வாங்குவதும் அவர் பொறுப்பு. ஆனால், இது ஏதோ சகஜமான காரியம் போலப் பார்த்துக் கொண்டு சும்மா நின்றிருந்தார்.

"இங்கே வாரும்" என்று கூப்பிட்டேன். "என்ன இது?" என்றேன் அந்தப் பெண்ணைக் காட்டி.

"இது வழக்கம்தானே, சக்ரவர்த்தி. அரண்மனை வளாகத்துக்குள் ராஜ குடும்பத்தாரைப் பல்லக்கில் சுமந்து செல்வார்கள்... அல்லது இவளைப் போலத் தோளில் சுமந்து செல்வார்கள்."

"பெண்ணா தூக்கிச் செல்வாள்?"

"ஆம், சக்ரவர்த்தி."

"ஏன்... ஆண்கள் கிடையாது?"

"அந்தப்புரத்துக்குள் ஆண்கள் செல்ல அனுமதி கிடையாதே சக்ரவர்த்தி. அரசர்கள், அரசிகள், அரசகுமாரர்கள், அரசகுமாரிகள் யாவரையும் இவளைப் போலப் பெண்கள் தோளில் சுமந்து செல்வது தங்கள் முன்னோர்கள் காலத்திலிருந்து நடந்து வருகிறது. சக்ரவர்த்திகூடக் கவனித்திருப்பீர்கள்!"

பெண்களின் தோள்மீது ஏறிக்கொண்டு ராஜ குடும்பத்தார் செல்வதை எப்போதோ இரண்டொரு முறை தூரத்தில் பார்த்திருக்கிறேன். ஆனால், அவர்கள் வாட்டசாட்டமான நடு வயதுக்காரர்கள். இவள் கொடி போன்ற பருவப் பெண். இவள் தோள்மீதா ஏறிச் சவாரி செய்வது?

"அசிங்கம்!" என்று கோபத்துடன் கூறி, அந்தப் பெண்ணின் தோளில் தட்டி, "எழுந்திரம்மா" என்றேன்.

அவள் எழுந்துகொண்டாள். மிகவும் சின்ன வயது. கண்களில் ஓர் ஒளியும் முகத்தில் ஓர் உறுதியும் தென்பட்டன. பணிப்பெண்ணாக இருந்தாலும் மேட்டுக் குடியின் களை இருந்தது.

"வா என்னுடன்... என் அன்னையின் அரண் மனைக்குப் போகிறேன். நடந்தே போவோம்" என்றேன்.

அவள் வீரண்ணாவைச் சிறிது தயக்கத்துடன் பார்த்துவிட்டு என்னுடன் நடந்தாள்.

நட்பு என்பதும் பாசம் என்பதும் எப்போது, ஏன், எப்படி நடக்கிறது என்று காரணகாரியம் சொல்ல முடியாது. இப்போது இந்தச் சிறு பெண்ணிடம் எனக்கு ஏற்பட்ட உணர்வும் அப்படித்தான்.

"உன் பெயர் என்னம்மா?" என்றேன்.

"காயத்ரி" என்றாள். மதுரமான குரல்.

"அரண்மனையில் இனிமேல் நீ யாரையும் ஆணானாலும் சரி, பெண்ணானாலும் சரி முதுகில் சுமந்து செல்ல வேண்டாம். என் சொந்த அலுவல்களைக் கவனிக்கும் பணிப் பெண்ணாக என்னுடன் இரு" என்றேன்.

"என் பாக்கியம், சக்ரவர்த்தி" என்றாள் மேலும் இனிமையான குரலில். ஆனால் அதில் சந்தோஷமோ. மலர்ச்சியோ, உணர்ச்சியோ காணப்படவில்லை. எதையும் தன் கடமை என்று ஏற்றுக் கொள்கிற யதார்த்தம்தான் இருந்தது.

திரும்பிப் பார்த்தேன்.

அரண்மனைப் பணியாட்கள் நாலுபேர் என் பின்னாலேயே வந்து கொண்டிருந்தார்கள். என்னைச் சுற்றி எப்போதும் வேலையாடகள். இது ஓர் உபத்திரவம். ஒருவன் கையில் தங்கத் தட்டில் வெற்றிலைக் கட்டு வைத்திருந்தான்.

இன்னொருவன் தங்கக் கிண்ணத்தில் பாக்கு வைத்திருந்தான். இன்னொருவனின் கையில் வெள்ளிச் சிமிழில் சுண்ணாம்பு. நாலாமவன் நான் தாம்பூலத்தைத் துப்புவதற்காகத் தாமிரத்தில் செய்த எச்சில் பணிக்கம் வைத்திருந்தான். என்னுடைய எந்த ஒரு சின்னக் காரியத்துக்கும் ஐந்து பேர் பத்துப் பேர் காத்திருப்பது அரண்மனையின் வழக்கமாகிவிட்டது. சக்ரவர்த்தியின் அந்தஸ்துக்கு இப்படித்தான் இருக்க வேண்டும் என்று பெரியவர்கள் சொல்வதால் பொறுத்துக் கொள்கிறேன்.

நான் கண்ணை உயர்த்தியதும் நாலுபேரும் ஓடிவந்தார்கள்.

ஒருவனிடமிருந்து இரண்டு வெற்றிலையும் மற்றவனிடமிருந்து சிறிது பாக்கும் எடுத்துக்கொண்டேன். போகலாம் என்று தலையசைத்ததும் சிறிது தயங்கிவிட்டுப் போய்விட்டார்கள்.

காயத்ரி என்னையே பார்த்துக் கொண்டு நின்றாள்.

வெற்றிலை மீது பாக்கை வைத்து, “கையை நீட்டு” என்றேன்.

காயத்ரி இரண்டு கைகளையும் நீட்டினாள். சிவந்த உள்ளங்கையில் ஓடும் ரேகைகளைக் கண்ணிமைக்கும் நேரம்தான் பார்த்தேன். வாழ்க்கையில் அவள் பல போராட்டங்களைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்று அந்த ஒரு கணத்திலேயே அந்த ரேகைகள் சொல்வதைக் கண்டேன். வருத்தம் ஏற்பட்டது.

வெற்றிலையையும் பாக்கையும் அவள் கையில் கொடுக்கப் போனபோது, எதிரில் முதலமைச்சர் அப்பாஜியும் தளபதி நாகமநாயக்கரும் வேகமாக வந்து கொண்டிருந்தார்கள் வாசல்காரியம் வீரண்ணா அவர்களிடம் போய்ச் சொல்லியிருக்கிறார் என்று ஊகித்தேன்.

"சக்ரவர்த்தி!" என்று பதறிய குரலில் கூப்பிட்டபடி அப்பாஜி ஓடிவந்தார். "இருங்கள், இருங்கள்!" என்றார். அவருடைய வயதுக்கு அந்த வேகம் கூடாது. மூச்சு இரைத்தது.

"என்ன அப்பாஜி?" என்றேன்.

"இப்படிக் கொஞ்சம் வருகிறீர்களா?" என்று கேட்டார் சொன்னதோடு வெற்றிலை பாக்கைக் கொடுக்காமல் தடுக்கிற மாதிரி என் கைகளைப் பிடித்துக் கொண்டார். குழந்தைப் பிராயம் முதல் என்னை அறிந்தவரானாலும் என் கையை இன்றுவரை அவர் தொட்டது கிடையாது. மரியாதையுடன் சற்று விலகியே நிற்பார்.

சில அடி தூரம் அவரைப் பின் தொடர்ந்து போனேன். நாகம நாயக்கர் மட்டும் அங்கேயே நின்றார், காயத்ரிக்குக் காவல்போல்.

கூடத்தின் ஓரத்துக்குப் போனோம். வெளியே நந்தவனத்தில் புஷ்பங்கள் கொள்ளையாய்ப் பூத்திருந்தன. வெளிர் மஞ்சள் நிறம் கொண்ட சம்பங்கி மலர்களும் முத்து வெள்ளையாக மல்லிகைப் பூக்களும் நறுமணத்தையே தங்கள் தூதுவனாக அனுப்பிக் கொண்டிருந்தன.

அப்பாஜியின் முகத்தைப் பார்த்தேன்.

"சக்ரவர்த்தி, என்ன காரியம் செய்யவிருந்தீர்கள்?" என்று பதைத்த குரலில் சொன்னார் அவர்.

"ஏன், என்ன காரியம் செய்தேன்?" என்றேன்.

"சக்ரவர்த்தி நடந்து போவதே தவறு. ஒரு பணிப்பெண்ணுடன் சேர்ந்து போவது இன்னும் தவறு. அவளுக்குத் தாம்பூலம் கொடுக்கப்போனீர்களே, அது மிகப் பெரிய தவறு, சக்ரவர்த்தி."

"எப்படி?" என்றேன்.

''சக்ரவர்த்தி! தங்களுக்குத் தெரியாததல்ல... ஒருவருக்குப் பேரரசர் தாம்பூலம் வழங்குகிறாரென்றால் அவர் சக்ரவர்த்தியின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகி விட்டார், அவரிடம் சக்ரவர்த்தி ஒரு முக்கிய காரியத்துக்காக ஒப்பந்தம் செய்து கொள்கிறார் என்று அர்த்தம். தங்களுக்குத் தெரியாதா?''

"தெரியும். இதுவும் ஒப்பந்தம்தான்" என்று சிரித்தேன்.

என் சிரிப்பு அப்பாஜியின் பதற்றத்தை அதிகப் படுத்தியதே தவிர, குறைக்கவில்லை. "சக்ரவர்த்தி, இது சிரிக்கக்கூடிய விஷயமல்ல" என்றார்.

''இந்த அளவுக்குப் பதைக்க வேண்டிய விஷயமுமல்ல, அப்பாஜி" என்றேன். "அந்தப் பெண்ணை என் அந்தரங்க சேவகனாக சேவகியாக அமர்த்திக் கொள்ளப் போகிறேன். ஆண்களின் வேலையைப் பெண்கள் செய்வதும் பெண்களின் வேலையை ஆண்கள் செய்வதும் இங்கே சகஜமாக...

நான் சொல்லி முடிப்பதற்கு முன்னால் மறுபடியும் என் கைகளைப் பிடித்துக்கொண்டார் அப்பாஜி. "அதுதான் வேண்டாம் என்கிறேன், சக்ரவர்த்தி."

"ஏன் வேண்டாம்? அவளை எனக்குப் பிடித்திருக் கிறது" என்றேன்.

"விஜயநகர சாம்ராஜ்யத்தின் பேரரசர்களுக்குத் தனிப்பட்ட விருப்பு வெறுப்பு என்று எதுவும் கிடையாது சக்ரவர்த்தி. மந்திரி பிரதானிகளின் அபிப்பிராயத்தைக் கேட்டுத்தான் எந்த நியமனத்தையும் செய்வார்கள்!"

''தாங்கள்தான் மகாபிரதானி, முதலமைச்சர், சொல்லுங்கள், கேட்டுக் கொள்கிறேன்."

"அதுதான், இந்தப் பெண் வேண்டாமென்று நான் முதலிலேயே சொல்லிவிட்டேனே?" என்றார் அப்பாஜி.

"அதுதான் ஏன் என்று முதலிலேயே நானும் கேட்டு விட்டேனே?"

"அந்தப் பெண் யார், எங்கிருந்து வந்தாள், எப்படி அரண்மனையில் வேலைக்குச் சேர்ந்தாள் என்பதெல்லாம் மர்மமாக இருக்கிறது. கேள்விப்பட்டிராத ஏதோ ஒரு கிராமத்தைச் சேர்ந்தவள் என்று சொல்லிக் கொள்கிறாள். நமது போர் வீரர்கள் பிடித்து வந்து அரண்மனையில் சேர்த்தார்கள் என்று சொல்கிறாள்."

"ஓ! பிடித்து வந்த பெண்ணா! அது நமது வீரர்களுக்குச் சுவாரஸ்யமான பொழுது போக்காயிற்றே?" என்று சொல்லிவிட்டு, "அந்தப் பெண்ணிடம் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அறிவுள்ளவள், பண்புள்ளவள் என்று தோன்றுகிறது" என்று கூறியபடி ஓரடி எடுத்து வைத்தவன், திரும்பி வந்து, அப்பாஜியின் முகத்தின் பக்கம் குனிந்து, ரகசியமாகச் சொல்வது போல, "ஆனால், தாங்கள் பயப்படுகிற மாதிரி எந்த விபரீதமும் நடந்துவிடாது, அப்பாஜி. தாங்கள் தைரியமாக இருக்கலாம். ஏனென்றால் நான்..."

சின்னாதேவியைப் பற்றிச் சொல்லப்போனவன் அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டேன். வேறொரு சமயத்தில் விவரமாகச் பேச வேண்டிய விஷயம் அது.

காயத்ரியை அடைந்து, என் கையில் வைத்திருந்த தாம்பூலத்தை அவள் கையில் கொடுத்தேன். அதன் அர்த்தமும் முக்கியத்துவமும் அவளுக்குப் புரிந்திருக்க வேண்டும். அவள் கண்முனைகளில் ஈரம் பளபளப்பது போலத் தோன்றியது. அல்லது அது நானாகக் கற்பனை செய்து கொண்டதாகவும் இருக்கலாம்.

"போவோம், வா" என்று சொல்லி நடந்தேன்.

திரும்பிப் பார்த்தபோது அப்பாஜி அதிர்ச்சியும் திகைப்புமாகச் சிலைபோல நின்றிருப்பது தெரிந்தது.

இத்தனை காலமும் அவர் ஒரு கோடு கிழித்தால் அதைத் தாண்டாமல் இருந்து வருகிறவன் நான்.

முதல் தடவையாக இன்று தாண்டி விட்டேன்.

இது நல்லதுக்கா, கெடுதலுக்கா?

# 2

அப்பாஜி சொன்னதைப் பற்றிச் சிந்தித்தபடி அன்னையின் அரண்மனையை நோக்கிச் சில அடி தூரம்தான் நடந்திருப்பேன். தற்செயலாகத் திரும்பிப் பார்த்த போது அந்தப் பெண் காயத்ரி என் முகத்தையே பார்த்த வண்ணம் வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

"என்ன அப்படிப் பார்க்கிறாய்?" என்றேன்.

"ஒன்றுமில்லை" என்றாள்.

"பரவாயில்லை, சொல்லு."

"என்னைப் பணியில் அமர்த்திக்கொள்ள வேண்டாம் என்று அப்பாஜி சொல்லியிருப்பார்'' என்றாள் தயக்கத்துடன்.

"ஆமாம். நீ யார், எங்கிருந்து வந்தாய் என்கிற விவரங்கள் மர்மமாக இருக்கிறதாம். அவர் சொல்வதும் நியாயம்தானே? என்னிடமாவது சொல்லு. நீ யார்? எங்கிருந்து வந்தாய்?"

"சமயம் வரும்போது விவரமாகச் சொல்கிறேன் சக்ரவர்த்தி."

"சுருக்கமாக இப்போது சொல்லு" என்றேன்.

காயத்ரி சிறிது தூரம் என்னுடன் மௌனமாகவே நடந்தாள். வழியில் நின்றிருந்த பணியாட்கள் வணங்கி மரியாதை தெரிவித்துவிட்டு ஒதுங்கிக் கொண்டார்கள். ஒரு சாதாரணப் பணிப்பெண்ணுடன் நான் பேசிக் கொண்டு

வருவதைப் பார்க்க அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்திருக்கும்.

மெதுவான குரலில் காயத்ரி சொன்னாள்: “மேற்குக் கடற்கரையோரம் சிச்சில் என்பது என் கிராமம். தாயில்லாதவள் நான். சிற்றன்னையிடம் கொடுமைப் பட்டுக் கொண்டிருந்தேன். தங்களுடைய படைவீரர்கள் சிலர் ஒருநாள் வந்தார்கள். அழகான பெண்கள் சக்ரவர்த்தியின் அரண்மனையில்தான் இருக்க வேண்டும் என்றார்கள். சிற்றன்னை சந்தோஷமாக அவர்களுடன் என்னை அனுப்பிவிட்டாள். அந்தப்புரத்தில் வசித்து வருகிறேன். வாசல்காரியம் அதிகாரி இன்று தங்களுக்குப் பணி செய்யும்படி அனுப்பினார். அவ்வளவுதான் என் கதை சக்ரவர்த்தி” என்றாள்.

அவள் முகத்தைப் பார்த்தேன். நிஜம் பேசுகிறாளா, பொய் சொல்கிறாளா என்பது தெரியவில்லை. தெலுங்கில் ஒரு பழமொழி உண்டு — ‘ஆடதி பொங்கிதே கோட பெட்டிநட்டு, மொகவாடு பொங்கிதே தடிகா கட்டிநட்டு’ என்று. அதாவது ‘ஆண்கள் பொய் சொன்னால் பாயைத் தூக்கிப் பிடித்த மாதிரி. மறுபுறம் இருப்பதைப் பார்க்க முடியும். பெண்கள் பொய் சொன்னால் சுவர் எழுப்பின மாதிரி’ என்று அர்த்தம்.

அந்தப் பழமொழியை எண்ணிப் புன்னகை செய்ததைக் காயத்ரி கவனித்துவிட்டாள். தான் சொன்னதை நான் நம்பினேன் என்றெண்ணிச் சந்தோஷப் பட்டாளோ என்னவோ, அவள் முகத்திலும் லேசான புன்சிரிப்பு மலர்ந்தது.

எதிர்ப்பட்ட ஓர் இளைஞன் நான் நடந்தே வருவதைக் கண்டதும் தூணின் மறைவில் ஒதுங்கிக் கொண்டான். அவன் கையில் திரைச் சீலை போல ஒன்று இருந்தது. அவன் ஓர் ஓவியன் என்பதும் சென்ற மகாநவமி

விழாவின்போது என்னிடம் சன்மானம் வாங்கிச் சென்றவன் என்பதும் ஞாபகம் வந்தது.

“வெளியே வாப்பா. என்ன அது கையில்?” என்றேன்.

“வந்து... இல்லை... சக்ரவர்த்தி அரசவையில் இருக்கும்போது தரலாமென்று... இப்போது காட்டினால் மரியாதையாக இருக்காது...” என்று தடுமாறினான்.

“பாதகமில்லை, கொடு” என்றேன்.

அச்சத்துடன் நீட்டினான். நான் நினைத்தது போல் ஓவியம்தான். மிகப் பெரிய ஓவியம். பிரித்தேன்.

ஒரு மன்னனின் படம். ரொம்பக் கூர்ந்து பார்த்தால் என் சாடையாக இருந்தது.

“யாரப்பா இது?” என்றேன்.

அவன் அதிர்ச்சியுடன், “தாங்கள்தான் சக்ரவர்த்தி” என்றான்.

கபகபவென்று சிரிப்பு வந்தது. அடக்கிக் கொண்டேன். “நானா? இதுவா? நான் இவ்வளவு வாட்டசாட்டமாக, ஆஜானுபாகுவாகவா இருக்கிறேன்? என்னைச் சரியாகப் பார். சராசரி உயரம், சராசரி பருமன் உள்ள சராசரி மனிதன் நான்!” என்றேன்.

அவன் பணிவோடு, “சக்ரவர்த்தியின் ஓவியம் என்றால் ராஜகம்பீரமாக இருக்க வேண்டுமென்று சொல்வார்கள்” என்றான்.

“இன்னொன்றும் கவனி. என் இடது கன்னத்தில் தாடைப் பகுதியில் சில அம்மை வடுக்கள் இருக்கின்றன. சின்னவயதில் வைசூரியில் படுத்ததால் ஏற்பட்டவை. அதையும் நீ காட்டவில்லை” என்றேன்.

“சக்ரவர்த்தியின் முகத்தை அழகாகக் காட்ட வேண்டுமென்று....”

"நீ இருக்கும் வீடு சின்னதா, பெரியதா?"

என் கேள்வியின் அர்த்தம் புரியாமல், "சுமாராய் இருக்கும்..." என்றான்.

"இடம் இருந்தால் அங்கே மாட்டிக் கொள். தனாதிகாரியிடம் சொல்லி வைக்கிறேன். நாளை வா. நூறு வராகன் தருவார்" என்று கூறி அவனை அனுப்பினேன்.

"மிகைப்படுத்தி, போலியாகக் காட்டுவதில் எல்லாக் கலைஞர்களுக்குமே ஒரு தனி மோகம்" என்று சொன்னவாறு காயத்ரியின் பக்கம் திரும்பியபோது அவள் முகத்தில் வாட்டம் தென்பட்டிருந்ததைக் கண்டேன்.

"பாவம், மிகவும் மனம் நொந்திருப்பார் அந்த ஓவியர்'' என்றாள், அவன் சென்ற திசையையே பார்த்தவண்ணம்.

''ஓவியர்கள் என்றால் உனக்குத் தனியான அனுதாபம் உண்டு போலிருக்கிறது?" என்றேன்.

"ஆமாம். என் அக்கா வெகு அழகாக ஓவியம் தீட்டுவாள். அவள்..."

"அவள்?" என்றேன்.

ஆனால் மேற்கொண்டு காயத்ரி பேசவில்லை.

என்னைக் கண்டதும் "வா கிருஷ்ணா" என்று கூறி எழுந்துகொள்ள முயன்றார் என் அன்னை நாகலாம்பிகை. கணவரை இழந்த காலம் தொட்டு அவர் கட்டிலில் உட்காருவதில்லை, படுப்பதில்லை. தரையில் பாய் விரித்து, மெத்தென்று ஜமுக்காளங்கள் பரப்பி, திண்டு வைத்து, சுவரில் சாய்ந்தபடியே படுத்துக் கொள்கிறார். எழுந்து கொள்வது என்பது அவருடைய வயதுக்குக் கஷ்டமான காரியம்.

"உட்காருங்கள் அம்மா, உட்கார்ந்திருங்கள்" என்று அவரருகில் சென்று தோளைப் பிடித்து உட்கார்த்தி வைத்து நானும் தரையிலேயே உட்கார்ந்தேன்.

ஜெயதேவரின் கீதகோவிந்தத்தை மெல்லிய குரலில் பாடிக் கொண்டிருந்த மதிவிலாசினி என்ற பெண்ணும், அதற்கேற்ப அபிநயம் பிடித்துக் கொண்டிருந்த மூர்த்தியம்மன் என்ற மங்கையும் என்னைக் கண்டதும் தலை வணங்கி விட்டு வெளியேறினார்கள்.

நானூறு வருடங்களுக்கு முன்பு வங்காளத்தில் பிறந்து, லக்ஷ்மணசேனா என்ற மன்னரின் அவையை அலங்கரித்தவர் ஜெயதேவர். அவரது பாடல்கள் அம்மாவுக்கு ரொம்பப் பிடிக்கும். அதைப் பற்றி அடிக்கடி கேலி செய்வேன்.

அதுபோல இன்றைக்கும், "ஏன் தாயே, இந்த வயதில் சிருங்கார ரசம் நிறைந்த பாடல்கள்தானா நீங்கள் ரசிக்கவேண்டும்?" என்றேன்.

"கிருஷ்ணா, படிப்பில்லாத பாமரர்கள் பேசுகிற மாதிரி நீயும் பேசலாமா? ஜீவாத்மாவும் பரமாத்மாவும் இணைவதுதான் இதன் உள்ளர்த்தம். ஆழ்ந்து படித்தால் உனக்கே புரியும். அது போகட்டும். நீ வந்தபோது கீத கோவிந்தத்தில் அவள் எந்த இடம் பாடிக் கொண்டிருந்தாள், தெரியுமா?" என்றாள் அன்னை.

"நான் கவனிக்கவில்லையே?" என்றேன்.

"அற்புதமான வரிகள்! பத்தாவது ஸர்கத்தில், பத்தொன்பதாவது அஷ்டபதி. 'ராதா, உன் மீதுள்ள பிரியம் என் தலையில் விஷம் போல ஏறிவிட்டது. உன் மிருதுவான, சிவந்த பாதங்களை என் தலைமீது வை. நஞ்சு இறங்கிவிடும்' என்கிறார் கண்ணன்."

"ரொம்ப அருமை அம்மா" என்று ஒப்புக்குச் சொல்லி வைத்தேன். சின்னாதேவியைப் பற்றிய விஷயத்தை எப்படி ஆரம்பிப்பது என்று என் மனதுக்குள் குழப்பம் கூத்தாடியது.

"அந்த வரிகளில் வேறொரு விசேஷம் உண்டு, கிருஷ்ணா" என்று விடாமல் தொடர்ந்தார் அம்மா. "இந்த வரிகளைச் சுவடியில் எழுதிய பிறகு, ஜெயதேவருக்கு அது பிடிக்கவில்லை. பகவானின் தலையில் ராதை காலை வைத்தாள் என்று எழுதுவது அபசாரம் என்று நினைத்தார். எழுதிய வரிகளை அடித்துவிட்டு, குளிக்கப் போய்விட்டார். அந்தச் சமயம், ஸ்ரீகிருஷ்ணரே ஜெயதேவரின் வேடத்தில் வீட்டுக்குள் வந்து, அதே வரிகளைத் திரும்ப எழுதி வைத்துவிட்டுப் போனார்..."

அம்மா அதைச் சொல்லிக் கொண்டிருந்தபோது, என் நினைவுகள் சின்னாதேவியிடம் சென்றுவிட்டன. அவளுடைய சிவந்த பாதங்கள் என் முகத்தை வருடுவது போல உணர்ந்தேன்.

கண்ணனின் காதலையும் ராதையின் காதலையும் பற்றி அன்னை பேசிக் கொண்டிருக்கும் இந்தச் சமயம்தான் என் காதலைப் பற்றிச் சொல்வதற்கு ஏற்ற தருணம் என்று தோன்றியது.

"அம்மா... என்று நான் தொடங்கிய போது, அவருடைய கவனம் வேறொரு திசையில் திரும்பிவிட்டது. அறை வாசலில் நிழலாடியதே காரணம்.

"யாரங்கே?" என்றார்.

வெளியே நின்றிருந்த காயத்ரி உள்ளே வந்து, குனிந்து இரு கைகளையும் குவித்து வணக்கம் தெரிவித்தாள்.

"பணிப்பெண்" என்றேன். சுருக்கமாக.

"அப்பாஜி வந்து சொல்லிவிட்டுப் போனார், சற்று முன்பு. அந்தப் பெண் நீதானா?" என்ற அம்மா, காயத்ரியை ஏற இறங்க ஒரு முறை பார்த்தார்.

"நமது படைவீரர்கள் பிடித்து வந்து அந்தப்புரத்தில் சேர்த்திருக்கிறார்கள். ஏழை விவசாயியின் மகள் என்றாள். பார்க்கப் பரிதாபமாயிருந்தது. என் சொந்தப் பணிகளுக்கு அமர்த்திக் கொண்டிருக்கிறேன்" என்றேன்.

"பார்ப்பதற்கு அப்படியொன்றும் பரிதாபமான பெண்ணாகத் தெரியவில்லையே?" என்றார் அம்மா, சந்தேகக் குரலில்.

இப்படியே காயத்ரியைப் பற்றிய ஆராய்ச்சியில் நேரம் ஓடிக் கொண்டிருந்தால் நான் பேச வந்த விஷயத்தைப் பேச முடியாமலே போய்விடுமே! பயம் உதித்தது எனக்கு. காயத்ரியைப் பார்த்து, "நீ போகலாம்" என்று அனுப்ப முயன்றேன்.

"இருக்கட்டும்" என்றார் அம்மா. "இப்படி வா" என்று அவளை அழைத்தார்.

அன்னையின் அருகில் காயத்ரி வந்து நின்றாள். "உன் பெயர் என்னம்மா?" என்றார் அம்மா.

"காயத்ரி"

"ஏழை விவசாயியின் மகள் என்று என் பிள்ளை சொல்கிறானே, எந்த ஊர்?" என்று கேட்டார் அம்மா.

அச்சத்தினாலோ அல்லது தன்னைப் பற்றிப் பேசப் பிடிக்காததாலோ காயத்ரி தயக்கமாக என்னைப் பார்த்தாள்.

"மேற்குக் கடலோரம் சிச்சில் என்ற கிராமம்" என்று நான் முன்வந்து சொன்னேன்.

"சிச்சில் என்றா சொன்னாய்?" என்றார் அம்மா அவளிடம்.

ஆம் என்று தலையை அசைத்தாள் காயத்ரி.

"அப்படியா? ஆச்சரியம்தான்" என்றார் அம்மா. ஏன் அப்படிச் சொன்னார் என்று எனக்குப் புரியவில்லை.

"இப்படி அருகில் வந்து உட்கார்" என்றார் அம்மா.

காயத்ரி உட்கார்ந்தாள்.

"உள்ளங்கையைக் காட்டு" என்றார் அம்மா. காயத்ரி கையைப் பிரித்தபோது, அதில் நான் கொடுத்த வெற்றிலையும் பாக்கும் இருந்தன.

"ஓ, தாம்பூலம் கொடுத்து நிச்சயமே பண்ணி விட்டாயா, கிருஷ்ணா?" என்று என்னைப் பார்த்துப் பரிகாசமாகக் கேட்ட பின், காயத்ரியின் இடது உள்ளங்கையைப் பிரித்து, விரல்களைப் பிடித்துக் கொண்டார். "யார் வந்தாலும் கை ரேகையைப் பார்ப்பது எனக்குப் பிடிக்கும்" என்றார்.

தாம்பூலம் கொடுத்தபோது நான் காயத்ரியின் கைரேகைகளை மேலோடு கவனித்திருந்தேன். போராட்டங்கள் நிறைந்தது அவளுடைய வாழ்க்கை என்று ஓரளவு தெரிந்தது. அதைத்தான் அம்மாவும் சொல்லப் போகிறார் என்று நினைத்தேன். சோதிடம், ரேகை சாஸ்திரம் முதலியவற்றை அம்மா நன்கு கற்றவர்.

காயத்ரியின் விரல்களைப் பிரித்து வைத்துக் கொண்டு வெகுநேரம் உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தார் அன்னை. தனக்குள் தானே முணுமுணுத்துக் கொண்டார். என் உதடுகளோ சின்னா தேவி, சின்னாதேவி என்று ஜபித்துக் கொண்டிருந்தன.

ஒருவாறு தன் பிடியை விட்டுவிட்டு, "நீ போகலாம்" என்றார் காயத்ரியிடம். "அந்தப்புரத்தில் இரு. சக்ரவர்த்தி அழைக்கும்போது வந்து அவர் இடும் பணிகளைச் செய்."

காயத்ரி மீண்டும் ஒருமுறை தலை வணங்கிவிட்டு மெதுவே வெளியேறினாள். பேச்சுக் கேட்காத தொலைவுக்கு அவள் போனதும், "கிருஷ்ணா, இந்தப் பெண் இரண்டு பொய் சொல்லியிருக்கிறாள்" என்றார் அம்மா.

"அதிருக்கட்டும் அம்மா" என்று பேச்சை மாற்றப் பார்த்தேன்.

நான் வந்த விஷயத்தைப் பிரஸ்தாபிக்க வேண்டும் என்று நான் எண்ணியதை அம்மா தப்பாகப் புரிந்து கொண்டார். "காயத்ரியைப் பற்றி நான் குற்றம் சொல்வது உனக்குப் பிடிக்கவில்லை போலிருக்கிறது..." என்றார்.

"அதில்லை தாயே...

"பின்னே அந்த இரண்டு பொய் என்ன என்று நீ கேட்கவில்லையே?"

"சொல்லுங்கள்."

"ஒருவேளை யாருக்காவது பயந்து அப்படிச் சொன்னாளோ என்னவோ" என்றார் அம்மா, எனக்குச் சமாதானம் சொல்வதுபோல. "ஒரு பொய், தன் சொந்தக் கிராமம், மேற்குக் கடலோரத்தில் உள்ள சிச்சில் என்றது. சிச்சில் என்பது கிராமம் அல்ல. பெரிய பட்டணம். அதன் அருகில் உள்ள ஒரு துறைமுகத்தில்தான் போர்த்துகீசியர் கள் அரேபிய, பாரசீகக் குதிரைகளை விற்பனைக்காகக் கொண்டு வந்து இறக்குகிறார்கள். அந்த வர்த்தகம் பாமனி சுல்தான்களில் ஒருவரான பீஜப்பூர் சுல்தானுக்குப் பிடிக்கவில்லை. தடுத்துக் கொண்டிருக்கிறார். அதனால், போர்த்துகீசியர்கள் நம்மை உதவிக்கு வரும்படி கூப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இதுவரை அந்தப் பகுதியில் நமது விஜயநகரத்துப் படையோ, போர் வீரர்களோ போனது கிடையாது. ஆகவே இவளை அங்கிருந்து பிடித்து வந்திருக்க முடியாது."

அம்மா சொன்ன பிறகு எனக்கும் அதெல்லாம் ஞாபகம் வந்தன. ஆனால், இந்த நான்கு சுவர்களுக்கு நடுவே வசித்துக் கொண்டே அன்னையார் எத்தனை விஷயங்களைத் தெரிந்து வைத்திருக்கிறார்!

"அந்தப் பெண் சொன்ன இரண்டாவது பொய் என்னவென்று நீ கேட்கவில்லையே?" என்றார்.

"சொல்லுங்கள்" என்றேன்.

"அவளுடைய ரேகைகளைப் பார்த்தேன். சுக்கிரமேடு உயர்ந்திருக்கிறது. புத்தி ரேகை எவ்வித வெடிப்பும் இல்லாமல் நேராய்ச் செவ்வாய் மேட்டைத் தொட்டாற்போல இருக்கிறது. இருதய ரேகை நேராய்க் குரு மேட்டைத் தொட்டிருப்பதோடு, குரு மேடும் உயர்ந்திருக்கிறது. ஆகவே இவள் ஏழை விவசாயியின் பெண் அல்ல. நல்ல பாரம்பரியம் உள்ள பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவளாக இருக்க வேண்டும். சனி மேட்டில் தீர்க்கமான ரேகை இருப்பதால் தெய்வ பக்தியும், தைரியமும் உள்ளவளாக, நிறையக் கல்வி அறிவு கொண்டவளாக இருப்பாள்..."

அம்மாவின் முகத்தையே நான் வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தேன்.

"ஆனால் அந்தப் பெண்ணிடம் இதைப் பற்றி எதுவும் கேட்காதே" என்றார் அன்னை.

"ஏனம்மா, பொய் சொல்கிறவர்களை விட்டு விடுவதா?"

"இப்போதைக்கு விட்டுவிடு. ஏனென்றால் அவளுடைய ரேகையில் இன்னொன்றும் தெரிந்தது... விதி ரேகை கங்கணமேட்டைத் தொடாமல், நடுவில் ஆரம்பித்து. புத்தி ரேகைக்குக் கீழேயே பலவிதமான வெட்டுடன் இருக்கிறது."

"அதனால்?"

"அதனால் பதினைந்து வயது முதல் அவள் ஏராளமான துன்பங்களை அனுபவித்து வந்திருக்கிறாள் என்று தெரிகிறது. அந்தத் துன்பங்கள் காரணமாகத்தான் ஏதேதோ தப்பும் தவறுமாகச் சொல்லி இங்கே வந்திருக்கிறாள். வந்திருக்கிறாள் என்று கூடச் சொல்லமாட்டேன். அடைக்கலம் புகுந்திருக்கிறாள். தற்சமயம் அவளை ஒன்றும் கேட்காதே, கிருஷ்ணா."

"சரியம்மா" என்றேன்.

தலையைச் சாய்த்துக்கொண்டு என்னை ஆராய்கிற மாதிரி விசித்திரமாகப் பார்த்தார் அன்னை.

"என்ன தாயே?" என்றேன்.

"அந்தப் பெண்ணிடம் உனக்கு இது எதுவும் இல்லையே?" என்றார்.

"இது என்றால் எது?" என்றேன்.

"இது என்றால் எது என்று உனக்குத் தெரியும். உனக்குத் தெரியும் என்பது எனக்கும் தெரியும்" என்று சிரித்தார் அம்மா. சில சமயங்களில் அவர் என் தாயாக மட்டும் இருப்பதில்லை. வேடிக்கைகள் பேசக்கூடிய விளையாட்டுத் தோழனாகவும் இருப்பதுண்டு.

அப்பாஜியிடம் சொன்னதுபோல அன்னையிடமும், "நீங்கள் நினைக்கிற மாதிரி அந்தப் பெண்ணிடம் விபரீதமாகவோ, தப்பாகவோ எனக்கு எந்தவித அபிப்ராயமும் இல்லை அம்மா. நான்..." என்றேன். சின்னாதேவியைப் பற்றிப் பேச்செடுக்கச் சரியான சந்தர்ப்பம் வந்துவிட்டது என்று உள்ளத்தில் தெம்பு பிறந்து.

"நல்லவேளை" என்று முகம் மலர்ந்தார் அம்மா. "நான் ஏதோ என் சொற்ப அறிவை வைத்து, அந்தப் பெண் மேட்டுக் குடி, பெரிய பாரம்பரியம் என்று சொல்லி

விட்டேனே தவிர, ஒருக்கால் அவள் சொன்னதே உண்மையாக இருக்கலாம். அகதியாக வந்த ஏழைப் பெண்ணாகவும் இருக்கக்கூடும். அந்த மாதிரி குலம் கோத்திரம் தெரியாத கீழ்மக்களிடம் உன் மனம் சென்றுவிடக் கூடாது...” என்று அவர் சொன்னவுடன் எனக்குப் பகீரென்றது.

“அம்மா...” என்று மறுபடியும் குறுக்கிடப் பிரயத்தனம் செய்தேன். அவர் இடம் கொடுக்கவில்லை.

“கிருஷ்ணா... நம் முன்னோர்களின் சரித்திரத்தை உனக்குப் போய் நான் சொல்லத் தேவையில்லை. விஜயநகரம் ஸ்தாபிக்கப்பட்ட வரலாறு உனக்குத் தெரியும். தட்சிண மகா மண்டலேசுவரராகக் குமார கம்பணர் கொள்ளிடத்துக்கு வடகரையைக் கடந்து, சம்புவராயர் களை வென்று, மதுரையைக் கைப்பற்றிய காலம் முதல் இன்று சந்திரகிரி ராஜ்யம், சோழ ராஜ்யம், மதுரை ராஜ்யம் என்று சின்னதும் பெரியதுமாக ஐந்து ராஜ்யங்களுடன் விஜயநகர சாம்ராஜ்யம் விரிந்து பரந்திருக்கிறது. மதுரைக்குத் தெற்கேகூட தென்காசிப் பாண்டியரின் திறை அரசும், சேரரின் திருவடி அரசும் நமது பேரரசுக்குத் திறை செலுத்தி வருகின்றன...”

எனக்குத் தலையை வலித்தது. ஏனெனில் இந்தக் கடந்த காலக் கதைகளையும் நிகழ்கால நிலைமைகளையும் நான் நன்றாய் அறிவேன். பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு இதைப் படிக்கக் கூடிய உங்களுக்கும் சலிப்பாக இருக்கலாம்...

“மன்னியுங்கள் தாயே. எனக்கு ராஜாங்கக் கடமைகள் காத்திருக்கின்றன'' என்று கூறி மெதுவே எழுந்து கொண்டேன்.

“அந்தக் கடமைகளை இன்னும் செம்மையாக நீ நிறைவேற்ற வேண்டும். சாம்ராஜ்யம் இன்னும் பலமாக

வேரூன்ற வேண்டும். அதற்காக நான் ஓர் ஏற்பாடு செய்திருக்கிறேன். சொல்லப் போனால், நான் செய்யவில்லை, முதலமைச்சர் திம்மராசு - மகா பிரதானி என்று நீ பயபக்தியோடு அழைக்கும் அப்பாஜிதான் செய்திருக்கிறார். அதற்கு என் பூரண சம்மதம் உண்டு" என்றார் தாய்.

என் திகில் அதிகரித்தது. 'என்ன ஏற்பாடு?' என்று கேட்கக்கூட நா எழவில்லை. அது என்னவாக இருக்கும் என்று என் உள்மனம் சொல்லிவிட்டது.

"ஸ்ரீரங்கப்பட்டணத்து மன்னரின் குமாரியான திருமலாதேவியை உனக்கு மணம் செய்து வைக்க நிச்சயித்திருக்கிறேன்" என்று முடித்தார் அன்னை நாகலாம்பிகை.

நான் நிலைகுலைந்து போனேன்.

# 3

**நா**மொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கும் என்பது எவ்வளவு சத்தியமான வார்த்தை! சின்னா தேவிக்கும் எனக்கும் உள்ள காதல் நிறைவேறுவதற்கு உதவி செய்யும்படி அன்னையைக் கேட்கலாமென்று போனால், அவர் எனக்கு வேறோரிடத்தில் திருமணம் நிச்சயித்திருப்ப தாகச் சொல்கிறார்!

"வந்து... என்று முணுமுணுக்கத்தான் என்னால் முடிந்தது.

நான் கோயில்கள் எழுப்புவதில் ஆர்வமும் ஆன்மீக விஷயங்களை அறிவதில் ஆசையும் காட்டி வருபவனாகை யால் எங்கே நான் சந்நியாசியாகப் போய்விடுவேனோ என்று அம்மா அடிக்கடி அச்சம் கொள்வது வழக்கம். அந்த அச்சம் இப்போது அவரைப் பிடித்துக் கொண்டது போலும்.

"இது என் விருப்பம் மட்டுமல்ல கிருஷ்ணா, அப்பாஜியின் விருப்பம்; அப்பாஜியின் ஏற்பாடு..." என்றார் மீண்டும் ஒரு முறை. அப்பாஜியின் ஆணை என்றே சொல்லியிருக்கலாம். அந்த வார்த்தை என்னைப் பரிபூரணமாகக் கட்டுப்படுத்தும் என்பது அம்மாவுக்குத் தெரியும்.

மறுமொழி எதுவும் கூறாமல், "அப்புறம் வருகிறேன் அம்மா..." என்று சொல்லிவிட்டு வெளியே வந்தேன். "கிருஷ்ணா, இரு" என்று அன்னை கூப்பிடுவது என் காதில் விழுந்தும் நான் பொருட்படுத்தவில்லை.

தோளில் சுமந்து செல்லப் பெண்களோ, ஆண்களோ வேண்டாம் என்று நான் கட்டளையிட்டுவிட்டதால், வெளியே நவரத்தினங்கள் இழைத்த பல்லக்கு பளபளவென்று காத்திருந்தது. பல்லக்குத் தூக்கிகள் எட்டுப் பேர் தயாராக நின்றார்கள். யாரும் வேண்டாம் என்று கையசைத்துத் தெரிவித்துவிட்டு, நீண்ட தாழ்வாரங்களின் வழியே நடந்தேன்.

என் வாழ்க்கையிலிருந்து மறைந்தே போய்விட்டாள் என்று எண்ணியிருந்த என் சின்னாதேவியை உயிருடன் பார்த்த பிறகு... அவளை மறந்துவிட்டு... அவளுக்குக் கொடுத்த வாக்கைத் துறந்துவிட்டு... வேறொரு பெண்ணை மணப்பதா?

ஆனால், மகாபிரதானியும் முதலமைச்சரும் மூன்று தலைமுறையாக விஜயநகர சாமராஜ்யத்துக்காக உழைத்து வருபவருமான திம்மராசுவை, பெருமதிப்புக்குரிய அப்பாஜியை மீற முடியுமா?

இன்று நான் உயிரோடு இருப்பதே அவரால் அல்லவா? விஜயநகர சாம்ராஜ்ய சக்ரவர்த்தியாக நான் கோலோச்சுவது அவர் போட்ட பிச்சை அல்லவா?

அடுக்கு அடுக்காக ஞாபகம் வருகிறது...

என் தந்தை நரச நாயக்கரின் முதல் பத்தினி திப்பாம்பாவுக்குப் பிறந்து, ராஜ்யத்தை ஆண்டு வந்தவரும், 'புஜபல வீர நரசிம்மர்' என்று புகழ்பெற்றவருமான என் தமையனார் மரணப்படுக்கையில் கிடந்ததும்...

முதலமைச்சர் அப்பாஜியையும் நகர அத்தியட்சகர் கோவிந்தராசுவையும் அவர் ரகசியமாக அழைத்ததும்...

தன் எட்டு வயதுப் பிள்ளைதான் தனக்குப் பின் முடிசூட வேண்டுமென்று அவர்களிடம் சொன்னதும்...

தம்பியான நான் எதிரியாக முளைத்துவிடக் கூடாதென்பதற்காக என்னைப் பிடித்து, கண்களைப் பறித்துக் குருடாக்கிச் சிறையில் அடைக்கும்படி ரகசிய உத்தரவிட்டதும்...

அப்பாஜி திடுக்கிட்டுப் போனதும்...

நான் ஆட்சிக்கு வந்தால்தான் சாம்ராஜ்யத்துக்கு நல்லது என்று அவர் கருதியதும்...

வீர நரசிம்மரிடம் அதைக் காட்டிக் கொள்ளாமல், வெளியூர்களில் சுற்றிக் கொண்டிருந்த என்னை ரகசியமாக அழைத்து வந்து தன் மாளிகையில் பத்திரமாக ஒளித்துவைத்துக் காப்பாற்றியதும்...

அப்பாஜியின் ஏற்பாட்டை அறியாத என் அன்னை இரவோடு இரவாக அரண்மனையிலிருந்து புறப்பட்டு, பரிசலில் துங்கபத்திரா நதியைக் கடந்து மறுகரையில் தங்கியிருந்த வியாச தீர்த்தரிடம் சென்று 'என் பிள்ளையைக் காப்பாற்றுங்கள்' என்று அழுததும்...

வியாச குரு 'அரசாளப் பிறந்தவன் உன் குமாரன். அவன் பிறந்த லக்னம் மேஷம். அதன் தற்போதைய நிலையைப் பார்த்தால் ராஜயோகத்தை அடைகிற காலம் உன் பிள்ளைக்கு நெருங்கிக் கொண்டிருக்கிறது. கவலைப்படாமல் போ' என்று கூறித் திருப்பியனுப்பியதும்...

என் தமையனார் காலமான பதினாறாம் நாள், வைகுண்ட சமாராதனை என்ற சடங்கு முடிந்த தினத்தன்று, அரசரின் அந்தரங்க ஆலோசகர்கள் அடங்கிய குப்த சபை கூடியதும்...

'காலம் சென்ற மன்னர் சொன்னார் என்பதற்காக ஒரு சிறுவனை அரியணையில் அமர்த்துவதாவது! அப்புறம் சாம்ராஜ்யம் என்ன ஆவது? கிருஷ்ண தேவராயர் சக்ரவர்த்தியாக வரவேண்டும் என்றல்லவா பிரஜைகள்

விரும்புகிறார்கள்? அவர்தான் கொல்லப்பட்டுவிட்டாரே?' என்று குப்த சபையினர் குழப்பம் கொண்டதும்...

அந்தச் சமயம் அப்பாஜி 'கிருஷ்ண தேவராயர் இறக்கவில்லை. இதோ இருக்கிறார்!' என்று என்னைக் குப்த சபைக்கு அழைத்துப் போய் அறிமுகப்படுத்தியதும்...

அவர்கள் மகிழ்ச்சி ஆரவாரமிட்டு, என்னை வாழ்த்தி, சக்ரவர்த்தியாக ஆக்கியதும்...

எத்தனையோ தடவை என் தாய் எனக்குச் சொல்லிச் சொல்லி ஞாபகப்படுத்திய விஷயங்கள்...

அப்படிப்பட்ட அப்பாஜியை மீற முடியுமா?...

மஞ்சத்தில் சாய்ந்தேன். என்ன முயன்றும் உறக்கம் வரவில்லை.

குதிரைகளின் கொட்டடி அருகிலே இல்லை யென்றாலும் அவற்றின் குளம்படி ஓசைகளும் கனைப்புகளும் தொலைவிலிருந்து கேட்டுக் கொண் டிருந்தன.

நான்கு வருடங்களுக்கு முன், இதே போன்ற ஓர் இருள் நிறைந்த இரவில் குதிரை மீதேறி, சாம்ராஜ்யத்தின் தெற்குப் பகுதியில் உள்ள ஸ்ரீசைலத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது ஞாபகம் வந்தது.

அப்போது நான் சக்ரவர்த்தியாக ஆகவில்லை. வெறும் இளவரசன்.

எனினும் இளவரசன் என்று என்னை யாரிடமும் காட்டிக் கொள்ளவில்லை. நாட்டு நடப்பை அறிந்து கொள்ளும் ஆவலுடன் ஒரு சாதாரணப் பிரஜை போல ஊர் ஊராகப் போய்க் கொண்டிருந்த சமயம் அது. ரொம்ப அவசியம் நேர்ந்தால் என்னை அடையாளம் காட்டிக் கொள்வதற்காக, வராக இலச்சினை பொறித்த ராஜ மோதிரம் மட்டுமே அணிந்திருந்தேன். என் தமையனார்

புஜபல பராக்கிரம வீர நரசிம்மரின் ஆட்சியில் நாடு சுபிட்சமாக இருந்தது. தங்குவதற்கோ, உண்பதற்கோ எங்கேயும் எந்தக் கஷ்டமும் இல்லாத நாட்கள்.

அன்று -

அந்தி கவிந்து கொண்டிருந்தது. முழுதும் இருட்டு வதற்கு முன் காளஹஸ்தியை அடைந்துவிட வேண்டும் என்று போய்க் கொண்டிருந்த போது, குதிரையின் வேகம் குறைந்தது. அது களைத்துப் போயிருப்பதை உணர்ந்தேன். புல் நிறைந்த ஒரு மரத்தடியில் அதை நிறுத்திவிட்டு, இரவு தங்குவதற்கு ஏற்ற சத்திரம் பக்கத்திலே ஏதேனும் இருக்குமா என்று தேடிக் கொண்டே நடந்தேன்.

தொடுவானத்தில் தீப்பந்தங்களின் வெளிச்சம் தெரிந்தது. கிட்டே நெருங்க நெருங்க வாத்தியங்களின் ஓசை கேட்டது. ஜனங்களின் பேச்சுக் குரல்களும் உருவங்களும் தெளிவடையத் தொடங்கின.

இன்னும் சிறிது நடந்து, எதிர்ப்பட்ட ஒருவரை விசாரித்தபோது, அங்கே பாகவத மேளா நாடகம் நடைபெறப் போகிறது என்றார்.

குதிரையும் இளைப்பாறட்டும், நாமும் இளைப் பாறலாம் என்று முடிவு செய்தேன்.

கூட்டத்தோடு கூட்டமாய்ப் போய் உட்கார்ந்து கொண்டேன். ஆண்கள் இடுப்பில் வேட்டியும் மேலே ஒரு துண்டுமாக இருந்தார்கள். பெரும்பாலும் விவசாயிகள். பெண்கள் ரவிக்கை இல்லாமல் புடவையை இழுத்துப் போர்த்திக் கொண்டிருந்தார்கள். சளசளவென்ற அவர்கள் பேச்சில் சந்தோஷம் இருந்தது. வர்த்தகம், விவசாயம் இரண்டுமே செழித்து ஓங்கியிருந்ததால் அந்தச் செழிப்பு அவர்கள் முகங்களில் பிரதிபலித்தது. வயோதிகர்கள் கூடத் திடகாத்திரமாக இருந்தார்கள். அண்டை அயல் ராஜ்யங்களிலிருந்து மக்கள் குடிபெயர்ந்து விஜயநகர

சாம்ராஜ்யத்தில் வாழ்க்கை அமைத்துக் கொள்வதற்கு இந்தச் செழுமைதான் காரணம் என்று நினைத்துக் கொண்டேன்.

நெருக்கமான கூட்டங்களில் உண்டாகும் வியர்வை நாற்றம் இங்கே காணப்படவில்லை. மாறாக, கூத்துப் பார்க்க வருகிறோம் என்பதற்காகவே நறுமணங்களைப் பூசிக் கொண்டிருந்தார்கள். அதிகப்படியான நறுமணத்தி னால் எனக்குத் தலையை வலித்தது. ஆனால், முகம் சுளிக்காமல் மேடையைப் பார்த்தவாறு உட்கார்ந்திருந் தேன். தங்கள் மத்தியில் அமர்ந்திருப்பவன் விஜயநகரத்தின் இளவரசன் என்பது தெரிந்தால் இவர்கள் எப்படிப் பதைத்துப் போவார்களோ! எண்ணிப் பார்த்தபோது சிரிப்பு வந்தது. நல்ல வேளையாக நான் அவர்களுடைய உடையில், அவர்களைப் போலவே இருந்ததால் எந்த அமளியும் ஏற்படவில்லை.

மண் தரைதான் என்றாலும் சுத்தமாகப் பெருக்கி, பகலிலேயே தண்ணீர் தெளித்துச் சமன்படுத்தி, கோலம் போட்டிருந்தார்கள்.

மேடையின் இருபுறமும் பெரிய பெரிய தீவட்டிகள் எரிந்து வெளிச்சம் வீசிக்கொண்டிருந்தன. அவற்றின்மீது அடிக்கடி சாம்பிராணித் தூள் வீசி, மணமும் புகையும் எழுப்பினார்கள். நானும் மற்ற மக்களும் மண்டபம் எதுவும் இல்லாத திறந்த வெளியில் உட்கார்ந்திருந்தோம். மேடைக்கு மட்டும் கீற்றுக் கூரை போட்டிருந்தார்கள். மேடையில் ஒரு பெரிய படுதா. அதை இரண்டு பக்கமும் இரண்டு பேர் தூக்கிப் பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

'பாமா கலாபம்' என்ற பாகவத மேளா நாடகம் அன்று நடைபெறவிருந்தது.

இந்தப் பாகவத மேளா நாடகத்தை நான் பல ஊர்களில் பல சமயங்களில் பார்த்திருக்கிறேன். அதன்

அடிப்படை அம்சங்கள் எனக்குச் சிறிதளவு தெரியும். நீங்கள் இதைப் படிக்கும் காலத்தில் இதைப் பற்றி எவ்வளவோ ஆராய்ச்சிகள் நடந்திருக்கும். மிக விஸ்தார மாக அறிந்துகொள்ள முடியும்.

எனக்குத் தெரிந்தமட்டில், கிருஷ்ணா நதி கீழைக் கடலோடு சங்கமமாகும் இடத்தில் குசேலபுரி என்றொரு சின்னக் கிராமம் இருக்கிறது. அந்தக் கிராமத்தைச் சேர்ந்த ஸித்தப்பா என்ற அநாதைச் சிறுவனொருவன் ஊர் ஊராக நாட்டியக் குழுக்களின் பின்னால் சுற்றிக் கொண்டிருந்த போது, ஒரு நாள் தூங்கிக் கொண்டிருந்த சமயம் தன் உடம்பின் மீது ஸ்ரீ கிருஷ்ணர் ஏறி நின்று நடனமாடுவதாகக் கனவு கண்டான். 'கிருஷ்ணா... கிருஷ்ணா!' என்று அலறிக் கொண்டு கண்விழித்தான். அன்று முதல் இவன் கிருஷ்ணப் பிரேமை கொண்டவனாக மாறி, வேத வேதாங்கங்களைக் கற்றறிந்து, பண்டிதனாகி, ஸித்தேந்திர யோகி என்ற பெயர் பெற்று, பாகவத மேளா நாடகத்தை இயற்றினாரென்று கேள்விப்பட்டிருந்தேன்.

அவருடைய கிராமமான குசேலபுரிக்குக் குச்சுப்புடி என்ற இன்னொரு பெயரும் உண்டு. படையெடுத்து வந்த ஒரு முஸல்மான் மன்னர் அங்கே முகாமிட்டிருந்தபோது, 'பாமா கலாபம்' நடனத்தைப் பார்த்து மனம் பறிகொடுத்து, அந்தக் கிராமத்தாருக்கு ஏராளமான மானியம் வழங்கினார் என்று கூடச் சொல்வார்கள்.

நாரதர் கொண்டுவந்து தந்த பாரிஜாத புஷபத்தைக் கிருஷ்ணர் ருக்மிணிக்குக் கொடுத்து விட்டதால் சத்யபாமா கோபமடைய, அவளைச் சமாதானம் செய்வதற்காகக் கிருஷ்ணர் இந்திரலோகத்துக்குப் போய்ப் பாரிஜாத மரத்தையே கொண்டுவந்தாரென்ற கதையைத்தான் ஸித்தேந்திர யோகி 'பாமா கலாபம்' என்ற நாட்டிய நாடகமாகப் பண்ணியிருந்தார்.

தமது 'பாமா கலாபம்' நடனத்தை முழுக்க முழுக்க ஆண்கள் மட்டும்தான் நடத்த வேண்டும் என்று ஸித்தேந்திர யோகி விதித்திருந்தார். பெண் வாசனையே கூடாது என்பது அவருடைய கட்டளை. தெய்வத் துக்கு அர்ப்பணமாகச் செய்யும் நடனத்தில் பெண்கள் புகுந்தால் அதன் புனிதம் கெட்டுவிடும் என்பது அவர் கருத்து. 'பாமா கலாப'த்தில் வரும் பெண்களின் வேடத்தையும் ஆண்களே ஏற்று ஆடிவந்தார்கள்.

ஸித்தேந்திர யோகியின் கருத்து சரியல்ல என்று எனக்குத் தோன்றியது. அந்த நடன நாடகத்தைப் பார்க்கும்போதெல்லாம், பெண் வேடம் போட்டுக் கொண்டு ஆண் ஆடுவது ஒரு கோமாளித்தனமான காரியம் என்று நினைப்பேன்.

ஒருமுறை என் கருத்தைச் சில அறிஞர்களின் முன்னிலையில் சொல்லப் போய், எல்லாரும் சண்டைக்கு வந்து விட்டார்கள்!

'அபசாரம்! பாகவத அபசாரம்!' என்று ஒரே கூக்குரல்!

அந்த மாதிரி இங்கேயும் என்னை மீறி ஏதும் அதிகப்பிரசங்கித்தனமாகச் சொல்லி விடாமல் இருக்க வேண்டுமே என்று என்னை நானே அடக்கிக்கொண்டு மேடையைக் கவனித்தேன்.

படுதாவின்மீது நீண்ட ஜடை தொங்கியது. சத்யபாமாவாக நடிப்பவரின் ஜடை. திரையின் பின்னே அவர் நின்றிருக்கும்போது ஜடையை மட்டும் இப்படி வெளியே படுதா மீது தொங்கப் போட்டுக்கொள்வது வழக்கம். அவர் இதோ வரப்போகிறார் என்பது அதன் பொருள். அழகான நீண்ட ஜடை. ஒற்றைப் பின்னல் போட்டு, ஜடையின் உச்சியில் ஒரு பாம்பின் படம் ஆபரணமாகச் செருகியிருந்தது. பின்னலில் இருபத்தேழு

முறுக்கு; அந்த இருபத்தேழு இடங்களிலும் இருபத்தேழு ஜடை வில்லைகள் பளபளத்தன. ஒவ்வொன்றும் ஒரு நட்சத்திரத்தைக் குறிப்பதாகும். பின்னலின் நுனிப் பகுதி மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டு, மூன்றிலும் ஆபரணங்கள் ஜொலித்தன. பூமி, ஆகாயம், பாதாளம் ஆகிய மூன்றை அது குறிக்கும். அவற்றின் கீழே ஒன்பது குஞ்சலங்கள். நவக்கிரகங்களைக் குறிக்கும் வண்ணம்...

சிரசில் தலைப்பாகையும் கழுத்தில் மணிமாலைகளு மாக, நடன நாடகக் குழுவின் தலைவர் முன்னே வந்தார்.

"யாரம்மா பெண்ணே, ஏன் ஜடையில் இவ்வளவு ஆபரணங்கள் போட்டுக் கொண்டிருக்கிறாய்?" என்றார் வழக்கம் போல.

திரையின் பின்னாலிருந்து பதிலும் வந்தது:

"ஸ்ரீகிருஷ்ணர் என்னை மணம்புரிந்து கொண்ட போது எனக்கு அளித்த ஆபரணங்கள் இவையெல்லாம். என் பிரபுவின் திருமார்பில் தவழ்ந்த ஜடை இது! என் பெயர் சத்யபாமா! எனக்கு நிகரான அழகியோ, திறமைசாலியோ கிடையாது. கிருஷ்ணரின் மனதுக்குகந்த பத்தினி நான் ஒருத்திதான்!" என்று பாடிய வண்ணம் திரையின் பின்னாலிருந்து சத்யபாமா வேடம் போட்டவர் வெளியே வந்தார்.

தப்பு... வந்தாள்.

ஆம்! சத்யபாமாவின் வேடத்தில் வந்திருப்பது ஆணல்ல, பெண் என்று அந்தக் கணமே எனக்குத் தோன்றி விட்டது. ஆனால், அவையில் இருந்த யாரும் அப்படி நினைக்கவில்லை. என் அருகில் உட்கார்ந்திருந்த ஒரு பெண்மணி, "அடேயப்பா! இந்தப் பாகவதர் எத்தனை தத்ரூபமாய்ப் பெண் மாதிரியே இருக்கிறார்!" என்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தாள். மேலும், பாகவத மேளா நாடகத்தில் பெண்கள் கலந்து கொள்ளக் கூடாது

என்று உறுதியான கட்டுப்பாடு இருப்பதும் எல்லாருக்கும் தெரியும். எனவே யாரும் சந்தேகம் கொள்ளவில்லை.

ஆனால், எனக்கு மட்டும் சந்தேகம் விநாடிக்கு விநாடி அதிகரித்துக் கொண்டிருந்தது. மேனியின் வாளிப்பு, கைகால்களின் நளினம், மார்பின் எடுப்பு, இடுப்பு வளைகிற லாகவம், முகத்தின் மிருதுத்தன்மை அத்தனையும் 'இவள் பெண், பெண், பெண்ணேதான்!' என்று சத்தியம் செய்து கூறின.

எப்படி என் ஐயத்தைத் தீர்த்துக் கொள்வது? என்ன செய்யலாம், என்ன செய்யலாம் என்று சிந்தனை செய்து கொண்டே இருந்ததால், அற்புதமாக நடந்த நடனத்தை ரசிக்க முடியவில்லை. தோழி மாதவி சத்யபாமாவைக் கேலி செய்வதோ, கிருஷ்ணரைப் பிரிந்து சத்யபாமா தவிப்பதோ, மன்மதனிடம் பிரார்த்திப்பதோ, சகியின் யோசனைப்படி கிருஷ்ணருக்கு லிகிதம் எழுதுவதோ, வசனமோ, கவிதையோ, தாளமோ, ஹஸ்தம் காட்டும் முத்திரைகளோ — எதுவும் என் மனத்தில் பதியவில்லை. பேசாமல் எழுந்து போகலாம். அதற்கும் என் அசம்பாவம் இடம் தரவில்லை.

இவள் பெண் வேடமிட்ட ஆணா, அல்லது அசல் பெண்ணேதானா என்ற கேள்விகள் என் தலையைக் குடைந்து கொண்டிருந்த சமயம் -

மங்கள ஸ்தோத்திரம் பாடப்பட்டு, கற்பூரம் ஏற்றப்பட்டு, ஆரத்தி எடுக்கப் பட்டு, நடனம் முடிந்துவிட்டது. சத்யபாமாவாக ஆடியவர் படுதாவுக்குப் பின்னே போய்விட்டார். போனவர் முன்போலவே, தன் ஜடையைப் படுதாவின்மீது தொங்கவிட்டார்.

அதற்கு விசேஷ அர்த்தம் உண்டு.

அவையோரில் யார் வேண்டுமானாலும் மேடைக்கு வந்து தன்னைப் போல நடனமாடிக் காட்டலாம் என்ற அழைப்பு அது. சொல்லப் போனால், ஆடிக் காடடுங்கள்

பார்க்கலாம் என்ற சவால். அப்படி எவரேனும் மேடையேறி ஆடி, முதலில் ஆடியவரின் நடனத்தைக் காட்டிலும் இவர் நடனம் மேலாக இருந்தது என்று அவையினர் தீர்ப்புச் சொன்னால் -

ஜெயித்தவர், சத்யபாமாவாக ஆடியவரின் ஜடையைக் கத்திரித்து எடுத்துக் கொள்ளலாம். அவருக்கு வெற்றி, பரிசு; இவருக்குத் தோல்வி, அவமானம். ஆனால், பொதுவாக யாரும் போட்டிக்கு வருவது கிடையாது.

படுதாவின் மேலே ஜடை தொங்கிக் கொண்டிருந்த கணநேரத்துக்குள், நான் தாவி எழுந்தேன். 'நான் ஆடுகிறேன்!' என்று உரக்கக் கூவியபடி மேடையில் ஏறிவிட்டேன்.

என் திட்டம் இதுதான்:

சத்யபாமாவாக நடித்தவர் ஆணாக இருக்கும் பட்சத்தில், தோற்றுப் போனால் ஜடை வெட்டப்படுமே என்பதைக் குறித்து அவ்வளவாகக் கவலை கொள்ள மாட்டார். பொய்க் கூந்தல்தானே அது! போகட்டும் என்று விட்டு விடுவார். ஆனால், இன்று ஆடியது பெண்ணாக இருக்கும்பட்சத்தில் பதறிப் போவாள். தன் அசல் ஜடை, அசல் முடி, அசல் கூந்தல் வெட்டப்படுவதை எந்தப் பெண்தான் சகித்துக் கொள்வாள்? ஒரு நாளும் மாட்டாள் என்பதுதான் நான் போட்ட கணக்கு.

கலைந்து சென்று கொண்டிருந்த மக்கள் என் அதிரடி சவாலைக் கண்டதும் திரும்பி வந்து மேடையைச் சூழ்ந்து நின்று கொண்டார்கள். தீவட்டியின் வெளிச்சத்தில் அவ்வளவு கண்களும் என்னையே பார்ப்பது பயங்கரமாய்த் தெரிந்தது.

என்னுள்ளே பதற்றம்தான். ஏனெனில், பாகவத மேளா நாடகத்தின் சாத்திரம் படித்திருக்கிறேன். பயிற்சி செய்ததில்லை. ஏதோ ஒரு துணிச்சல்-

வாத்தியங்கள் முழங்க ஆரம்பித்தன.

எல்லாரும் நான் ஆடப் போவதைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்களே தவிர, படுதாவின் பின்னாலிருந்து அந்தப் பெண் ஓடி வருவாள் என்று எதிர்பார்க்கவில்லை.

நான் நினைத்தது நடந்துவிட்டது. என் தந்திரம் பலித்துவிட்டது.

ஓடிவந்தவள், மேடையின் ஓரமாக நின்றிருந்த நடனக் குழுவின் தலைவர் காலில் விழுந்தாள். "என்னை மன்னியுங்கள். நான் செய்தது அபசாரம். கட்டுப்பாட்டை மீறின காரியம். க்ஷமியுங்கள்!" என்று விம்மியபடி சொல்லி, திரும்பத் திரும்ப அவருக்கு நமஸ்காரம் செய்து விட்டு, என் முன்னே வந்து, தலைகுனிந்து கைகூப்பி நின்று, "தாங்களும் என்னை மன்னிக்க வேண்டும்!" என்றாள்.

அவள் மோவாயைத் தொட்டு முகத்தை நிமிர்த்தினேன்.

பளிங்கு நெற்றியில் பயமும், தாமரை விழிகளில் கண்ணீரும், பட்டாம்பூச்சி இமைகளில் படபடப்பும், செம்மாதுளை உதடுகளில் துடிதுடிப்புமாகச் சின்னாதேவி என் இதயத்தில் புகுந்தது அன்றைக்குத்தான்.

# 4

என் சிறுபிள்ளைத்தனத்தால், அகங்காரத்தினால் அடுத்தடுத்துப் பல அமளிகள் நிகழ்ந்துவிட்டன.

"என்னை மன்னியுங்கள், மன்னியுங்கள்!" என்று அந்த நாட்டியப் பெண் என்னிடம் சொல்லிக் கொண்டிருக்கும்போதே ஓர் இளைஞன் வேகமாக ஓடிவந்து, கூட்டத்தைத் தள்ளிக் கொண்டு மேடையில் ஏறினான். குளிர் ஜுரத்தில் படுத்திருந்தவன் போலும். உடம்பு நடுங்கிக் கொண்டிருந்தது. ஒரு கறுப்புக் கம்பளி போர்த்திக் கொண்டிருந்தான்.

"சின்னா தேவி!" என்று அவன் உறும, "அண்ணா!" என்று அவன் காலடியில் விழுந்தாள் அவள்.

நடனக் குழுவின் தலைவர், நடந்த குழப்பத்தை உணர்ந்து சுதாரித்துக் கொண்டு, "எதிராஜா! உன் தங்கை எப்படிப்பட்ட அபசாரம் செய்திருக்கிறாள், பார்! ஒரு பெண் இங்கே ஆடலாமா? இதற்கு நீ உடந்தையாக இருந்திருக்கலாமா?" என்று அவனிடம் கோபமாகக் கேட்டார்.

"அண்ணனை ஒன்றும் சொல்லாதீர்கள்" என்று கையெடுத்துக் கும்பிட்டாள் சின்னாதேவி. "அவர்மீது எந்தத் தப்பும் இல்லை. அவருக்குக் கடுமையான காய்ச்சல், படுத்துக் கொண்டிருந்தார். நாடகத்துக்கு இன்று வரமுடியாதென்று உங்களிடம் சொல்லச் சொன்னார். நான் அவருக்கே தெரியாமல் சத்யபாமா வேடம் அணிந்து கொண்டு இங்கே வந்துவிட்டேன். எல்லாக் குற்றமும் என்னுடையதுதான்...

அடக்க முடியாத விம்மலுடன் அவள் பேசிய போதிலும், குழுவின் தலைவர் இரங்கவில்லை. "எதிராஜா! வெகு திறமையாக உன் தங்கை தன் பாத்திரத்தைச் செய்தாளே! அது எப்படி? உன்னைத் தவிர யார் சொல்லித் தந்திருக்க முடியும்?" என்றார்.

"அதுதான் நானும் கேட்கிறேன்!" என்று எதிராஜன் தங்கையை முரட்டுத்தனமாகப் பிடித்து எழுப்பினான். "சொல்லு! எங்கே கற்றுக்கொண்டாய் இதெல்லாம்?"

அவன் உலுக்கிய உலுக்கலில், அவளுடைய அழகிய நீண்ட ஜடையில் செருகியிருந்த ஆபரணங்களும் சூடியிருந்த பூக்களும் உதிர்ந்து விழுந்தன.

"அண்ணா! அப்பாவும் அம்மாவும் என்னை ஐந்து வயதில் விட்டுப்போன நாள் முதல் நீங்கள்தான் எனக்கு அப்பாவும் அம்மாவுமாக இருந்து காப்பாற்றி வருகிறீர்கள். அல்லும் பகலும் அறுபது நாழிகையும் உங்கள் கூடவே இருந்து உங்கள் நடனத்தைப் பார்த்துக்கொண்டு வருகிறேன். நீங்கள் வீட்டில் இல்லாத சமயங்களில் ஆடிப் பார்த்துப் பயிற்சி செய்தேன். மேடையேறி ஆட வேண்டுமென்ற ஆசை என் கண்ணை மறைத்தது. இன்று சந்தர்ப்பம் கிடைத்ததும் பெரும் குற்றம் புரிந்துவிட்டேன்..."

அவள் விளக்க விளக்க, நான் என்னையே திட்டிக் கொண்டேன்.

அரை நாழிகைக்கு முன் அவளிடம் இருந்த உற்சாகம் என்ன, மலர்ச்சி என்ன, குதூகலமென்ன... அவ்வளவும் போய், இப்படிச் சோகப் பதுமையாய் நிற்கிறாளே! இதற்கு நானல்லவா காரணம்! அவள் பாட்டுக்கு ஆடிவிட்டு, யாரும் கண்டுபிடிக்கும் முன்னால் வீடு திரும்பியிருப்பாள். என்னால்தானே இப்படி அகப்பட்டுக் கொண்டாள்! சே, என்ன மனிதன் நான்!

அப்போதுதான் எதிராஜன் என்னைக் கவனித்தான். "யார் நீ?" என்று கேட்டான். அவன் கண்கள் சந்தேகத்துடன் என்னைப் பார்த்தன.

"நான்... என்ன சொல்லலாமென்று யோசிப்பதற் குள் இன்னொரு புது அமளி.

மேடையில் என்ன நடக்கிறது, எதைப்பற்றி வாக்கு வாதம் என்பது விளங்காத கூட்டத்தினர், திமுதிமுவென்று வந்து மேடையில் மோத, சிலர் மேடைமீதே ஏற...

பலகையொன்று படீரென்று உடைந்தது. அதைத் தொடர்ந்து மற்றப் பலகைகளும் சரியவே, கூரையாகப் போட்டிருந்த கீற்றுக் கொட்டகை தகர்ந்து விழ...

"அம்மா!" என்று சின்னாதேவி கூவிய பிறகே கவனித்தேன், ஒரு மூங்கில் பிளாச்சு தன் கூர்மையான முனையினால் அவள் நெற்றியில் குத்திவிட்டதை. ஊற்றுப்போல ரத்தம் குபுகுபுத்து வெளிப்பட்டது.

கணமும் தாமதிக்காமல் அவளைத் தாங்கிப் பிடித்து மடியில் சாய்த்து, என் மேல் துண்டினால் காயம் பட்ட இடத்தைச் சுற்றிக் கட்டி, "நான் உட்கார்ந்த இடத்தில் என் மூட்டை இருக்கிறது. சீக்கிரம் யாராவது போய் எடுத்து வாருங்கள்!" என்றேன்.

வேகமாகக் கொண்டு வந்து தந்தார்கள். பிரித்தேன். அந்தச் சிறிய மூட்டைக்குள் மாற்று உடைகள், அவசியமான கலன்கள் முதலியவற்றுடன் அவசரத்துக்கு இருக்கட்டும் என்று கடுக்காய்த் தூளும் ஆலமரப்பட்டை யிலிருந்து செய்த பொடியும் வைத்திருந்தேன். நெற்றியில் கட்டிய துணியை அகற்றிவிட்டு, காயத்தின் மீது அவற்றைப் பூசினேன். ரத்தம் பீரிடுவது குறைந்தது.

அவள் கண்ணைத் திறந்து என்னைப் பார்த்தாள்.

சற்று முன் அவள் முகத்தைப் பார்த்தபோது என்னுள் என்ன பரவசம் ஏற்பட்டதோ, அதே பரவசம் அவளுக்கும் என்னைப் பார்த்தபோது ஏற்பட்டது என்பதை அவளுடைய செந்தாமரைக் கண்கள் கவி பாடித் தெரிவித்தன. இதயத்துக்கு இதயமே சாட்சி.

"யார் நீ என்று கேட்டேனே?" என்றான் எதிராஜன். ஆனால், அவன் குரலில் கடுமை குறைந்திருந்தது. தங்கைக்குத் தக்க சமயத்தில் சிகிச்சை செய்தவன் என்பதால் என்மீது கருணை ஏற்பட்டிருக்க வேண்டும்!

சட்டென்று, "வைத்தியன்" என்று வாயில் வந்த பொய்யைச் சொல்லி விட்டேன்.

அவன் கண்கள் மறுபடி என்னை ஆராய்ந்தன. "பார்ப்பதற்குப் போர் வீரன் மாதிரி இருக்கிறாயே?" என்றான்.

"போர் வீரனும்தான். படையின் வைத்தியப் பிரிவில் இருப்பவன். க்ஷேத்ராடனம் செய்து கொண்டிருக்கிறேன்" என்று பொய்மேல் பொய்யாகச் சொன்னேன்.

ஆனால், அது முற்றிலும் பொய்யல்ல. கொஞ்சம் உண்மையும் உண்டு.

ராஜகுமாரன் என்கிற முறையில் நான் ஆசான்களிடம் படித்த பாடங்களில் சித்த வைத்தியமும் ஒன்று. பதினெட்டுச் சித்தர்களில் ஒருவரான தேரையர் பிறப்பால் தெலுங்கரானாலும், தமிழில் அவர் எழுதிய மருத்துவ பாரதம், தேரையர் கரிசல், தேரையர் வெண்பா ஆகிய நூல்களைப் படித்திருக்கிறேன். அதனால் தான் தைரியமாக அப்படிச் சொன்னேன்.

"நல்லவேளை! ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவனோ என்று நினைத்தேன்!" என்றான் எதிராஜன். அவன் குரலில் கசப்பும் வெறுப்பும் தென்பட்டன.

எனக்குத் திகைப்பாக இருந்தது. ஏன்? நான் ராஜகுடும்பத்தைச் சேர்ந்தவனாக இருந்தால் இவன் ஏன் கோபப்பட வேண்டும்? 'நல்லவேளை' என்று ஏன் சொல்ல வேண்டும்?

புரியவில்லை.

சின்னாதேவி வெட்கத்துடன் என்னிடமிருந்து விலகி எழுந்து கொண்டாள். உடைந்துவிட்ட மேடையின் ஓரத்தில் நின்றபடி நடனக்குழுவின் தலைவர், "இன்று நமது பாகவத மேளாவில் பெரிய அபசாரம் நேர்ந்துவிட்டது. மகாஜனங்கள் மன்னிக்க வேண்டும். நாளை முதல் வழக்கம் போல் எதிராஜனே சத்யபாமாவாக வருவார்" என்றார்.

"இல்லை இல்லை! இந்தப் பெண் நன்றாகவே ஆடுகிறாள். ஆண்கள்தான் ஆட வேண்டும் என்ற சம்பிரதாயத்தை விட்டுவிடுவோம். நாளை முதல் இவளே ஆடட்டும்!" என்று கூட்டத்தில் பலர் சொல்ல, "சரி, அப்படியே செய்யலாம்!" என்றார் அவர், வேறு வழி இல்லாமல்.

கொஞ்ச நேரத்துக்கு முன்பு என்னை நானே திட்டிக் கொண்டவன், 'பாகவத மேளா நாடகத்துறையில் ஒரு பெரும் புரட்சியை ஆரம்பித்து வைத்துவிட்டோம்' என்று இப்போது என் முதுகில் நானே தட்டிக் கொண்டேன்.

"வைத்தியரே, என் வீட்டில் தங்கலாம் வாருங்கள்" என்று அழைத்தான் எதிராஜன்.

"வைத்தியரே" என்று அவன் யாரையோ அழைக்கிறான் என்று அரைவிநாடி தயங்கி விட்டேன். கூப்பிட்டது என்னைத்தான் என்பது புரிந்ததும் சமாளித்துக்கொண்டு, "இன்னும் பல க்ஷேத்திரங்களுக்குச் செல்ல வேண்டியவன் நான்..." என்று போலியாகச் சொன்னேன்.

அண்ணன் சொல்லால் கூப்பிட்டான். தங்கை கண்ணால் கூப்பிட்டாள்.

கூடியிருந்தவர்களில் ஒருவர், "ஆமாம், வைத்தியர் ஐயா, பாகவதர்கள் கொஞ்ச நாள் இங்கேதான் தங்கப் போகிறார்கள். நீங்களும் அதுவரை இருங்கள். எங்கள் கிராமத்தில் தற்சமயம் வைத்தியரே கிடையாது" என்றார்.

இன்னொருவர், "முன்பு ஒரு வைத்தியர் இருந்தார். வயோதிகர். காலமாகிவிட்டார். அவர் வைத்திருந்த பாண்டங்களும் கருவிகளும் அப்படியே அவர் வீட்டில் இருக்கின்றன. கொண்டு வந்து தருகிறோம்" என்றார்.

கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டதே என்று எண்ணினேன். ஆனால், இது நல்ல பூதம். சின்னாதேவியின் அருகிலேயே நான் தங்கியிருக்க உதவி செய்யும் உபகார பூதம்.

"சரி, மாந்தோப்பில் என் குதிரையை விட்டிருக் கிறேன். போய்க் கூட்டி வருகிறேன்" என்று திரும்பினேன்.

"குதிரையா?" என்று திடுக்கிட்ட எதிராஜன் உடனே "ஓ, நீங்கள் படை வீரனுமல்லவா?" என்று சொல்லிக் கொண்டான்.

அதை உறுதிப்படுத்துகிற மாதிரி நானும் அவன் நாடியைப் பிடித்துப் பார்த்து, "உங்களுக்கு நளிர் ஜுரம் கண்டிருக்கிறது. வீட்டுக்குப் போனதும் நிலவேம்பு கஷாயம் போட்டுத் தருகிறேன். ஜுரம் நின்றுவிடும்" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டேன்.

எதிராஜனின் முகத்தில் புன்னகை தெரிந்தது.

**வா**சலின் இருபுறமும் திண்ணைகளுடன், சுற்றிலும் சிறிய பூந்தோட்டத்துடன் அழகாக இருந்தது எதிராஜனும் சின்னாதேவியும் தங்கியிருந்த ஓட்டு வீடு.

ஒரு நாழிகை ஒன்பது நாழிகையாக நீளுவதும், ஒன்பது நாழிகை ஒரு நாழிகையாகக் குறுகுவதும் உடன் இருப்பவரைப் பொறுத்தது என்பார்கள். சின்னாதேவி யுடன் இருந்ததால், அடுத்த பல தினங்கள் இறக்கை கட்டிக்கொண்டு பறந்துவிட்டன.

நான் வைத்தியர் வேடத்தை நன்றாகவே போட்டு வந்தேன் எந்த உயிருக்கும் ஆபத்து ஏற்பட்டு விடாத வகையில்!

அருகிலிருந்த காட்டுப் பகுதிகளுக்குச் சென்று பச்சிலைகளும், வேர்களும், ஆகாச கங்கைக் கிழங்கு, நிலப்பனைக்கிழங்கு வகைகளும் திரட்டி வந்து, பஸ்பம், செந்தூரம், லேகியம் முதலியன தயாரித்து வைத்துக் கொண்டேன். கிராம மக்களுக்கு ஏற்படக்கூடிய சிறுசிறு நோய்களுக்கு மருந்து கொடுத்தேன். என் அதிர்ஷ்டம் அவர்கள் நோய் குணமானதோடு, 'புது வைத்தியர் சின்னப் பிள்ளையானாலும் ரொம்பக் கைராசி' என்ற புகழும் கிடைத்தது!

வீட்டிலேயோ சின்னாதேவி விருந்து படைத்துக் கொண்டிருந்தாள், என்னுடைய எல்லாப் புலன்களுக்கும்.

"நீ மறைமுகமாக, அரைகுறையாகக் கற்றுக் கொண்டதை முழுமையாகவே கற்றுத் தருகிறேன்!" என்று கூறித் தங்கைக்குப் பரதக் கலையை முறையாகச் சொல்லித் தர ஆரம்பித்தான் எதிராஜன்.

ஒரு கையால் மட்டுமே பிடிக்க வேண்டிய அஸம்யுத ஹஸ்தங்கள் என்ற இருபத்தெட்டு முத்திரைகள் என்னென்ன என்பதையும், இரண்டு கையும் சேர்ந்து பிடிக்க வேண்டிய ஸம்யுத ஹஸ்தங்கள் என்ற இருபத்து நாலு முத்திரைகள் என்னென்ன என்பதையும், எந்தெந்த தெய்வங்களைக் குறிக்க எப்படியெப்படிக் கைகளையும் பாதங்களையும் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதையும்

சின்னாதேவி கற்றுக்கொண்டு ஆடுகையில், பார்த்துக் கொண்டிருக்கும் நான் பசி, தூக்கம், பயணம், சாம்ராஜ்யம் யாவற்றையும் மறக்கலானேன்.

ஆடி முடித்துக் களைப்புடன் அவள் நிற்கையில் முகத்தில் முத்திட்டிருக்கும் வியர்வைத் துளிகளை என் உதட்டால் ஒற்றியெடுக்க வேண்டும் போல் இருக்கும். நெற்றியில் விழுந்திருக்கும் ஒற்றைக் கேசங்களை ஒதுக்கிவிட வேண்டும் போலிருக்கும். பாதங்களில் விலகியுள்ள சலங்கைகளை நேராக மாட்டிவிட வேண்டும் போலிருக்கும். என் மனம் பட்ட பாடு இதைப் படித்துக் கொண்டிருக்கும் பெரியவர்களுக்குப் புரிகிறதோ இல்லையோ, இளைஞர்களுக்குப் புரியும்.

கண்களால் முளைத்த காதல் செடிக்கு எங்கள் கரங்கள் நீர் வார்த்தன.

சின்னாதேவியின் நெற்றிக் காயத்துக்கு தினம், அரிவாள்மூக்குப் பச்சிலையைக் கசக்கித் தடவினேன். இம்பூரல் செடியின் சாற்றைப் பிழிந்து பூசினேன். அருகம்புல் கசக்கினேன். ஆல், அத்தியின் பால் எடுத்து நெற்றி வழித்தேன்.

சற்று எரிச்சல் ஏற்படும்போது அல்லது ஏற்பட்டதாக நடித்துக்கொண்டு 'ஸ்' என்று அவள் என் கையைப் பற்றிக் கொள்வாள். காதல் தீயும் கூடவே பற்றிக்கொள்ளும்.

காயம் ஆறியது. நேயம் ஏறியது.

நான் யாரென்பதை அதுவரை எவரிடமும் சொல்லாமலே இருந்தேன்.

சின்னாதேவியிடம் மட்டுமாவது சொல்லிவிட வேண்டும் என்று ஒருநாள் நினைத்தேன். அதற்கு முன்னால், ஜாக்கிரதையாக அவளிடம் பேச்சுக்

கொடுத்தேன். "உன் அண்ணனுக்கு ராஜ குடும்பம் என்றால் பிடிக்காது போல் தெரிகிறதே? ஏன் அப்படி?" என்றேன்.

"ஐயோ! அந்த வார்த்தையை இரைந்து சொல்லாதீர்கள்!" என்று கூறிவிட்டு எச்சரிக்கையாகச் சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டாள் சின்னாதேவி. "அது ஏனென்று எனக்கே தெரியாது. ஆனால், விஜயநகரம்... சக்ரவர்த்திகள்... தேவராயர்... ராஜகுடும்பம் என்று யாராவது பேச்சு எடுத்தால் கடும் கோபம் ஏற்படுகிறது அவருக்கு. அந்தச் சமயத்தில் அண்ணனின் முகத்தைப் பார்க்கவே எனக்கு நடுக்கம் ஏற்படும்!" என்றாள்.

எனக்கே நடுக்கம் ஏற்பட்டது அவள் பேச்சைக் கேட்டு!

எதிராஜனுக்கு எங்கள் ராஜகுடும்பத்தின் மீது அப்படி என்ன தீரா வன்மம்? அந்த மர்மத்தை அறிந்து கொள்ள வேண்டும். அதற்கு முன்பு என்னை இன்னாரெனக் காட்டிக்கொண்டு எதிராஜனின் பகைமையைச் சம்பாதித்துக் கொள்வானேன்? எங்கள் காதலைக் கெடுத்துக் கொள்வானேன்? ஆகவே, நான் சொல்ல நினைத்ததை அன்று சொல்லவில்லை.

ஆனால், எதிர்பாராத சம்பவமொன்று என்னைக் காட்டிக் கொடுத்துவிட்டது.

அன்று எதிராஜன் வெளியே போயிருந்தான்.

ஆடிக்கொண்டிருந்த சின்னாதேவி இளைப்பாறுவதற்காகச் சிறிது நேரம் நின்றாள். இரண்டு கைகளையும் விலாவில் வைத்துக் கொண்டிருந்தாலும் விரல்கள் முத்திரை பிடிப்பது போல் பிரிவதும் மடங்குவதுமாகவே இருந்தன. ஆடிக் களைத்ததால் மூச்சு வாங்கி மார்பு ஏறி இறங்குவது தனி அழகாக இருந்தது.

"சின்னாதேவி, எனக்கும் நாட்டியம் கற்றுக் கொடேன்" என்றேன்.

"ஐயோ, வேண்டாம். எனக்குப் பயமாயிருக்கிறது" என்றாள்.

"என்ன பயம்? நான் உனக்குப் போட்டியாக வந்து உன் பெயரையும் புகழையும் கெடுத்துவிடுவேன் என்றா?"

"இல்லை" என்றாள்.

"எந்தச் சாஸ்திரமானாலும் ஆண்கள்தான் பெண்களுக்குக் கற்றுத் தர வேண்டுமே தவிர, ஒரு பெண் ஆணுக்குக் கற்றுத் தந்தால் சமூகம் பரிகாசம் பண்ணுமே என்ற பயமா?"

அவள் முறுவலித்து, "அதுவும் இல்லை" என்றாள்.

"பின்னே?"

அவளுடைய சிவந்த முகம் வெட்கத்தால் மேலும் சிவந்தது. எதையோ சொல்ல நாணப்படுகிறாள் என்று புரிந்து கொண்டேன். அதனாலேயே என் ஆவல் இன்னும் அதிகரித்தது. "நான் நாட்டியம் கற்றுக்கொள்ளத் தெரியாமல் எங்கேயாவது சறுக்கி விழுந்து கைகாலை முறித்துக்கொண்டு விடுவேன் என்று பயப்படுகிறாயா?' என்றேன்.

"இல்லை" என்றாள் மீண்டும்.

"அப்புறம் என்ன?"

அவள் மெதுவே சொன்னாள்: "நான் உங்களுக்கு ஏதேனும் கற்றுத் தந்தால் உங்களுடைய குருவாக ஆகிவிடுவேன். அதன் பின்..."

"அதன் பின்?"

"குருவைச் சீடன் மணப்பது கூடாது! அது மகாபாவம் என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள்

என்று வேகவேகமாகச் சொல்லிவிட்டு அவள் முகத்தைப் பொத்திக்கொண்டு வெளியே ஓடினாள்.

நான் விரைந்து சென்று அவள் கையைப் பிடித்து நிறுத்தினேன். "சின்னாதேவி, உனக்காக நான் எந்த மகா பாவமும் செய்யத் தயார்" என்றேன் சிரித்தபடி.

அவள் நின்றிருந்த நிலை — ஒரு காலை முன்னே வைத்து, ஒரு கையைப் பிடித்தபடி, இன்னொரு கையை முன்னே நீட்டி, வெளியேறுவதற்குத் தயாராயும், அதே சமயம் என்னை விட்டுப் பிரிவதற்கு விரும்பாதவளாயும், தேகத்தை வளைத்தாற் போல் நின்றிருந்த நிலை - அதுவே ஒரு நாட்டியம் போல இருந்தது. "ஒவ்வொரு கலைக்கும் ஒவ்வொரு கருவி இருக்கிறது. ஓவியத்துக்குத் தூரிகை கருவி, சிற்பத்துக்குச் சிற்றுளி கருவி. நாட்டியத்துக்கு உடம்பே கருவி' என்று நினைத்துக் கொண்டேன்.

அவள் தோள்களை இரு கைகளாலும் அழுத்திக் கொண்டு அவள் காது மடல்களில் உதட்டை வைத்து, 'சின்னாதேவி...' என்று ரகசியம் பேச முற்பட்டபோது...

தெருவில் மேளதாளமும் நாகசுர இசையும் ஜனங்களின் சிரிப்பும் பேச்சும் காதில் விழுந்தன. இருவரும் வாசலுக்குப் போய்ப் பார்த்தோம்.

தெருவில் வந்து கொண்டிருந்தது ஒரு திருமண ஊர்வலம்.

"நல்ல சகுனம்தான். இல்லையா?" என்றேன்.

பின்னும் அதிகரித்த வெட்கத்துடன் சின்னாதேவி தலை கவிழ்ந்தாள்.

மணமகனும் மணப்பெண்ணும் கழுத்தில் மாலைகளுடன் கை கோத்துக்கொண்டு நடக்க, முன்னாலும் பின்னாலும் பக்கத்திலும் ஆண்களும் பெண்களும் சிரித்துப் பேசிக் கொண்டு வந்தார்கள். வசதியில்லாதவர்கள் என்று

தோன்றியது. மணப்பெண் சரிகை ஏதும் இல்லாத சாதாரணப் பட்டுப்புடவை உடுத்தியிருந்தாள். கழுத்திலும் கையிலும் ரொம்பக் குறைவாகவே ஆபரணங்கள் இருந்தன. அவைகூடப் பொன்னில் செய்தவை அல்ல. வெள்ளியில் செய்யப்பட்டு, பொன்முலாம் பூசியது போல் இருந்தன. மணமகன் பட்டு வேட்டியும் சிறிய உத்தரியமும் அணிந்திருந்தான். ஆபரணம் இருந்தாலென்ன, இல்லாவிட்டால் என்ன? இருவர் முகத்திலும் நிறைந்திருந்த சந்தோஷம் கோடிப் பொன்னுக்கு ஈடானது.

நான் மெதுவே சிரித்தேன். "என்ன?" என்றாள் சின்னாதேவி.

"இரண்டு பேர் தலையையும் பார். பெரியவர்கள் போட்ட அட்சதை அங்கங்கே இருக்கிறது" என்றேன்.

"அது மட்டுமில்லை. கல்யாணப் பெண்ணின் தலையில் சீரகமும் வெல்லப்பொடியும் வைப்பது வழக்கம். அதுகூடக் கொஞ்சம் தெரிகிறது" என்று கூறிச் சின்னாதேவியும் சிரித்தாள்.

"கவலைப்படாதே. நம் கல்யாணத்தின்போது, நான் முன்னதாகவே பார்த்து, உன் கூந்தலில் பூவைத் தவிர வேறு எதுவும் இல்லாமல் தட்டிவிட்டு, அப்புறம்தான் ஊர்வலத்தை வைத்துக் கொள்வேன்" என்றேன். ஆனால் 'நம் கல்யாணம் இப்படியா நடக்கும்! விஜயநகர சாம்ராஜ்யமே அல்லோலகல்லோலப்படாதா?' என்று என் மனத்தினுள் மகிழ்ச்சியான எண்ணங்கள் ஓடின.

திருமண ஊர்வலம் எங்கள் வீட்டைத் தாண்டுகிற சமயம் சடடென்று நின்றது.

மணமக்கள் இருவருக்கும் எதிரே இரண்டு முரட்டு ஆட்கள், கையில் பிடித்திருந்த நீண்ட ஈட்டிகளை டங்கென்று பூமியில் குத்தி, அவர்களை வழிமறித்தது தான் காரணம். இறுக்கிக் கட்டிய கச்சமும் தலைப்பாகையும்

உடைவாளுமாக, பார்த்த மாத்திரத்திலேயே அவர்கள் கிராம அதிகாரியின் ஆட்கள் என்று தெரிந்தது.

"பெண்டிலி வர்த்தனை கல்யாண வரி கட்டியாயிற்றா?" என்று மணமகனைப் பார்த்து ஒருவன் உறுமினான்.

"கல்யாணத்துக்கு வரியா? என்ன அநியாயமாக இருக்கிறது!" என்று கோபமாக ஓரடி முன்வைத்தேன்.

சின்னாதேவி என் கையைப் பிடித்துத் தடுத்து நிறுத்தினாள்.

# 5

திருமண ஊர்வலத்தில் வந்து கொண்டிருந்த எல்லாரும் அந்த ஈட்டி ஆட்களைப் பார்த்து என்னைப் போலவே திடுக்கிட்டார்கள்.

"கல்யாண வரி... வந்து... என்று மணப்பெண்ணின் தந்தை பயத்துடன் தயங்கினார்.

"தாலி கட்டியாயிற்றா...?" என்று ஈட்டி ஆட்களில் ஒருவன் சீறினான்.

திருமண கோஷ்டியில் சற்றுத் தைரியசாலியாக இருந்த ஒருவர், "நீங்கள் யார்...?" என்று கேட்டார்.

"பார்த்தாலே தெரியவில்லையா...? பட்டண ஸ்வாமியின் ஆட்கள் நாங்கள்..." என்று ஒருவன் பதிலளித்தான். பட்டணஸ்வாமி என்பவர் பல கிராமங் களுக்குத் தலைவர்.

"தாலி கட்டியாயிற்றா...?" என்று முதல் ஆள் மறுபடியும் உறுமினான்.

கல்யாணப் பிள்ளை முதல் தடவையாக, "இன்னும் கட்டவில்லை அதற்குத்தான் கோயிலுக்குப் போய்க் கொண்டிருக்கிறோம். எதற்காக எங்களைத் தடுக் கிறீர்கள்...?" என்றான்.

அவன் குரலில் சிறிது எதிர்ப்புத் தெரிந்ததால், அந்த ஆட்களுக்குக் கோபம் வந்தது. "கல்யாண வரி கட்டத் துப்பில்லை... பெண்டாட்டி கையைப் பிடித்துக் கொண்டு பெரிசாய் ஊர்வலம் கிளம்பிவிட்டான்! விடுடா கையை..."

என்று மணமகளைப் பிடித்திருந்த மணமகனின் கையைத் தட்டிவிட்டான் ஒருவன்.

இவ்வளவையும் பார்த்துக் கொண்டிருந்த எனக்குப் பொறுக்கவில்லை. மறுபடியும் அவர்களை நோக்கிச் செல்ல அடியெடுத்தேன். மறுபடியும் சின்னாதேவி என்னைத் தடுத்தாள். "இது ஊர் வழக்கம். யாரும் எதுவும் சொல்லமுடியாது. பேசாமலிருங்கள்" என்றாள் ரகசியமான குரலில்.

கூட்டத்தைப் பார்த்தேன். எங்கேயோ போயிருந்த சின்னாதேவியின் அண்ணன் எதிராஜனும் இப்போது அங்கே வந்திருந்தான். அவனுடன் பாகவத மேளா நாடகக் குழுவைச் சேர்ந்த சிலரும், அவர்களின் தலைவரும் வந்திருந்தார்கள்.

மணப்பெண்ணின் தந்தை, "அடுத்த மாதம் சந்தை நடக்கப் போகிறது. வியாபாரம் ஆனதும் நேரே பட்டணஸ்வாமியின் அலுவலகத்துக்கே போய் வரியைக் கட்டிவிடுகிறோம்..." என்றார்.

நாடகக் குழுவின் தலைவர் வயோதிகர். இந்த முரடர்களிடம் எப்படிச் சொல்வது என்று தயங்கினார். ஆனால், எதிராஜன், "இவர்கள்தான் அடுத்த மாதம் கட்டுகிறேன் என்கிறார்களே..." என்று சொல்ல ஆரம்பித்தான்.

"ரொம்ப சரி. அடுத்த மாதம் கல்யாணம் வைத்துக் கொள்ளட்டும்? அதற்கு நீ என்னடா வக்காலத்து?" என்று காவலர்களில் ஒருவன் எதிராஜனைப் பிடித்துத் தள்ளினான்.

போர் வீரனைப் போல் உடலைப் பெற்றிருந்த எதிராஜன், நினைத்திருந்தால் அவர்கள் இரண்டு பேரையுமே மிதித்துத் துவையலாக்கியிருக்க முடியும். ஊர்க் கட்டுப்பாட்டுக்கு அடங்கிப் பேசாமலிருந்தான்.

கல்யாண கோஷ்டியில் இருந்த ஒரு பெரியவர், "ஐயா... கல்யாணம் சம்பந்தப்பட்ட மற்ற எல்லா வரிகளும் செலுத்திவிட்டோம். பந்தல் போட்டுக்கொள்ள வரி கேட்டார்கள். செலுத்தினோம்... வாத்தியம் வைத்துக் கொள்வதற்கு வரி கேட்டார்கள். கட்டிவிட்டோம்..." என்று சொல்கையில் இன்னொரு பெரியவர் குறுக்கிட்டு, "அது மட்டுமில்லை... மாப்பிள்ளையைக் குதிரை மேலேற்றி ஊர்வலம் போக வேண்டுமென்றால், அதற்குத் தனி வரி கட்ட வேண்டும் என்றார்கள். எங்களிடம் பணம் இல்லை. அதனால் குதிரை இல்லாமல் மாப்பிள்ளையை நடத்தியே அழைத்துப் போகிறோம்... என்றார்.

"கல்யாண வரி எவ்வளவு கட்டவேண்டும் என்று தெரியுமா?" கேட்டான் ஒரு காவலன்.

"தெரியும். பிள்ளைக்கு ஐந்து கட்டி வராகன், பெண்ணுக்குப் பத்து கட்டி வராகன். எப்படியும் செலுத்தி விடுகிறோம் ஐயா."

"முன்னதாகச் செலுத்தாமல் கல்யாணத்தை நடத்தியதால் நூறு கட்டி வராகன் அபராதம் போடுவோம்" என்றான் அவன்.

"ஐயோ, தாங்காது ஐயா!"

"தாங்காவிட்டால் வேறு எங்காவது போ."

கூட்டத்தில் பலவிதமான முணுமுணுப்பு எழுந்தது.

"இந்த மாதிரி வரிகளைத் தாங்க முடியாமல் ஏற்கெனவே பலபேர் ஊரை விட்டுப் போய்விட்டார்கள்..." என்றார் ஒருவர்.

வயதான ஒரு பெண்மணி, "கல்யாண வரிகளைக் கட்டமுடியாமல் இந்த ஊரில் எத்தனை பெண்கள் கன்னி கழியாமலே கிழவிகளாகிவிட்டார்கள், தெரியுமா...? பசுவைக் கொன்ற பாவம் உங்களுக்கு... என்றாள்.

"ஹூம்! கிணற்றிலிருந்து தண்ணீர் இறைக்க வரி, செக்கு ஆட்டுவதற்கு வரி, வெல்லம் காய்ச்சுவதற்கு வரி என்று இவ்வளவு அவ்வளவு இல்லை..." என்று பெருமூச்சு விட்டார் இன்னொரு கிராமவாசி.

எனக்குக் கோபம் கோபமாய் வந்தது. சின்னா தேவியின் பிடியை உதறிவிட்டு அந்தக் காவலர்களிடம் போனேன். "கல்யாணத்தை முதலில் நடத்தட்டும். தடுக்காதீர்கள். இது அநியாயம்." என்றேன் சாந்தமாக. சின்னாதேவி என் பக்கத்திலே வந்து நின்று கொண்டாள்.

"நீ யாரடாவன் புதிதாய் வந்துவிட்டாய்?" என்று ஒரு காவலன் என் வயிற்றில் ஒரு குத்துவிட்டான். கீழே விழாமல் சமாளித்துக் கொண்டேன்.

மற்றவன், "இது அநியாயமில்லை, தம்பி. எல்லா மண்டலங்களிலும் நடக்கிறதுதான்" என்றான்.

எனக்கு எங்கள் அரசாட்சி முறையின்மீது ஆத்திரம் வந்தது. விஜயநகர சாம்ராஜ்யம் என்று பெத்த பெயர்தான். சாம்ராஜ்யத்தைப் பல மண்டலங்களாகப் பிரித்து, அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு மண்டலேசுவரர்கள் என்று பெயர் சூட்டி அங்கங்கே நியமித்திருந்தார்கள். மண்டலேசுவரர்கள், தாங்கள் ஆட்சி புரியும் பகுதிகளைச் சீமை என்றும், நாடு என்றும் பல பெயர்களில், பல வகைகளாகப் பிரித்துச் சிற்றரசர்களுக்கும் பாளையக்காரர் களுக்கும் அதிகாரம் தந்திருக்கிறார்கள். அவர்கள் தங்கள் கீழே பட்டணஸ்வாமிகளையும் கிராம அதிகாரிகளையும் நியமித்திருக்கிறார்கள்.

மிக மேலே இருக்கும் சக்ரவர்த்திக்கும் மிகக் கீழே இருக்கும் நாட்டின் சாதாரணக் குடிமகனுக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. கிராம அதிகாரிகள் தங்கள் இஷ்டப்படி வரியோ, அபராதமோ, கட்டணமோ வசூலித்து, தங்களுக்கு மேலுள்ளவர்களுக்குச் செலுத்த

வேண்டியது. அவர்கள், அவர்களுக்கு மேலுள்ளவர்களுக்குச் செலுத்த வேண்டியது.

உச்சத்தில் தலைநகரில் உள்ள சக்ரவர்த்திக்கு, சிற்றரசர்களிடமிருந்தும் பாளையக்காரர்களிடமிருந்தும் உரிய கப்பம் வந்தால் போதும். சக்ரவர்த்தி போருக்குப் புறப்படும்போது, இவர்கள் தங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள அளவின்படி யானைகளும் குதிரைகளும் காலாட்படையும் அனுப்பினால் போதும். குடிமக்கள் எப்படிப் போனாலும் கவலை இல்லை!

எனக்கு என்மீது வெறுப்பு ஏற்பட்டது.

கௌதம சித்தார்த்தன் அரண்மனையை விட்டு வெளியேறி, மக்களின் துன்பங்களையும் நோய்களையும் வறுமைகளையும் பார்த்தான். நானோ, மக்களின் சந்தோஷங்களையும் கேளிக்கைகளையும் மட்டுமே பார்த்து 'எங்கள் சாம்ராஜ்யத்துக்கு ஈடு இணை கிடையாது' என்று இறுமாப்புக் கொண்டிருக்கிறேன். ஏழை, எளிய மக்களின் வாழ்க்கையில் துயரங்கள் நிறைந்த இன்னொரு பக்கம் இருக்கிறது என்பதைக் காணவில்லை.

இவ்வளவு எண்ணங்களும் என் மனத்தில் மின்னல் போல் ஓட, கிராம அதிகாரியின் ஆட்கள் தங்கள் வேலையில் சுறுசுறுப்பாக இருந்தார்கள்.

"ஊம்... ஊம்... திரும்பிப் போங்கள் எல்லாரும்! கல்யாணமும் கிடையாது... கருமாதியும் கிடையாது!" என்று ஒருவன் மணமக்களை ஈட்டியினால் தள்ளினான்.

ஒரு பெரியவர் உடனே, "ஐயா, ஐயா! சுபகாரியம் நடக்கிற சமயத்தில் அசுபமான பேச்சுப் பேசாதீர்கள்" என்றார் பரிதாபமான குரலில்.

"சுபமான காரியம் நடந்தாத்தானே ஐயா!" என்றான் அவன்.

நான் பொறுமையிழந்தேன்.

நீட்டப்பட்ட ஈட்டியை ஒரு கையால் விலக்கிவிட்டு, "அவர்கள் கோயிலுக்குப் போகட்டும், விடு..." என்றேன்.

ஒருவன் என்னைப் பார்த்து இளப்பமாகச் சிரித்தான்.

''இவ்வளவு பரிந்து பேசுகிறாயே..? நீதான் இவர்களுக்காகக் கல்யாண வரியைக் கொடேன்!'' என்றவன், என் விரலில் அணிந்துள்ள மோதிரத்தைக் கவனித்து, என் கையைப் பிடித்து "ஓ! நல்ல விலையுயர்ந்த... என்று ஆரம்பித்தவன், வாக்கியத்தை முடிக்காமலே பிரமித்து நின்றான்.

காரணம், வராக இலச்சினை போட்ட அந்த மோதிரம்! அதை ராஜ குடும்பத்தினர் மட்டுமே அணியலாம் என்பது எல்லாப் பிரஜைகளுக்கும் தெரிந்த விஷயம். அவனுக்கும் அது புரிந்துவிட்டது. இத்தனை நாளும் மற்றவர்களுக்குத் தெரியாமல் நான் அதை மறைத்துச் சமாளித்துக் கொண்டிருந்ததெல்லாம் வீணாயிற்று. இப்போது கண்டுவிட்டார்கள்!

"பிரபு... என்னை மன்னியுங்கள்... என்று சொல்லி, ஒருவன் தன் ஈட்டியைத் தூர எறிந்துவிட்டு என் காலில் விழுந்தான்.

மற்றவனும் என் அந்தஸ்தை உணர்ந்து கொண்டு, கீழே விழுந்து கும்பிட்டான். "ராஜ குடும்பத்தைச் சேர்ந்த இளவரசரான தங்களிடம் நாங்கள்... மரியாதைக் குறைவாக... என்று குழறினான்.

ஆனால், அப்போதும் நான் யாரென்பதைச் சொல்லிக்கொள்ள எனக்கு விருப்பமில்லை. "இல்லை... இல்லை... இது... என்று மறுக்கவும் மறைக்கவும் முயன்றேன்.

அதே சமயம், டக்... டக்... டக்கென்று குதிரைகளின் குளம்படி ஓசை கேட்டது. இரண்டு வீரர்கள் வந்துகொண்டிருந்தார்கள். தொலைவிலிருந்தே என்னை அடையாளம் கண்டுகொண்டுவிட்டார்கள் போலும்... குதிரை மீதிருந்து இறங்கி ஓடிவந்து குனிந்து வணக்கம் செலுத்தினார்கள்.

"இளவரசே, தங்களை ஒரு மாதமாக ராஜ்ய மெங்கிலும் தேடிக் கொண்டிருக்கிறோம்..." என்றான் ஒருவன்.

"இளவரசனா... என்ன உளறுகிறீர்கள்...?" என்று மறுக்க முயன்றேன். ஆனால், என் குரலும் மறுப்பும் பலவீனமாக ஒலிப்பது எனக்கே தெரிந்தது.

குதிரை வீரர்களில் இன்னொருவன் "மகாபிரதானி அப்பாஜி அவர்கள் லிகிதம் கொடுத்திருக்கிறார்கள்..." என்று கூறி, வெள்ளிக் குழலைக் கொடுத்தான்.

குழலுக்குள் இருந்த பட்டுத் துணியைப் பிரித்துப் படித்தேன்.

'இளவரசருக்கு... உடனே புறப்பட்டு வரும்படி கேட்டுக் கொள்கிறேன். அவசரம். திம்மராசு' என்று மட்டுமே இருந்தது.

இதற்குள் 'இளவரசர்... இளவரசர்... என்று பரபரப்பு எல்லார் மத்தியிலும் பரவ, அனைவரும் பயபக்தியுடன் விலகி நின்று கொள்ள...

எதிராஜன் மட்டும் வேகமாய் என் எதிரில் வந்து நின்றான். "விஜயநகர ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவனா நீ...? உண்மையைச் சொல்... என்றான் கடுமையாக.

எல்லாருக்கும் அதிர்ச்சி. இளவரசனைப் போய் 'நீ' என்று ஒருமையில், அதுவும் திமிராகப் பேசுகிறானே என்று, ராஜ குடும்பத்தின் மீது அவனுக்குள்ள பகைமை உணர்வு எனக்கும் சின்னாதேவிக்கும் மட்டுமே தெரியும்.

"நான்... விவரமாகப் பிறகு சொல்கிறேன்... என்று சொல்லிக் கொண்டிருக்கையில் சின்னாதேவி என்னை நெருங்கி, என் தோள்மீது கையை வைத்துக் கொண்டாள். ஆயிரம் கவலைகளும் நூறாயிரம் அச்சங்களும் அவள் உள்ளத்துக்குள் ஓடுவதை அந்தக் கையின் துடிப்பு எனக்குத் தெரிவித்தது.

"வா, இப்படி!" என்று தங்கையை முரட்டுத்தனமாக என்னிடமிருந்து பிரித்துத் தன் பக்கம் இழுத்துக் கொண்டான் எதிராஜன். என்னைப் பார்த்து, "பரம்பரை பரம்பரையாக நாங்கள் விஜயநகரத்தின் ராஜ குடும்பத்துக்கு விரோதிகள்! ஜன்மப் பகைவர்கள்! நீ யாரென்பது முன்பே தெரிந்திருந்தால், என் வீட்டுக்குள் அடியெடுத்து வைக்க விட்டிருக்க மாட்டேன். அப்போதே காலை வெட்டியிருப்பேன்!" என்று பல்லைக் கடித்தான்.

தலைநகரிலிருந்து வந்திருந்த வீரர்கள், "டேய்..." என்று அவன்மீது பாயப் போனார்கள்.

"இருங்கள்... என்று அவர்களை நிறுத்தினேன்.

சின்னாதேவியிடம், "பயப்படாதே... உன்னை ஒருநாளும் நான் கைவிட மாட்டேன்!" என்றேன்.

சின்னாதேவி விம்மலுடன், "அண்ணா... அவரை நான் மனதார... மனதார..." என்றாள்.

"சொல்லாதே அந்த வார்த்தையை!" என்று உறுமிய எதிராஜன், அடுத்த விநாடி யாரும் எதிர்பாராத காரியமொன்றைச் செய்தான்.

கண்மூடிக் கண் திறக்கும் நேரத்துக்குள்...

தங்கையைத் தரதரவென்று இழுத்துக் கொண்டு சென்று, அங்கே நின்றிருந்த குதிரைகளில் ஒன்றில் அவளைத் தூக்கி உட்கார்த்தி வைத்துத் தானும் தாவி ஏறிக் கொண்டான்.

புரவி பறந்தது. அது கிளப்பிய புழுதி, கெட்டியான படுதா போல் கண்களை மறைத்தது.

"பிடியுங்கள் அவர்களை!" - கட்டளையிட்டேன் என் வீரர்களுக்கு.

"கொஞ்சம் இருங்கள், இளவரசே!" என்றார், பாகவத மேளா நாடகக் குழுவின் தலைவர்.

"என்ன?" என்றேன்.

"தாங்கள் ராஜகுமாரர்... நாளை சாம்ராஜ்யத்தின் பேரரசராக வரக் கூடியவர்...

"அதனால்?"

"அதனால் முறை தவறான செயலில் இறங்கக் கூடாது" என்றார் அவர். "தந்தையோ, மூத்த மகனோ மனமுவந்து பெண்ணைக் கன்னிகாதானம் செய்து கொடுக்க வேண்டும். அதுதான் சாஸ்திரம்; அதுதான் சம்பிரதாயம். அவர்களுக்கு இஷ்டமில்லாதபோது பலவந்தமாகப் பெண்ணை அழைத்துக்கொண்டு போவது தப்பு. சக்ரவர்த்தியின் குடும்பத்தினரே அப்படிச் செய்தால் பாமர மக்களுக்குத் தவறான முன்னுதாரணம் காட்டுவதாக ஆகிவிடும்..."

கிராமத்து இளைஞர்களில் சிலர், "நீங்கள் சும்மா இருங்கள், ஐயா! சாஸ்திரமாவது, சம்பிரதாயமாவது!" என்றார்கள். காதலின் வேகத்தைப் புரிந்துகொண்ட இளம் ரத்தம்.

நான் பெருமூச்சு விட்டேன். எதிராஜனும் சின்னாதேவியும் சென்ற திசையில் ஒரு புள்ளிகூட இப்போது தென்படவில்லை. மறைந்தே போனார்கள்.

தலைநகரிலிருந்து வந்திருந்த வீரர்களுக்கு ஆத்திரமான ஆத்திரம். தங்கள் கண்ணெதிரில் 'இளவரசருக்கு அவமரியாதை நடப்பதாவது! சீவ

வேண்டாமா அவன் தலையை!' என்று எண்ணி என் உத்தரவுக்காகக் காத்திருந்தார்கள்.

நான் குழம்பி நின்றேன். அப்பாஜியின் அவசர அழைப்பு முக்கியமா, காதலியை மீட்பது முக்கியமா என்று யோசித்தேன். இறுதியில் அப்பாஜியின் செய்திக்கு மதிப்புக் கொடுப்பதுதான் மேல் என்ற முடிவுக்கு வந்தேன்.

என் மூட்டையிலிருந்து ஒரு தங்கக் காப்பை எடுத்து மணமகனின் கையில் அணிவித்து, கிராம அதிகாரியின் ஆட்களிடம், "இவர்கள் திருமணத்துக்கு எந்தத் தடையும் விதிக்காதீர்கள். இது என் ஆணை" என்று கண்டிப்புடன் கூறிவிட்டு, தாய்மார்கள் பெரியோர்களின் ஆசியையும் இளம் வயதினரின் வணக்கத்தையும் பெற்றுக்கொண்டு என் குதிரையில் ஏறிக்கொண்டேன். போர் வீரர்களின் குதிரைகளில் ஒன்றைத்தான் எதிராஜன் எடுத்துக்கொண்டு போயிருந்தான். அவர்கள் வேறு குதிரைக்கு ஏற்பாடு செய்து கொண்டார்கள்.

நானும் சின்னாதேவியும் குலவி மகிழ்ந்து ஓடி விளையாடிய வீட்டைக் கடைசி முறையாகப் பார்த்துவிட்டு, பெருமூச்சுடன் கிளம்பினேன். சாதாரண மனிதன்தான் அழலாமேயொழிய, இளவரசர்கள் என்பவர்கள் இரும்பு இதயத்தோடு இருக்க வேண்டும் என்று காட்டிக் கொள்பவன் போல் தலையை நிமிர்த்திக்கொண்டு குதிரையைத் தட்டி விட்டேன்.

ஆனால், இதயமாவது இரும்பாக ஆவதாவது! அது மெழுகிலே செய்யப்பட்ட முட்டாள் பொருள். ஈரக் களிமண்ணிலே பிசைந்த கோழைப் பிறவி. அது உருகியது... கரைந்தது.

கிராமப் பாதையிலிருந்து பிரிந்து நகரப் பாதைக்கு வந்து சேர்ந்தபோது குதிரையை நிறுத்தினேன்.

அது நாற்சந்தி. நாலு திசைகளில் சாலைகள் பிரிந்தன. சின்னாதேவி! என் கண்மணியே! எந்தச் சாலையில் உன் அண்ணன் உன்னைக் கொண்டு போனான்...?

அந்த இடத்தை விட்டு நகரவே என்னால் முடியவில்லை.

நான் ஏதோ வழி தெரியாமல் திகைக்கிறேன் என்று நினைத்துவிட்டார்கள் என்னுடன் வந்த இரண்டு வீரர்களும். "நாம் இதோ இந்தச் சாலையில் செல்ல வேண்டும், இளவரசே" என்றார்கள். அதுதான் பயணத்தின்போது அவர்கள் பேசிய கடைசி வார்த்தை. அதன் பிறகு வாயே திறக்கவில்லை. எது கேட்டாலும் "மன்னியுங்கள், இளவரசே. எதுவும் பேச வேண்டா மென்பது மகா பிரதாணியின் கட்டளை" என்று மட்டுமே கூறிவிட்டு மௌனியானார்கள்.

இரண்டு நாள் பயணத்துக்குப் பின், தலைநகரை நெருங்கினோம்.

ஏழு கோட்டை வாசல்களில் முதலாவது வாசலை அடைவதற்குச் சிறிது தூரம் முன்னால் ஒரு சத்திரத்தில் இறங்கினோம். படைவீரர்கள் என்பதைத் தெரிந்து கொண்ட சத்திரத்துத் தலைவர் சௌகரியமான அறையைச் சுத்தம் செய்து தந்தார். கதவை உள்புறம் தாழிட்ட பின்னரே ஒரு படை வீரன் சொன்னான்... "சக்ரவர்த்தி தங்கள் தமையனார் மிகவும் உடல்நிலை கெட்டுப் படுத்த படுக்கையாக இருக்கிறார், இளவரசே." என்று.

திடுக்கிட்டுப் போனேன். "இதை அப்போதே சொல்வதற்கென்ன? உடனே நான் அண்ணாவைப் பார்க்க வேண்டும்," என்று எழுந்துகொண்டேன்.

"இல்லை, இளவரசே, தங்களை மகா பிரதானி நேரே தமது இல்லத்துக்கே வரச் சொல்லியிருக்கிறார். அதுவும் மாறுவேடத்தில்" என்று.

என் திகைப்பு மேலும் அதிகரித்தது. "ஏன்? ஏன்?" என்றேன்.

"மீண்டும் மன்னிக்க வேண்டும், இளவரசே. அதை எங்களிடம் முதலமைச்சர் சொல்லவில்லை." என்றவன், குதிரையின் முதுகில் வைத்திருந்த மூட்டையை எடுத்து வந்து பிரித்து, "இதில் மாறுவேடத்துக்கான பலவகை உடைகள் இருக்கின்றன. தங்கள் விருப்பம் போல் அணிந்து கொள்ளலாம்," என்றான்.

மேலும் மேலும் கேள்வி கேட்டு அவர்களைத் தர்மசங்கடத்தில் ஆழ்த்த நான் விரும்பவில்லை. கண்ணாடியில் முகத்தைப் பார்த்துக் கொண்டேன். சிறிது யோசனை செய்தேன். வருத்தத்துடன் ஒரு தீர்மானத்துக்கு வந்தவனாக, "சரி, முதலில் இதை மழித்துவிடு" என்று என் மீசையைக் காட்டினேன்.

தலைநகருக்குள் என்னை அடையாளம் காட்டக் கூடியது அந்த ராஜகம்பீரமான இளம் மீசைதான். சாம்ராஜ்யத்திலேயே அந்த மாதிரி யாருக்கும் கிடையாது என்று அடிக்கடி பெருமையுடன் நினைத்துக் கொள்வேன். அதை இழப்பது பெரிய தியாகம். ஆனால் வேறு வழியில்லை.

ஒருவன் கத்தி எடுத்து வந்து மீசையைச் சுத்தமாய் மழித்தான். கண்ணாடியில் மறுபடி பார்த்துக் கொண்ட போது என் முகம் எனக்கே அடையாளம் தெரியவில்லை. பிடிக்கவுமில்லை. அவர்கள் கொண்டு வந்திருந்த மூட்டைகளிலிருந்து தேவையானதை எடுத்து மாறுவேடம் அணிந்துகொண்டேன்.

"எங்களுக்கு விடை கொடுங்கள், இளவரசே. மூவரும் சேர்ந்து வரவேண்டாமென்று முதலமைச்சர் கூறியிருக் கிறார்" என்றார்கள். "நாங்கள் முன்னே போகிறோம். பிறகு தாங்கள் வரலாம்."

தலையசைப்பின் மூலம் அவர்களுக்கு அனுமதி கொடுத்தேன். பிறகு ஞாபகம் வந்தது." என் குதிரையையும் அழைத்துப் போங்கள்" என்றேன்.

"வெகு தூரம் நடக்க வேண்டியிருக்கும் இளவரசே," என்று தயங்கினார்கள்.

"எனக்கு நடக்கிற வயதுதான்." என்றேன்.

அவர்கள் போய்விட்டார்கள்.

சற்று முன்பு சாதாரண கிராமத்தானைப் போல அறைக்குள்ளே சென்றவன், சரிகைத் தலைப்பாகையும் வெண்பட்டுச் கச்சமும், பட்டு அங்கியும், நீண்ட துப்பட்டாவும் கழுத்தில் முத்துமாலையும், காதில் குண்டலங்களுமாக, கையில் பெரிய தடியுடன், மகா பண்டிதனாக உருமாறி வெளியே நடை போடுகிறானே என்று சத்திரக்காரர் தலையைச் சொறிந்து கொண்டு நிற்கையில்...

நான் வித்யாகர்வத்தினால் தலைகனத்த புலவர் பெருமான் போல ஆகாயத்தை நோக்கி முகத்தை நிமிர்த்திக்கொண்டு நடந்தேன். நகருக்குள் நுழைந்து, ஆறு கோட்டை மதில்களைக் கடந்து, ஏழாவதான அரண்மனை வளாகத்தை அடையும்வரை வழியெங்கும் என்னைப் பார்த்தவர்கள் நின்று, தலைகுனிந்து வணக்கம் செலுத்தினார்கள். விஜயநகரப் பேரரசில் வேறெதற்குக் குறைவு இருந்தாலும் அறிஞர்களுக்குத் தரும் மரியாதைக்குக் குறைவு இல்லை என்பதை அறிந்து பெருமை ஏற்பட்டது. இதே நான், ரத, கஜ துரகபதாதிகள் புடைசூழப் பல்லக்கில் இளவரசனாகப் பவனி வந்திருந்தால்கூட மக்கள் இத்தனை மதிப்புத் தந்திருப்பார் களா என்று எண்ணிக் கொண்டேன்.

'எந்த ஆபரணமும் அழிந்து போகக் கூடியது; என்றும் அழியாதது கல்வியறிவு என்னும் ஆபரணம்தான்' என்ற

பொருள்பட, 'க்ஷீயந்தே அகில பூஷணானி ஸததம் வாக்பூஷணம் பூஷணம்' என்று பர்த்ருஹரி தமது நீதி சதகத்தில் கூறியதை நினைத்துக் கொண்டேன்.

அப்பாஜியின் மாளிகை வாசலில் நின்று வாசற் காப்போனிடம், "திம்மராசு இருக்கிறாரா?" என்றேன்.

"உள்ளே வாருங்கள் ஐயா." என்று பணிவோடு அழைத்துச் சென்றான் வாசற்காப்போன்.

அப்பாஜியின் மாளிகையில் கவிஞர்களுக்கும் அறிஞர்களுக்கும் மட்டும் தாழ்ப்பாள் கிடையாது. இரவு பகல் என்று காலபேதம் கிடையாது. ஏனெனில் அப்பாஜியே சிறந்த கவிஞர். பல நூல்களை இயற்றிய அறிஞர்.

மெத்தென்ற ஆசனத்தில் கால்மேல் கால் போட்டு அமர்ந்திருந்தேன். "யார் வந்திருப்பது?" என்று கேட்ட வண்ணம் அப்பாஜி வந்தார்.

"தாங்கள்தான் திம்மண்ணராசு என்ற கவிஞரா?" என்றேன்.

"தாங்கள்...?"

"நான் கவிராஜன். நீர் மகா பிரதானியாக இருக்கலாம். விஜயநகரப் பேரரசின் பிரதம மந்திரியாக இருக்கலாம். ஆனால் அகஸ்திய ரிஷியின் பால பாரதத்துக்கு நீர் வியாக்கியானமாக எழுதியுள்ள 'மனோரமா' என்ற நூலில் சொல் குற்றம், பொருள் குற்றம் மறைந்திருப்பதை மன்னிப்பதற்கில்லை. அதைப் பற்றி உம்முடன் விவாதம் செய்யவே பரசுராம க்ஷேத்திரம் என்ற கீர்த்தி வாய்ந்த கேரள தேசத்திலிருந்து புறப்பட்டு வந்திருக்கிறேன்," என்றேன்.

அருகிலிருந்த சேவகர்களைப் போகும்படி பணித்தார் அப்பாஜி. பிறகு என்னை நோக்கி, "ஊர் ஊராகப் பயணம்

செய்து கொண்டிருந்த போதிலும் இளவரசருக்கு அடியேனின் நூலைப் படிக்க நேரம் இருந்தது ஆச்சரியம் தான்," என்றார்.

நான் சிரித்துவிட்டேன், என் வேடம் அவரிடம் பலிக்கவில்லை என்பது தெரிந்ததும். ஆனால், அடுத்த விநாடியே கவலை பிடித்துக்கொள்ள, "சக்ரவர்த்தி உடல் நலம் இல்லாதிருக்கிறாராமே? உடனே நான்..." என்றவாறு எழுந்து கொண்டேன்.

"உஷ்!'' என்று உதட்டின்மீது விரல் வைத்து எச்சரித்தார் அப்பாஜி. என் தோளை அழுத்தி உட்கார்த்தினார். அதன் பிறகே, என் கண்களைக் குருடாக்கிச் சிறையிலடைக்கும்படி என் தமையனார் புஜபல வீர நரசிம்மர் பிறப்பித்துள்ள ரகசியக் கட்டளை பற்றித் தணிந்த குரலில் தெரிவித்தார்.

என் செவிகளையே என்னால் நம்ப முடியவில்லை. இப்படிக்கூடவா ஒரு சகோதரனுக்குக் கொலையுணர்ச்சி வரும்!

"பெரிய ராணிக்கு மட்டும் தங்கள் வருகையைத் தெரிவிக்கிறேன். வேறு யாருக்கும் இப்போது தெரிய வேண்டாம்." என்றார் அப்பாஜி.

அதன் பிறகு நான் அவருடைய மாளிகையில் மறைந்து வாழ்ந்திருந்ததையும், அவர் என்னைச் சக்ரவர்த்தியாக ஆக்கியதையும் ஏற்கெனவே நான் சொல்லிவிட்டேன்.

ஆனால், அந்த ஒரு மாத காலம் நான் பட்ட வேதனை! யாரிடம் என் தவிப்பைச் சொல்வேன்! புலவர் என்ற போர்வையிலேயே இருந்ததால், சின்னாதேவியை அங்கே போய்த் தேடு, இங்கே போய்த் தேடு என்று யாரையும் ஏவ முடியவில்லை. அப்பாஜியிடமும் சொல்ல

வில்லை. ராஜாங்கப் பொறுப்புக்கள் மூட்டை மூட்டையாகக் காத்திருக்கும்போது காதலாவது, ஒன்றாவது என்று அவர் நினைப்பார்.

சிறப்பாக மகுடாபிஷேகம் நடத்த வேண்டுமென்று அப்பாஜியும் மற்ற அமைச்சர்களும் விரும்பினார்கள். வேண்டாமென்று கூறிவிட்டேன். தமையனார் காலம் சென்ற கொஞ்ச காலத்துக்குள் எதற்காக ஆடம்பரம் என்று.

சக்ரவர்த்தியாகப் பதவியேற்றதும் நான் செய்த முதல் காரியம், யாருக்குமே தெரியாமல் என் அந்தரங்க ஒற்றர்களை அனுப்பி சின்னாதேவியையும் எதிராஜனையும் கண்டுபிடிக்கும்படி சொன்னதுதான். ஆனால், ஒற்றர்கள் கொண்டு வந்த செய்தியெல்லாம் 'காணோம், காணோம். காணோம்' தான்.

இதற்கு நடுவே பாமனி சுல்தான்களின் தொல்லைகள், சிற்றரசர்களின் கிளர்ச்சிகள், பாளையக் காரர்களின் சதி வேலைகள் முதலியவற்றை முறியடிப்பதிலும் பெரியவர்களிடம் ராஜநீதிகளைக் கற்பதிலும் காலம் ஓடிக்கொண்டிருந்தது. அமைச்சர்களிடம் ஆலோசனை கேட்டு, கல்யாண வரி போன்ற அநியாயங்களைக் களைந்து சீர்திருத்தங்கள் புகுத்தினேன்.

எனக்கு எப்போது திருமணம், எந்த ராஜ குடும்பத்திலிருந்து பெண் வரப்போகிறாள் என்று பொதுமக்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந் தார்கள். தாயும் அமைச்சர்களும் கவலையுடன் காத்துக் கொண்டிருந்தார்கள்.

முதலில் சின்னாதேவி இருக்குமிடம் தெரியட்டும் என்று உறுதியுடன் இருந்தேன் நான். சாம்ராஜ்யப் பொறுப்பினால் சின்னாதேவியையும் அவளுக்குக் கொடுத்த வாக்கையும் மறந்து விடுவோமோ என்று எனக்கே கூடச் சில சமயங்களில் பயம் ஏற்பட்டது.

ஆனால் சின்னாதேவி இதோ பக்கத்திலே, தலைநகரிலேயே இருந்திருக்கிறாள் என்று இப்போது தெரிந்துவிட்டது.

இனி அன்னையின் சம்மதத்தைப் பெற்று சின்னாதேவியின் கையைப் பற்ற வேண்டியதுதான் பாக்கி என்று நான் எண்ணியிருந்த சமயம், அவர் ஸ்ரீரங்கப் பட்டணத்து மன்னனின் குமாரியை எனக்கு மணமுடிக்க நிச்சயித்திருப்பதாகச் சொல்கிறார்!...

நடு ராத்திரியை அறிவிக்கும் கண்டாமணி உச்சி மண்டபத்திலிருந்து ஒலித்தது.

பழைய நினைவுகளின் உறுத்தல்களினால் நான் உறங்காமல் விழித்துக் கொண்டிருப்பதை அப்போதுதான் உணர்ந்தேன்.

நாலு வருடங்களாகத் தேடிக் கொண்டிருக்கும் சின்னாதேவி, இதோ தலைநகருக்குள்ளேதான் இருக்கிறாள், அரண்மனைக்குப் பக்கத்திலேதான் இருக்கிறாள் என்பதை அறிந்த பிறகு எப்படி உறக்கம் வரும்?

பஞ்சணையிலிருந்து எழுந்து, உடை அலங்காரங் களை மாற்றிக் கொண்டேன். ரகசியப் பாதை மூலம் அரண்மனையை விட்டுப் புறப்பட்டேன்.

நேற்று அவள் நடனமாடிக் கொண்டிருந்த விட்டலஸ்வாமி கோயிலை நோக்கி நடந்தேன். மாதங்க பர்வதத்தின் வடகிழக்குத் திசையில், இஷ்டம்போல் இறைந்து கிடக்கும் பாறைகளைக் கடந்து, சீற்றம் வரும்போதெல்லாம் கரையை மீறிப் பாய்ந்து, திரும்பிச் செல்கையில் விட்டுச் செல்லும் துங்கபத்ரா நதியின் பாதச் சுவடுகளைப் பார்த்தவண்ணம் சென்றேன்.

கோயிலுக்கு அருகில் நாட்டியக்காரிகள் வீதி இருக்கிறது. சின்னாதேவி அந்த வீதியில்தான் இருப்பாள் என்று எனக்குள் ஒரு ஊகம்.

தெரு நிசப்தமாக இருந்தது. ஆனால், அரண்மனையிலிருந்து புறப்பட்டது முதல் யாரோ என்னைப் பின்தொடர்ந்து வருவதுபோல் ஒரு பிரமை தோன்றிக் கொண்டேயிருந்தது. எனினும், நான் திரும்பிப் பார்க்கவில்லை.

நான் எங்கு சென்றாலும் ஒரு வீரன் என் பாதுகாப்புக்காக எனக்கே தெரியாமல் என்னைப் பின்தொடர வேண்டும் என்பது அப்பாஜியின் கட்டளை. அதன்படி அரண்மனை ஆட்களில் ஒருவன்தான் வந்துகொண்டிருக்கிறான் என்று நினைத்தேன்.

அப்படியல்ல என்று பிற்பாடு தெரிந்தது.

# 6

நடனக்காரிகளின் வீதியிலேதான் சின்னாதேவி இருப்பாள் என்று சுலபமாக நினைத்துவிட்டேனே தவிர, அந்தத் தெருவில் நடக்க நடக்க என் நெஞ்சில் சுமை ஏறிற்று. என்ன நேருமோ, எப்படி இருக்குமோ என்று இதயம் படபடக்கும் ஓசை என் செவிகளில் கர்ண கடூரமாகக் கேட்டது. 'எனையாளும் விரூபாட்ச தெய்வமே! வெங்கடமலையில் வீற்றிருக்கும் பெருமாளே! என் சின்னாதேவி இந்தத் தெருவில் வசிக்காமல் இருக்க வேண்டும்' என்று ஓயாமல் பிரார்த்தனை செய்தவாறு நடந்தேன்.

காரணம், இங்கே வசிக்கும் பெண்களின் வாழ்க்கையில் ஒரு பாதி நடனம் என்றால், மறுபாதி ஒழுக்கக் குறைவான ஜீவனமாகும். தேவதாசிகள் என்ற பெயரில் கோயிலில் இறைவனின் முன்பு மூன்று வேளைகளிலும், பிறகு உற்சவ காலங்களில் வீதிகளிலும் ஆடுவதற்காக இவர்களுக்கு மானியம் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அது போதாததால் அல்லது படாடோபமாக வாழவேண்டுமென்ற ஆசையினால் பிரபுக்களுக்கும் செல்வந்தர்களுக்கும் வர்த்தகர்களுக்கும் உடலை விற்று வந்தார்கள்.

இவர்களில் பெரும்பாலோர் நடனக் கலையில் மட்டும் தேர்ந்தவர்களல்ல... அற்புதமாக வீணை வாசிப்பார்கள். ஆன்மீக விஷயங்களை அருமையாக அலசுவார்கள். சதுரங்கமும் பகடையும் விளையாடுவார்

கள். ராஜதந்திர விவகாரங்களை நுட்பமாக எடுத்துரைப்பார்கள்.

தங்களை நாடிவரும் ஆண்களுக்கு எந்தெந்தத் துறையில் நாட்டமுண்டோ அந்தந்தத் துறையில் உரையாடி, விளையாடி அவர்களைத் திருப்திப்படுத்துவார்கள்.

நாகரிகம் வளர வளர, மக்களின் பண்பாடும் கல்வியறிவும் ஓங்க ஓங்க, பெண்களின் உரிமைகள் சீர்ப்படச் சீர்ப்பட, எதிர்காலத்தில் இது கேவலமான, இழி தொழிலாகக் கருதப்படலாம். இதை நீங்கள் வாசித்துக் கொண்டிருக்கும் காலத்தில் நடனக்காரிகளின் நிலை எப்படி மாறியிருக்குமோ எனக்குத் தெரியாது. ஆனால், தற்சமயம் இவர்களுக்குச் சமூகத்தில் பெருமதிப்பும் கௌரவமும் இருக்கின்றன. பணக்காரர்களும், வியாபாரிகளும், ஏன், சில ராஜகுமாரர்கள் கூட இவர்களுடன் தொடர்பு வைத்திருப்பதைப் பெருமையாகக் கருதுகிறார்கள். வீட்டில் ஒரு பத்தினி இருந்தாலும் இந்த வீதியில் ஓர் ஆசைநாயகி இருந்தால் அது தனி அந்தஸ்து. அவளுடன் உற்சவங்களுக்கும், விழாக்களுக்கும், கடைவீதிகளுக்கும் பகிரங்கமாகச் செல்கிறார்கள். வெட்கப்படுவதில்லை.

இந்த வீதியில் வசிக்கும் பெண்கள் சிலர் அரண மனைக்குத் தாராளமாக வரவும், அந்தப்புரங்களில் தடையின்றி நுழையவும் அரசகுமாரிகளுக்குச் சமமாக உட்கார்ந்து தாம்பூலம் தரிக்கவும் உரிமை பெற்றிருக் கிறார்கள்.

எவ்வளவு இருந்தால்தான் என்ன! இழிதொழில் இழிதொழில்தான். அதனாலேயே இங்கே சின்னாதேவி இருந்துவிடக்கூடாதே என்று தெய்வங்களை இறைஞ்சினேன். ஆனால், சின்னாதேவி எந்தச் சூழ்நிலையிலும் ஒழுக்கம் தவறியிருக்கமாட்டாள் என்ற நம்பிக்கையும் தீவிரமாக என்னுள் இருந்தது.

இருட்டில் தொப்பல் தொப்பலாக நனைந்து கொண்டிருந்தது தெரு. இதே தெரு சாயந்தர வேளைகளில் என்ன ஜாஜ்வல்யமாக இருக்கும்! எல்லாம் பெரிய பெரிய மாளிகைகள். விசாலமான வாசல் கிராதிகள் வெள்ளி முலாம் பூசப்பட்டு, உள்ளேயுள்ள தோட்டத்தின் வர்ண ஜாலங்களுக்குப் போட்டியாகப் பிரகாசிக்கும். அப்போதுதான் முளைத்த புஷ்பச் செடி போல குமரிகள் ஊஞ்சலில் ஆடுவார்கள். அவர்களுடைய தாய்மார்கள் அல்லது பாட்டிமார்கள் மெத்தென்ற ஆசனங்களில் கால்மேல் கால் போட்டுக் கொண்டு அமர்ந்திருப்பார்கள். உள்ளே வருகிற ஆண்மகன் எப்படிப்பட்டவன், எத்தகைய செல்வந்தன் என்பதை ஒரே பார்வையில் அளவெடுத்து அதற்குத் தக்கபடி உபசரிப்பார்கள். அல்லது வெளி யேற்றுவார்கள். இந்தத் தாய்க்கிழவிகளைத் திட்டாத புலவனே கிடையாது! மாலை நேரங்களில் பாட்டும் நடனமும் சிரிப்பும் கும்மாளமுமாக இருக்கும் தெரு, இந்த நள்ளிரவு வேளையில், சலங்கை கழற்றி விடப்பட்ட பாதம் போல் மெத்தென்று நிசப்தமாக இருந்தது.

சின்னாதேவியின் வீடு எங்கே இருக்கிறதென்று எப்படிக் கண்டுபிடிக்க முடியும்? என் முட்டாள்தனத்தை நினைத்து என்னை நானே திட்டிக்கொண்டேன். பகலில் ஆட்களை அனுப்பி ரகசியமாக விசாரித்திருக்கலாமே என்று நினைத்தேன்.

அது மிக நீளமான வீதி. கிட்டத்தட்ட மறுகோடியை அடைந்துவிட்டபோது -

ஓர் இல்லத்தில் வெளிச்சங்களும் நடமாட்டங்களும் தென்பட்டன. மாளிகையின் உட்புறத்தில் தீபங்கள் எரிந்ததால் அவற்றின் வெளிச்சம் தெருவரையில் வந்தது. வீட்டுக்குள் குறுக்கும் நெடுக்கும் செல்பவர்களின் நிழல்கள் தெருவில் விழுவதும் மறைவதுமாக இருந்தன.

வாசலிலிருந்து வெகுதூரம் தள்ளி உட்புறமாக அந்த வீடு இருந்ததால் அங்கே யார் நடமாடுகிறார்கள் என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

நான் குழம்பி நின்றிருந்தபோது, உள்ளேயிருந்து வயோதிகர் ஒருவர் வெளியே வந்தார். தூக்கம் பிடிக்கவில்லையோ அல்லது இயற்கை உபாதையைச் சரிப்படுத்திக்கொள்ள வந்தாரோ தெரியவில்லை. இருட்டில் நான் நின்றிருப்பதைக் கண்டுவிட்டார்.

"யார் தம்பி நிற்கிறது?" என்று கண்களை இடுக்கிக்கொண்டு கேட்டார்.

"சும்மாதான்... இங்கே... இந்த வீட்டில்... என்று சமாளிக்க முயன்றேன்.

"வருவதுதான் வருகிறாய், பொழுதோடு வரக்கூடாதோ? சாயந்தரம் வரையில் கோலாகலம் இருந்தது. இப்போது உனக்குச் சாப்பாடுகூட மிச்சமிருக்கிறதோ இல்லையோ?" என்றார் அவர்.

"கோலாகலமா? என்ன கோலாகலம்?" என்றேன்.

"தம்பி, கோலாகலம் என்றாலே கல்யாண கோலாகலம்தான். இதுகூடத் தெரியவில்லையே உனக்கு?" என்றார்.

அச்சம் ஏற்பட்டது எனக்கு.

முன்னொரு கல்யாணத்தைப் பார்க்கப் போய்த்தான் சின்னாதேவியைப் பிரிய நேரிட்டது. இப்போது இன்னொரு கல்யாணத்தில்...

கூடவே விபரீதமான சந்தேகங்களும் எழுந்தன.

'நித்திய சுமங்கலிகள்' என்று அழைக்கப்படும் இந்த நடன குமாரிகள் கல்யாணம் என்று ஒன்று செய்து கொண்டு, கணவன் என்று பெயருக்கு ஒருவனை வீட்டில் வைத்திருப்பார்கள். எப்போதாவது சிலசமயம் வேறு

வாடிக்கையாளர் வரவில்லையென்றால் அவனுக்குக் கணவன் என்ற சலுகை தரப்படும். சின்னாதேவிக்கும் அந்த மாதிரி ஏதேனும்...

"பெரியவரே... யாருக்கு... கல்யாணம்?" என்று தடுமாறினேன்.

"தம்பி, வழிவிடு. நான் அந்தப் பக்கம் போகணும்... யாருக்குக் கல்யாணமாம்! கல்யாணப் பெண்ணுக்குத்தான் கல்யாணம்!" என்று சிரித்தார் அவர், என் பதைப்பை உணராமல்.

"அது தெரியும்... பெண்ணின் பெயர் என்ன?" என்றேன்.

"அது தெரியும். இது தெரியவில்லையா? நாகலட்சுமி" என்று அந்த முதியவர் சொல்லி என் வயிற்றில் பால் வார்த்த வேளையில் -

"ஷ்! ஷ்!" என்று மதில் சுவருக்கு அப்பாலிருந்து ஒரு பெண் குரல் அவரைக் கூப்பிட்டது. "தாத்தா, இப்படி வாருங்கள். ஒரு சமாசாரம்" என்றது.

பெரியவர் உள்ளே போனார். நானும் அவரைப் பின்தொடர ஓரடி எடுத்து வைத்தேன். பின்னர், நின்றுவிட்டேன். எப்படியும் என்னைக் கண்டு கொள்வார்கள். என்னதான் நகர சோதனைக்குப் புறப்பட்டேன் என்று சால்ஜாப்பு சொல்லிக் கொள்ளலாமென்றாலும், இந்த வீதியில், அதுவும் இந்த வேளையில் விஜயநகரப் பேரரசர் வந்தாரென்றால் பெரும் அமளியாகிவிடும். வெளியிலேயே நின்றேன்.

மதில் சுவருக்கு மறுபுறத்தில் கிசு கிசுவென்று பேச்சுக் குரல் கேட்டது. சிறிது நேரத்தில் பெரியவர் வெளியே வந்தார்.

"ஐயா, உங்களை அரண்மனைக்கே திரும்பிப் போகச் சொல்கிறார்கள். நாளைய தினம் உங்களுக்கு எல்லாத் தகவல்களும் கிடைக்கும் என்று சொல்கிறார்கள்" என்றவர், "அரண்மனையில் வேலை பார்க்கிறவரா நீங்கள்? தெரியாமல் போயிற்று. நான் ஏதாவது தப்பாய்ப் பேசியிருந்தால் மன்னித்துவிடுங்கள்" என்றார்.

"பரவாயில்லை, உங்களைக் கூப்பிட்டுப் பேசினது யார்?" என்று கேட்டேன்.

"யாரோ ஒரு பெண்" என்றார்.

"யாரந்தப் பெண்?" என்றேன்.

"ஏன் தம்பி, கல்யாணம் என்றால் யார் யாரோ வருகிறார்கள். யார் யாரோ போகிறார்கள். ஒவ்வொரு பெண்ணிடமும் நீ யார் எந்த ஊர் என்றெல்லாம் கேட்டுக் கொண்டிருக்க முடியுமா?" என்று பெரியவர் என்னைக் கடந்து சென்று விட்டார்.

சரேலென உள்ளே நுழைந்து நாலுபுறமும் பார்த்தேன். இருட்டில் எதுவும் தெரியவில்லை. செடிகளும் கொடிகளும் அடர்த்தியாக வளர்ந்திருந்ததால் அவற்றினிடையே யாரோ சரசரவென்று ஓடுகிற சத்தம் கேட்டது. உலர்ந்த சருகுகள் கால்களில் மிதிபட்டு நொறுங்கும் ஓசையும் கேட்டது.

சத்தம் கேட்ட திசையில் கையை நீட்டினேன். ஒரு துணி தட்டுப்பட்டது. அதன் வழவழப்பிலிருந்து ஒரு பெண்ணின் சேலையென்று கண்டுகொண்டு பலமாக இழுத்தேன்.

அதை அணிந்திருந்த பெண் வரவில்லை. டர்ரென்று சேலை கிழிபட்டு, அல்லது கிழிக்கப்பட்டு, தலைப்பின் ஒரு துண்டு மட்டுமே என் கைக்கு வந்தது.

அழகிய மங்கையொருத்தி கிள்ளியெறிந்த நகக்கீற்றுப் போல வானத்தில் பிள்ளை நிலா தெரிந்தது. அதன் வெளிச்சத்தில் அந்தச் சேலைத் துண்டைப் பார்த்தேன். எதுவும் தெரியவில்லை.

வீட்டை நன்றாக அடையாளம் பார்த்துக் கொண்டபின், அரண்மனைக்குத் திரும்பினேன். என் கட்டிலில் படுத்தபடி தீபத்தின் ஒளியில் மறுபடியும் அந்தச் சேலைத் துண்டைப் பார்த்தேன். சிவப்பு நிறத்தில் வழவழவென்று இருந்தது. சாண் நீளம், உள்ளங்கை அகலம்தான் இருந்தது. பட்டுத் துணியாகவும் இருக்கலாம். மிக மெல்லியதாக நெய்யப்பட்ட பருத்தித் துணியாகவும் இருக்கலாம்.

"தாத்தா! இப்படி வாருங்கள்!" என்று அழைத்த அந்தப் பெண் குரலைத் திரும்பத் திரும்ப ஞாபகப்படுத்திக் கொண்டு பார்த்தேன். எனக்குத் தெரிந்த குரலாக, நான் இதற்குமுன் கேட்டிருந்த குரலாக தெரியவில்லை.

ஆனால், மிக நிச்சயமாக ஒன்று.

அது செயற்கையான குரல். எனக்குத் தெரிந்துவிடக் கூடாதென்பதற்காகக் கஷ்டப்பட்டு மாற்றிக் கொள்ளப் பட்ட குரல்.

அந்தக் குரலைக் கொடுத்தவளுக்கு என்னை யாரென்று தெரிந்திருக்கிறது. அதனால்தான் 'அரண் மனைக்குத் திரும்பிப் போகச் சொல்லுங்கள்' என்று சொல்லியிருக்கிறாள்...

எப்படியும் நாளைய தினம் தெரிந்துவிடும் என்று எண்ணியபடி நான் கண்களை மூடிக்கொண்டபோது அந்த நாளைய தினம் கிழக்கே உதயமாகிக் கொண்டிருந்தது.

**வி**டிகாலைதான் தூங்கினேன். என்றாலும் விடிகாலையே எழுந்துவிட்டேன் வழக்கம்போல்.

தாமதமாக எழுந்துவிட்டோம் என்பதற்காக அனுஷ்டானம் எதையும் அடியோடு விட்டுவிடக்கூடாது என்பதைக் கொள்கையாக வைத்துக் கொண்டிருக்கிறேன். ஏனெனில், எல்லாவற்றிலும் கொஞ்சம் கொஞ்சமாவது செய்தால்தான் பழக்கம் விடாமலிருக்கும் என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள் அதன்படி கொஞ்சம் வீணை வாசித்தேன். கொஞ்சம் மல்வீரர்களுடன் போரிட்டுப் பயிற்சி செய்தேன். கொஞ்சம் குதிரைச் சவாரி செய்தேன். கொஞ்சம் நீந்தினேன். கொஞ்சம் விதுரநீதி படித்தேன். கொஞ்சம் தியானத்தில் அமர்ந்தேன். கொஞ்சம் எழுதினேன். (அப்பாஜியின் மாளிகையில் அக்ஞாதவாசம் செய்தபோது ஆரம்பித்த பழக்கம்.)

எனினும், அரசவையின் ஆலோசனைக் கூட்டத் துக்குச் செல்லும்போது நேரமாகி விட்டது. அப்பாஜி, மாதண்ணா, லக்கண்ணா முதலிய பெரியவர்களும் தளபதிகளும் தளவாய்களும் எனக்கு முன்பே வந்து காத்திருந்தார்கள். அவர்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு ஆசனத்தில் அமர்ந்தேன். துணை அமைச்சர் ஒருவர் அன்றைக்கு எனக்குள்ள அலுவல்கள் என்னென்ன என்பதை எழுதி வைத்திருந்து படித்துக் காட்டினார்.

“உம்மத்தூர் போரில் விஜயநகரப் பேரரசுக்கு ஏற்பட்டிருந்த சேதம் பற்றிய விஷயத்தை முதலில் எடுத்துக்கொள்வோம்” என்றேன்.

என் தமையனாரின் காலத்திலேயே உம்மத்தூர் வட்டாரத்தில் பல சிற்றரசர்கள் சாம்ராஜ்யத்துக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியிருந்தார்கள். மகா மண்டலேசுவரன், யானை வேட்டையில் நிகரற்றவன், ஈட்டி உலகத்தில் முடிசூடா மன்னன், அனுமனின் அவதாரம் என்றெல்லாம் ஆள் ஆளுக்குத் தாங்களாகவே விருதுகள் சூடிக்கொண்டு அட்டகாசம் செய்தார்கள்.

ஒழுங்காகக் கப்பம் கட்டுவதில்லை, என் தமையனார் புஜபல வீரநரசிம்மரால் அவர்களைப் போரில் வெல்ல முடியவில்லை. சமீபகாலமாக விஜயநகரத்தின் மீதே அவர்கள் படையெடுப்பார்கள் என்று ஒற்றர்கள் சேதி கொண்டு வந்ததும், இனிப் பொறுப்பதில்லை என்று படையெடுக்க முடிவு செய்தேன்.

அந்தச் சமயத்தில் நான் பாமனி கல்தான்களில் ஒருவரான முகமது ஷாவை எதிர்த்துக் குல்பர்காவை நோக்கிப் படை நடத்திக் கொண்டிருந்ததால் உம்மத்தூரை வெற்றிகொள்ள வேறொரு தளபதியை அனுப்பினேன். கடுமையான முற்றுகையில் உம்மத்தூர் வீழ்ந்தது. வேறு சிற்றரசர்கள் வசமிருந்த சிவசமுத்திரம் கோட்டையும் ஸ்ரீரங்கப்பட்டணம் கோட்டையும் வீழ்ந்தன. தப்பியோட முயன்ற உம்மத்தூர் கங்கராஜா காவிரியின் வெள்ளத்தில் மூழ்கி இறந்து போனான். அவனுடைய எதிரியான சிக்கராஜாவிடம் அந்தப் பகுதிகளை ஒப்படைத்தேன். எங்கள் சங்குசக்கரக் கொடி வானளாவப் பறந்தது.

இந்த விவரங்களை நான் சுருக்கமாகக் கூறியதும், ஒரு தளவாய் எழுந்து, "இதெல்லாம் முடிந்துபோன விஷயம்தானே? விவாதிப்பதற்கு என்ன இருக்கிறது?" என்று கேட்டார்.

"நிறைய இருக்கிறது" என்றேன். "உம்மத்தூர் படையெடுப்பினால் நமக்கு ஏற்பட்ட சேதங்கள் பற்றிய கணக்கு இப்போதுதான் என் பார்வைக்கு வந்திருக்கிறது. அதன்படி, நமது சேனையில் குதிரைகள் ஏராளமாக மடிந்திருப்பது தெரிகிறது. எதனால் அப்படி?"

தளபதி கொண்டமராசு, "சக்ரவர்த்தி கோபிக்காமல் இருந்தால் ஒரு விஷயம் சொல்வேன்" என்றார்.

"கோபிக்காமல் இருந்தால் சொல்கிறேன் என்று சொன்னாலே கோபிக்கக்கூடிய விஷயம் சொல்லப்

போகிறீர்கள் என்றுதான் அர்த்தம். பரவாயில்லை, சொல்லுங்கள்" என்றேன்.

"அறுபது எழுபது வருடங்களுக்கு முன்பு விரூபாட்ச சக்ரவர்த்தி செய்த ஒரு தவறான காரியம்..." என்று மீண்டும் அவர் தயங்கினார்.

"தைரியமாகச் சொல்லுங்கள். விரூபாட்சரின் சங்கம வம்சம் முடிந்து போய், பிறகு சாளுவ வம்சமும் முடிந்து, இப்போது துளுவ வம்சம் ஆட்சி புரிகிறது. ஆகவே, எனக்குக் கோபம் வராது" என்றேன்.

"முன்பு அரேபியர்கள் தங்கள் நாட்டிலிருந்தும் பாரசீகத்திலிருந்தும் முதல்தரமான குதிரைகளைக் கொண்டு வந்து பாரத தேசத்தில் எல்லா அரசர்களுக்கும் விற்பனை செய்து வந்தார்கள். வேகத்திலும் தீரத்திலும் சுமை தூக்குவதிலும் நிகரில்லாத திடகாத்திரமான குதிரைகள்..."

"அவற்றுக்கும் விரூபாட்ச சக்ரவர்த்திக்கும் என்ன சம்பந்தம்?" என்று கேட்டேன்.

"சொல்கிறேன். அரேபியர்களும் மனிதர்கள்தான். நம் எல்லாரையும் போல மதப்பற்றும் இனப்பற்றும் அவர்களுக்கும் உண்டு...

"சரி...?"

"அதனால், அவர்கள் நமது மதத்து மன்னர்களுக்குக் கொடுப்பதைக் காட்டிலும் கொஞ்சம் மலிவான விலைக்கு முசல்மான் மன்னர்களுக்குக் குதிரைகளை விற்றார்கள். இதைக் கேள்விப்பட்டதும் சக்ரவர்த்தி விரூபாட்சருக்குக் கடும் கோபம் ஏற்பட்டது. அவர்கள் குதிரைகளைப் கொண்டுவந்து இறக்கிய கோவா துறைமுகத்தில் படையெடுத்து, அவர்களுடைய கப்பல்களை நாசம் செய்து, ஏராளமான அரேபியர்களைப் படுகொலை செய்து

விட்டார். மன்னிக்கவேண்டும் சக்ரவர்த்தி. இது நான் சொல்வதல்ல. வரலாற்றிலுள்ள விஷயம்" என்றார் கொண்டமராசு.

"அதன் பின்னர்?"

"அரேபியர்கள் மேற்குக் கடற்கரைப் பக்கம் வரவே பயப்பட்டார்கள். குதிரை விற்பனை பெரும்பாலும் நின்றுவிட்டது. திடகாத்திரமான அரேபியக் குதிரைகள் கிடைப்பது அரிதாகி, நமது நாட்டுக்குள்ளேயே கிடைக்கும் நோஞ்சான் குதிரைகளை நாம் வாங்கி வருகிறோம்..." என்று சொல்லிக்கொண்டு போனார் கொண்டமராசு.

இறைவன் எனக்கு இரண்டு மனம் தந்திருந்தான். ஒரு மனம் கிருஷ்ணதேவராயன் என்ற சக்ரவர்த்தியின் சாம்ராஜ்யக் கவலைகளை அலசிக் கொண்டிருந்தது.

இன்னொரு மனம்? கிருஷ்ண தேவராயன் என்ற தனி மனிதனின் கவலைகளில் தோய்ந்திருந்தது.

'நாளை அரண்மனைக்குத் தகவல் வரும்' என்று நடனக்காரிகள் வீதியில் நேற்றிரவு ஒரு பெண் குரல் சொல்லியதே, அது என்ன ஆயிற்று என்ற விசாரத்தில் ஆழ்ந்தேன். சிம்மாதனத்தின் கைப்பிடிகளில் பதிந்திருந்த நவரத்தினக் கற்கள் என் கரங்களை உறுத்தியது போலவே, மனத்தை அந்தப் பெண் குரல் உறுத்தியது. கண்கள் வாசல்புறத்தை அடிக்கடி பார்த்துக் கொண்டிருந்தன. காதல் கொண்டவனும் பைத்தியக்காரனும் ஒன்று. இத்தனை பெரிய ராஜசபையில், இவ்வளவு முக்கியஸ்தர்கள் கூடியிருக்கும் இடத்தில் யாரேனும் அந்தரங்கச் செய்தியை எடுத்து வருவார்களா என்று நான் யோசித்துப் பார்க்கவில்லை.

அமைச்சர் லக்கண்ணா, "ஆனால், இப்போது நிலைமை மாறியிருக்கிறது" என்றார். எப்போதுமே அவர்

குரல் வெண்கல மணி அடித்தாற்போல் கணீரென்று ஒலிக்கும். ஆகையால் என் கவனம் அவர்பால் திரும்பியது.

லக்கண்ணா கூறினார்: "மேற்குக் கடற்கரையில் தற்சமயம் ஆதிக்கம் செலுத்துபவர்கள் அரேபியர்கள் அல்ல. போர்த்துகீசியர்கள். அரேபியர்களை விரட்டியடித்துவிட்டு, இவர்களே பாரசீகத்திலிருந்தும் அரேபியாவிலிருந்தும் குதிரைகளை வாங்கி வந்து விற்பனை செய்கிறார்கள். கோவாவில் வந்திறங்கும் அந்த உயர்ஜாதிக் குதிரைகளை இப்போது நாம் அவர்களிடம் வாங்க முடியும்."

நிகழ்ச்சி நிரல் படித்த துணை அமைச்சரை நோக்கி, "இன்று கோவாவிலிருந்து யாரோ வருகிறார்கள் என்று ஞாபகம்" என்றேன்.

அவர் கையிலிருந்த குறிப்பைப் பார்த்து, "ஆமாம், சக்ரவர்த்தி... என்று சொல்ல ஆரம்பித்தபோது,

வெள்ளிக் கிண்ணங்களில் பழரசம் ஊற்றி, அதைத் தங்கத் தாம்பாளத்தில் எடுத்து வந்தவள் -

காயத்ரி.

நான் திடுக்கிட்டேன். கொலு மண்டபத்தில், சக்ரவர்த்தியும் பிரதானிகளும் தளபதிகளும் ஆலோசனை நடத்தும் இடத்தில் எப்படி இவளால் வரமுடிந்தது? அன்னையார் மறுபடியும் இவளை இங்கெல்லாம் வருவதற்கு அனுமதி தந்திருக்கிறாரா?

ஒவ்வொருவரிடமாகப் பழரசம் வழங்கி வந்தவள், என்னிடம் வந்தாள்... மின்வெட்டுப் போல ஒரு பார்வை என்மீது வீசினாள். விழிகளைச் சுழற்றி, ஏதோ ஜாடை காட்டினாள். பிறகு மற்றவர்களுக்கும் பழரசம் வழங்கிவிட்டுப் போய் விட்டாள்.

ஓ! நான் எதிர்பார்த்திருந்த செய்தியை இவள்தான் கொண்டு வந்திருக்கிறாளா? இதைச் சொல்லத்தான் பழரசம் எடுத்துவரும் சாக்கில் உள்ளே வந்தாளா? கண்ணால் காட்டிய ஜாடைக்கு என்ன அர்த்தம்? நேற்று நாட்டியக்காரிகள் வீதியில் குரல் கொடுத்தவளே இவள்தானோ...?

# 7

பழரசம் கொண்டுவந்து வழங்கிய பணிப் பெண் காயத்ரி போய்விட்டாள். ஆனால், அவளால் என் கவனம் கலைந்து விட்டது.

துணை அமைச்சர், "தொடர்ந்து சொல்லட்டுமா சக்ரவர்த்தி?" என்று கேட்டார்.

நானும் சுதாரித்துக்கொண்டு, "ஆம், சொல்லுங்கள். அரேபியக் குதிரைகளைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தீர்கள், இல்லையா?" என்றேன். அப்பாஜியின் கண்கள் என்மீதே பதிந்திருப்பதையும் கவனித்துக் கொண்டேன்.

துணை அமைச்சர் தொடர்ந்து, "கோவாவில் போர்ச்சுக்கீசிய கவர்னராக இருக்கும் ஆல்புகர்க் ஒரு தூதரை அனுப்பியிருக்கிறார். லூயி பாதிரியார் என்று பெயர். இரண்டு நாளாகிறது அவர் தலைநகருக்கு வந்து. சக்ரவர்த்திக்குக் காணிக்கை தருவதற்காக ஐம்பது அரேபியக் குதிரைகள் கொண்டு வந்திருக்கிறார். இன்று சக்ரவர்த்தியைக் காண வேண்டுமென்று வெளியே குதிரைகளுடன் காத்திருக்கிறார்" என்றார்.

எப்போது அங்கிருந்து எழுந்திருப்போம், எப்போது காயத்ரியை மடக்கிக் கேட்போம் என்று மனதுக்குள் போராடிக் கொண்டிருந்த எனக்கு நல்லதொரு காரணம் கிடைத்தது.

"அப்படியா? ஏன் இதை முதலிலேயே சொல்லவில்லை?" என்று எழுந்து கொண்டேன். மற்றவர்களும் எழுந்து கொண்டார்கள்.

"கௌரவமான விருந்தினர்களைக் காக்க வைப்பது தவறு. அதுவும் வந்திருப்பவர் ஒரு பாதிரியார் என்கிறீர்கள். அவரைக் காக்க வைத்தது ரொம்பத் தவறு, ரொம்பத் தவறு" என்று சொல்லியபடி கொலுமண்டபத்தை விட்டு வெளியே வந்தேன்.

ஒரு காவலனைக் கூப்பிட்டு, மற்றவர்களுக்குக் கேட்கும்படியான உரத்த குரலில், "சற்று முன் ஒரு பெண் பழரசம் கொண்டு வந்தாளே, அவளை அழைத்து வா!" என்றேன்.

அப்பாஜியும் மற்றவர்களும் திகைப்புடன் எட்டத்திலேயே நின்றிருந்தார்கள்.

பணிவும் பதைப்புமாகக் காயத்ரி வந்தாள். அது மற்றவர்களுக்காகச் செய்யும் நடிப்பு என்று எனக்குப் புரிந்தது.

"ஏன் பெண்ணே, உனக்கு மரியாதை ஏதாவது தெரிந்திருக்கிறதா? அரசர்களின் ஆலோசனைக் கூடத்தில் நீபாட்டுக்குப் பிரவேசிக்கலாமா? அரண்மனையில் எங்கே எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று யாரும் உனக்குச் சொல்லித் தரவில்லையா?" என்று அதட்டலாகக் கேட்டுவிட்டு உடனே குரலை மிகத் தாழ்த்திக்கொண்டு, "என்னவோ ஜாடை காட்டினாயே, அதற்கு என்ன அர்த்தம்?" என்று கேட்டேன்.

'நான் புதிதாக வேலைக்கு வந்திருக்கும் பெண், சக்ரவர்த்தி, அரண்மனையின் பழக்கவழக்கங்கள் தெரியாது. இனிமேல் தெரிந்து கொள்கிறேன்" என்று அவளும் எல்லாருக்கும் கேட்கும்படி உரத்த குரலில் சொல்லிவிட்டு, எனக்கு மட்டும் கேட்கும்படியாக, "எனக்குப் பாடத் தெரியும்" என்றாள்.

'எனக்குப் பாடத் தெரியும்!' சம்பந்தமில்லாமல் என்ன பதில் இது!

"யார் யார் முன்னிலையில் எப்படி எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று வாசல்காரியம் அதிகாரியிடம் போய்க் கேட்டுக்கொள்!" என்று இரைந்து சொல்லிவிட்டு, "நான் கேட்பதென்ன, நீ பதில் தருவதென்ன?" என்றேன் மெதுவாக.

"எனக்குப் பாடத் தெரியும்" என்று மறுபடி சொல்லிவிட்டு, இரு கைகளையும் கைகுவித்து வணக்கம் கூறிவிட்டுத் திரும்பி நடந்தாள்.

அவள் இரண்டடி நடந்திருப்பாள். சடடென்று எனக்கு விளங்கிவிட்டது.

"இந்தா பெண்ணே, நில்!" என்றேன் குரலை உயர்த்தி.

காயத்ரி திரும்பி வந்தாள்.

"உனக்கு நன்றாகப் பாடத் தெரியும் என்று கேள்விப்பட்டேன், உண்மையா?" என்று மற்றவர்கள் செவியிலும் விழும்படி கேட்டேன்.

"சுமாராய், சக்ரவர்த்தி" என்றாள்.

"அப்படியானால், சாயந்திரம் தீபம் ஏற்றும் வேளையில் என் அறைக்கு வந்து கொஞ்ச நேரம் பாடு" என்று கட்டளையிட்டேன்.

தான் பூடகமாகச் சொன்னதன் பொருளை நான் விளங்கிக் கொண்டேன் என்பதை அவள் அறிந்து கொண்டாள். உதட்டில் ஒரு புன்னகை ரகசியமாக எட்டிப்பார்க்க, "உத்தரவு சக்ரவர்த்தி" என்று கூறிவிட்டுத் திரும்பிச் சென்றாள்.

சிவிகை வந்தது. வேண்டாம் என்று சைகை காட்டித் திருப்பி அனுப்பினேன். அப்பாஜி தன் சகாக்களிடம், "நீங்கள் போய்க் கொண்டிருங்கள். நான் பின்னால் வருகிறேன்" என்று கூறிவிட்டுப் பின்தங்கினார்.

எட்டத்துக்கு அவர்கள் போனதும், “தாங்கள் அந்தப் பெண்ணுக்கு ரொம்பவும் இடம் தருகிறீர்கள்” என்றார்.

நான் சிரித்தேன். “என் மடியில் இடம் தராத வரையில் அப்பாஜி கவலைப்பட வேண்டாம்” என்றேன்.

“அந்த இடத்தையும் பிடித்து விடுவாளோ என்பது தான் என் பயம்” என்றார் அவர்.

“காரணம்?”

“நாட்டியக்காரிகள் வீதியில் அவளுக்கு ஏதோ தொடர்பு இருக்கிறது. அங்கே போவதும் வருவதுமாக இருக்கிறாள் என்று எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது.”

“அப்படியா?” என்று ஆச்சரியம் தெரிவித்தேன். “ஆனால், அங்குள்ள பலர் இங்கே அரண்மனைக்கு வருவதும் போவதும் சகஜம்தானே?”

“அந்தப்புரத்துக்கு வரட்டும். தங்களுடைய அந்தரங்க அறைக்கு வரலாமா? வருவதற்குத் தாங்கள் அனுமதிக்க லாமா?” என்றார் அப்பாஜி.

“அவள் நன்றாகப் பாடுகிறாள் என்று கேள்விப் பட்டேன். நல்ல சங்கீதம் கேட்டு ரொம்ப நாளாகிறது. பாடுவதாகச் சொல்லிச் சிலபேர் வருகிறார்கள். அவர்கள் வாயைத் திறந்ததுமே எனக்கு வெளிநாட்டுக்குப் போக வேண்டுமென்று ஆசை பிறக்கிறது.” என்று சொல்லிச் சிரித்தேன். ஆனால் அப்பாஜி சிரிக்கக் காணோம்.

பேசிக்கொண்டே, புரவிகள் நிறுத்தப்படும் கொட் டடியை அடைந்தோம்.

வெளியே பாதிரியார் உடையில் ஒருவர் நின்றி ருந்தார். அவர்தான் லூயி பாதிரியாராக இருக்க வேண்டும் என்று ஊகித்தேன். அருகில் இன்னொரு பறங்கி இளைஞனும், மொழிபெயர்த்துச் சொல்ல கஸ்பார் என்ற

துவிபாஷியும் இருந்தார்கள். அவர்களுக்குப் பின்னால் ஐம்பது அற்புதமான அரேபியக் குதிரைகள் நின்றிருந்தன.

என்னைக் கண்டதும் அவர் முன்னே வந்து, என் கைகளைப் பிடித்து முத்தமிட்டார். அவர் தமது பாஷையில் ஏதோ சொல்ல, அவருடன் வந்திருந்த துவிபாஷி, "சக்ரவர்த்தியின் காலை முத்தமிட வேண்டும் என்று சிலர் சொன்னார்கள். ஆனால், பாதிரியாராகிய நான் அப்படிச் செய்வது உசிதமாக இருக்காது" என்று மொழிபெயர்த்தார்.

நான் சிரித்துவிட்டேன். "என் காலை யாரும் முத்தமிடுவதில்லை. முத்தமிடுவதற்கு நான் அனுமதிப்ப தில்லை. சிரசும் முழங்கைகளும் முழங்கால்களும் பாதங்களும் தரையில் படும்படி குனிந்து வணங்குவார்கள். அதன் பெயர் நமஸ்காரம். என்னுடைய காலடியில் நமஸ்காரம் செய்வதால், எட்டத்தில் இருப்பவர்களுக்கு அது தெரிவதில்லை. என் காலை முத்தமிடுவதாகத் தங்களைப் போன்ற அந்நியர்கள் தப்பாக நினைக்கிறார்கள். பாரசீக தூதராக இருக்கும் அப்துல் ரஜாக் கூட அப்படி எழுதியிருப்பதைப் படித்து நான் திருத்தச் சொன்னேன்" என்றேன்.

துவிபாஷி அதைப் பாதிரியாரிடம் சொன்னதும், லூயி பாதிரியாரின் முகத்தில் மலர்ச்சி ஏற்பட்டது. ஒரு குதிரையின் கடிவாளத்தைப் பிடித்து என் கையில் கொடுத்து, "இந்த ஐம்பது குதிரைகளையும் எங்கள் கவர்னர் ஆல்புகர்க் தமது காணிக்கையாகத் தரச் சொன்னார்" என்றார்.

ஒவ்வொன்றும் நல்ல உயரமும் அதற்கேற்ற பருமனும் கொண்ட திடகாத்திரமான குதிரை. மனுமஞ்சி பட்டர் தமது ஹயலட்சண சாஸ்திரத்தில் கூறியிருந்த சகல லட்சணங்களும் பொருந்தியிருந்தன.

அருகிலிருந்த தளபதியிடம், "எல்லாக் குதிரைகளுக்கும் ராஜ முத்திரை போட்டு அரண்மனை லாயத்தில் வைத்திருங்கள்" என்று உத்தரவிட்டேன்.

"என்ன சொல்கிறார் சக்ரவர்த்தி?" என்று கஸ்பாரிடம் கேட்டார் பாதிரியார்.

(ஒவ்வொரு முறையும் நான் சொன்னதையும் பாதிரியார் சொன்னதையும் துவிபாஷி கஸ்பார் மொழி பெயர்த்துக் கொண்டிருந்தார் என்று சொல்லிச் சொல்லி, படிக்கும் உங்களுக்குச் சலிப்பு ஏற்படுத்த மாட்டேன். இனி நேரடியாகவே சொல்கிறேன்.)

"நாங்கள் வருடத்துக்கு முப்பதாயிரம் குதிரைகள் வாங்குகிறோம். ஒவ்வொன்றையும் ஒவ்வொரு குதிரை வீரனிடம் ஒப்படைத்து, அதனுடைய செலவுக்கும், அவனுடைய செலவுக்கும் பணம் வழங்கிவிடுவோம்" என்றேன்.

அப்பாஜி, "குதிரை இறந்துவிட்டால், ராஜ முத்திரை போட்ட அதன் தோலைக் கொண்டு வந்து காட்டினால் போதும். அவனுக்கு வேறு குதிரை தருவோம்" என்று மேலும் விளக்கினார்.

"நாங்களும் ஏறத்தாழ அப்படித்தான் செய்கிறோம்" என்றார் லூயி பாதிரியார். "இங்கே எந்த மன்னருக்கு எத்தனை குதிரை தேவை என்பதைத் தெரிந்து கொண்டு அந்த எண்ணிக்கைப்படி கப்பலில் குதிரைகள் கொண்டு வருகிறோம். வழியில் எந்தக் குதிரையேனும் இறந்து விட்டால், அதன் வாலை வெட்டி எடுத்துக் கொண்டு செத்த குதிரையைக் கடலில் எறிந்துவிடுவோம். வாலைக் காட்டினால் அதற்குண்டான தொகையைத் தந்து விடுவார்கள்" என்றார்.

அவருடன் இருந்த இளைஞர் அதுவரை பேசாமலேயிருந்தார், அறிமுகம் செய்யப்பட்டாலொழியப் பேசக்கூடாது என்ற பறங்கியர் வழக்கப்படி.

''இவர் நிக்கோலஸ். இத்தாலியர். வைத்திய சாஸ்திரத்தில் மிகவும் நிபுணர். சிறிது காலம் இந்த நாட்டில் தங்கி உங்கள் வைத்திய முறைகளைத் தெரிந்து கொள்வதற்காக வந்திருக்கிறார்'' என்று பாதிரியார் சொன்னதும், அந்த இளைஞர் என் கையில் முத்தமிட்டார்.

"மகிழ்ச்சி. எங்கள் நாட்டில் சித்த வைத்தியம்தான் செங்கோல் ஓச்சுகிறது. அதை நீங்கள் தெரிந்து கொள்ளலாம்'' என்றேன்.

அப்பாஜி தாழ்ந்த குரலில், தெலுங்கில் என்னிடம் சொன்னார்: "அந்நியர்களை, அதுவும் பறங்கியர்களைத் தலைநகரில் தங்க வைப்பது சரியென்று எனக்குத் தோன்றவில்லை. அயல்நாட்டு உளவாளிகள் நிறையப் பேர் தற்சமயம் நடமாடி வருகிறார்கள். அவர்களில் பலர் பாமனி சுல்தான்களின் ஆட்கள்" என்றார்.

பக்கத்தில் இருந்த அமைச்சர் அய்யப்பராசு, "நாம் ஜாக்கிரதையாக இருந்தோமானால் யார் என்ன செய்ய முடியும்?" என்றவர், "எனக்கென்னவோ அந்த வைத்தியரை இருக்கச் சொல்லலாம் என்று தோன்றுகிறது. பறங்கி யர்களின் வைத்திய முறைகளை நாமும்தான் தெரிந்து கொள்வோமே" என்றார். அப்பாஜி எது சொன்னாலும் அதை ஆட்சேபிப்பது இவர் வழக்கம்.

ஆனால், அய்யப்பராசுவின் வாதத்தில் ஒரு நியாயம் இருந்தது. பல்வேறு துறைகளில் சாம்ராஜ்யம் முன்னேறிக் கொண்டிருக்கையில் வைத்தியத் துறை மட்டும் ஏன் பின்தங்க வேண்டும் என்று நினைத்தேன்.

''கொஞ்சகாலத்துக்கு அவர் தங்கியிருக்கட்டும்'' என்று கூறி, நிக்கோலஸுக்கு வசதிகள் செய்து தரும்படி தக்க அதிகாரிகளிடம் கூறினேன்.

இவ்வளவு நேரம் இவர்களுடன் பேசிக்கொண்டிருந்த போதிலும், மனமெல்லாம் சாயந்தர வேளை எப்போது

வரும் என்றே எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. காயத்ரி கண் ஜாடை செய்தது சின்னாதேவியைப் பற்றிய விஷயமாகத்தான் இருக்கும் என்று என் உள் மனத்தில் ஏதோ ஒன்று கூறியது.

அந்தி வேளையும் வந்தது. அந்த வேளையும் வந்தது.

சம்மட்டி கொண்டு உச்சந்தலையில் ஆணியை அறைந்து இறக்குவது போலக் கவலைகள் என்னைச் சித்திரவதை செய்து கொண்டிருந்தன. அந்த மாதிரி சமயங்களில், இலங்கை முழுதும் தேடிச் சீதாப் பிராட்டியைக் காணாதபோது அனுமன் நினைத்துக் கொள்வதை நானும் நினைத்துக் கொள்வேன். 'என்ன புத்தி மோசம் போனேன்! கவலை உயிரை வாங்குமே? காரியங்களைக் கெடுக்குமே? சகல சம்பத்திற்கும் உற்சாகமல்லவா காரணம்? உற்சாகமே மேன்மையான சுகத்தைக் கொடுக்கும். மனிதனின் எல்லாக் காரியங்களையும் சுலபமாக்குவது உற்சாகமல்லவா? ஆகையால் உற்சாகத்துடன்...'

காயத்ரியை இன்னும் காணோமே என்று மனம் சோர்வு அடைந்தது. 'எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியர் திண்ணியர் ஆகப் பெறின்' என்ற குறள் வாக்கை நினைத்து மனத்தைத் திடப்படுத்திக் கொண்டேன்.

வீணையைச் சுமக்க முடியாமல் சுமந்து கொண்டு காயத்ரி உள்ளே வந்தபோது, மனத்துக்குள் படபடத்துக் கொண்டிருந்த எல்லாக் கேள்விகளையும் அடக்கிக் கொண்டு இன்முகம் காட்டினேன்.

"வா, காயத்ரி, சரியானபடி சிக்கிக் கொண்டாய்?" என்றேன் சிரித்தவண்ணம்.

"நானா?" என்றவள், தரையில் அமர்ந்து வீணையை மடியில் வைத்துக்கொண்டு சுருதி கூட்டத் தொடங்கினாள். "எப்படி?"

"பாடத் தெரியும் என்று மற்றவர்களின் முன்னிலையில் ஒரு பொய்யைச் சொல்லி வைத்தாய். அதை இப்போது நிரூபித்தாக வேண்டுமே?" என்றேன்.

அவள் பதிலேதும் சொல்லவில்லை. குனிந்து வீணையின் தந்திகளிடையே கவனமாக இருந்தவள் விழிகளை நிமிர்த்தி என்னை ஒரு பார்வை பார்த்துவிட்டு, கணீரென்று மீட்டினாள். ஆனந்த பைரவியை அழகாகக் கோடி காட்டினாள். கூடவே மதுரமான குரலில்.

"மாரி மாக்கடல் வளைவணற்கிளையவன்.
 வரை புரை திருமார்பில்
தாரினாசையில் போயின நெஞ்சமும்
 தாழ்ந்ததோர் துணை காணேன்
ஊரும் துஞ்சிற்று; உலகமும் துயின்றது;
 ஒளியவன் விசும்பு இயங்கும்
தேரும் போயிற்று; திசைகளும் மறைந்தன;
 செய்வது ஒன்றும் அறியேனே!"

என்ற பாசுரத்தைப் பாடி முடித்தாள். தமிழ்ப் புலவர்களின் நட்பைப் பெற்றிருந்ததால் பல ஆழ்வார் பாடல்கள் எனக்குத் தெரியும். எனவே அது திருமங்கையாழ்வாரின் பாசுரம் என்று அறிந்தேன். பாட்டின் சோகத்தோடு அவள் குரலின் துவளலும் இணைந்ததால், சில விநாடி என்னை நானே மறந்துபோனேன்.

இத்தனை அழகாக இவளுக்குப் பாடவரும் என்று ஊகிக்காமல் போனோமே என்று உள்ளுக்குள் வெட்கம் ஏற்பட்டது. அதை மறைத்துக்கொண்டு, "ஆழ்வார் பாசுரத்தை இவ்வளவு சுத்தமாகப் பாடுவதால், நிச்சயமாய் நீ தமிழ்ப் பெண்தான். உண்டா இல்லையா?" என்றேன்,

"எனக்குப் பாடத் தெரியுமா என்று சக்ரவர்த்தி கேட்டீர்கள்... தெரியும் என்று ஓரளவுக்குக் காட்டி

விட்டேன்'' என்று நேரடியாக விடை கூறாமல் மழுப்பினாள்.

அருகிலேயே தயாராக வைத்திருந்த சேலைத் துண்டை எடுத்துக் காட்டினேன். "இந்த வகையான சேலையை எங்காவது பார்த்ததாக ஞாபகம் இருக்கிறதா?" என்று கேட்டேன்.

அவள் திகைக்கவுமில்லை. மறுக்கவுமில்லை. "இது என்னுடைய சேலைதான். நேற்றிரவு தாங்கள் இழுத்த போது கிழிந்துவிட்டது'' என்று தயங்காமல் ஒப்புக் கொண்டாள்.

"ஓ, நீதான் நேற்று இரவு என்னைப் பின்தொடர்ந்து வந்தாயா? நீதான் அந்தக் கல்யாண வீட்டுக்குள் மறைந்திருந்து பேசினாயா?"

"சக்ரவர்த்தி, பல நாட்களுக்கு முன்பே நான் அரண்மனையில் பணிப் பெண்ணாகச் சேர்ந்து விட்டேன். சேர்ந்த நாள் முதலாக, தாங்கள் இரவு வேளைகளில் நகர சோதனைக்காகப் புறப்படும்போதெல்லாம் தங்களைப் பின்தொடர்ந்து வந்து கொண்டுதான் இருக்கிறேன்."

"அதற்கெல்லாம் யார் அனுமதி கொடுத்தார்கள்?" என்று திகைப்புடன் கேட்டேன்.

"தங்கள் அன்னையார்தான் சக்ரவர்த்தி... பொழுது போகாத நேரத்தில் என்னைச் சதுரங்கம் ஆடக் கூப்பிட்டார்கள். ஆடி ஜெயித்தேன்'' என்றாள் காயத்ரி.

"நிஜமாகவா?" என்று திகைத்தேன்.

என் அன்னை நாகலாம்பிகையைச் சதுரங்க விளையாட்டில் யாராலும் ஜெயிக்க முடியாது. நானே பலமுறை தோற்றிருக்கிறேன்.

"உண்மையாகத்தான் சொல்கிறேன், சக்ரவர்த்தி. அவர் மகிழ்ந்து, 'கெட்டிக்காரியாக இருக்கிறாய்... உனக்கு

என்ன வேண்டும், சொல்லு' என்றார். 'எதுவும் வேண்டாம்... இந்த அரண்மனைகளிலும் அந்தப்புரங்களிலும் தங்கு தடையின்றி நடமாடும் உரிமை கொடுத்தால் போதும்' என்றேன். கொடுத்ததோடு, மற்ற அரண்மனைச் சேவகர்களிடமும் சொல்லி வைத்திருக்கிறார் பெரிய ராணி."

"ஓ, அந்த உரிமையில்தான் நேற்று இரவு என்னைப் பின்தொடர்ந்து வந்தாயா?"

"சக்ரவர்த்தி, இரண்டு தினங்கள் முன்பு தங்களைச் சுமந்து செல்வதற்காக வாசல் காரியம் அதிகாரி என்னை அனுப்பியபோதுதான் தாங்கள் என்னைப் பார்த்தீர்கள். ஆனால், அதற்குப் பல நாடகளுக்கு முன்பே நான் அரண்மனையில் பணிப் பெண்ணாகச் சேர்ந்துவிட்டேன். சேர்ந்த நாள் முதலாக, தாங்கள் இரவு வேளைகளில் நகர சோதனைக்காகப் புறப்படும்போதெல்லாம் தங்களைப் பின்தொடர்ந்து வந்து கொண்டுதான் இருக்கிறேன்."

தூக்கிவாரிப் போட்டது. "எதற்காக?" என்றேன்.

"மக்களின் நலனில் மன்னருக்கு அக்கறை இருப்பது போலவே, மன்னரின் நலனில் மக்களுக்கும் அக்கறை இருக்க வேண்டுமல்லவா?"

"தலைநகரத்தில் ஐந்து லட்சம் மக்கள் இருக்கிறார்கள். சாம்ராஜ்யம் முழுதும் கணக்கெடுத்தால் மூன்று கோடிக்கு மேல் இருக்கும். அவர்களில் யாருக்கும் என்மீது இல்லாத அக்கறை உனக்கு மட்டும் ஏன்?"

"அதைச் சொல்ல இன்னும் காலம் கனியவில்லை, சக்ரவர்த்தி. கனியும்போது சொல்கிறேன்" என்றாள்.

'இன்னும் எத்தனை காலத்துக்குத்தான் இவள் மர்மப் பெண்ணாக இருக்கப் போகிறாளோ!' என்று நினைத்துக் கொண்டேன்.

"ஆகவே, தாங்கள் இந்த விஜயநகர சாம்ராஜ்யத்தின் சக்ரவர்த்திக்குப் பாதுகாப்புக் கொடுக்கிறீர்கள்?" என்று பரிகாசமாகச் சொல்லிவிட்டு "அப்படியானால் நான் எதற்காக அந்தத் தெருவுக்கு வந்தேன் என்பதும், உனக்குத் தெரிந்திருக்கும்?" என்றேன்.

"தெரியும் சக்ரவர்த்தி. சின்னாதேவியைத் தேடி வந்தீர்கள்" என்று அவள் சொன்னதும் என் படபடப்பை அடக்கிக் கொண்டு, "எப்படிச் சொல்கிறாய்?" என்றேன்.

காயத்ரி மெதுவாகச் சிரித்தாள். "சின்னாதேவியைக் கண்டுபிடிக்கும்படி கடந்த நான்கு ஆண்டுகளாக சாம்ராஜ்யமெங்கும் ஒற்றர்களை ஏவிக் கொண்டிருக் கிறீர்கள். ஒற்றர்களில் பலரை எனக்குத் தெரியும். ஆகவே நானும் தேடிக்கொண்டிருந்தேன். சின்னாதேவி தலைநகருக்கு வந்து ஒரு மாதத்துக்கு மேலாகிறது. அவர் ஒவ்வொரு கோயிலாகச் சென்று ஆடிக் கொண்டிருக்கிறார். அது தங்களுக்கு இப்போதுதான் தெரிந்திருக்கிறது. எனக்கு அப்போதே தெரியும்."

ஆவலை அடக்கமாட்டாதவனாக "நீ அவளைப் பார்த்தாயா?" என்றேன்.

"பார்த்தது மட்டுமில்லை. நாட்டியத்துக்காக அவர் அலங்காரம் செய்து கொள்ளும்போது பெண் என்ற உரிமையில் பக்கத்திலேயே இருந்து கவனித்திருக்கிறேன்" என்றாள்.

என்னையும் அறியாமல் அடுத்த வாக்கியம் வந்து விட்டது.

"காயத்ரி, இவ்வளவு தூரம் நீ தெரிந்து வைத்தி ருப்பதால், உன்னிடம் அந்தரங்கமாக ஒரு உதவி கேட்கப் போகிறேன்" என்றேன். பசி வந்துவிட்டால் பத்தும் பறந்து போகும் என்பார்கள். காதல் வந்துவிட்டாலும் அப்படித்தான். சக்ரவர்த்தி என்ற அந்தஸ்தை மறந்து பணிப்பெண்ணான இவளை யாசிக்கிறேனே!

"சின்னாதேவியைத் தாங்கள் சந்திக்க வேண்டும். அவ்வளவுதானே?" என்றாள்.

"ஆமாம். ஆமாம்" என்றேன் அவசரமாக.

"ஏற்பாடு செய்யலாம் சக்ரவர்த்தி. ஆனால், தாங்கள் ஓர் அதிர்ச்சிக்குத் தயாராக இருக்கவேண்டும்" என்றாள் காயத்ரி.

"என்ன... என்ன அதிர்ச்சி?"

"சின்னா தேவி அலங்காரம் செய்துகொள்ளும் போது நான் அவரருகில் இருந்ததால் ஆடை மூடாத கைகளைப் பார்க்க முடிந்தது. அவருடைய தோளின் கீழே இடது கையில் சங்கும் வலதுகையில் சக்கரமும் முத்திரை பொறித்துக் கொண்டிருக்கிறார்".

"அதற்கு... அர்த்தம்...

அர்த்தம் என்னவென்று எனக்குத் தெரியும். ஆனால், அதை என் வாயால் சொல்ல நா எழவில்லை.

"அவர் ஏதோ ஒரு வைஷ்ணவக் கோயிலில் முத்திரை பெற்றிருக்கிறார். தாலியும் கட்டிக் கொண்டிருக்கிறார். ஆம். சக்ரவர்த்தி. சின்னாதேவி தேவரின் அடிமையாக, தெய்வத்தின் பத்தினியாக, தேவதாசியாக மாறிவிட்டார். பிழைப்புக்காக இல்லை. மெய்யான தேவதாசி அவர். அவர் எந்த மானிடனையும் தீண்டமாட்டார், மணக்கமாட்டார்" என்றாள் காயத்ரி.

# 8

என்னது? சின்னாதேவி தேவதாசியாகி விட்டாளா? என்ன பைத்தியக்காரத்தனம் இதெல்லாம்!

முதலில் கடும் சினம் ஏற்பட்டது, காயத்ரி சொன்னதைக் கேட்டு, ஆனால், மறுகணமே சிரித்தேன்.

காயத்ரியின் முகம் இறுக்கமாக இருந்தது. "சிரிக்கக் கூடிய விஷயமாக நான் எதுவும் சொல்லவில்லை என்று நினைக்கிறேன்" என்றாள் மென்மையாக.

"சிரித்ததன் காரணத்தை அப்புறம் சொல்கிறேன்" என்றேன். "பெண்ணே, விஜயநகர சாம்ராஜ்யத்தில், தலைநகரப் படையில் மொத்தம் எவ்வளவு காலாட்படை வீரர்கள் இருக்கிறார்கள் தெரியுமா?"

"தெரியாது சக்ரவர்த்தி" என்றாள்.

"ஒன்றரை லட்சம் பேர் இருக்கிறார்கள். சிற்றரசர்கள், பாளையக்காரர்களின் வீரர்களையும் சேர்த்தால் மொத்தம் ஐந்து லட்சம் பேர் இருக்கிறார்கள்" என்றேன்.

"ஓ" என்றாள் அவள்.

"குதிரைப் படையில் எத்தனை குதிரைகள் இருக்கின்றன தெரியுமா?" என்றேன்.

"தெரியாது சக்ரவர்த்தி" என்றாள்.

"பதினையாயிரம் குதிரைகள், சிற்றரசர்களின் குதிரைகளைச் சேர்த்தால் ஐம்பதாயிரம் வரும்."

"ஓ" என்றாள் மீண்டும்.

"யானைப் படையில் இருக்கும் யானைகளின் எண்ணிக்கை தெரியுமா?" என்றேன்.

"தெரியாது சக்ரவர்த்தி" என்றாள்.

"என்னுடைய சொந்தப் படையிலும் சிற்றரசர்களின் படையிலுமாக இருக்கும் யானைகள் மொத்தம் இரண்டாயிரம் இருக்கும்."

"ஓ" என்றாள் அவள் மீண்டும்.

"நான் சொன்ன கணக்கு, தற்சமயம் கைவசம் இருப்பது. புதிதாகப் படை திரட்டும்படி நான் கட்டளையிட்டால் இதைப் போல் ஒவ்வொன்றிலும் மூன்று மடங்கு திரட்ட முடியும். எதற்காக இவ்வளவும் சொல்கிறேன் தெரியுமா?"

"தெரியவில்லை, சக்ரவர்த்தி."

"இவ்வளவு மாபெரும் படைகளுக்கு அதிபதியான இந்தக் கிருஷ்ண தேவராயனால், கேவலம் அவன் காதலிக்கிற பெண்ணை அடைய முடியாமல் போய் விடுமா? நான் நினைத்தால் ஓரே நொடியில் சின்னா தேவியைத் தூக்கி வந்துவிட முடியும்!" என்றேன்.

"ராவணன் சீதாப்பிராட்டியைத் தூக்கி வந்த மாதிரி?" என்று கேட்டாள் அவள்.

சுள்ளென்று கோபம் வந்துவிட்டது எனக்கு. "உனக்கு என்ன தைரியம்?" என்று உறுமினேன்.

"தர்மம் கொடுத்த தைரியம் சக்ரவர்த்தி" என்றாள் காயத்ரி நிதானம் இழக்காமல். "மாபெரும் படைக்கு அதிபதியாகத் தாங்கள் இருக்கிறீர்கள்... எவ்வளவு காலாட்படையினர், எவ்வளவு யானைப் படை, எவ்வளவு குதிரைப்படை என்ற கணக்கெல்லாம் கச்சிதமாக நினைவு வைத்துக்கொண்டு சொல்கிறீர்கள். ஆனால், ஒரு சின்னக்

கணக்குத் தங்களுக்கு மறந்து விட்டது. அதுதான் பரிதாபம்."

மேலும் மேலும் அவள்மீது கோபம் வந்தாலும் அடக்கிக் கொண்டு, "என்ன கணக்கு?" என்று கேட்டேன்.

"தாங்கள் ஒரு ஸ்ரீவைஷ்ணவர் என்பதை மறந்து விட்டீர்கள் சக்ரவர்த்தி. பரம்பரை பரம்பரையாகத் தாங்கள் வைணவத்துக்குக் கட்டுப்பட்டு வந்திருக்கிறீர்கள். வைணவ ஆல்யங்களுக்கு வாரி வாரி மானியம் வழங்கி வந்திருக்கிறீர்கள்."

இடைமறித்தேன். "நீ சொல்வதை ஒப்புக்கொள்ள மாட்டேன். சிவாலயங்களுக்கும் சைவ மடங்களுக்கும் கூட நான் தாராளமாக ஆதரவு அளித்து வருவது நாடறிந்த விஷயம்."

"இருக்கலாம் சக்ரவர்த்தி" என்றாள் காயத்ரி. "தாங்கள் பரந்த மனப்பான்மையுள்ளவர் என்பதை யாரால் மறுக்க முடியும்? சகிப்புத்தன்மை தங்கள் ரத்தத்தில் ஊறியிருக்கிறது. சிவாலயங்களுக்கு மட்டுமல்ல, முஸல் மான்களின் மசூதிகளுக்குக்கூட ஏராளமான உதவிகள் செய்திருக்கிறீர்கள். பறங்கியர்களின் கிறித்தவப் பிரசாரத் தையும் தடையின்றி அனுமதித்திருக்கிறீர்கள். எல்லாம் நிஜம்தான். இருந்தாலும், தாங்கள் அடிப்படையில் ஒரு தீவிரமான வைணவர். திருமாலின் தொண்டர். வைஷ்ணவ ஆசாரியர்களுக்கு அடிபணிகிறவர்."

"அப்படியே இருக்கட்டும். அதனால்?"

"அதனால், ஒரு வைஷ்ணவ ஆலயத்துக்குச் சொந்தமான பெண்ணைப் பலவந்தமாகக் கைப்பற்றுவது தர்மம் அல்ல. சின்னாதேவியை அடைவதற்காக அப்படியொரு தகாத காரியத்தில் தாங்கள் இறங்கினால் அது மன்னிக்கமுடியாத குற்றமாகிவிடும். அதன்பிறகு வைணவர்கள் மட்டுமல்ல, எல்லோருமே தங்களிடம்

நம்பிக்கை இழந்து விடுவார்கள். நமது மதத்தைக் காப்பதற்காக, பிற மதத்தாரின் தாக்குதல்களைச் சமாளிப்பதற்காக விஜயநகர சாம்ராஜ்யம் ஏற்பட்டிருக்கிறது என்று சிற்றரசர்களும் பாளையக்காரர்களும் சாதாரண மக்களும் நம்பி வருகிறார்கள். தங்கள் சாம்ராஜ்யத்தின் உண்மையான பலமும் அதுதான். அந்த நம்பிக்கை நசியும்படி தாங்கள் செய்யலாமா?"

இவ்வளவு நீளமாக எவரும் என் முன்னே வாதாடியது கிடையாது. ஏன் நான் குறுக்கிடாமல் கேட்டுக் கொண்டிருந்தேன் என்பது எனக்கே தெரியவில்லை. அவளுடைய பேச்சில் இருந்த சத்தியம் என் நாவைக் கட்டிப் போட்டுவிட்டது போலும்.

அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்தேன். மூலைக்கு மூலை, திரும்பிய இடமெல்லாம் அற்புதமான சிற்பங்களும் கண்கவரும் ஓவியங்களும் அணிகளும் மணிகளும் நிறைந்திருக்கிற அறை என்னுடையது. சில சமயங்களில் ஒவ்வொன்றின் அழகையும் ரசித்துக் கொண்டு நெடுநேரம் என்னை மறந்து நின்று விடுவதுண்டு. ஆனால், இப்போதைய மனநிலையில் எதைப் பார்க்கவும் வெறுப்பாக இருந்தது.

மெல்லிய குரலில் காயத்ரி சொன்னாள்: "சக்ரவர்த்தி, படை பலத்தின் உதவி இல்லாமல், பலவந்தம் எதுவும் உபயோகிக்காமல், தாங்கள் தங்களது காதலை நிறைவேற்றிக் கொள்வதற்கு வேறு ஏதாவது ஒரு வழி இருக்கும். இல்லாமற் போகாது. அந்த வழியைத்தான் நான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்."

அடுத்த விநாடியே நான் என் கோபத்தை மறந்தேன். குழப்பத்தைத் துறந்தேன். என் மனம் நெகிழ்ந்தது.

"காயத்ரி, என் காதல் நிறைவேறுமா? நீ நிறைவேற்றுவாயா?" என்றேன் வெட்கமில்லாமல்.

"நிறைவேற்றத்தான் நினைத்திருந்தேன். ஆனால், சின்னாதேவி இன்று காலை வெளியூருக்குப் புறப்பட்டு விட்டார். அவர் அண்ணன் எதிராஜன் அழைத்துப் போய்விட்டார்...

திடுக்கிட்டுப் போனேன். "என்ன? புறப்பட்டு விட்டாளா? எங்கே? ஏன்? எதற்காக? அவளுடன் நான் ஒரு வார்த்தை பேசுவதற்குக்கூடச் சந்தர்ப்பம் கிடைக் காமல் போய்விட்டதே?"

"வாழ்நாள் பூரா பேசிக் கொண்டிருக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும் சக்ரவர்த்தி. நான் உறுதி கூறுகிறேன். நம்புங்கள்" என்றாள் காயத்ரி.

என்னால் எதுவும் சொல்ல முடியவில்லை.

காயத்ரி தொடர்ந்தாள்: "கோயிலுக்குச் சொந்தமான தேவதாசிகள் வெளியூர் சென்றால், கோவில்களில் மட்டுமே ஆடவேண்டும் என்பது சட்டம். தனிப்பட்டவர்களின் இல்லங்களில், சக்ரவர்த்திகளின் அரண்மனைகளாகவே இருந்தாலும் சரி, ஆடக்கூடாது. புறப்பட்ட ஒரு வருடத்துக்குள் தங்களது கோயிலுக்குத் திரும்பி வந்துவிட வேண்டும் என்பது சட்டம். அந்தக் கெடு முடிவடைந்து கொண்டிருக்கிறது என்று தோன்றுகிறது. அதனால்தான் சின்னாதேவியை அவள் தமையன் அழைத்துப் போய் விடடார்.."

"எங்கே?" என்றேன்.

"மதுரையை நோக்கிப் பயணமாகிறார் என்று கேள்விப்பட்டேன். அந்த வட்டாரத்தில் உள்ள பெரிய வைணவத் தலம் ஸ்ரீவில்லிபுத்தூர்தான். அநேகமாகச் சின்னாதேவி அந்தக் கோயிலைச் சேர்ந்தவராகத்தான் இருப்பார்....

"அப்படியானால் உடனே நான்...

"தாங்கள் எதுவும் செய்ய வேண்டாம். நாளைக் காலை சூரியோதயத்துக்கு முன் நானே புறப்படுகிறேன் ஸ்ரீவில்லிபுத்தூருக்கு."

''தனியாகவா?'' என்று ஆச்சரியப்பட்டேன். "உனக்குத் துணையாகச் சிலரை அனுப்புகிறேன்."

''தேவையில்லை சக்ரவர்த்தி. எனக்குக் குதிரை யேற்றம் தெரியும். யானையேற்றம் தெரியும். அந்தப் பலம் எனக்குத் துணையாக வரும். எல்லாவற்றுக்கும் மேலாக நான் உபாசனை செய்யும் ஜகன்னாத பிரபு எனக்குப் பாதுகாப்புத் தருவார். நான் திரும்பி வர ஒரு மாதமாகலாம். இரண்டு மாதமும் ஆகலாம். ஆனாலும் பொறுமையாக இருங்கள்.

'ஜகன்னாத பிரபு' என்று அவள் குறிப்பிட்டதால், ஒருவேளை அவள் கலிங்கத்திலிருந்து வந்தவளோ? மின்னல் போல் தோன்றி, மின்னல் போல் அந்த நினைப்பு மறைந்துவிட்டது.

''காயத்ரி... காயத்ரி... என்றபோது என் குரல் தடுமாறியது. பேச்சில் பிசிறு ஏற்பட்டது. ''காயத்ரி, எனக்காக... என் காதலை நிறைவேற்றுவதற்காக, தனியாக அவ்வளவு தொலைவுக்குப் போகிறேன் என்றா சொல்கிறாய்? காயத்ரி, எதற்காக இதெல்லாம் செய்கிறாய்? ஏன் எனக்காக இவ்வளவு அபாயங்களைத் தலைமீது போட்டுக்கொள்கிறாய்?"

"தாங்கள் நலமாக இருக்க வேண்டும், சக்ரவர்த்தி. தன்னம்பிக்கையுடன், தைரியமாக, வெற்றி வீரராகத் திகழ வேண்டும். அப்போதுதான் நான் நினைத்திருக்கும் ஒன்றை நிறைவேற்றிக் கொள்ள முடியும்."

"என்ன அது என்று கேட்டால் காலம் கனியட்டும் என்று சொல்வாய்... எனக் கூறிச் சிரித்தேன்.

அன்று 'என் முதுகில் ஏறிக் கொள்ளுங்கள் சக்ரவர்த்தி' என்று சொன்ன வேலைக்காரப் பெண்ணா இவள்! இல்லை, உதய சூரியனைப் போல், பார்த்துக் கொண்டிருக்கும்போதே பிரகாசமாக மாறிக் கொண்டிருக்கும் புதுமைப் பெண்.

"பேரரசர் வாழ்க!" என்று வாசற்காப்போன் குரல் கொடுத்து, உள்ளே வந்து குனிந்து வணங்கி,

"நிதியமைச்சர் செல்லப்ப தண்டநாயகர் பொக்கிஷங் களுடன் வந்திருக்கிறார் சக்ரவர்த்தி" என்றான்.

தினந்தோறும் இரவில் கடைசி காரியமாக இருப்பது செல்லப்ப தண்டநாயகரின் வருகைதான்,

நிமிர்ந்து பார்த்தேன். அரண்மனையின் சகல பாகங்களிலும் தீபங்கள் ஏற்றப்பட்டிருப்பது தெரிந்தது.

அவ்வளவு நேரமா ஆகிவிட்டது!

"இருக்கச் சொல்" என்று கூறிவிட்டுக் காயத்ரியை நோக்கித் திரும்பினேன்.

"போய் வா, காயத்ரி. கொஞ்சம் முன்னால் நீ ராவணனைப் பற்றிச் சொல்லி ராமாயணத்தை ஞாபகப் படுத்தினாய். அதே ராமாயணத்தை நானும் சொல்கிறேன். அசோகவனத்தில் ஆஞ்சநேயர் தமக்காகப் பிரார்த்தித்துக் கொண்ட வாங்கியங்களை நான் உனக்காகப் பிரார்த்திக் கிறேன். மகரிஷிகளும் தேவதைகளும் நீ சின்னாதேவியைப் பார்க்கும்படி ஆசீர்வதிக்கட்டும். ஸ்வயம்புவான பிரம்ம தேவரும், அக்னி, வாயு, வருணன், மகேந்திரன், சூரிய சந்திரர்கள், அசுவினிகள், மருத்துக்கள், ருத்திரன் முதலியவர்களும் உன் காரியம் சித்திக்கும்படி அனுக்கிரகிக் கட்டும். சகல பூதங்களும், அவற்றுக்கு நாதனான விஷ்ணுவும், நீ போகும் வழியில் உன் கண்ணில் படுகிறவர்களும் படாதவர்களும் உன் காரியம் கை

கூடும்படி ஆசீர்வதிக்கட்டும். இதற்கு மேல் எனக்குச் சொல்லத் தெரியவில்லை காயத்ரி. மங்களமாய்ப் போய் வா" என்று கூறிவிட்டுச் சட்டெனத் திரும்பிக் கொண்டேன்
விஜயநகரப் பேரரசரின் கண்முனைகளில் நீர் துளிர்ப்பதை அவள் காணக்கூடாதென்று.

குனிந்து என் காலடியில் நமஸ்காரம் செய்துவிட்டு, வீணையைத் திரும்ப எடுத்துக் கொண்டு காயத்ரி வெளியேறினாள்.

என் உணர்ச்சிகளையும், பெருமூச்சுக்களையும், முகத்தின் வாட்டத்தையும் மாற்றிக் கொண்டேன். சக்ரவர்த்தி என்ற பொய்யான, போலியான முகமூடியை மாட்டிக் கொண்டேன். "அமைச்சரை வரச் சொல்" என்று வாசற்காப்போனுக்குக் கட்டளையிட்டேன்.

செல்லப்ப தண்டநாயகர் உள்ளே வந்து வணக்கம் செலுத்திவிட்டு, வெளியே நின்றிருந்த ஆட்களை வரச் சொன்னார். நான்கு ஆட்கள் வந்தார்கள். ஒவ்வொருவரின் தலையிலும் பெரிய பெரிய பொக்கிஷப் பெட்டிகள்.

மௌனமாக என் அறையைக் கடந்து, குறுகலான கூடத்தின் வழியே நிலவறையை அடைந்தோம். பிரம்மாண்டமான கதவின் இரண்டுபுறமும் நான்கு காவலர்கள் வாளும் ஈட்டியும் தாங்கி அசையாமல் நின்றிருந்தார்கள். நிதியமைச்சர் திறவுகோல்களைக் கொடுத்ததும், கதவைத் திறந்துவிட்டு மூன்று பேர் மறுபடியும் யந்திரம் போல் நின்று கொண்டார்கள். ஒருவன் தீப்பந்தம் பிடித்து வெளிச்சம் காட்டியபடி முன்னே நடந்தான்.

கரடுமுரடான படிகளில் இறங்கினோம். விஸ்தார மான அறையை அடைந்தோம். தீப்பந்தத்தைச் சுவரில் அதற்காகப் பதித்திருந்த பொந்தில் செருகிவிட்டு ஆள் வெளியேறிவிட்டான். பெரிய அறையானாலும் சாளரம்

இல்லாமல் நாலு பக்கமும் அடைக்கப்பட்டிருந்தால், புழுக்கத்தையும், புழுக்கத்தால் ஏற்படுகிற நெடியையும் உணர்ந்தேன். தண்டநாயகருடன் வந்த ஆட்கள் பெட்டிகளைக் கீழே இறக்கி வைத்துவிட்டுத் திரும்பிச் சென்றார்கள்.

அறையில் வரிசையாகப் பதின்மூன்று இரும்புப் பெட்டிகள் வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொன்றும் நாலு கட்டுமஸ்தான ஆட்கள் சௌகரியமாக உள்ளே உட்கார்ந்து கொள்ளக்கூடிய அளவுக்குப் பெரியவை. பன்னிரண்டு பெட்டிகளில் எனக்கு முன்பு அரசாண்ட பன்னிரண்டு மன்னர்கள் சேமித்த பொக்கிஷங்கள் இருந்தன. பதின்மூன்றாவது பெட்டி என்னுடையது.

ஒவ்வொரு மன்னரும் தனக்கென்று சொந்தமாக ஒரு கஜானா பெட்டி வைத்துக் கொளவது விஜயநகர சாம்ராஜ்யத்தின் நடைமுறையாக இருந்து வருகிறது. அரசாங்கத்தின் வருமானத்திலிருந்து மன்னர் எடுத்துக் கொள்ளும் ஒரு பகுதி இது.

ஒரு மன்னர் காலமானதும் அடுத்து ஆட்சிக்கு வரும் மன்னர், காலமானவருடைய பெட்டியைப் பூட்டி, அரக்கு முத்திரை வைத்துவிட்டு, இன்னொரு புதிய பெட்டியில் தனக்காகச் சேமிக்கத் தொடங்குவார். முந்தைய மன்னர்களின் பெட்டிகளை எக்காரணம் கொண்டும் திறக்கக்கூடாது. இப்படியே என் முன்னோர்களின் பொக்கிஷங்கள் பன்னிரண்டு பெட்டிகளில் உறங்கிக் கொண்டிருந்தன.

எப்போதாவது சில சமயம் அப்பாஜியும் என்னுடன் இங்கே வருவார். அப்படி ஒருமுறை வந்தபோது, “நாம் இந்தப் பொக்கிஷங்களை ரகசியமாக வைத்திருந்த போதிலும், நமது எதிரிகள் எல்லோருக்கும் தெரிந்த விஷயமாகிவிட்டது இது. விஜயநகர சாம்ராஜ்யத்தை

வீழ்த்த வேண்டுமென்று பகைவர்கள் அடிக்கடி படையெடுத்து வருவதே இந்தப் பொக்கிஷங்களைக் கொள்ளையடிக்க வேண்டுமென்ற பேராசையினால்தான்" என்றார்.

"ஆமாம்... ஏராளமாய் இருக்கிறதே!" என்றேன் பெட்டிகளைப் பார்த்தவாறு.

"ஒரு நாள் நான் மனத்துக்குள் ஒரு கணக்குப் போட்டேன்... மொத்தம் எவ்வளவு வருகிறது தெரியுமா சக்ரவர்த்தி?" என்றார் அப்பாஜி.

"சொல்லுங்கள்" என்றேன்.

"இவற்றில் உள்ள பொன்னையும் நவரத்தினங்களையும் சுமந்து செல்ல ஐந்நூற்றைம்பது யானைகள் தேவைப்படும் என்று கணக்கிட்டேன்" என்றார். "இப்படி இங்கே சும்மா தூங்கிக் கொண்டிருக்கும் பொக்கிஷங்களை எடுத்து, மக்களுக்கு உபயோகமான எவ்வளவோ திட்டங்களை நிறைவேற்றலாம்" என்றும் கூறினார்.

"செய்யலாம்தான். ஆனால், எந்தப் பெட்டியையும் திறக்க நமக்கு உரிமை கிடையாது. என் காலத்துக்குப் பிறகு, என்னுடைய சேமிப்பை வேண்டுமானால் எடுத்துச் செலவழிக்கட்டும். என்னென்ன செய்யலாம் என்பதற்குத் தாங்கள் ஒரு திட்டம் தயாரித்துக் கொடுங்கள்." என்று அவரிடம் கேட்டிருக்கிறேன்.

இன்று செல்லப்ப தண்டநாயகர் என்னுடைய கஜானாப் பெட்டியைத் திறந்து, ஆட்கள் வைத்துவிட்டுப் போயிருந்த பெட்டிகளிலிருந்து பொன் நாணயங்களையும், ஆபரணங்களையும் முத்து மாணிக்கங்களையும் எடுத்து அதில் கொட்டினார்.

"மொத்தம் இருபத்தேழாயிரம் வராகன் சக்ரவர்த்தி" என்றார்.

இந்த அடிப்படையில் கணக்கிட்டால், ஆண்டு தோறும் என் சொந்த கஜானாவில் ஏறத்தாழ ஒரு கோடி வராகன் சேர்ந்து கொண்டிருக்கிறது!

திரவியங்கள் கொட்டப்படும் கலகல ஓசை என் காதில் தேனாகப் பாயவில்லை. எல்லாப் பெட்டிகளையும் வெறித்துப் பார்த்தபடி நின்றிருந்தேன்.

நாட்டை விட்டுப் பிச்சைக்காரனாக ஓட்டம் பிடித்த எவனோ ஒரு அரசன், 'ஒரு குதிரை! ஓரே ஒரு குதிரை! என் ராஜ்யம் மொத்தத்தையும் தருகிறேன் ஒரு குதிரை மட்டும் கிடைத்தால்!'' என்று அழுதானாம். அதே மனநிலையில் நான் இருந்தேன்.

எதிராஜா! சின்னாதேவியின் தமையனே! என் மீது நீ கொண்டுள்ள பகைமையை விட்டுவிடு! இன்னதென்று புரியாத குரோதத்தை விட்டுவிடு! என் ஆருயிர் சின்னாதேவியை என்னிடமிருந்து பிரித்துக்கொண்டு போகாமல் என்னிடம் தந்துவிடு. இத்தனை பொக்கிஷங் களையும் உன் காலடியில் கொட்டுகிறேன்!

பெட்டிகளையும் அறையையும் பழையபடி பூட்டி விட்டுச் செல்லப்ப தண்டநாயகர் திரும்பிச் சென்றார்.

இரவு போஜனவேளை தாண்டிவிட்டதால் வெறும் பால் மட்டுமே அருந்தி விட்டுப் படுத்தேன்.

படுத்தவன் அடுத்த விநாடியே குபுக்கென்று எழுந்து உட்கார்ந்து கொண்டேன்.

ஐயோ! காயத்ரி செல்வது மதுரைக்கா?

என் காதலை நிறைவேற்றுவதற்காகப் புறப்பட்டுப் போகிறேன் என்று காயத்ரி சொன்னபோது, என் சுயநலத்தை மட்டுமே எண்ணிச் சரியென்று சம்மதித்தேனே, அது எத்தனை அறியாமை!

அவள் செல்லும் மதுரைப் பிரதேசம், உள்நாட்டுப் போர் தலைவிரித்தாடும் தலமாயிற்றே! என் கீழே சிற்றரசர்களாக உள்ள வீரசேகர சோழனும் சந்திரசேகர பாண்டியனும் ஒருவரோடொருவர் போரிட்டுக் கொண்டிருக்கும் பகுதியாயிற்றே! இருவரையும் அடக்கி அமைதி ஏற்படுத்துவதற்காகத் தளபதி நாகம நாயகரைப் படைகளுடன் அனுப்பியிருக்கிறேனே! சண்டை நடந்து கொண்டிருக்கும் அந்தச் சாலைகளின் வழியே தன்னந்தனியாகச் செல்லும் இளம்பெண் உயிருடன் திரும்புவாளா? என்ன அறிவீனம்!

நல்ல காலம், இன்னும் நேரமிருக்கிறது. காயத்ரி புறப்பட்டிருக்க மாட்டாள். பொழுது விடிந்ததும் அவளைக் கூப்பிட்டனுப்பி, 'எங்கேயும் போக வேண்டாம்' என்று சொல்லவேண்டும் என நினைத்த வண்ணமே துயிலில் ஆழ்ந்தேன்.

ஒரு சக்ரவர்த்தி நினைத்தால் எதுவும் நடைபெறும் என்பது என் எண்ணம். பைத்தியக்காரன்! சில நாட்களில் நானே சிம்மாசனத்தை விட்டு இறங்க வேண்டியிருக்கும் என்று அப்போது எனக்குத் தெரியாது!

# 9

காலையில் சூரியோதயத்துக்கு முன் வழக்கம்போல் விழிப்பு ஏற்பட்டுவிட்டது. கண்களை மூடி, கைகளைச் சிரசின் மீது வைத்துக் குவித்து ஐந்து விநாடி என் இஷ்ட தெய்வத்தை வேண்டிக்கொண்டபின், வலப்புறமாகத் திரும்பி, மஞ்சத்தின் கீழேயுள்ள பாதம்தாங்கியில் காலை வைத்தேன். ஆனால், இறங்கவில்லை. இறங்கத் தோன்ற வில்லை.

'என்ன வேண்டியிருக்கிறது, இந்த அரண்மனை வாழ்வும் சக்ரவர்த்திப் பதவியும்!' என்று ஒரு சலிப்பு உண்டாயிற்று. தீபம் அழுது வடிந்து கொண்டிருந்ததால் மங்கலான வெளிச்சமே பரவியிருந்தது. எந்தப் பணியாளையும் கூப்பிடாமல், எழுந்து நானே அதன் திரிகளைத் தூண்டிவிட்டேன். ஔஷதம் அருந்திய நோயாளி போல அறை இப்போது ஒரு புத்துணர்வு பெற்றது. நானும் பெற்றேன்.

தலைமாட்டில் எப்போதும் வைத்திருக்கும் ஆன்றோர்களின் நூலில் ஒன்றை எடுத்தேன். ஏதாவ தொன்றை எடுத்து, ஏதாவது ஒரு பக்கத்தைப் புரட்டி, கண்களில் படும் வாசகத்தைப் படிப்பது என் வழக்கம். அன்று என் கையில் கிடைத்த நூல் 'ஞானேசுவரி' கோதாவரிக் கரையில் பிறந்து, நாடெங்கும் பக்திக் கனல் எழுப்பிய ஞானேசுவர் இயற்றிய நூல் அது.

பிரித்ததும் கண்ணில் பட்ட வாசகம்: 'வீடு என்கிற சுமையை விட்டு விட்டு ஓடப் போகிறேன் என்கிறாய்.

ஆனால், உன்னுடைய உடல் என்கிற சுமை உன்னோடுதானே வரும்? பெற்றோரையும் சகோதரர் களையும் உற்றார்களையும் உறவினர்களையும் விட்டுவிட்டு ஓடப்போகிறேன் என்கிறாய். ஆனால், உன்னுடைய அகங்காரம். உன்னுடைய ஆசை, உன்னுடைய கோபதாபம் யாவும் உன்னுடன்தானே வரும்?"

எனக்காகவே, இப்போதுதான் சொன்ன வாசகம் போல இருந்தது!

தொடர்ந்து சிறிதுநேரம் படித்தேன். இறைவன் இட்டிருக்கும் பணியை அவனுக்கே அர்ப்பணமாக, பிரத்தியட்ச நோக்கோடு, ஆக்கபூர்வமான இதயத்துடன் செய்யவேண்டுமென்று மகான் ஞானேசுவர் வற்புறுத்தி யிருந்தார்.

என்னை நானே தட்டி எழுப்பிக் கொண்டேன். எனக்குத் தெய்வம் விதித்திருக்கிற நூறாயிரம் கடமைகளை மறந்து, சென்ற சில தினங்களாக எங்கெங்கோ புத்தியைச் சிதறடித்துக் கொண்டிருக்கிறோமே என்று என்னை நானே திட்டிக் கொண்டேன்.

இனிமேல் ஒரு மன்னனுக்குண்டான கடமைகளில் மதியைச் செலுத்தவேண்டும் என்று தீர்மானித்தேன்.

காலையில் செய்யவேண்டிய வேலைகளைத் தவறாமல் செய்தேன். நல்லெண்ணெய் குடித்து முடித்தபின், பளு தூக்கும் பயிற்சியைச் செய்தேன். முன்னைக் காட்டிலும் சிறிது குறைவாகவே தூக்க முடிகிறது என்பதை அறிந்தபோது அதிர்ச்சியாக இருந்தது. மனம் பலவீனப் படும்போது உடலும் சேர்ந்து பலவீனப் படுமோ?

பளு தூக்கும் தண்டில் மேலும் இரண்டு இரும்புக் குண்டுகளைச் சேர்த்துக் கொண்டு தூக்கியவாறு

இருந்தபோது வாசலில் பல்லக்கு வந்து நிற்பதும் என் அன்னை நாகலாம்பிகை இறங்கி வருவதும் தெரிந்தது.

பளுவை இறக்கி வைத்துவிட்டு, "வாருங்கள் அம்மா... என்ன இத்தனை காலையில்?'' என்று முன்சென்று வரவேற்றேன்.

"என்னவோ, உன்னைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. கிருஷ்ணா...'' என்று கூறி என்னை அணைத்துக்கொண்டு உச்சிமோந்தார்.

"நல்லவேளை, சீக்கிரமாய் வந்துவிட்டீர்கள். கொஞ்சம் தாமதித்திருந்தால் இந்தக் கிருஷ்ணனை அணைத்துக் கொண்டிருக்க முடியாது." என்றேன்.

"ஏன்? ஏன் கிருஷ்ணா அப்படிச் சொல்கிறாய்?" என்று பதைத்தார் அம்மா.

நான் சிரித்தேன். "என் அடுத்த வேலை உங்களுக்குத் தெரியாதா அம்மா? உடம்பு பூரா எண்ணெய் தடவிக் கொண்டு, வியர்வை வருகிற வரையில் உடற்பயிற்சி செய்து கொண்டிருப்பேன். அப்போது என் உடம்பைத் தொடக்கூட உங்களுக்குப் பிடிக்காது. அப்படி இருக்க எப்படி அணைப்பீர்கள்?" என்றேன்.

அன்னையாரின் முகத்தில் சிறுநகை அரும்பியது. "கிருஷ்ணா, நீ உக்ர நரசிம்மஸ்வாமி மாதிரி குடலை மாலையாகப் போட்டுக்கொண்டு ரத்தம் வழியக் காட்சியளித்தாலும் உன்னைக் கட்டிக்கொண்டு முத்தம் கொடுக்கத் தயங்க மாட்டேன். எந்தக் கோலத்தில் இருந்தாலும் என் பிள்ளை என் பிள்ளைதான்." என்றவர், "ராத்திரி முழுதும் எனக்குச் சரியான தூக்கமில்லை கிருஷ்ணா" என்றார்.

'எனக்கும் அப்படித்தான்' என்று சொல்ல நினைத்தவன் சொல்லாமல் நிறுத்திக்கொண்டு, "அடடா, ஏனம்மா அப்படி?" என்றேன்.

"இரண்டு விஷயம் உன்னிடம் பேசவேண்டும்" என்றார் அம்மா. முக்கியமான விஷயங்கள் பேச வேண்டியிருக்கும்போது இரண்டு விஷயம், மூன்று விஷயம் என்று அவர் பீடிகை போட்டுக்கொள்வார். கேட்பவர் அப்போதுதான் உன்னிப்பாகக் கேட்பார் என்பது அவருடைய உபாயம்.

"சொல்லுங்கள் அம்மா" என்றேன்.

"உன் தந்தை என் கனவில் வந்தார் நேற்றிரவு" என்றார் அம்மா.

"சகஜம்தானே?" என்றேன்.

"கண்களில் நீர் தளும்ப என்னிடம் ஏதோ கெஞ்சுகிற மாதிரி தோன்றியது. அதன்பிறகு என்னால் தூங்க முடியவில்லை. இரவு முழுவதும் யோசித்தேன். புரிந்தது."

"என்னம்மா?"

"உன்னுடைய தமையனார் புஜபல வீர நரசிம்மரின் பிள்ளையான சிறுவனையும், உன் சகோதரர்களான ரங்கன், அச்சுதன் ஆகியோரையும் சந்திரகிரிக் கோட்டையில் சிறை வைத்திருக்கிறாயே, அது நியாயமா? அதைத்தான் உன் தந்தை வருத்தத்தோடு நினைவுபடுத்துகிறார். எப்போது அந்த மூன்று பேரையும் விடுதலை செய்யப் போகிறாய்?" என்றார்.

"தாங்கள் நினைப்பது இரண்டு விஷயங்களில் தப்பு, அன்னையே" என்றேன், நானும் அவருடைய அதே பேச்சு முறையைக் கையாண்டு. " முதலாவதாக, அது நான் செய்த காரியமல்ல, அப்பாஜி செய்தது. அவர் எது செய்தாலும் ராஜ்யத்தின் நன்மையையும், என் நன்மையையும் கருதித்தான் செய்வார். தங்களுக்குத் தெரியாதா?"

"யார் செய்திருந்தாலும் சரி, அது எனக்கு உடன் பாடில்லை கிருஷ்ணா" என்றார் அன்னை. "ரங்கனும்

அச்சுதனும் என் சக்களத்தியின் பிள்ளைகள்தானே, அவர்கள் எப்படியோ ஒழியட்டும் என்று எல்லாச் சாதாரணப் பெண்களையும் போல என்னால் நினைக்க முடியவில்லை. என் வயிற்றில் பிறக்கவில்லையே தவிர, என் கணவரின் பிள்ளைகள்தானே அவர்கள்?"

என்னால் அதற்குப் பதில் கூற இயலவில்லை.

நான் ஆட்சிப் பொறுப்பேற்றதும், எனக்கு எதிரிகளாக யாரும் கிளம்பிவிடக் கூடாது என்று அப்பாஜி முடிவு செய்தார். எனவே, சந்திரகிரிக் கோட்டையில் அவர்களைத் தங்க வைத்திருக்கிறார்.

நான் சொன்னேன்: "அவர்களைச் சிறையில் அடைத்திருப்பதாகத் தாங்கள் எண்ணுவது இரண்டாவது தவறு, அம்மா. அரண்மனையில் இருக்கிறார்கள். அதை விட்டு வெளியே போகாமல் காவல் வைத்திருக்கிறோமே தவிர, அவர்கள் சகல சுகபோகங்களும் அனுபவிப்பதற்கு வசதி செய்திருக்கிறோம். சந்தேகமிருந்தால் தாங்களே ஒருமுறை நேரில் சென்று பார்த்துவிட்டு வரலாம்."

"த்சு... என்றார் அம்மா. என் பதில் அவருக்குத் திருப்தி தரவில்லை.

என்னதான் என்னைத் தைரியசாலி என்று உலகம் நம்பினாலும் உள்ளூர எனக்குள் அச்சம் உண்டு. சென்ற வருடம் ஒருநாள் இரவு நகர சோதனைக்குப் போயிருந்த போது ஒரு சத்திரத்தின் வாசலில் இரண்டு வயோதிகர்கள் பேசிக்கொண்டதைக் கேட்டது முதல் அந்த அச்சம் ஏற்பட்டிருந்தது.

"அதென்னவோ, நானும் பார்த்து விட்டேன். ராஜாவின் மகன்தான் ராஜாவாக வருவான் என்பது நிச்சயமில்லை என்றாகிவிட்டது. இருநூறு வருஷ சரித்திரத்தைப் பார், புரியும்" என்று ஒரு வயோதிகர் மற்றவரிடம் பேசிக் கொண்டிருந்தார்.

அது முதல் நானும் யோசித்துப் பார்க்கிறேன். விஜய நகர சாம்ராஜ்யத்தின் சரித்திரம் அப்படித்தான். எந்த வம்சமும் முழுசாகத் தழைத்து வளர்ந்தது கிடையாது.

அதனால்தான் என்மீது பகைமை கொள்ளக்கூடிய தளபதிகள் உறவினர்கள் யாரையுமே முற்ற முழுக்க நான் நம்புவதில்லை. இன்னும் உண்மையைச் சொல்வதென்றால் பிரதம மந்திரி அப்பாஜியையேகூடச் சில சமயங்களில் நான் சந்தேகிப்பதுண்டு.

இதையெல்லாம் நான் அன்னையிடம் சொல்லவில்லை.

"அது இருக்கட்டும். இரண்டு விஷயம் என்னுடன் பேசவேண்டும் என்றீர்கள். ஒன்றைத்தானே சொல்லியிருக்கிறீர்கள்?" என்று ஞாபகப்படுத்தினேன்.

"பார்த்தாயா, மறந்தே போனேன். கிருஷ்ணஸ்வாமி கோயிலில் சில இடங்களைச் செப்பனிட வேண்டியிருந்தது. அதிகாரிகளிடம் சொன்னால், 'தச்சர்கள், கருமான்கள், கொல்லத்துக்காரர்கள், சிற்பிகள் யாருமே தற்சமயம் கிடைப்பதில்லை' என்கிறார்கள். பக்கத்தில் ஏதோ புதிய நகரம் கட்டிக் கொண்டிருக்கிறாயாமே, அங்கே போய்விட்டார்கள் என்கிறார்கள். என்ன அது?" என்றார் அம்மா.

நான் மர்மமாகச் சிரித்து, "அது ஒன்றுமில்லை" என்றேன்.

"உன் சிரிப்பைப் பார்த்தால் ஏதோ ரகசியத் திட்டம் போலிருக்கிறது. சொல்லிவிடு" என்றார் உரிமையுள்ள அதட்டலான குரலில்.

"ரகசியம் எதுவும் இல்லை, அம்மா. உண்மைதான்... ஒரு புதிய நகரம் எழுப்பி வருகிறேன். சாலை, தண்ணீர், கோயில், கடைவீதி முதலிய எல்லா வசதிகளும் செய்து

வருகிறேன். இங்கேயுள்ள செல்வந்தர்களை அங்கே மாளிகைகள் கட்டிக் கொள்ளும்படி சொல்லி வருகிறேன். நகரம் முழுமையடைந்ததும், ஒரு நல்ல நாளில், நல்ல முகூர்த்தத்தில், தாங்கள்தான் தங்கள் திருக்கரத்தால் அதற்குத் திறப்புவிழா செய்யவேண்டும்" என்றேன்.

"நானா?" என்று திகைத்தார் அம்மா.

"ஆமாம், தாயே. அது தங்களுக்கு மரியாதை செய்யும் பொருட்டு நான் கட்டும் புதிய நகரம். தங்கள் பெயரால் அதற்கு நாகலாபுரம் என்று பெயர் வைக்கவிருக்கிறேன்" என்றேன்.

"அப்படியா? ரொம்ப சந்தோஷம் கிருஷ்ணா. ஆனால், அம்மாமீது உனக்குள்ள மரியாதையையும் பிரியத்தையும் நீ வேறுவிதமாகவும் காட்டலாம். அதைச் செய் முதலில்" என்றார் அன்னை. அவர் குரலில் பரிகாசம் தொனித்தது.

"என்னம்மா சொல்கிறீர்கள்?"

"ஸ்ரீரங்கப்பட்டணம் மன்னரின் குமாரி திருமலை தேவியை உனக்கு மணமுடிக்க நிச்சயித்திருக்கிறேன் என்று அன்றைக்குச் சொன்னேன். இதுவரை நீ உன் சம்மதத்தைச் சொல்லவில்லை. முதலில் அதைச் சொல்லு. அதன்பிறகு உன்னுடைய புதிய பட்டணத்துக்கு என் பெயரை வைக்கலாமா கூடாதா என்று நான் சொல்கிறேன்" என்று கூறிவிட்டுக் கொஞ்சம் கோபத்துடன் திரும்பினார் அன்னை.

அவரை எதிர்த்துப் பேசி என் காதலைத் தெரிவிப்பதற்குத் தைரியமில்லாத கோழையாக நான் நின்றிருந்தேன்.

இரண்டடி நடந்த அம்மா திரும்பி நோக்கினார் என்னை.

"உன்னிடம் இரண்டு விஷயம் பேச வேண்டும் என்று சொன்னேனில்லையா? வாஸ்தவத்தில் மூன்று விஷயம்" என்றார்.

"மூன்றாவது?" என்றேன். மேலும் என்ன அதிர்ச்சி தரப்போகிறாரோ என்று பயம் ஏற்பட்டது.

"அந்தப் பெண் காயத்ரி திடீரென்று எங்கோ வெளியூர் போகிறேன் என்று நேற்று இரவு புறப்பட்டு விட்டாளே, எங்கே?" என்றார்.

அடடா! காயத்ரி புறப்பட்டு விட்டாளா? மதுரைப் பக்கம் போக வேண்டாமென்று அவளைத் தடுக்க நினைத்திருந்தேனே!

"எனக்கு எப்படித் தெரியும், அம்மா! அவள் தங்களுக்கல்லவா செல்லக் காரியதரிசி?" என்றேன். "அவளை என் கீழே பணிக்கு வைத்துக் கொள்ள வேண்டாமென்று சொன்னீர்கள். பிறகு பார்த்தால் அவள் அரண்மனையில் எங்கே வேண்டுமானாலும் போகிறாள், வருகிறாள், பேசுகிறாள். அந்த உரிமையை அவளுக்குத் தங்களைத் தவிர வேறு யார் கொடுத்திருக்க முடியும்...?"

"ஆமாம்... என்று ஒப்புக்கொண்டார் அம்மா. "முதலில் அவளைச் சாதாரணமாகத்தான் நினைத்தேன்... மகா கெட்டிக்காரி. என்னைச் சதுரங்கத்தில் மூன்று முறை தோற்கடித்துவிட்டாள். பாடத் தெரிந்திருக்கிறது. ஆடத் தெரிந்திருக்கிறது. வைத்தியம், சோதிடம், வானசாஸ்திரம் பற்றித் தெரிந்திருக்கிறது. ஆச்சரியமான பெண்!"

அவளுக்கு வில்வித்தையும் வாட்போரும் குதிரை யேற்றமும் யானையேற்றமும் தெரியும் என்பதைச் சொன்னால், அம்மா எத்தனை ஆச்சரியப்படுவாரோ!

அம்மா சொன்னார்: "அவளால் நம் ராஜ்யத்துக்கு க்ஷேமம் ஏற்படும் என்று என் மனசுக்குள் ஏதோ ஒன்று

சொல்கிறது. கிருஷ்ணா... அதனால்தான் அவளுக்குத் தடையின்றி நடமாட அதிகாரம் கொடுத்தேன். இருந்தாலும், நேற்றிரவு அவள் வெளியூர் சென்றது எனக்கு ஆச்சரியம்தான். ஏதோ கோயிலுக்கு வேண்டுதல் என்றாள். உனக்கு ஏதாவது தெரியுமோ...?"

"தெரியவில்லையே அம்மா... என்று மனதறிந்து பொய் சொன்னேன்.

அன்னை சிவிகையில் ஏறித் திரும்பிச் சென்றார்.

எதை நினைக்கக்கூடாது என்று சற்றுமுன் நினைத்தேனோ, அதுவே நினைவு முழுவதையும் ஆக்கிர மித்துக் கொண்டுவிட்டது.

பலவந்தமாக அந்த எண்ணங்களை விரட்டியடித்து, ராஜாங்கக் கடமைகளில் மனத்தைச் செலுத்த உறுதி பூண்டேன். லூயி பாதிரியார் அன்று பிற்பகல் என்னைக் காண வரலாம் என்று சொல்லி அனுப்பினேன்.

**பி**ற்பகல் லூயி பாதிரியார் துவிபாஷி கஸ்பாருடன் வந்தபோது, அமைச்சர்கள் பலரும் என்னுடன் இருந்தார்கள்.

கொலு மண்டபத்தில் நுழைந்த பாதிரியார், அப்படியே பிரமித்துப் போனவராக ஓரடி நின்றுவிட்டார். அப்படியொரு மாபெரும் அரசவையை அவர் வாழ் நாளிலேயே கண்டதில்லை போலும்! அற்புதமான ஓவியங்களும் அருமையான சிற்பங்களும் பளிங்குத் தரையும்... முக்கியமாக, நவரத்தினங்கள் பதித்து ஜாஜ்வல்யமாகப் பிரகாசித்த எனது சிம்மாசனத்தையும் கண்டு அவருக்குத் தலை சுற்றியிருக்கும். இருபது படிகள் கொண்ட மேடையின் மீதிருந்த மிகப்பெரிய சிம்மாசனம் அது. மூன்று பேர் வசதியாக உட்கார்ந்துகொள்ள முடியும்.

லூயி பாதிரியார் மெதுவே நடந்து வந்து என் முன்னே நின்று, இரு கைகளையும் தலைக்கு மேலே குவித்து வணக்கம் செலுத்தினார். பரவாயில்லை. புத்திசாலியான பாதிரியார்தான்! இந்த நாட்டின் பழக்கவழக்கங்களை விரைவாகவே கற்றுக்கொண்டுவிட்டார்! அப்பாஜியும் மற்றப் பிரதானிகளும். பரஸ்பரம் வணக்கம் செலுத்திக் கொண்டார்கள்.

ஒரு சேவகன் தஞ்சாவூர்த் தட்டையும், காஷ்மீரத்துச் சால்வையையும் கொண்டு வந்து என் முன்னே தரையில் வைத்தான். "எடுத்துக் கொள்ளுங்கள் பாதிரியாரே..." என்றேன்.

பரிசாக யாருக்கு எது கொடுத்தாலும் மன்னர் தன் கையால் எடுத்துக் கொடுக்கக்கூடாது என்பது விஜயநகர அரசவம்சத்தின் சம்பிரதாயம். சேவகன் தரையில் வைக்க வேண்டும். பரிசு பெறுகிறவர் அதை எடுத்துக்கொள்ள வேண்டும். அந்தப் பழக்கத்தைப் புரிந்து கொண்டிருந்த லூயி பாதிரியார், தட்டையும் சால்வையையும் எடுத்துக் கொண்டார். அப்பாஜி சால்வையைப் பிரித்து அவருக்குப் போர்த்தினார்.

பாதிரியார் முகமலர்ச்சியுடன் மறுபடி வணக்கம் செலுத்திவிட்டுத் தனக்குத் தரப்பட்டிருந்த இருக்கையில் அமர்ந்தார். அதுவரையில் எட்டத்திலேயே இருந்த துவிபாஷி கஸ்பார், இப்போது எங்கள் இருவருக்கு மிடையில் வந்து நின்று கொண்டார், இருவர் பேசுவதையும் மொழிபெயர்ப்பதற்காக.

"ஆளுநர் ஆல்புகர்க் தமது வணக்கத்தைத் தெரிவிக்கச் சொன்னார். போர்த்துகீசிய மன்னர் தங்களிடம் சில பிரச்னைகளைப் பேசி, ஒப்பந்தம் செய்து கொள்ளும்படி ஆளுநருக்கு ஆணை அனுப்பியிருக்கிறார். அதைப் பற்றிச் சொல்வதற்காகவே நான் வந்திருக்கிறேன்..." என்றார் பாதிரியார்.

"மகிழ்ச்சி... என்றேன்.

"இந்தத் தேசத்தில் எங்களுடைய நிலைமை எப்படி இருக்கிறதென்று தங்களுக்குத் தெரியும். தங்களுடைய நிலைமை எப்படி என்பது எங்களுக்கும் தெரியும்..." என்ற முன்னுரையுடன் ஆரம்பித்தார் லூயி பாதிரியார்.

தான் அதிகம் பேசாமல், மற்றவர்களை அதிகம் பேசவிட்டுக் கேட்பதுதான் சிறந்த மன்னனுக்கு அடையாளம் என்று என் குருநாதர்கள் போதித்திருப்பதை நினைவில் கொண்டவனாக, "மேலே சொல்லுங்கள்..." என்று தலையசைத்தேன்.

"கோழிக்கோட்டில் நாங்கள் வியாபாரம் செய்ய முடியாதபடி, பண்டகசாலைகள் வைக்க முடியாதபடி முசல்மான்கள் தொல்லை தருகிறார்கள். கோவாவிலும் விஜயபுரம் சுல்தானின் படைகள் புகுந்து நாசம் செய்கின்றன. ஆகவே..."

"ஆகவே...?" என்று நான் கேட்கவில்லை. அப்பாஜி கேட்டார்.

"கோழிக்கோட்டிலும் கோவாவிலும் முசல்மான்களை விரட்டியடிக்க விஜயநகரப் பேரரசு துணை செய்ய வேண்டும் என்று எங்கள் போர்த்துகீசிய மன்னரும் கோவாவில் உள்ள ஆளுநர் ஆல்புகர்க்கும் தங்களைக் கேட்டுக் கொள்கிறார்கள். அதற்குப் பிரதியுபகாரமாக, நாங்கள் சிறந்த அரேபிய பாரசீகக் குதிரைகளை மலிவாகத் தங்களுக்குத் தருகிறோம். நவீனமான வெடிமருந்துகள், பீரங்கி முதலான ஆயுதங்களும் தருகிறோம். விஜயபுரம் சுல்தானைத் தாங்கள் ஜெயிப்பதற்குச் சகல உதவிகளும் செய்கிறோம்..." என்று கூறி முடித்தார் லூயி பாதிரியார்.

"ஆகட்டும், பார்க்கலாம்... எல்லா அமைச்சர்களுடனும் கலந்து ஆலோசனை செய்து சொல்கிறேன்... என்றேன்.

பாமனி சுல்தான்களுடைய செயல்கள் அத்துமீறிப் போகும்போது நான் அவர்கள்மீது படையெடுப்பு நடத்தியிருக்கிறேன். உண்மை. எனினும், அவர்களை அந்நியர்களாக எண்ண என் மனம் இடம் தரவில்லை. எப்படியும் அவர்கள் இந்த நாட்டுக்குள்ளேயே தங்கி, பாரத தேசத்துக்குள்ளேயே மணம் புரிந்துகொண்டு, பாரத தேசத்துக்குள்ளேயே வாழ்ந்து மடியப் போகிறவர்கள். தேசத்தின் செல்வத்தை அயல்நாட்டுக்கு எடுத்துச் செல்லப் போவதில்லை. போர்த்துகீசியர்களையும் அவர்களைத் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிற மற்ற பறங்கியர்களையும் அப்படிக் கருத முடியுமா என்று சந்தேகமாயிருந்தது.

திட்டத்தைச் சொன்னவுடன், நான் மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொள்வேன் என்று லூயி பாதிரியார் எதிர்பார்த்தார் போலும்... முகத்தில் ஏமாற்றம் படிய எழுந்து கொண்டார்.

"உங்களுடன் அன்று வந்திருந்த இத்தாலிய வைத்தியர் — அந்த இளைஞன் — நலமாக இருக்கிறானா...?" என்று விசாரித்தேன்.

"நிக்கோலஸைச் சொல்கிறீர்களா...? அவனைத் தங்களிடம் அழைத்து வந்தேனே, அன்று பார்த்ததுதான்... இப்போது அவன் எங்கே இருக்கிறான் என்று தெரிய வில்லை..." என்றார் பாதிரியார்.

அவர் புறப்பட்டுச் சென்றதும் -

"சக்ரவர்த்திக்கு ஒரு தகவல்... என்றார் அப்பாஜி.

"என்ன அப்பாஜி...?" என்று கேட்டேன்.

"அந்த நிக்கோலஸ் வைத்தியனைப் பற்றிப் பாதிரி யாருக்குத் தெரியவில்லை. அவன் நேற்று ராத்திரி தலைநகரை விட்டு வெளியேறிக் கொண்டிருந்ததை நம் ஒற்றர்கள் பார்த்திருக்கிறார்கள்..." என்றார் அப்பாஜி.

அமைச்சர் அய்யப்பராசு உடனே, "சாம்ராஜ்யத்தின் பல பகுதிகளை, ஊர்களைப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டிருப்பான். அதனால், வெளியூர்களுக்குப் புறப்பட்டிருக்கிறான். ஒற்றர்களை வைத்து வேவு பார்க்க வேண்டிய அவசியம் என்ன...?" என்றார்.

"தாராளமாகப் போகட்டும்... எங்கே வேண்டுமானாலும் செல்லட்டும்... ஆனால், அதற்கு ஒரு பெண்ணின் துணை எதற்கு..? ஏன் ஒரு பெண்ணைத் தன்கூட அழைத்துச் செல்ல வேண்டும்.. என்றார் அப்பாஜி.

"பெண்ணா...?!" என்றேன் நான், உடனே.

"ஆம், சக்ரவர்த்தி... பெண்தான். அதுவும் தங்களுக்குத் தெரிந்த பெண்... என்றவர், ஒரு விநாடி நிறுத்தி என் திகைப்பை ரசித்தபின், "பணிப்பெண்ணாக இங்கே உலாவிக் கொண்டிருந்தாளே, அந்த காயத்ரிதான்... என்றார்.

நான் திடுக்கிட்டுப் போனேன். காயத்ரியா....

அப்பாஜி தொடர்ந்து, "காளஹஸ்தி, திருப்பதி, காஞ்சி, திருவண்ணாமலை, சிதம்பரம் வழியாக மதுரை வரை செல்லும் சாலை அது. இந்நேரம் அவர்கள் காளஹஸ்தியையோ, திருப்பதியையோ அடைந்திருப்பார்கள்... என்று சொல்லிக் கொண்டிருந்தபோது -

வெளியே பலவித குரல்கள் கேட்டன. யாரோ உள்ளே வர முயற்சிக்கிறார்கள்... காவல்காரர்கள் அனுமதி மறுக்கிறார்கள்...

"வழி விடுங்கள்! உடனே நான் சக்ரவர்த்தியைப் பார்த்தாக வேண்டும்... உடனே... உடனே..." என்று ஒரு பெண்ணின் குரல் கேட்டது.

# 10

கொலு மண்டபத்துக்கு வெளியே கூச்சல்களும் அதட்டல்களும் விநாடிக்கு விநாடி அதிகப்பட்டன.

அப்பாஜி சீற்றத்துடன் எழுந்து கொண்டார். "என்ன அநியாயமாக இருக்கிறது? வரவர யார் எங்கே வருவது என்கிற விவஸ்தையே இல்லாமல் போய்விட்டதே... யாரந்தப் பெண்?" என்றவர், சால்வையை வீசித் தோள்மீது போட்டுக்கொண்டு எழுந்து சென்றார்.

ஆளுகிறவனுக்கும் ஆளப்படுகிறவனுக்கும் இடையே உள்ள தூரம் அதிகப்பட அதிகப்பட ஆட்சியின் அஸ்திவாரம் ஆட்டம் காணுகிறது என்பது என் அபிப்பிராயம். சோழர் காலத்தில் இருந்தது போல அரண்மனைக்கு வெளியே ஓர் ஆராய்ச்சி மணி கட்ட வேண்டும் என்று கூட மந்திரிப் பிரதானிகளிடம் சொல்லி வருகிறேன்.

அப்பாஜி போய் அந்தப் பெண்ணை விரட்டி அடித்து விடுவார்... வரக்கூடாத இடத்துக்கு வந்து, வரம்பு மீறிப் பேசினாள் என்பதற்காகச் சிரச்சேதம் செய்யக்கூட உத்தரவிட்டு விடுவார்.

இந்த எண்ணம் தோன்றியதும் நான் ஆசனத்தை விட்டு இறங்கினேன். நான் எழுந்து கொண்டதைப் பார்த்ததும் மற்றப் பிரதானிகளும் எழுந்துகொண்டு என்னைப் பின்தொடர்ந்தார்கள்.

காவலர்கள் என்னை எதிர்பார்க்கவில்லை. சட்டென்று விலகிக்கொண்டார்கள். நான் பயந்த மாதிரியே

அப்பாஜி, "இந்தப் பெண்ணை... என்று சொல்லிக் கொண்டிருந்தார். "இருங்கள், மகாப் பிரதானி" என்று நான் குறுக்கிட்டேன்.

அப்பாஜி திடுக்கிட்டுப் போனார்.

அந்தப் பெண்ணைப் பார்த்தேன். அவள் காலோடு தலை பர்தா அணிந்திருந்தாள். ஏழைப் பெண்ணாக இருக்க வேண்டும் பர்தா உடை அழுக்கடைந்ததாயும், பல இடங்களில் கிழிந்து ஒட்டுப்போட்டதாயும். இருந்தது.

அந்தப் பெண்ணின் அருகில் சென்றேன். யாரும் செய்யக்கூடாத, அதுவும் ஒரு சக்ரவர்த்தி ஒரு முஸல்மான் பெண்ணிடம் செய்யவே கூடாத, முறை தவறான காரியத்தைச் செய்தேன்.

அவளுடைய முகத்திரையைச் சட்டென அகற்றினேன்.

வந்தவள் உளவாளியாக இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்ததால், அரசனுக்குள்ள உரிமையை உபயோகித்து, அந்தச் செயலைச் செய்தேன்.

ஆனால், முகத்தைப் பார்த்ததும் என் காரியத்தை எண்ணி நானே வெட்கப்பட்டேன்.

அவள் நிஜமாகவே ஒரு முஸல்மான் பெண்தான், நெற்றியில் பொட்டு இல்லாதிருப்பதையும் முகத்தின் நிறத்தையும் கொண்டு நிச்சயமாக எனக்குத் தெரிந்தது.

அவள் கண்களிலிருந்து நீர் கொட்டிக் கொண்டிருந்தது. விம்மலுடன் கையெடுத்துக் கும்பிட்டாள்.

"சக்ரவர்த்தி... என் கணவரை இரண்டு வருடம் முந்தி ஏதோ ஒரு குற்றத்துக்காகக் கைது செய்து சிறையில் அடைத்தார்கள். இப்போது அவரையும் அவரோடு இருந்த வேறு பல கைதிகளையும், சக்ரவர்த்தி புதிதாகக் கட்டிக்

கொண்டிருக்கிற நகரத்துக்கு இழுத்துப் போய்க் கொண்டிருக்கிறார்கள்."

"எதற்கு?" என்றேன்.

"நரபலி கொடுப்பதற்கு" என்றாள் அந்தப் பெண்.

"என்னது!" என்று அதிர்ச்சியுற்றேன்.

ஆடுகளையும் மாடுகளையும், கோழிகளையும் காவு கொடுப்பதைப் பற்றி நான் கேட்டிருக்கிறேன். சாம்ராஜ்யத்தில் எவ்வளவோ சாதியினர் இருக்கிறார்கள். கிராம தேவதைகளுக்காக அவர்கள் நடத்தும் சம்பிரதாயச் சடங்குகளை நான் தடுப்பது கிடையாது. தலையிடுவதும் கிடையாது.

ஆனால் நரபலியா?. அதைப்பற்றிச் சிலர் பேசியதைக் கேள்விப்பட்டிருந்தாலும் உண்மையென்று நம்பியதில்லை.

அப்பாஜியின் பக்கம் திரும்பினேன். "மகாப் பிரதானி, என்ன இவள் சொல்வது?" என்றேன்.

அப்பாஜிக்கு இதெல்லாம் சுத்தமாகப் பிடிக்கவில்லை. சக்ரவர்த்தியாக இருப்பவர் பவனி, திருவிழா, வெளிநாட்டினரை உபசரித்தல், வாணிப உடன்படிக்கை - இதுபோன்ற விஷயங்களில் மட்டும் கவனம் செலுத்தினால் போதும் என்பது அவருடைய அபிப்பிராயம்.

"சின்னச் சின்ன விஷயங்களைப் பற்றிச் சக்ரவர்த்தி ஆராய்ந்து கொண்டிருந்தால் நேரம்தான் வீண்" என்றார்.

"இது சின்ன விஷயமில்லை, அப்பாஜி. பெரிய விஷயம். ரொம்பப் பெரிய விஷயம். நரபலி கொடுத்திருக்கிறார்கள் என்கிறாளே, உண்மைதானா? அதைச் சொல்லுங்கள்" என்றேன்.

அப்பாஜி மௌனமாக இருந்தார். நீர்ப்பாசனங்களைக் கவனித்துக் கொள்ளும் அமைச்சரான கொண்டமராசு, "அது வேறொன்றுமில்லை, சக்ரவர்த்தி.

நாகலாபுரத்தில் ஒரு ஏரி வெட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதன் மதில்சுவரில் ஒரு பகுதி இடிந்து விழுந்து கொண்டிருக்கிறது. அது ஏதோ துர்த்தேவதையின் கோபத்தினால்தான் என்று தொழிலாளர்கள் நினைத்து, நரபலி கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள்...'' என்றார்.

"கட்டியது இடிந்து விழுகிறதென்றால் அதற்கான கல்லும் கலவையும் சரியில்லை என்று அர்த்தம்'' என்றேன் நான் கடுமையாக. "கட்டிடக் கலையில் நிபுணர்களாக இருப்பவர்களை நீங்கள் அமர்த்தவில்லை என்று அர்த்தம். கோவாவில் நல்ல கட்டிட நிபுணர்கள் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். குறிப்பாக, ஜோ பான்ட்டி என்பவரைப் பற்றிச் சிலாகித்துப் பேசுகிறார்கள். லூயி பாதிரியாரிடம் சொல்லி அந்தப் போர்த்துக்கீசியரை அழைத்து வரச் சொல்லுங்கள். அதை விடடுவிட்டு துர்த்தேவதையாம்! நரபலியாம்! சே!''

"சக்ரவர்த்தி ஒரு விஷயத்தை மறந்துவிட்டீர்கள்'' என்றார் அப்பாஜி.

"என்ன?'' என்றேன்.

"நரபலி கொடுக்கப்படுகிறவர்கள் குற்றமற்ற பொது மக்கள் அல்ல. குற்றம் செய்து பிடிபட்டுச் சிறையில் தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கும் கைதிகள். அவர்களைத்தான் பலி கொடுக்கப்போகிறோம். எப்படியும் சாகப் போகிறவர்கள்தானே அவர்கள்?''

"எல்லாருமே ஒருநாள் சாக வேண்டியவர்கள்தான் அப்பாஜி! நீங்களும் சரி, நானும் சரி. ஆனால், இறைவனாகப் பார்த்துக் கூப்பிடும்போது மரணம் வரட்டும். கடவுள் செய்யவேண்டிய காரியத்தை நாம் செய்யவேண்டாம்'' என்றேன்.

"நீ சொல்வது ரொம்பச் சரி, கிருஷ்ணா" என்று ஒரு குரல் கேட்டது.

திரும்பிப் பார்த்தால் என் அன்னை நாகலாம்பிகை நின்றிருந்தார். இங்கே நடக்கும் விவாதங்களைப் பற்றி யாரோ அவரிடம் போய்ச் சொல்லியிருக்கிறார்கள் போலிருக்கிறது. எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டு நின்றிருந்திருக்கிறார்.

"ராணி, தாங்கள் ஏன்... என்று அப்பாஜி முணுமுணுத்தார். அவர் கோடு கிழித்தால் தாண்டாதவர் என் அன்னை, அவரேகூடத் தன் கருத்தை எதிர்க்கிறாரே என்று அப்பாஜிக்கு வருத்தம் ஏற்பட்டது இயற்கைதான்.

இதையெல்லாம் பார்த்தவண்ணம் பரிதாபமாக நின்றிருந்தாள் அந்தப் பெண். என் தாய் அவளுடைய தோளை அன்புடன் தொட்டு, "நீ பயப்படாமல் போ அம்மா. சக்ரவர்த்தி தகுந்த அதிகாரிகளை அனுப்பி உன் கணவனைக் காப்பாற்றுவார்" என்றார்.

நான் உடனே, "இல்லை, தாயே, இதெல்லாம் அதிகாரிகளிடம் சொன்னால் நடவாது. ஒரு உயிர்தானே போகிறது, போகட்டும் என்று அலட்சியமாக இருந்து விடுவார்கள். ஆகவே, நானே போய்ப் பார்க்கிறேன்" என்றேன்.

"வேண்டாம் சக்ரவர்த்தி" என்று அப்பாஜி, நாடெண்டல கோபர், சாளுவ கோவிந்தராசு, ராயசம் கொண்டமராசு, திம்மராசு, அய்யப்பராசு முதலிய எல்லாருமே தடுத்தார்கள். "நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்" என்றார்கள்.

"என் குதிரையைச் சித்தம் செய்யச் சொல்லுங்கள். இந்தப் பெண்ணையும் நம்முடன் அழைத்து வர ஏற்பாடு செய்யுங்கள்" என்று கண்டிப்புடன் சொல்லிவிட்டேன்.

அம்மணமாகத் தெருவில் விளையாடும் குழந்தையிடம் அழுக்கும் இருக்கும். அழகும் இருக்கும்.

புதிதாக எழும்பிக் கொண்டிருக்கும் நாகலாபுரமும் அப்படித்தான் இருந்தது, பாதி கட்டியும் பாதி கட்டப் படாமலும்.

தெருக்களும், கடைவீதிகளும், தனித்தனித் தொழில் செய்வோர்களுக்குத் தனித்தனித் தெருக்களும் பிறந்து கொண்டிருந்தன. பெரிய பெரிய மாளிகைகள்... ஏழைகளின் குடிசைகள்... கடைகள்... சந்தைகள்... கோயில்களுக்கும் குறைவில்லை. சந்தியா கால பூஜைகளின் மணியோசையும், பாசுரங்களும் வேத கோஷங்களும் கலந்து கேட்டன. பல இடங்களில் சந்தைகள் நடந்துகொண்டிருந்தன. பழையதும் புதியதுமான பூங்காக்களும்; தோப்புகளும் தலைகாட்டிக் கொண்டிருந்தன. மக்கள் குடியேறிவிட்ட வீடுகளின் வாசல்களில் சித்திர விசித்திரமான கோலங்கள் வரையப் பட்டிருந்தன. பிரகாசமாக அலங்கரிக்கப்பட்ட யானைகளும் குதிரைகளும் எந்த அவசரமுமில்லாமல் மந்த நடையில் போய்க் கொண்டிருந்தன.

பூம்புகாரைப் பற்றிச் சங்கப் புலவர் பாடியது போல, 'வடமலைப் பிறந்த மணியும் பொன்னும், குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும், தென்கடல் முத்தும் குணகடல் துகிரும், கங்கை வாரியும் காவிரிப் பயனும், ஈழத்துணவும் காழகத் தாக்கமும்' நிறைந்ததாக இந்தப் புதிய நகரை நிர்மாணிக்க விரும்பினேன். அந்தக் கனவு இதோ சிறிது சிறிதாக நனவாகிக் கொண்டிருக்கிறது. ஆனால், நின்று ரசிக்க என் மனநிலை இடம் தரவில்லை.

நானும் மற்றவர்களும் வேகமாகவே குதிரையைச் செலுத்திச் சென்று கொண்டிருந்ததால் என்னை யாரும் அடையாளம் கண்டுகொள்ளவில்லை. அப்படியும் யாரோ ஒருவனுக்கு என்னைத் தெரிந்துவிட்டது. நீண்ட குச்சியின்

நுனியில் பூவரசங் கிளையைச் செருகிக் கொண்டு என் குதிரையின் பக்கமாக ஓடி வந்தான்.

மன்னர் குதிரைமீது பவனி வரும்போது, அவரிடம் ஏதாவது ஒரு குறையைத் தெரிவிக்க விரும்பும் குடிமகன் இதுபோல ஒரு குச்சி நுனியில் ஒரு கிளையைச் செருகிக் கொண்டு வரவேண்டும் என்பது நடைமுறை. அப்படி யாரேனும் வருவதைக் கண்டால், எனக்கு இருபக்கமும் வருகிற காவலர்கள் ஒதுங்கி அவனுக்கு வழி கொடுப் பார்கள். நான் அந்த மனிதனின் வழக்கைக் கேட்டு என்னுடன் வரும் தளபதியிடமோ அமைச்சரிடமோ என் தீர்ப்பைச் சொல்லுவேன்.

ஆனால், யானைமீது நான் செல்லும்போது வேறொரு வழக்கம். தன் குறையை விண்ணப்பிக்க விரும்புகிறவன் நெடுஞ்சாண் கிடையாகச் சாலையின் குறுக்கே படுத்துக் கொள்வான். யானையை நிறுத்தி அவன் குறையைக் கேட்பேன்.

ஆயினும், இப்போது எந்தக் குடிமகனின் குறையையும் கேட்க எனக்கு மனமும் இல்லை, அவகாசமும் இல்லை. "இன்னொரு சமயம்... இன்னொரு சமயம்..'' என்று அவசரமாக அந்த மனிதனிடம் சொல்லிவிட்டுப் போய்க் கொண்டேயிருந்தேன். நாலைந்து குதிரைகளுக்குப் பின்னே, ஒரு முஸல்மான் வீரனின் பாதுகாப்புடன் வரும் அந்த ஏழைப் பெண்ணைப் பற்றி என் சிந்தனைகள் சென்று கொண்டிருந்தன.

நரபலி... நரபலி...

ஆட்சிக்கு வருவதற்கு முன்பு நாடோடியாக நாடெங்கும் சுற்றிக் கொண்டிருந்த காலத்தில் பல வகையான வழக்கு விசாரணைகளையும் குரூரமான தண்டனைகளையும் நான் பார்த்திருக்கிறேன். கூரிய கம்பத்தின் உச்சியில் துடிக்கத் துடிக்கக் கழுவேற்றுவதைக்

கண்டு பதைத்திருக்கிறேன். யானையைக் கொண்டு மிதிக்க வைத்துக் கொல்லுவதும் உண்டு.

ஒருவர் குற்றவாளியா இல்லையா என்பதைக் கண்டுபிடிக்கும் வழிமுறைகளும் கோரமானவை. கோயில் சந்நிதியில் தான் நிரபராதி என்று ஒருவன் சத்தியம் செய்தால், பழுக்கப் பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கோலை அவன் முன்னே நீட்டுகிறார்கள். அதை அவன் நாக்கினால் நக்க வேண்டும். அல்லது உள்ளங்கையில் பிடித்துக் கொண்டு இருபதடி நடக்க வேண்டும். நாக்குக்கோ கைக்கோ ஒன்றும் ஆகவில்லை என்றால், அவன் சொன்னது உண்மை என்று தீர்மானிக்கிறார்கள் அல்லது கொதிக்கும் எண்ணெயில் அவனுடைய இரண்டு விரல்களை நனைக்கிறார்கள். விரல்களை வெளியே எடுத்து அவற்றில் துணி சுற்றி அரக்கு முத்திரை வைத்துவிட்டு, மூன்று நாள் கழித்துப் பிரித்துப் பார்க்கிறார்கள். அந்த விரல்களில் ரணம் ஏற்பட்டிருந்தால் அவன் குற்றவாளி என்று பொருள்.

இதெல்லாம் தர்ம சாத்திரங்களுக்கும், மனிதத் தன்மைக்கும் பொருந்தியவையா என்று நான் அடிக்கடி யோசிப்பதுண்டு. பெரியவர்களைக் கூட்டி, அறிவுக்கும் நாகரிகத்துக்கும் ஏற்றனவாக வேறு நீதிமுறைகளை வகுக்க வேண்டும் என்று நினைக்கிறேன். ஆனால், ஒவ்வொரு சீமையில், ஒவ்வொரு மக்கள் தாங்களாகவே சில வழிமுறைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள், அதில் தடாலடியாக மாற்றங்கள் கொண்டு வந்தால் சமூகத்தின் கட்டுக்கோப்பே குலைந்து போகும் என்ற அச்சத்தினால், தேனீக்கூட்டில் கை வைக்கலாமா என்ற தயக்கத்தினால் பொறுமையாக இருந்து வருகிறேன்.

போகும் வழியில், "இது கைக்கோளர் தெரு. இது ரெட்டியார் தெரு... இங்கே அந்தணர்கள் வசிக்கிறார்கள்"

என்று என் பக்கத்தில் வந்துகொண்டிருந்த அப்பாஜி எனக்குச் சொல்லியபடி இருந்தார். அரண்மனையிலிருந்து புறப்பட்டது முதல் நான் பேசாமலே இருப்பதை அறிந்து, என் கோபத்தைத் தணிப்பதற்காக ஏதேதோ பேசிக் கொண்டு வந்தார் அவர். நான் ஊம் ஊம் என்று தலையசைத்துக் கொண்டிருந்தேன்.

"இது வேசிகள் தெரு, கௌரவமாகத் தேவதாசிகள் தெரு என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள்" என்று அப்பாஜி சொன்னபோது, என் மௌனம் கலைந்தது.

"இந்த ஊரிலும் அந்தக் கண்ணராவி வந்து விட்டதா?" என்றேன் கடுகடுப்புடன். "எல்லாக் குற்றங்களுக்கும் தண்டனைகள் வைத்திருக்கிறீர்கள். இந்த விபசாரக் குற்றத்துக்கும் கடுமையான தண்டனைகள் வைத்து ஒழித்துவிட்டால் என்ன?"

அப்பாஜி கடகடவென்று நகைத்தார். "சக்ரவர்த்தி, உலகத்திலேயே மிகத் தொன்மை வாய்ந்த தொழில் என்று இதைச் சொல்வார்கள். இதை யாராலும் ஒழிக்க முடியாது. ஒழிக்கவும் கூடாது" என்றார்.

"ஒழிக்கக் கூடாதா? ஏன்?" என்றேன்.

"நமது அரசுக்கு வரியாக வரும் வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கு இவர்கள் மூலமாகத்தான் வருகிறது. அவர்களும் சம்பாதித்து, அரசாங்கத்துக்கும் நிறையக் கொடுக்கிறார்கள். அதைத் தவிர, குளம், கோயில், நீர்த்தேக்கம், அன்ன சத்திரம், வழிப்போக்கர்கள் தங்குவதற்கான விடுதி இப்படி எத்தனையோ நற்பணிகளை அவர்கள் செய்கிறார்கள். அரசாங்கத்துக்கு அந்தச் செலவுகள் மிச்சம்" என்று விளக்கினார் அப்பாஜி. அவர் பேச்சை மறுக்க முடியவில்லை.

குதிரை வீரனொருவன் வழிகாட்டிக் கொண்டு முன்னே செல்ல, நாங்கள் குதிரைகளை நிறுத்திவிட்டு,

குன்றின் உச்சிக்கு ஏறினோம். அந்தக் குன்றுக்கும் அடுத்த குன்றுக்கும் நடுவில் ஒரு பள்ளத்தாக்கு இருந்தது. அதைத்தான் வெட்டி ஆழப்படுத்தி ஏரி அமைக்க முயன்று வந்தார்கள். குன்றுகளின் மீதிருந்து மழைநீர் வருவதற்கும், வேறு சிற்றாறுகளிலிருந்து தண்ணீர் கொண்டு வருவதற்கும் பெரிய பெரிய குழாய்கள் பொருத்தப்பட்டிருந்தன. ஏரியிலிருந்து நாலு திசைகளிலும் பாதைகள் சென்றன, பக்கத்து ஊர்களுக்கு.

குன்றின் உச்சியிலிருந்து பார்த்தபோது, அடிவாரத்தில் சிற்றெறும்புகள் போலத் தொழிலாளர்கள் வேலை செய்வது கண்ணில்பட்டது. இருட்டும் வேளையாகி விட்டதால் ஏராளமான தீப்பந்தங்கள் நடப்பட்டிருந்தன.

குளிர்காற்று உடலை வாள்கொண்டு வெட்டியது. நாங்கள் இருந்த இடத்தில் இருள் பரவியிருந்ததால் கீழே இருந்தவர்களுக்கு எங்களைத் தெரியவில்லை. நான் அருகில் இருந்தவர்களைப் பார்த்தேன். அந்த முஸல்மான் பெண் கையைப் பிசைந்து கொண்டு நிற்பது தெரிந்தது. அதிலிருந்து அவள் தவிப்பும் தெரிந்தது.

கீழே கவனித்தேன் ஓரிடத்தில் முழங்கால் உயரத்துக்கு ஒரு கல் ஏதாவது கிராம தேவதையின் சிலையாகவும் இருக்கலாம் வைக்கப்பட்டு அதற்குப் பூச்சுற்றிக் குங்குமமிட்டு அதன் எதிரில் ஓர் ஆட்டைப் பலி கொடுத்த பின், கற்பூரம் கொளுத்திக் கொண்டிருந்தார்கள். சில பெண்கள் அதைச்சுற்றி வந்து கும்மியடிப்பதும், உடுக்கையின் ஓசையும் கேட்டன.

ஓர் ஆட்டைப் பலி கொடுத்த பின், வலது காலை வெட்டி, அதன் வாயின் குறுக்காகச் செருகினார்கள். ஒருவர் அதன்மீது மஞ்சள் நீரைத் தெளித்தார்.

“தண்ணீர் தெளித்ததும் ஆடு வாயைத் திறந்தால் அடுத்த பலிக்கு உத்தரவு கிடைத்துவிட்டது என்று

அர்த்தம்." என்று விளக்கினார் என் பக்கத்தில் வந்து நின்ற கொண்டமராசு.

எனக்கு எதுவும் பிடிக்கவில்லை. போர்க்களத்தில் எதிரிகளுடன் சமர் புரியும்போது, இவ்வளவு தலைகளைச் சீவுகிறோமே, இவ்வளவு கைகளையும் கால்களையும் வெட்டுகிறோமே, இத்தனை குடம் குடமாக ரத்தம் கொட்டும்படி பண்ணுகிறோமே என்ற நினைப்பு எனக்கு எழுந்ததில்லை. ஒவ்வொரு யுத்த தினத்தின் போதும் அநேகமாக அதுதான் உலகத்தில் என்னுடைய கடைசித் தினமாக இருக்கும் என்ற ஒரே நினைப்புத்தான் என் மனத்தை ஆக்கிரமித்திருக்கும். போர் முடிந்த பிறகுகூட வெற்றியோ தோல்வியோ அதைப் பற்றித்தான் சிந்திக்கவும், விவாதிக்கவும் தோன்றும். செய்த கொலைகளைப் பற்றிய சிந்தனை எழாது. ஏனெனில் அது கொலை அல்ல. ஓர் அரசனின் தர்மம். ஆனால், இப்போது என் கண் முன்னால் நடைபெறும் ஒரு ரத்தக் களரியான காட்சிக்கு மௌன சாட்சியாக நின்றிருப்பதை எண்ணி வெட்கப்பட்டேன். இதைப் படிக்கிறபோது உங்களுக்கும் கஷ்டமாக இருக்கும். ஆகவே அதிகமாக நான் விவரிக்க விரும்பவில்லை.

"என்னம்மா, உன் புருஷனை எங்கேயும் காண வில்லையே? சும்மா பொய் சொன்னாயா?" என்று அந்தப் பெண்ணைக் கிண்டலாகக் கேட்டுக் கொண்டிருந்தார் அப்பாஜி.

"ஒருவேளை நாம் வருவதற்கு முன்பே பலி கொடுத்துவிட்டார்களோ என்னவோ" என்று திம்மராசு சொன்னதும் அந்தப் பெண் ஓவென்று அழலானாள்.

"அப்படியில்லை. கோழி, ஆடு, எருமை முதலிய எல்லாப் பலிகளையும் முடித்து விட்டுக் கடைசியாகத்தான் நரபலிக்கு வருவார்கள்" என்று ஒரு தளபதி சொல்லிக் கொண்டிருந்தபோது...

“அதோ! அதோ!” என்றாள் அந்த முஸல்மான் பெண் தன் அழுகையை நிறுத்திக் கொண்டு.

பார்த்தேன்.

கைக்கு விலங்கு போட்டுப் பத்துப் பன்னிரண்டு பேரை ஒரு கூடாரத்திலிருந்து வெளியே அழைத்து வந்து கொண்டிருந்தார்கள்.

“அதோ என் கணவர்” என்றாள் அவள். யாரைச் சுட்டிக்காட்டுகிறாள் என்பது தெரியவில்லை. ஆனால் அவர்களில் கடைசியாக வந்தவள் ஒரு பெண்.

கண்களை கசக்கிக் கொண்டு உற்றுப் பார்த்தேன்.

ஆமாம்... அவளேதான்.

“காயத்ரியா!” என் வியப்பு உரக்க வெளிப்பட்டது.

அப்பாஜியும் சரி, மற்றவர்களும் சரி, அவளை அங்கே, அந்த நிலையில் எதிர்பார்க்காததால் வாயடைத்து நின்றார்கள்.

“சக்ரவர்த்தி... அவள் பெயர் எனக்குத் தெரியாது. ஆனால், அந்தப் பெண்தான் என்னைத் தங்களிடம் அனுப்பினாள்” என்றாள் கைதியின் மனைவி.

“எப்படி... ஏன்... காயத்ரி... இவள் எதனால் இவர்களிடம் சிக்கிக் கொண்டாள்...” என்று தடுமாறினேன்.

“என் புருஷனையும் மற்றக் கைதிகளையும் இவர்கள் இழுத்துக் கொண்டு போவதைப் பார்த்ததும் ஒரு காவலனிடம், ‘எங்கே அழைத்துப் போகிறீர்கள்?’ என்று கேட்டேன். ‘எல்லாரையும் நாகலாபுரம் ஏரியில் நரபலி கொடுக்கப் போகிறோம்’ என்றான். கதறிக் கொண்டு அதிகாரிகளைக் கெஞ்சினேன். மன்றாடினேன். அவர்கள் என்னை எட்டி உதைத்துத் தள்ளிவிட்டுப் போய்க் கொண்டிருந்தார்கள். அப்போது அந்த வழியே வந்த இந்தப் பெண் எனக்குப் பரிந்துகொண்டு அவர்களிடம் பேசினாள்.

'நரபலி கொடுப்பதே தப்பு, அதுவும் கைதிகளைப் பலி கொடுக்கக் கூடாது' என்று வாதாடினாள். அதிகாரி களுக்குக் கோபம் வந்துவிட்டது. 'உன்னையும் சேர்த்தே பலி கொடுக்கிறோம். வா' என்று இழுத்துக் கொண்டு போனார்கள். அப்போது அவள் என்னிடம், 'நீ நேரே அரண்மனைக்கு ஓடி, சக்ரவர்த்தியிடம் சொல்லு. அவர் வருவார் அல்லது யாரையேனும் அனுப்புவார்' என்றாள். அதனால்தான் நான் வந்தேன்..."

அழுதுகொண்டே அவள் சொல்லச் சொல்ல, நான் சரசரவென்று குன்றின் மீதிருந்து இறங்கினேன், ஏரியை நோக்கி.

# 11

குன்றின் உச்சியிலிருந்து இறங்கி, குதிரையை ஒரு காவலனிடம் ஒப்படைத்த பின், நேரே காயத்ரியின் முன்னே போய் நின்றபோது எனக்கே ஆச்சரியம் தாளவில்லை.

அடையாளமே தெரியாமல் அவள் முகம் மாறி யிருந்தது. பலி கொடுக்கப் படவிருக்கும் ஆடு மாடுகளுக்குச் செய்திருந்த மாதிரியே, அவள் முகத்தின் மீதும் தலையின் மேலும் மஞ்சள் நீரும் குங்கும நீரும் தெளித்திருந்தார்கள்.

ஏரி வெட்டுவதில் ஈடுபட்டிருந்த அதிகாரிகளும் பலி கொடுப்பதற்காகப் பட்டாக்கத்தியைக் கல்லில் தீட்டிக் கொண்டிருந்த ஆட்களும் பூசாரிகளும் அவர்களுடைய உதவியாளர்களும் பறையடித்துக் கொண்டிருந்த நபர்களும் என்னைக் கண்டவுடன் ஓவியத்தில் தீட்டப்பட்ட உருவங்கள் போல, பாறையில் வடித்த சிற்பங்கள் போல ஒரு விநாடி அப்படியப்படியே அசைவின்றி நின்றார்கள். அடுத்த விநாடி நெடுஞ்சாண்கிடையாக என் காலில் விழுந்தார்கள். பலியாகவிருந்த கைதிகள், “சக்ரவர்த்தி... எங்களைக் காப்பாற்றுங்கள்! எங்களைக் காப்பாற்றுங்கள்!” என்று பெருங்குரலெடுத்துக் கூவிக் கொண்டு, கையிலும் காலிலும் சங்கிலி மாட்டப்பட்டிருந்த போதிலும் தாறுமாறாக விழுந்து வணங்கினார்கள்.

அந்த முஸல்மான் பெண்ணைப் பார்த்தேன்.

சுற்றிலும் இவ்வளவு பேர் இருப்பதை மறந்து, வெட்கத்தைத் துறந்து, கைகளையே மாலையாக்கி தன்

கணவனைக் கட்டிக்கொண்டு விம்மினாள். அவனால் அவளை அணைத்துக்கொள்ள முடியவில்லை. கையிலிருந்த விலங்கு தடுத்தது. எனவே, இரண்டு கைகளையும் சேர்த்து அவள் முகத்தை வருடினான்.

"விலங்குகளையும் சங்கிலிகளையும் அகற்றுங்கள் என்று உத்தரவிட்டு வாக்கியத்தை முடிக்கும் முன்பே, அதிகாரிகள் அந்தக் காரியத்தை நிறைவேற்றிவிட்டார்கள். கைவிலங்குகளும் கால்சங்கிலிகளும் அகற்றப்படும் ஓசை கடகடவென்று கேட்டது.

இவ்வளவுக்கும் நடுவே காயத்ரி மௌனமாகவே இருந்தாள். என் காலில் விழவுமில்லை. 'என்னைக் காப்பாற்றுங்கள்' என்று கெஞ்சவுமில்லை.

என் உத்தரியத்தைக் கொடுத்து, "முகத்தைத் துடைத்துக் கொள்!" என்றேன்.

"ஒரு சக்ரவர்த்தி செய்கிற காரியமா இது!" என்று அப்பாஜியும் மற்ற அமைச்சர்களும், அதிகாரிகளும் அதிர்ந்துபோவது எனக்கு நன்றாகத் தெரிந்தது. நான் லட்சியம் செய்யவில்லை.

சரிகைக் கரை பேஊட்ட பட்டு அங்கவஸ்திரத்தினால் காயத்ரி தன் முகத்தைத் துடைத்துக் கொண்டாள். தூசு நீங்கிய கண்ணாடி போல அவள் முகம் பளபளவென்று சுத்தமாயிற்று.

"வாளெடுத்துப் போரிடத் தெரியும், வில்லெடுத்து வீழ்த்தத் தெரியும் என்றெல்லாம் அளந்தாயே... ஜகன்னாத பிரபு உன்னைக் காப்பாற்றுவார் என்றாயே...!, கடைசியில் இந்தக் கிருஷ்ணதேவராய பிரபு வந்துதான் உன்னைக் காப்பாற்ற வேண்டியிருந்தது..." என்றேன்.

"என்னை நானே காப்பாற்றிக்கொள்ள விரும்ப வில்லை சக்ரவர்த்தி... என்றாள் காயத்ரி. "இந்த நரபலி

சமாசாரங்கள் தங்களுக்குத் தெரிய வேண்டும் என்பதற்காக, நானாகவே இவர்களை வம்புக்கிழுத்துச் சிக்கிக்கொண்டேன். செய்தி அறிந்ததும் சக்ரவர்த்தி வருவீர்கள் என்று எனக்குத் தெரியும். இந்த அக்கிரமமான பலி பற்றித் தங்களுக்கு எப்படிச் செய்தி அனுப்புவது என்று யோசித்துக் கொண்டிருந்த சமயம், இந்த முஸல்மான் பெண் வந்து சேர்ந்தாள்... என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, அப்பாஜி கோபத்துடன் குறுக்கிட்டார். " இந்தா பெண்ணே, வார்த்தையை அளந்து பேசு! எந்தப் பலி அக்கிரமம், எந்தப் பலி கிரமம் என்பதை நீ சொல்லி நானோ, சக்ரவர்த்தியோ தெரிந்துகொள்ளத் தேவையில்லை. ராத்திரியோடு ராத்திரியாக நீ தலைநகரை விட்டுப் புறப்பட்டாயே. அது எதற்கு என்று சொல்லு..." என்றார்.

"நான் ராஜகாரியமாகப் புறப்பட்டேன் மகா பிரதானி..." என்றாள் காயத்ரி.

அப்பாஜி என் முகத்தைப் பார்த்தார். 'பிறகு சொல்கிறேன்' என்பது போல மௌனமாகத் தலை யசைத்தேன் நான். எனக்கும் எங்கிருந்தோ வந்த இந்தப் பெண்ணுக்குமிடையே அப்படியோர் அந்தரங்கம் இருப்பதை அப்பாஜியால் ஜீரணித்துக்கொள்ள முடிய வில்லை எல்லாருக்கும் எதிரில் சிறுமைப்படுத்தப் பட்டுவிட்டோம் என்ற அவமானம் அவர் முகத்தில் படர்வதைக் கவனித்தேன். ஆயினும் என்னால் எதுவும் சொல்ல இயலவில்லை.

காயத்ரியை அப்படிச் சுலபமாக விட்டுவிடக்கூடா தென்று நினைத்த அப்பாஜி, "உன்னுடன் அந்த இத்தாலிய வைத்தியனை அழைத்துக்கொண்டு புறப்பட்டாயே, அந்த ஆள் எங்கே...?" என்றார்.

"நான் அழைத்துப் போகவில்லை. மகாபிரதானி" என்றாள் காயத்ரி. "நான்பாட்டுக்கு நான் புறப்பட்டேன்.

அவர்பாட்டுக்கு அவர் புறப்பட்டார். இருவரும் சாலையில் சந்தித்தோம். 'தெற்கேயுள்ள பட்டணங்களைப் பார்க்க வேண்டும்' என்றார். 'வாருங்கள் என்னுடன்' என்று அழைத்துக் கொண்டேன்..."

"நான் அப்போதே சொல்லவில்லை?" என்றார் அமைச்சர் அய்யப்பராசு.

அப்பாஜியின் கோபம் அதிகப்பட்டது. அய்யப்ப ராசுவை என்றைக்குமே அவருக்குப் பிடிக்காது.

"தங்களுடைய கூர்மதியும் முன் யோசனையும் இந்தச் சிறியேனுக்குக் கிடையாதுதான். ஒப்புக்கொள்கிறேன்... என்றவர், என்னை நோக்கி "நமது வைத்திய முறைகளை ஆராய வந்தவன் தலைநகரிலேயே தங்கியிருக்க வேண்டியதுதானே...? ஏன் வெளியூர்களுக்குப் போக வேண்டும்... அதுவும் ரகசியமாக...?" என்றார்.

"வைத்திய சாஸ்திரத்தை அறிந்தவர்கள் வெளியூர் களிலும் இருக்கலாமில்லையா...?" என்று அவருக்குப் பதிலளித்துவிட்டு, காயத்ரியிடம் "சரி, அவன் இப்போது எங்கே...?" என்றேன்.

"அதோ, கைதிகளின் வரிசையில் ஏழாவதாக நிற்கிறாரே...?" என்று சுட்டிக் காட்டினாள்.

நிமிர்ந்து பார்த்த எனக்குச் சிரிப்பதா, பரிதாபப் படுவதா என்று தெரியவில்லை.

நிக்கோலஸின் முகமெல்லாம் புழுதி படிந்து, தலைமுடி பரட்டையாக விரிந்து, உடையெங்கும் மஞ்சள், குங்குமம் தெளிக்கப்பட்டு...

இளைஞனானாலும் பயத்தினால் நிக்கோலஸின் உடம்பு நடுங்கிக் கொண்டிருந்தது. மரணத்தின் வாசலில் காலடி எடுத்து வைத்துவிட்டுத் திரும்பி வந்த எவனிடமும் இருக்கக்கூடிய பீதி அவனிடமும் தெரிந்தது.

"என்ன நடந்தது...?" என்ற கேள்விக்கு நிக்கோலஸ் ஏதோ முணுமுணுத்தான்.

"நான் சொல்கிறேன்... அவருடைய மொழி எனக்குத் தெரியும்..." என்று முன்வந்தாள் காயத்ரி. 'இவளுக்கிருக்கும் திறமைகளுக்குக் கணக்கே இல்லையா...?' என்று வியப்புடன் அவளைப் பார்த்தேன்.

காயத்ரி ஒரு குறும்புத்தனமான புன்னகையுடன் சொன்னாள்:

"முதலில் என்னை மட்டும்தான் அதிகாரிகள் பிடித்துக்கொண்டு போனார்கள். இவர் திரும்பித் தலைநகருக்குப் போகவேண்டியதுதானே...? போகாமல், எனக்காக இவர்களிடம் சண்டை போட்டார். இவர்களுக்கு இவருடைய மொழியும் புரியவில்லை... இவர் யாரென்பதும் தெரியவில்லை. என்னோடு சேர்த்து இவரும் சிறைப்பட்டு விட்டார், பாவம்..." என்று அவள் விளக்கியதும்...

அமைச்சர் அய்யப்பராசுவிடம், "இந்தக் கைதிகளை விடுவித்து, அவரவர் ஊர்களுக்கு அனுப்பிவைக்க ஏற்பாடு செய்யுங்கள்..." என்றேன்.

"நாங்கள் உத்தரவு வாங்கிக் கொள்கிறோம்... என்றாள் காயத்ரி. நிக்கோலஸும் கைகுவித்தான். அவன் கண்கள் பனித்திருந்தன. காயத்ரியைச் சுட்டிக்காட்டி ஏதோ சொன்னான். 'இவள் மட்டும் இல்லையென்றால், என் உயிர் போயிருக்கும்' என்று அவன் சொல்ல முயற்சிப்பதைப் புரிந்துகொண்டேன்.

"இவர்களுக்கு உணவு, உடை, வசதிகள் செய்து கொடுத்து அனுப்பி வையுங்கள்..." என்று அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டேன். "உனக்குத் துணையாகச் சில காவலர்களை அனுப்பட்டுமா...?" என்று மறுபடியும் கேட்டேன், காயத்ரியிடம்.

'சின்னா தேவியைப் பார்ப்பதற்காக நீ போகும் பகுதிகளில் சோழர்களுக்கும் பாண்டியர்களுக்கும் போர் நடந்து கொண்டிருக்கிறது' என்று எச்சரிக்க நினைத்தேன். அருகில் அப்பாஜி இருந்ததால், அதைச் சொல்ல முடியவில்லை.

"துணை எதுவும் வேண்டாம் சக்ரவர்த்தி... என்று கூறிவிட்டு, நிக்கோலஸுடன் நடந்தாள் அவள்.

'மிச்சமுள்ள வழியில் இவளுக்கு என்ன ஆபத் தெல்லாம் ஏற்படப்போகிறதோ...?' என்று நான் திகில் கொண்டேன்.

அவர்கள் போவதையே பார்த்துக் கொண்டிருந்த அப்பாஜி பொருமினார். "கேவலம் ஒரு பெண்... என்ன தைரியம்! எவனோ ஒரு பறங்கியனுடன், ஏதோ ஓர் ஊருக்குத் தன்னந்தனியே போகிறாள்! எங்கே போகிறாய் என்று கேட்டால், ராஜகாரியம் என்கிறாள்! ஹூம்... என்று கூறிவிட்டு, என் முகத்தைப் பார்த்தார்.

அது என்ன 'ராஜகாரியம்' என்பதை இப்போதாவது நான் சொல்வேனென்று அவர் எதிர்பார்ப்பது புரிந்தது. நான் சொல்லவில்லை. 'சின்னாதேவியை மீட்டு வருவதற்காக ஸ்ரீவில்லிபுத்தூருக்குப் போக வேண்டியவள், இப்படி நடுவழியில் தாமதப்பட்டாளே...' என்ற எண்ணம்தான் என் மனத்தில் மேலோங்கியிருந்தது.

ஏரி வெட்டும் ஆட்களும் அதிகாரிகளும் அப்படி யப்படியே நின்றிருந்தார்கள், என்னுடைய அடுத்த கட்டளையை எதிர்பார்த்து.

கோவாவுக்கு ஆள் அனுப்பி, போர்த்துகீசிய பொறியியல் நிபுணர்களை வரவழைத்து ஏரி வெட்டும் வேலையை ஒப்படைக்கும்படி சொல்லிவிட்டு, "இந்த நரபலி சமாசாரம் இனிமேல் இங்கு மட்டுமல்ல,

சாம்ராஜ்யத்தில் எங்கேயுமே நடக்கக்கூடாது... என்று உத்தரவிட்டேன்.

அப்பாஜி மெதுவாகச் சிரிப்பது கேட்டது. வேறொன்றும் சொல்லவில்லை. மக்களின் சில பழக்க வழக்கங்களைக் காலம்தான் மாற்றவேண்டுமே தவிர, சக்ரவர்த்தியின் ஆணைகளினால் மாற்ற முடியாது என்பதை அறிந்திருந்த அனுபவசாலி அவர்.

தலைநகருக்குத் திரும்பும்போது பொழுது புலர்ந்து கொண்டிருந்தது. தூரத்தில் ஒரு சிற்றூரில் தேர்த்திருவிழா நடைபெற்றுக் கொண்டிருப்பது தெரிந்தது.

"அந்த வழியில் போக வேண்டாம்... மக்கள் சூழ்ந்து கொள்வார்கள்..." என்று எச்சரித்த அப்பாஜி, வேறு சாலையில் திரும்பினார். நானும் மற்றவர்களும் அவரைப் பின்தொடர்ந்தோம்.

குதிரையை என் பக்கமாகவே செலுத்தியவாறு வந்து கொண்டிருந்த அப்பாஜி, "நல்லகாலம், தங்களுடைய அபிமான புத்திரி இந்தத் தேர்த் திருவிழாவுக்கு வரவில்லை!" என்றார்.

"காயத்ரியைச் சொல்கிறீர்களா...? அவளை என் புத்திரி ஸ்தானத்துக்கு உயர்த்தியதற்கு ரொம்ப சந்தோஷம்..." என்றேன். "அவள் இங்கே வந்திருந்தால் என்ன ஆகியிருக்கும்...?" என்று கேட்டேன்.

"நாட்டின் பழக்கவழக்கங்களை மாற்றுவதற்காகவே அவதாரம் எடுத்திருப்பவளாயிற்றே அவள்!" என்று பரிகாசமாகச் சிரித்தார். "இந்த ரதோற்சவத்தைப் பார்த்தால் அமளி பண்ணிவிடுவாள்!"

"ஏன்... அங்கேயும் நரபலியா...?" என்றேன்.

"நரபலியல்ல... ஆத்மஹத்தி! தற்கொலை....

"விளங்கவில்லையே... என்றேன்.

"தேர் இழுக்கப்படும்போது சிலர் குறுக்கே விழுந்து, தேர்க்காலில் உயிரை விடுவார்கள். அப்படி உயிர் துறந்தால், தங்களுடைய பிரார்த்தனை நிறைவேறும் என்பதும் நேரே சொர்க்கத்தை அடையலாம் என்பதும் அவர்களுடைய நம்பிக்கை. இந்த வழக்கத்தையும் மாற்ற வேண்டும் என்று அந்தப் பெண் தங்களிடம் விண்ணப்பம் செய்திருப்பாள்!"

"இன்னும் இரண்டு, மூன்று நூற்றாண்டுகள் கழித்துப் பிறந்திருக்க வேண்டியவள் அவள்..." என்றேன் நான். "அப்போது ஜனங்களின் மனத்தில் மாறுதல் ஏற்பட்டிருக்கும். அவள் சொல்வதை ஏற்றுக் கொள்வார்கள். இப்போது சொன்னால் பைத்தியக்காரத் தனமாகத்தான் இருக்கும்..." என்று தொடர்ந்து சொன்ன போது, அப்பாஜி லேசாக முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

ஒவ்வொரு கட்டத்திலும் காயத்ரிக்காக நான் பரிந்து பேசுவது அவருக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. நானும் அதைப் பொருட்படுத்தவில்லை. என் நினைப்பெல்லாம் காயத்ரியின் பயணத்தைக் குறித்தும், அந்தப் பயணத்தின் முடிவில் அவள் சந்திக்கப்போகும் சின்னாதேவியைக் குறித்தும் சுற்றிக் கொண்டிருந்தது.

**கா**லம் ஒரு காட்டுக் குதிரை. அதன் பாய்ச்சலைப் பிடித்து நிறுத்த யாருக்கும் ஆற்றல் கிடையாது.

இதையெல்லாம் நான் எழுதிக் கொண்டிருக்கும் போது, போர்களும் சமாதானங்களும் உடன்படிக்கைகளும் வெற்றிகளும் தோல்விகளும் ஒருபுறம் நிகழ்ந்து கொண்டுதான் இருந்தன. ஆனால், நான் பலவற்றைச் சொல்லவில்லை.

வடபாரதத்தில் டெல்லிப் பட்டணத்தைக் கைப்பற்ற முனைந்த பாபர், துல்குமா என்கிற போர் முறையை

உஸ்பெக்காரர்களிடமும், பீரங்கிப் போர்முறையை மங்கோலியர்களிடமும், துப்பாக்கி சுடும் முறையை ஆப்கானியர்களிடமும், அம்பு எறியும் முறையைப் பாரசீகர்களிடமும், குதிரைப்படையை நடத்திச் செல்லும் முறையைத் துருக்கியர்களிடமும் கற்று, வெற்றி வீரனாகத் திகழ்வதாகக் கேள்விப்பட்டு, நானும் அவ்வண்ணமே விஜயநகர ராணுவத்தைச் சீரமைக்க முயன்றதைச் சொல்லவில்லை.

விஜயபுரம் சுல்தானான ஆதில்ஷாவும் கோல்கொண்டா சுல்தானான குதுப்ஷாவும் அகமதுநகர் சுல்தானான நிஜாம் ஷாவும், பிதார் சுல்தானான பரீத்ஷாவும் பேரார் சுல்தானான இமதுஷாவும் ஒருவர் மாற்றி ஒருவர் என்னிடம் உதவி கேட்டுக் கொண்டிருந்த தையும் நான் அப்பாஜியின் யோசனைப்படி மித்திர பேதம் செய்து கொண்டிருந்ததையும் சொல்லவில்லை.

ஏனெனில், அந்த விவரங்கள் எப்படியும் சரித்தி ரத்தின் மூலம் உங்களுக்கு எட்டுவது நிச்சயம். கல்வெட்டுகள் கூறும்; செப்பேடுகள் செப்பும்; வெளிநாட்டிலிருந்து வருகிற வரலாற்று ஆசிரியர்கள் வரிந்து வரிந்து எழுதுவார்கள்.

ஆனால், என் சொந்தக் கதையைச் சொல்லத்தான் யாரும் இருக்க மாட்டார்கள். என் கனவுகளையும், ஏக்கங்களையும், ஆசைகளையும், சோகத்தையும், காதலையும், வேதனையையும் யார் சொல்லப் போகிறார்கள் எதிர்காலத்தில்...? அதனால்தான் சரித்திர நிகழ்ச்சிகளைக் கொஞ்சமாகவும் என் ஆதங்கங்களை அதிகமாகவும் எழுதி வருகிறேன்.

**வ**சந்தோற்சவம் வந்தது.

மரங்களும் செடிகளும் கொடிகளும் பூக்களைப் பெற்றெடுத்துத் தென்றலில் தாலாட்டின. நகருக்கு வெளியே

பிரம்மாண்டமான மைதானத்தில் பந்தல்கள் போடப் பட்டு, நான் எழுதிய 'ஜாம்பவதி பரிணயம்' நாடகமாக நடத்தப் படவிருந்தது.

அதில் கலந்துகொள்வதற்காக, யானை மீது அம்பாரி வைத்து நான் பவனி புறப்பட்டேன். தெருக்களின் ஓரங்களில் ஆண்களும் பெண்களும் முதியோரும் குழந்தைகளும் ஜெயகோஷம் எழுப்பி வாழ்த்துக் கூறினார்கள். குதிரைப்படைக்குத் தலைமை தாங்கி ஒரு முசல்மான் தளபதி முன்னே செல்ல, ஒட்டகங்களின்மீது ஆரோகணித்துக் கொம்பு ஊதுவோரும் முரசு அறை வோரும் சென்றனர். பட்டுத் துணிகளில் பதாகைகள் தூக்கிப் பிடிக்கப்பட்டுக் கொடிகள் கம்பீரமாகப் பறந்தன. குமரிகள் கும்மியடித்துக்கொண்டு விரைந்தார்கள். முத்துமணிப் பல்லக்கில் அரச குடும்பத்துப் பெண்கள் வர, இரு புறமும் பணிப்பெண்கள் சாமரம் வீச, வெண்ணிறக் குடைகள் ஆங்காங்கே விரிந்து அசைய...

அம்பாரியில் 'திண்டு சரியில்லையே... என்று எண்ணியவண்ணம் நான் நகர்ந்து உட்கார முனைந்த போது...

தெருவின் ஓரமாக அல்லஸானி பெத்தண்ணா நடந்து போவதைக் கண்டேன். மகாகவி ஸ்ரீநாதரின் அடிச்சுவட்டில் நடைபோட்டவர், மொழிபெயர்ப்பு நூல்கள்தான் தெலுங்கு இலக்கியம் என்றிருந்த நிலையை மாற்றிய பெரும் புலவர் அவர். அதுவரை தெலுங்குக் கவிதைகளில் இருந்துவந்த சம்ஸ்கிருதத்தின் ஆதிக்கத்தை நீக்கி, ஒரு புரட்சியைத் துவக்கி வைத்தது அவர் எழுதிய 'மனுசரித்திரம்'. அப்படிப்பட்ட என் ஆஸ்தானக் கவிராயர் இப்படிக் கால்நடையாக நடந்து போவதா...? எனக்கு மனம் பொறுக்கவில்லை.

"நிறுத்து... என்று மாவுத்தனுக்குக் கட்டளையிட்டு, "கவியரசே! என்னுடன் ஏறிக்கொள்ளுங்கள்... என்றேன்.

மாவுத்தன் சொற்படி யானை மண்டியிட்டுக் குனிந்தது. பதறிப்போனார் பெத்தண்ணா. "சக்ரவர்த்தி! தங்களுக்குச் சமமாக நான் யானைமீது உட்காருவதா...?" என்று பதைத்தார்.

"சொல்லப்போனால் தாங்கள யானை மீது செல்வதும் நான் நடந்து போவதும் தான் நியாயம். தயவுசெய்து என்னுடன் வாருங்கள். எனக்கு அது பெருமை!" என்று நான் வற்புறுத்தியபின், அரைமனதாக ஏறிக்கொண்டார். கூட்டத்தில் பலருக்கு ஆச்சரியம். சிலருக்குப் பொறாமை.

ஊர்வலம் நகர்ந்தது.

கவியரங்கக் கூட்டங்களில் எப்போதும் கலகலப் பாகச் சிரித்த முகத்துடன் இருக்கும் அல்லஸானி பெத்தண்ணா, அன்று ஏனோ வாட்டத்துடன் இருந்தார்.

"குடை பிடித்துச் செல்லவும் பல்லக்கில் போகவும் தங்களுக்கு உரிமைகள் வழங்கப்பட்டிருக்கிறதே...? அப்படியிருந்தும் ஏன் நடந்து செல்கிறீர்கள்...?" என்று மெதுவே கேட்டேன்.

"என்னவோ மனசுக்கு வெறுப்பாக இருந்தது..." என்று சொல்லிவிட்டுச் சிறிது நேரம் பேசாமல் இருந்தார் பெத்தண்ணா, அவராகச் சொல்லட்டும் என்று காத்திருந்தேன்.

"சங்குகால நரசிம்மர் என்று ஒரு கவிஞர்... என்று தாமாகவே சொல்லத் தொடங்கினார் பெத்தண்ணா. "அவர் இயற்றிய 'கவிகர்ண ரசாயனம்' என்ற நூலைத் தங்கள் பார்வைக்கு அனுப்பினேனே, வந்ததா,,,?"

"வந்ததே, பார்த்தேனே... என்று நான் சொன்ன வுடன், "அப்பாடா... பிழைத்தேன்!" என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டார் பெத்தண்ணா.

“ஏன், என்ன பிரசினை அதில்...? என்று கேட்டேன்.

“அந்த நூல் தங்கள் பார்வைக்குப் போகாதபடி நான் தான் தடுத்துக் கொண்டிருக்கிறேனாம்... அதைத் தாங்கள் பார்வையிட்டால், என்னை ஆஸ்தானக் கவி பதவியிலிருந்து நீக்கிவிட்டு, அவரை நியமித்துவிடுவீர்கள் என்று எனக்குப் பயமாம்! அந்தக் கவிஞர் ஊர் பூரா சொல்லிக் கொண்டிருக்கிறார்...”

கடகடவென்று சிரித்துவிட்டேன். புலவர்களுக்குக் கூட எத்தனை விசித்திரமான பிரசினைகள்!

“கவியரசே! கவலைப்படாதீர்கள்... அது ஒரு சுமாரான நூல். உங்கள் படைப்புகளுக்கு உறைபோடக் காணாது!” என்று சொல்லிவிட்டு, “இப்படிப்பட்ட அவதூறுகள் இலக்கிய உலகத்தில் சகஜம். நான் கஷ்டப்பட்டு, சொந்தமாக இயற்றிய ‘பாரிஜாத பரிணய’த்தை நீங்கள்தான் எழுதிக் கொடுத்ததாயும், அதை என் பெயரில் நான் வெளியிட்டுக் கொண்டேன் என்றும்கூடச் சொல்கிறார்கள்!” என்றேன்.

அல்லஸானி பெத்தண்ணா முதல் முறையாகச் சிரித்து, “தாங்களெங்கே, நானெங்கே...?” என்று சொல்லிக் கொண்டிருக்கும்போது, எங்கள் பவனி விட்டலஸ்வாமி கோயிலைக் கடந்து கொண்டிருந்தது.

அந்த இடத்தைப் பார்த்ததுமே என் உள்ளம் படபடக்கத் தொடங்கிவிட்டது. அதையறியாத பெத்தண்ணா, “போன மாதம் பூரா இந்தக் கோயிலில் ஒரு தேவதாசி நாட்டியமாடினாள். ஒருநாள் நானும் போயிருந்தேன். ஆகா... அற்புதமான அழகி! அற்புதமான நாட்டியம்!” என்றார்.

என் இதயத் துடிப்பு கவிஞருக்குக் கேட்டுவிடுமோ என்று பயந்தேன். அதை மறைத்துக்கொண்டு, “அப்படியா... அவள் பெயர் என்ன...?” என்றேன்.

“சின்னாதேவி என்று சொன்னார்கள்... அவளுடன் அவள் அண்ணன் ஒருவன் இருந்தான். எதிராஜன் என்று பெயர். கண்கொத்திப் பாம்பு மாதிரி அவளுக்குக் காவலாக இருக்கிறவன்...”

“அப்படியா...?!” என்றேன் மறுபடியும்.

“நாட்டிய நிகழ்ச்சி முடிந்ததும் அந்தப் பெண்ணைப் பாராட்டினேன். எதிராஜனிடம் ‘சக்ரவர்த்தியின் முன்னால் ஒருநாள் உன் தங்கை ஆட வரவேண்டும்’ என்று அழைத்தேன். தங்களைக் கேட்காமல் அழைத்து விட்டேன்...”

“அதனாலென்ன... என் சந்தோஷத்துக்காகத்தானே அழைத்தீர்கள்...?” என்றேன். “அப்புறம்...?”

“அந்த எதிராஜனின் முகத்தில் வெடித்ததே பார்க்க வேண்டும் ஒரு கோபம்! ‘நாங்கள் கோயிலுக்குக் கட்டுப்பட்டவர்கள். எந்தத் தனிப்பட்டவர் வீட்டுக்கும் வரமாட்டோம்! வரச் சொல்லவும் முடியாது. அந்தத் தைரியத்தில்தான் என் தங்கையை இங்கே அழைத்து வந்தேன்!’ என்றான். ‘சக்ரவர்த்தி அழைத்தால்கூட வரமாட்டாயா...?’ என்றேன். ‘மாட்டேன்! இந்த விஜயநகர அரச வம்சத்திடம் எங்கள் குடும்பத்தாருக்குத் தீராப்பழி! சக்ரவர்த்தியாக இருந்தாலென்ன...? சாம்ராஜ்ய அதிபதி யாக இருந்தாலென்ன...? அவர்கள் முகத்தில் விழிப்பதே பாவம்...’ என்று கோபமாகக் கத்தினான்...”

“அடேயப்பா! அப்படியென்ன வெறுப்பாம் அவனுக்கு...?” என்றேன்.

“நானும் அதைத்தானே கேட்டேன்...

“சொன்னானா...

“சொன்னான்... அது ஒரு கதை... என்றார் அல்லஸாணி பெத்தண்ணா.

அதற்குள் வசந்த மண்டபம் வந்து விட்டதால், பெத்தண்ணா இறங்கிக் கொண்டார். கூட்டத்தோடு கூட்டமாகக் கலந்து மறைந்தார்.

கேளிக்கைகள் ஆரம்பமாகின. கோலாகலங்கள் துவங்கின. வீர விளையாட்டுக்களும் ஆடலும், பாடலும், வாணவேடிக்கைகளும் தூள் எழுப்பின.

என் கண்களோ, கவிஞர் பெத்தண்ணாவையே தேடிக்கொண்டிருந்தன.

# 12

கவிஞர் அல்லஸானி பெத்தண்ணா அவசர அவசரமாக என்னிடம் விடைபெற்றுக்கொண்டு சென்றதன் காரணம் கொஞ்சநேரத்தில் புரிந்தது.

மகாபிரதானி அப்பாஜி என்னை நோக்கி வந்து கொண்டிருந்தார். அவரிடம் அல்லஸானிக்குப் பயம்!

ஒரு பிரதம மந்திரிக்கு இருக்கக்கூடிய எவ்வளவோ அலுவல்களுக்கிடையே நூல்களும் இயற்றியவர் அப்பாஜி. அகஸ்தியர் எழுதிய பாலபாரதம் என்ற நூலுக்கு வியாக்கியானம் எழுதியிருக்கிறார். 'அஷ்ட திக்கஜங்கள்' என்று புகழ்பெற்ற எனது எட்டு ஆஸ்தானக் கவிஞர்களின் கூட்டங்களுக்கு அப்பாஜிதான் தலைமை தாங்குவார்.

இங்கே ஒரு விஷயம் சொல்லவேண்டும்.

இந்த 'எட்டுக் கவிஞர் கணக்கு' எப்படி வந்ததென்பது எனக்கு எப்போதுமே ஒரு மர்மம். ஏனெனில் எட்டுப் பேரையும் நான் ஒருசேரக் கண்டது கிடையாது. அல்லஸானி பெத்தண்ணா, நந்தி திம்மண்ணா, துர்ஜதி, தெனாலி ராமகிருஷ்ணா ஆகியோரை மட்டும் அடிக்கடி சந்தித்துப் பேசியிருக்கிறேன். வேறு பலரும் வருவார்கள்... போவார்கள். இவர்களில் யார் யாரைக் கொண்டது இந்த 'அஷ்ட திக்கஜங்கள்' என்று எனக்குத் தெரியவில்லை. என் அபிமானிகள் எனக்குப் பெருமை தருவதற்காகவே கற்பனையாகச் சிருஷ்டித்து வைத்திருக்கிறார்களோ என்றுகூடச் சிலசமயம் சந்தேகிப்பேன். மாபெரும் சக்ரவர்த்தியாகத் திகழ்ந்த சந்திரகுப்தருக்கு என்ன

வெல்லாம் பெருமைகள் இருந்தனவோ, அதெல்லாம் எனக்கும் இருக்கவேண்டும் என்பது இவர்களுடைய விருப்பம். அதற்காக, அவர் வைத்திருந்த விருதுகளை யெல்லாம் எனக்கும் சூட்டி மகிழ்ந்தார்கள். அவருடைய அரசவையில் காளிதாஸன், பவபூதி, பட்டபாணன் முதலிய எட்டுக் கவிஞர்கள் இருந்தது போலவே எனக்கும் இருக்கவேண்டுமென்பது இவர்களுடைய ஆசை.

அது நிற்க, பிரதம மந்திரியான அப்பாஜியை ஒரு நாளும் எனக்குச் சரிசமமாக யானைமீது அம்பாரியில் ஏற்றிக்கொண்டது கிடையவே கிடையாது. அல்லஸானியை ஏற்றிக்கொண்ட அந்தக் காட்சி அப்பாஜியின் கண்களை உறுத்தியிருக்கும். ஏதாவது கேலி செய்யப்போகிறாரே என்றுதான் அல்லஸானி திடீரென்று காணாமல் போனார். ஆனால், அல்லஸானி பற்றிப் பேச்சே எடுக்கவில்லை அப்பாஜி.

"சக்ரவர்த்தியிடம் ஒரு தகவல் சொல்லத்தான் வந்தேன்" என்றார்.

"சொல்லுங்களேன்" என்றேன்.

"திருப்பதி திருமலையில் சக்ரவர்த்தியின் வெண்கலச் சிலையை வைக்க வேண்டுமென்று கோயில் நிர்வாகிகள் விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள். தங்களை நேரில் பார்த்து அளவு முதலானது எடுத்துக் கொள்வதற்காகச் சில சிற்பிகளை அனுப்பியிருக்கிறார்கள்" என்றார் முதல மைச்சர்.

"அந்தச் சிற்பிகளை வேறொரு சமயம் வரச் சொல்லுங்கள்" என்றேன்.

ஏமாற்றத்துடன் அப்பாஜி திரும்பிச் சென்றதும், பக்கத்தில் இருந்த ஒரு சேவகனிடம், "கவிஞர் அல்லஸானி பெத்தண்ணா இந்தக் கூட்டத்தில்தான் எங்கோ

இருக்கிறார். தேடிப் பிடித்து அழைத்து வா" என்று உத்தரவிட்டேன்.

சற்றைக்கெல்லாம் அல்லஸானி திரும்பி வந்தார். "எங்கே திடீரெனக் காணாமல் போய்விட்டீர்கள்? எதிராஜன் விஷயத்தைச் சொல்லுங்கள், கேட்க ஆவலாயிருக்கிறேன்" என்றேன்.

கவிஞர் அல்லஸானி, பெத்தண்ணா சொன்ன விஷயத்தை இங்கே நான் என் மொழியாக ஏற்கெனவே எனக்குத் தெரிந்திருந்த மற்ற விவரங்களையும் சேர்த்துச் சொல்கிறேன்.

சிருங்கேரி மடத்தின் அதிபதியாக இருந்த வித்யாரண்யர், நாட்டின் அவல நிலையை ஒரு நாள் கண்டு, மனம் வருந்தி, தன் தவ வலிமையினால் பொன்மாரி பெய்யச் செய்து, ராஜ்யத்தை யாரிடம் ஒப்படைக்கலாம் என்று யோசித்து, துங்கபத்திரையின் கரையில் ஒரு குகையில் தவம் செய்த காலத்தில் தினம் தினம் தனக்குப் பால் கொண்டுவந்த புக்கர் என்ற யாதவ இளைஞரைத் தேர்ந்தெடுத்து அவருக்கு முடிசூட்டியதாகச் சொல் கிறார்கள்.

விஜயநகரப் பேரரசின் முதல் ராஜவம்சமாக, சங்கமர்களின் ஆட்சிக் காலம் தொடங்கியது. இவ்வாறு தானென்பது பொதுவான கருத்து. அதை மறுப்போரும் உண்டு.

ஹரிஹரர், புக்கர் என்ற இரண்டு சகோதரர்களும் ஒரு மொகலாய மன்னரின் கீழே தளபதிகளாக இருந்தார்களென்றும், முஸல்மான்களாக மாற்றப்பட்டிருந்த அவர்கள், படையெடுப்புக்காகத் தெற்கே வந்தபோது, வித்யாரண்யரால் மறுபடி இந்துக்களாக மாற்றப்பட்டனர் என்றும், ஆனகொண்டி என்ற ஊரில் ஒரு வேட்டை நாயை

ஒரு முயல் துரத்துவதைப் பார்த்து, அத்தகைய வீர பூமிதான் தங்களுக்கு ஏற்ற இடம் என்று தேர்ந்தெடுத்து, அதையே தங்கள் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தார்களென்றும், அதுதான் சங்கம ஆட்சியின் ஆரம்பம் என்று சிலர் சொல்லியிருக்கிறார்கள்.

எது எப்படியானாலும் புக்கர், ஹரிஹரர் காலம் முடிந்து, அதன்பிறகு மூன்று அரசர்களின் ஆட்சி முடிந்து, இம்மாடி தேவராயர் ஆண்ட சமயம்தான் நான் சொல்லப்போகும் சம்பவம் நடைபெற்றது. அதாவது கிட்டத்தட்ட நூறு வருடங்களுக்கு முன்பு...

இம்மாடி தேவராயர் ஒரு மகத்தான மன்னர், அவருடைய ஆட்சிதான் விஜயநகரப் பேரரசின் பொற்காலம் என்றுகூடச் சொல்வேன். ராஜாதி ராஜ வீரப் பிரதாப தேவராயர் என்று அவரை அழைப்பார்கள். குல்பர்காமீது படையெடுத்து, சுல்தான் அலாவுதீனை முறியடித்தவர் அவர். அங்க, வங்க, கலிங்க, கானோஜ், காம்போஜ, நேபாள மன்னர்கள் தேவராயருக்குக் கப்பம் கட்டினார்கள். ஒரு மன்னர் அவருக்குக் குடை பிடித்தார். ஒரு மன்னர் அவருக்குச் சாமரம் வீசினார். ஒரு மன்னர் அவருக்கு வெற்றிலை மடித்துக் கொடுத்தார்.

அரசவைக்கு வருகை தரும் முஸல்மான் தளபதிகளும் பெரியவர்களும் தமக்குத் தலைகுனிந்து வணக்கம் செலுத்த இஷ்டப்படவில்லை என்பதை ஒருமுறை தேவராயர் கண்டார். அவர்களுடைய மத உணர்வைப் புரிந்து கொண்டார்.

உடனே, முத்துமணி ரத்தினங்கள் இழைத்த அருமையான ஆசனமொன்றைச் செய்யச் சொல்லி, அதன்மீது திருக் குர் ஆன். நூலை வைக்கும்படி ஏற்பாடு செய்தார். அந்த ஆசனத்தைத் தமது சிம்மாசனத்துக்கு முன்னே வைத்து, முஸல்மான்கள் அதற்கு மரியாதை

தெரிவித்தால் போதும் என்று அறிவித்தார். பல முஸல்மான் தளபதிகளுக்கு ஜாகிர்கள் வழங்கினார்.

இப்படி எட்டுத் திக்கிலும் கொடிகட்டிப் பறந்த இம்மாடி தேவராயருக்கு, உடன்பிறந்தே கொல்லும் வியாதி போல ஒரு பகைவன் இருந்தான். அவருடைய அக்காவான ஹரிமாவின் பிள்ளை விக்ரமன்தான் அவன். ராணுவத் தளபதியாக இருந்த மல்லண்ணா என்பவர் விக்ரமனுடைய நெருங்கிய தோழர். அரசாங்கக் காரியமாக மல்லண்ணா இலங்கைக்குச் சென்றிருந்தார். அப்போது அவருக்குத் திருமணமாகிச் சில மாதங்கள்தான் ஆகியிருந்தன.

தக்க சமயத்துக்காகத் திட்டமிட்டுக் காத்திருந்தான் விக்ரமன். ஆனகொண்டி நகரத்தில் அவன் தனக்கென ஒரு மாளிகை கட்டிக் கொண்டான். நோக்கும் திசையெல்லாம் நவரத்தினங்கள் இழைக்கப்பட்டு, மயனால் சிருஷ்டிக்கப் பட்ட தேவலோகம் போல விளங்கியது. அந்த அரண்மனை. முன்புறம் அத்தாணி மண்டபமொன்றும் அழகாகக் கட்டினான்.

தேவராயரிடம் சென்று, "சக்ரவர்த்தி, என் மாளிகையின் திறப்பு விழாவுக்கும் விருந்துக்கும் தாங்கள் வருகை தரவேண்டும்" என்று வேண்டிக்கொண்டான்.

"விக்ரமா, நீகூட என்னைச் சக்ரவர்த்தி என்று கூப்பிடவேண்டுமா? மாமா என்றே சொல்லு" என்றார் தேவராயர்.

"அன்பு மிகுதியால் அப்படிச் சொல்கிறீர்கள். எனினும் அவ்வாறு முறை போட்டுக் கூப்பிடக்கூடிய தகுதியும் அறிவும் வயதும் எனக்குக் கிடையாது, சக்ரவர்த்தி" என்றான் விக்ரமன் போலிப் பணிவோடு.

"சரி, எப்போது வர வேண்டும்?" என்று தேவராயர் கேட்டார்.

“தலைநகரத்தில் உள்ள எல்லா முக்கியத் தளபதிகளையும் அமைச்சர்களையும் அழைத்திருக்கிறேன். அவர்களுக்காக விருந்து வைத்திருக்கிறேன்” என்றான் விக்ரமன்.

“என் முன்னிலையில் விருந்து உண்ணுவது அவர்களுக்குச் சங்கடமாக இருக்கும். ஆகையால் அவர்கள் எல்லாரும் வந்துவிட்டுப் போன பிறகு கடைசியாக என்னைக் கூப்பிடு, வருகிறேன்” என்று கூறி அவனை அனுப்பினார் இம்மாடி தேவராயர்.

உண்மையில் விக்ரமன் விருந்து எதுவும் தயார் செய்யவில்லை. எமனுக்கு விருந்து படைக்கத்தான் ஏற்பாடு செய்திருந்தான்.

அன்று ஊரிலுள்ள வாத்தியக்காரர்கள் அனைவரையும் தன் மாளிகைக்கு வரவழைத்து வைத்துக் கொண்டான். தாரையும் தப்பும் மேளமும் கொம்பும் எக்காளமும் ஒரே சமயத்தில் சத்தம் போட்டுப் பேரிரைச்சலை எழுப்பும்படி சொல்லியிருந்தான்.

எல்லாப் பிரமுகர்களும் அவனுடைய அரண்மனையின் முன்புறமுள்ள மண்டபத்தில் அமர்ந்திருந்தார்கள். சரியாசனத்தில் அமர்ந்து சமமாக விருந்து உண்பதென்பது அந்த நாளில் ஏன். என் நாளிலும்கூட கௌரவக் குறைவான காரியம். ஒவ்வொருவரையும் தனித்தனியே உள்ளே அழைத்துப் போய், தனித்தனியே விருந்து படைத்து அனுப்புவதுதான் சம்பிரதாயம்.

அதன்படி, கூடியிருந்தவர்களை ஒருவர் பின் ஒருவராக அழைத்தான் விக்ரமன்.

எந்தச் சந்தேகமும் கொள்ளாமல் ஒவ்வொருவராக எழுந்து அரண்மனைக்குள் சென்றார்கள். விருந்து மண்டபத்துக்குள் தனியாக நுழையும் ஒவ்வொருவரையும்

மறைவாக ஒளிந்திருந்த விக்ரமனின் காவலர்கள் வாளினால் ஒரே வெட்டாக வெட்டி வீழ்த்தினார்கள்.

இப்படி, காலையில் ஆரம்பித்த 'விருந்து' மாலை வரை நீடித்தது. நூற்றுக்கு மேற்பட்டவர்கள் சதிகாரத்தனமாக வெட்டி வீழ்த்தப்பட்டு இறந்து போனார்கள்.

இனி, சக்ரவர்த்திதான் பாக்கி!

விக்ரமன், தேவராயரின் அரண்மனைக்கு வந்து சேர்ந்தான். காவலுக்கு அங்கிருந்த எல்லா ஆட்களிடமும், "உங்களுக்கு என் மாளிகையில் விருந்து காத்திருக்கிறது. சீக்கிரம் போங்கள்... நேரமாகிறது!" என்றான்.

சக்ரவர்த்தியின் சொந்த மருமகனே சொல்லும்போது யாருக்குத்தான் சந்தேகம் வரும்? தயங்கிய ஒன்றிரண்டு பேரிடமும், "நான்தான் இருக்கிறேனே... சக்ரவர்த்தியைப் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் போங்கள்!" என்றான்.

அத்தனை காவலர்களும் அவன் பேச்சை நம்பிப் புறப்பட்டுச் சென்றார்கள். பாவம், விக்ரமனின் புது மாளிகையில் மற்ற விருந்தாளிகளுக்குக் கிட்டிய அதே முடிவுதான் இவர்களுக்கும் கிட்டியது.

மொத்தப் பேரும் படுகொலை!

அரண்மனையில் தனியாக இருந்த தேவராயரிடம் சென்றான் விக்ரமன். தட்டின் மேலே தாம்பூலம் வைத்துக் கொண்டு, தட்டின் கீழே ஒரு வாளை மறைத்து வைத்துக்கொண்டு, " சக்ரவர்த்தி, எல்லாரும் போயாயிற்று. இனிமேல் தாங்கள் எழுந்தருளலாம்" என்றான்.

'எல்லாரும் போயாயிற்று' என்ற சொல்லில் தேவராயருக்கு இரட்டை அர்த்தம் புரிந்ததோ என்னவோ... அல்லது தட்டின் கீழேயிருந்த வாளைப் பார்த்திருக்கலாம். ஒருவேளை, கௌளி சாஸ்திரத்தில் நிபுணராகையால் பல்லி சொல்லும் ஓசையைக் கேட்டு ஆபத்தை அறிந்திருக்கலாம்.

"இன்றைக்கு வேண்டாம். எனக்கு உடல்நிலை சரியில்லை. இன்னொரு நாள் வருகிறேன்" என்று சொன்னார்.

பாம்பின் கால் பாம்பறியும் என்பார்கள். அதுபோல, தேவராயர் தன்னைச் சந்தேகப்படுவது விக்ரமனுக்குப் புரிந்துவிட்டது. மறைத்து வைத்திருந்த வாளை வெளி யெடுத்து, சக்ரவர்த்தியின் மார்பில் வெட்டினான். தேவராயர் தான் அமர்ந்திருந்த ஆசனத்தின் பின்புறமாக விழுந்தார்.

தன்னுடன் வந்திருந்த ஒருவனிடம், "அவரைச் சிரச்சேதம் செய்துவிடு" என்று சொல்லிவிட்டுத் தடதடவென்று படிகளில் ஏறி உப்பரிகையை அடைந்தான். விஜயநகர சாம்ராஜ்யம் தன் கைப்பிடிக்குள் வந்துவிட்டது என்ற வெற்றி எக்களிப்பு அவனுக்கு!

வீதியில் போய்க் கொண்டிருந்த மக்களைக் கைதட்டி, "நில்லுங்கள்! நில்லுங்கள்!" என்று கூவி நிறுத்தினான்.

அரண்மனை வாசலில் கூட்டம் கூடியது.

"குடிமக்களே! உங்களுக்கு ஒரு நற்செய்தி! தேவராயரையும் அவரைச் சேர்ந்தவர்களையும் நான் வீழ்த்திவிட்டேன்! அமைச்சர்கள், தளபதிகள், தனாதி காரிகள் அனைவரையும் கொன்றுவிட்டேன். இந்த விநாடி முதல் நான்தான் சக்ரவர்த்தி! மகா ராஜாதி ராஜ விக்ரம சக்ரவர்த்தி!" என்று முழங்கினான் அந்தத் துரோகி.

ஆனால், விக்ரமன் போட்ட கணக்கு அடியோடு தப்பு!

ஆசனத்தின் பின்புறம் விழுந்தாரேயொழிய, தேவராயர் இறக்கவில்லை.

அவரை வெட்டிக் கொல்லுவதற்காக விக்ரமனின் ஆள் நெருங்கியபோது, குற்றுயிரும் குலையுயிருமாக இருந்த

சக்ரவர்த்திக்கு எங்கிருந்துதான் பலம் வந்ததோ! மிகக் கனமான தனது ஆசனத்தைத் தூக்கி அவனை அடித்தார். அவன் மல்லாந்து விழுந்தான்.

சக்ரவர்த்தியின் விசுவாசியான காவலன் ஒருவன் இவ்வளவு கோரங்களையும் பார்த்தவண்ணம் ஒரு திரை மறைவில் ஒளிந்திருந்தான். கீழே விழுந்த விக்ரமனின் ஆளை வெட்டிக் கொன்றுவிட்டு, அந்தப்புரத்தின் வழியே ஓடி உயிர் தப்பினான்.

தேவராயர் சமாளித்து எழுந்துகொண்டு, உப்பரிகையின் படிகளில் தள்ளாடி ஏறினார்.

அங்கே, "நான்தான் சக்ரவர்த்தி! என்னை வாழ்த்துங்கள்! ஜெயகோஷம் செய்யுங்கள்!" என்று சொல்லிக் கொண்டிருந்தான் விக்ரமன்.

பின்புறமாக வந்த தேவராயர் அவனைப் பிடித்துக் கீழே தள்ளினார்.

"அன்பான பிரஜைகளே! நான் உயிருடன் இருக்கிறேன்! இறந்து போகவில்லை! இதோ உயிருடன் இருக்கிறேன்! விக்ரமன் ஒரு ராஜத் துரோகி! அவனைக் கொல்லுங்கள்!" என்று மூச்சு இரைக்க இரைக்க அறிவித்தார்.

அவ்வளவுதான்! ஏற்கெனவே கீழே விழுந்ததால் படுகாயம் அடைந்திருந்த விக்ரமனை மக்கள் தேய்த்து மிதித்து உருத் தெரியாத பிண்டமாகச் சிதைத்து விட்டார்கள்.

சக்ரவர்த்தி தேவராயர் பலத்த காயங்களுடன் உயிர் தப்பினார்.

அல்லஸானி பெத்தண்ணாவின் பேச்சை இந்தக் கட்டத்தில் நான் இடைமறித்தேன்.

“இந்த விஷயங்களுக்கும் எதிராஜனின் பகை யுணர்வுக்கும் என்ன சம்பந்தம்?”

அல்லஸானியின் முகத்தில் ஒரு மர்மமான புன்னகை தவழ்ந்தது. “சம்பந்தம் இல்லாமல் சொல்வேனா, சக்ரவர்த்தி? கொலைகாரன் விக்ரமனுக்கு ஒரு தோழன் இருந்ததாகச் சொன்னேன் அல்லவா?”

“ஆமாம், தளபதி மல்லண்ணா என்று சொன்னீர்கள்” என்றேன்.

“விக்ரமனின் படுகொலைகள் நடந்த சில நாட்களுக் கெல்லாம் அந்த மல்லண்ணாவும் கொலை செய்யப் பட்டுவிட்டார்.”

“அவர்தான் இலங்கைக்குப் போயிருந்ததாகச் சொன்னீர்களே?”

“போனதுதான் அவர் செய்த குற்றம். போகாமல் இங்கேயே இருந்திருந்தால் உயிர் பிழைத்திருப்பார்” என்றார் கவிஞர் அல்லஸானி பெத்தண்ணா.

அந்தப் புதிரை என்னால் விளங்கிக் கொள்ள முடியவில்லை.

என் எதிரில் பலவிதமான கேளிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. ஒரு யானை அதன் எடையைக் காட்டிலும் அதிகமான எடையுள்ள இரண்டு பாறாங்கற்களை முதுகில் சுமந்துகொண்டு, நாகசுர இசைக்கேற்ப, மாவுத்தன் கை ஆட்டியபடி எல்லாம் நடனமாடியது. வாணவேடிக்கைகள் கோலாகலமாக வானத்தை நோக்கி எழும்பி வண்ணங்களை வாரி யிறைத்தன. புராணக் கதைகளில் வல்லுநராக இருந்த வர்கள் பிரவசனம் செய்தார்கள். பெண்கள் ஆடினார்கள். பாடகர்கள் பாடினார்கள்.

இதெல்லாம் முடிந்த பின்னர் நான் இயற்றிய 'ஜாம்பவதி பரிணயம்' நாடகமாக நடக்கப்படவிருந்தது. ஆனால், என் மனத்தில் அதைப் பற்றிய சிந்தனையே எழவில்லை. அல்லாஸானி மேற்கொண்டு சொல்லப் போவதைக் கேட்கத் துடித்தேன்.

# 13

எதிராஜனின் கதையைக் கேட்பதற்கு நான் காட்டிய ஆர்வம் கவிஞர் அல்லஸானிக்கு வேடிக்கையாக இருந்தது போலும். குழந்தைக்குச் சோறு ஊட்டும் தாய் வேண்டுமென்றே கதையை நடுநடுவே நிறுத்துவது போல அடிக்கடி அவர் வேறு பக்கம் திரும்பிப் பராக்குப் பார்ப்பது போல நடித்துக்கொண்டு, என்னை ஓரக்கண்ணால் நோக்கி ரசிப்பது எனக்குத் தெரிந்தது.

"சக்ரவர்த்தி, அந்த மஞ்சள் சேலை உடுத்திய பெண்ணைக் கவனித்தீர்களா? அற்புதமாக ஆடுகிறாள், இல்லையா? சொன்னபடியெல்லாம் அவள் தேகம் வளைகிறது பாருங்கள். இதல்லவோ கவிதை!" என்றார்.

"கவிஞரே! எதிரே மேடையில் நடப்பது எதையும் நான் பார்க்கவுமில்லை... கவனிக்கவுமில்லை. தாங்கள் சொல்லி வந்த கதை... அதைத் தாங்கள் அழகாகச் சொல்லிய பாங்கு... அதிலேயே என் மனம் சென்றுவிட்டது. இந்தக் கவியரசர் ஒரு விஷயத்தை எவ்வளவு சுவையாகவும் தெளிவாகவும் சொல்கிறார்; நமக்கு இப்படி ஒரு திறமை இல்லையே என்று நினைத்துக் கொண்டேயிருக்கிறேன். வேறு எதிலும் புத்தி செல்லவில்லை. மன்னிக்க வேண்டும்" என்றேன்.

அல்லஸானி அறிவாளி. கதையைத் தொடர வேண்டும் என்பதற்காகவே நான் சொல்கிற புகழுரை அது என்பதைப் புரிந்துகொண்டார். "அடடா, அதை மறந்தே போனேன், எங்கே விட்டேன்?" என்றார்.

"மல்லண்ணா என்ற தளபதி அந்த விக்ரமனின் தோழன் இலங்கையிலிருந்து திரும்பியதையும், கொலை செய்யப்பட்டதையும் சொன்னீர்கள்" என்று எடுத்துக் கொடுத்தேன்.

பெத்தண்ணா சுருக்கமாகத்தான் சொன்னார். எனினும், எந்தெந்தச் சூழ்நிலை எப்படியெப்படி இருந்திருக்கும், யார் யார் எப்படி யெப்படிப் பேசியிருப்பார்கள், எவ்வாறெல்லாம் அவர்களுடைய மனநிலை இருந்திருக்கும் என்பதை என்னால் கற்பனை செய்து கொள்ள முடிந்தது. ஆகவே, அவர் கூறியதை நான் நேரில் கண்டது மாதிரி இங்கே விவரிக்கிறேன்.

இலங்கையிலிருந்து திரும்பி வந்த மல்லண்ணா ஒன்று, நேரே தேவராய சக்ரவர்த்தியிடம் சென்று வணக்கம் செலுத்தி, தான் போய்வந்த காரியத்தைப் பற்றித் தெரிவித்திருக்க வேண்டும். அல்லது மந்திரிப் பிரதானிகள் யாரையேனும் சந்தித்திருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால் தன் தோழன் விக்ரமன் செய்த படுகொலையைப் பற்றி அவனுக்குத் தெரிந்திருக்கும். (தளபதியானாலும் இளைஞனாகையால் மல்லண்ணாவை அவர் என்று சொல்லாமல் 'அவன்' என்றே குறிப்பிடு கிறேன்).

தலைநகருக்கு வந்தவன் முதல் வேலையாகத் தன் மாளிகைக்குச் சென்றான். இளம் மனைவி காதம்பரியைப் பார்ப்பதில் அவனுக்கு அத்தனை துடிப்பு. அத்துடன் அவள் அப்போது பூரண கர்ப்பிணியாக இருந்தாள்.

இலங்கையிலிருந்து அவளுக்காக ஆசையுடன் ஒரு புதுமையான ரத்தினஹாரம் கொண்டு வந்திருந்தான் மல்லண்ணா. அதை அவள் கழுத்தில் அணிவித்து அழகு பார்க்கும் ஆவலுடன், "காதம்பரி! " என்று கூப்பிட்டபடி உள்ளே சென்றான்.

காதம்பரி ஓடிவந்து கணவனைத் தழுவிக் கொண்டாள். ஆனால், அவளுக்கோ மனம் பதைத்துக் கொண்டிருந்தது. அவன் இலங்கை சென்றிருந்த சமயம் இங்கே விக்ரமன் செய்த கோரப் படுகொலைகளைப் பற்றியும், விக்ரமனின் தோழன் என்பதால் மல்லண்ணா மீது சக்ரவர்த்தி இம்மாடி தேவராயர் சினம் கொண்டிருப்பதைப் பற்றியும் சொல்லிவிட விரும்பினாள்.

ஆனால், "இருங்கள், பிரபு! ரொம்ப முக்கியமான விஷயம் ஒன்று..." என்று அவள் ஆரம்பித்தவுடனேயே தன் இதழ்களால் அவள் இதழ்களை மூடிவிட்டான் மல்லண்ணா.

ஒட்டிக்கொண்ட அதரங்கள் பிரிவதற்குள், சக்ரவர்த்தியின் காவலர்கள் வந்துவிட்டார்கள். திமுதிமு வென்று அவர்கள் வரும் சத்தம்கூட மல்லண்ணாவுக்குக் கேட்கவில்லை. 'கயலெழுதி வில்லெழுதிக் காரெழுதிக் காமன் செயலெழுதித் தீர்ந்த முகம் திங்களோ காணீர்' என்று கானல் வரிப்பாட்டுக் கூறுவதுபோல அவள் முகமொன்றே அவன் நினைவில் நின்றது.

கையிலிருந்த ரத்தினஹாரத்தை அவள் கழுத்தருகே அவன் கொண்டு சென்ற நேரத்தில், சக்ரவர்த்தியின் ஆட்கள் அவனைச் சூழ்ந்து பிடித்துக்கொண்டார்கள். அப்போதுதான் சுயநினைவுக்கு வந்தான் மல்லண்ணா. திகைத்து நோக்கினான்!

காதம்பரி, "ஐயோ! அவரை விடுங்கள்!" என்று கதற, அவளைப் பிடித்துத் தள்ளிவிட்டு, மல்லண்ணாவின் கைகளை முறுக்கிப் பின்கட்டாகக் கட்டி இழுத்துக் கொண்டு சென்றார்கள், சக்ரவர்த்தியின் சேவகர்கள்.

சில விநாடிகளுக்கு வாயடைத்துப் போனான் மல்லண்ணா. என்ன இதெல்லாம்? எதற்காக?

தளபதி என்ற கௌரவத்துடன் அந்தஸ்தாக வாழ்ந்து கொண்டிருக்கும் தனக்கு இப்படி ஓர் அவமானமா! ஏன்... ஏன்... ஏன்... என்று கேள்விக்கு அடுத்த கேள்வியாக மல்லண்ணாவின் மனத்தைக் குழப்பின. "இருங்கள்! இருங்கள்!" என்ற அவன் பதற்றத்துக்கு, வந்த காவலர்களில் எவனும் செவி சாய்க்கவில்லை.

இலங்கையிலிருந்து கொண்டுவந்திருந்த ரத்தின ஹாரம் மல்லண்ணாவின் கையிலேயே இருந்தது. "கொஞ்சம் நில்லுங்கள்! இந்த ஹாரத்தை என் மனைவியிடம் தந்துவிட்டு வருகிறேன்" என்று அவன் சொல்லச் சொல்லப் பொருட்படுத்தாமல் முரட்டுப் பிடியாக அவனை இழுத்துக்கொண்டு போனார்கள்.

மல்லண்ணாவுக்கு ஏற்பட்ட முதல் எண்ணம், ஏதோ தவறு நேர்ந்திருக்கிறது என்பதுதான். யாரையோ இழுத்துக் கொண்டு போவதற்குப் பதில் தப்பாக நம்மை இழுத்துப் போகிறார்கள்... சக்ரவர்த்தி நம்மைப் பார்த்ததும் அதிர்ச்சி அடையப் போகிறார். 'முட்டாள்களே! நான் இவரையா கொண்டு வரச்சொன்னேன்!' என்று கடிந்துகொண்டு இந்த ஆட்களுக்குக் கடும் தண்டனை கொடுக்கப் போகிறார்...

ஆனால், அப்படி எதுவும் நடக்கவில்லை. மல்லண்ணாவைப் பார்த்ததும் இம்மாடி தேவராயர் குரூரமான புன்சிரிப்புடன், "வாருங்கள், தளபதியாரே! தாங்கள் திட்டமிட்டபடி துரோக வேலைகளெல்லாம் திருப்திகரமாக நடந்தேறியதா?" என்றார்.

ஏற்பட்ட திகைப்பில், மல்லண்ணாவினால் பேசவே முடியவில்லை. "சக்ரவர்த்தி! என்ன இதெல்லாம்? நான் துரோகம் செய்தேனா? யாருக்கு! எப்போது? சத்தியமாக எனக்கு எதுவும் தெரியாது!" என்று கதறியபடி தேவராயரின் காலடியில் நெடுஞ்சாண்கிடையாக விழுந்தான்.

அப்போது அவன் கையிலிருந்த ரத்தினஹாரம் எகிறி, சக்ரவர்த்தியின் மடியிலே போய் விழுந்தது. அதைக் கண்டதும் பன்மடங்காக அதிகரித்தது அவருடைய கோபம்.

“ஓ! துரோகத்துக்காக தங்கள் நண்பர் கொடுத்த பரிசா?” என்றார் பல்லைக் கடித்துக் கொண்டு.

“மறுபடியும் சொல்கிறேன். நான் எந்தத் துரோகமும் செய்யவில்லை சக்ரவர்த்தி! எனக்கு எதுவுமே தெரியாது. நான் இலங்கையிலிருந்து இப்போதுதான் திரும்பியிருக் கிறேன்!” என்றான் மல்லண்ணா.

“ஆமாம்! ஆமாம்! இங்கே இருந்தால் சந்தேகம் வரும் என்பதால்தானே எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டு இலங்கைக்குப் போயிருந்தீர்கள்!” என்றார் தேவராயர் இரக்கமில்லாமல். “இழுத்துக்கொண்டு போங்கள் இந்த நாயை! நாளை சூரியோதயத்தின்போது இவனுக்குச் சிரச்சேதம்!” என்று சேவகர்களுக்குக் கட்டளையிட்டு விட்டு எழுந்து உள்ளே போய்விட்டார்.

நிதான புத்தி படைத்த அறிவாளிதான் அவர். ஆனால், ‘பாம்பால் கடிபட்டவன் கயிற்றைக் கூடப் பாம்பாகத்தான் காணுவான்’ என்ற சம்ஸ்கிருதப் பழமொழி அவர் விஷயத்தில் உண்மையாயிற்று.

மறுபடியும் அவரிடம் சொல்லிப் பார்க்கலாமா என்று ஒரு விநாடி நினைத்த மல்லண்ணா, அடுத்த விநாடி அந்த எண்ணத்தைத் தூக்கியெறிந்தான். அவனுடைய தன்மான உணர்ச்சி ரோஷத்துடன் சிலிர்த்தெழுந்தது. என்ன, ஏது என்று ஒரு வார்த்தைகூடக் கேட்காமல் தனக்குத் துரோகிப் பட்டம் சூட்டி, மரண தண்டனையும் வழங்கிவிட்ட மன்னனிடம் பிச்சை கேட்டு உயிர் வாழ்வதைக் காட்டிலும் தலை நிமிர்ந்து மரணத்துக்கு மாலையிடுவதே மேல் என்று முடிவுசெய்து கொண்டான்.

ஆனால், என்னதான் நடந்தது என்பது அப்போதும் அவனுக்கு விளங்கவில்லை.

சிறைச்சாலைக்குப் போகும் வழியில் விக்ரமன் செய்த படுகொலைகளைப் பற்றிக் காவலர்கள் அவனுக்குத் தெரிவித்தார்கள். விக்ரமனின் தோழன் என்பதால் இவன்மீது சக்ரவர்த்திக்குக் கடுமையான சந்தேகம் என்றும் சொன்னார்கள்.

மல்லண்ணாவின் ரத்தம் கொதித்தது. சே! இப்படியும் ஒரு ராஜ குடும்பமா! இறந்துபோன விக்ரமன் எந்த அக்கிரமத்துக்கும் அஞ்சாத கயவன். விருந்தென்று நம்பி அவன் இல்லத்துக்கு வந்தோரை வெட்டிக்கொன்ற மாபாதகன். அவனை நண்பனென்று சொல்லிக் கொண்டதே பாவம். அந்தக் கூடா நட்புக்குக் கூலி கிடைக்கிறது இன்று!

மருமகன் அப்படியென்றால் மாமன் தேவராய சக்ரவர்த்தி அவனைவிடக் கொடியவன். காவலர்கள் சொல்லும் விவரத்தின்படி பார்த்தால், விக்ரமனின் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கொன்று தீர்த்துக் கொலைத் தாண்டவம் ஆடியிருக்கிறான்! விக்ரமன் எழுதிய அழைப்பு லிகிதத்தை விருந்தாளிகளுக்கு எடுத்துச் சென்றானே, அந்த ஊழியனைக் கூட விடவில்லையாம். அந்த அப்பாவி சிரச்சேதம் செய்யப்பட்டு விட்டானாம். இப்போது விக்ரமனின் நண்பனாக இருந்தவன் என்ற ஒரே காரணத்துக்காக, எந்த விசாரணையும் இல்லாமல் நமக்கு மரணத்தண்டனை வழங்கியிருக்கிறான்! இவனுடைய காலில் விழுந்தோமே!....

நினைத்து நினைத்து... சிறைச்சாலைச் சுவர்களை உள்ளங்கையால் குத்திக் கொண்டிருந்தான் மல்லண்ணா, விரல்களில் ரத்தம் வழிந்து ஓடியது.

மௌனமான சாட்சியாக, இரவு அவனைப் பரிதாபத்துடன் பார்த்துக் கொண்டிருந்தது. கண்களைச் சூனியமும் காதுகளை நிசப்தமும் மோதிக்கொண்டிருந்த நேரத்தில்... மெல்லிய கிறீச்சொலியுடன் கதவு மெதுவே திறந்து கொள்ள -

அவனுக்கு மிக நெருக்கமான இரண்டு தோழர்கள் உள்ளே வந்தார்கள்.

"நீங்கள் எப்படி....?!" என்று அவன் கேட்குமுன், "உஷ்!" சிறைக் காவலர்களுக்குக் கையூட்டுக் கொடுத்து வந்திருக்கிறோம். எங்களுடன் வெளியே வாருங்கள்" என்று அவர்கள் அவசர அவசரமாகச் சொன்னார்கள்.

ஆனால், மல்லண்ணா இம்மியும் நகரவில்லை. சுவரில் சாய்ந்து கொண்டவன், வெறுப்புடன் சிரித்தான்.

"உங்கள் முயற்சிக்கு ரொம்பவும் நன்றி, நண்பர்களே" என்றான். "ஆனால், நான் தப்பியோட விரும்பவில்லை. காரணமில்லாமல் துரோகி என்ற பட்டம் எனக்குக் கிடைத்துவிட்டது. இப்போது கோழை என்ற அவதூறும் சேரவேண்டுமா? என்னை விட்டுவிடுங்கள். நான் வரமாட்டேன்!"

"பைத்தியக்காரத்தனமாகப் பேசாதே, மல்லண்ணா" என்று ஒரு நண்பன் கண்டித்தான். "எது கோழைத்தனம்! அக்கிரமமான ஒரு தண்டனைக்குப் பணிந்து உன் உயிரைக் கொடுக்கிறேன் என்கிறாயே, அதுதான் கோழைத்தனம்! இந்த நகரத்தை விட்டு வெளியேறு... என்றாவது ஒருநாள், இந்த ஆட்சியைப் பழிவாங்கும் சந்தர்ப்பம் கிடைக்கும்."

"அதற்குத் தேவையே இருக்காது தோழனே! இந்தச் சாம்ராஜ்யம் சில வருடங்களில் புல்பூண்டு இல்லாமல் ஒழியத்தான் போகிறது. எல்லையில் எதிரிகள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நாளை, இல்லாவிட்டால் நாளை மறுநாள் இந்தச் சாம்ராஜ்யத்தின் ஆடம்பர

அலங்காரங்களைக் குழி தோண்டிப் புதைத்து, இப்படி ஒரு பேரரசு இருந்தது என்ற அடையாளமே தெரியாதபடி அழித்து ஒழிக்கப் போகிறார்கள். அது காலத்தின் கட்டாயம். கடவுளின் நியதி! துரும்பைக்கூட நாம் எடுத்துப் போட வேண்டாம்!" என்று முடிவாகச் சொன்னவன், "எனக்காக ஓர் உதவி மட்டும் செய்யுங்கள்" என்றான்.

"சொல்லு. இப்போதே நிறைவேற்றுகிறோம்!" என்றார்கள் நண்பர்கள்.

"என் மனைவி காதம்பரியை இங்கே அழைத்து வரமுடியுமா? அவளைக் கடைசியாக ஒரு முறை பார்த்து அவளுக்குத் தைரியம் கூறவேண்டும்" என்று சொல்லும் போதே அவன் குரல் தழுதழுத்தது.

அந்த நண்பர்கள் அரை நாழிகை நேரத்தில் தாங்கள் கொடுத்த வாக்கை நிறைவேற்றினார்கள். காதம்பரியை அழைத்து வந்து மல்லண்ணாவிடம் ஒப்படைத்துவிட்டு வெளியே போய்க் காவலிருந்தார்கள்.

நிறைசூலியாக இருக்கும் இந்தப் பெண்ணை அநாதையாக விட்டுவிட்டுப் போகிறோமே என்று நினைக்கையில் மல்லண்ணாவின் கண்கள் கலங்கின. ராஜ குடும்பத்துக்கு விசுவாசமாக உழைத்து, வீர தீரத் தளபதியாக விளங்கிய தன் கணவனை இந்தக் கோலத்தில் இந்த நிலையில் பார்க்கிறோமே என்று நினைக்கையில் அவளுக்கு 'ஹோ' வென்று அழுகை வந்தது. முகத்தை அவன் மடியில் புதைத்துக் கொண்டு விம்மினாள்.

"அழாதே, காதம்பரி! நீ அழக்கூடாது. நீ ஒரு வீரனின் மனைவி. ஒரு வீரனை மகனாகப் பெறப் போகிறவள்!" என்று ஆறுதல் கூறி, அவள் நெற்றியில் முத்தமிட்டு, கூந்தலைக் கோதிவிட்டான் அவன். பிரியப்போகும் அந்தக் கடைசி இரவில் அவள் மிக மிக அழகாகவும் மிக மிக மிருதுவாகவும் தோன்றினாள்.

"காதம்பரி... அநீதியாக, அக்கிரமமாக எனக்குத் தண்டனை வழங்கியுள்ள இந்த ராஜகுடும்பத்தினர் என்றென்றைக்கும் நமக்கு விரோதிகள். அதை ஞாபகம் வைத்துக்கொள். பிறக்கப் போகும் உன் பிள்ளைக்கு இதைச் சொல்லு. அவன், அவனுடைய பிள்ளைக்கும், அந்தப் பிள்ளை அவனுக்குப் பிறக்கும் பிள்ளைக்கும் இதைச் சொல்லட்டும்" என்றான் அவன்.

"நான் என்ன செய்யவேண்டும் என்கிறீர்கள்?" என்று தீர்மானமாகக் கேட்டாள்.

"இந்த விஜயநகரத்தின் அரச குடும்பத்துக்காக என் பாட்டனார் ஊழியம் செய்தார். என் தந்தை ஊழியம் செய்தார். இப்போது நான். போதும்! இனிமேல் நம் வம்சத்தில் யாரும், எந்த வகையிலும் இந்தச் சக்ரவர்த்தி களுடன் சம்பந்தம் வைத்துக் கொள்ளக்கூடாது. ரத கஜ துரக பதாதிகளுடன் திமிர் பிடித்து நிற்கும் இவர்களை எதிர்த்துப் போராடக்கூடிய ஒரு படையையோ வம்சத்தையோ நம்மால் ஒருபோதும் தயார் செய்ய முடியாது. ஆனால், இவர்களுடன் ஒட்டோ உறவோ இல்லாமல், இவர்கள் முகத்திலேயே விழிக்காமல் நமது வம்சம் வளரட்டும். அதை மட்டும் நம் குழந்தைக்குத் திரும்பத் திரும்பச் சொல்லு!" என்றான் மல்லண்ணா.

வெளியே இருந்த நண்பர்கள், "நேரமாகிவிட்டது!" என்று தாழ்ந்த குரலில் எச்சரித்தார்கள்.

"போய் வா!" என்று அவளை முத்தமிட்டு வழியனுப்பினான் மல்லண்ணா.

**அ**டுத்த நாள் சூரியோதய வேளையில், மல்லண்ணாவின் கழுத்தில் படக்கென்று கொலைவாள் வீழ்ந்தது.

அதே விநாடி, காதம்பரி ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள்.

இங்கே மரணம். அங்கே ஜனனம். இங்கே ஒரு மனிதனின் கடைசிக் குரல். அங்கே ஒரு மனிதனின் முதல் குரல்...

"அந்த மல்லண்ணாவின் பேரனுக்குப் பேரனாம் இந்த எதிராஜன்" என்று கூறி முடித்தார் கவிஞர் அல்லஸானி பெத்தண்ணா.

எதிரில் வசந்தோற்சவத்தின் கலை நிகழ்ச்சிகளும் முடிந்து கொண்டிருந்தன. மங்கிக் கொண்டிருக்கும் தீவட்டிகளுக்கும் தீபங்களுக்கும் எண்ணெய் ஊற்றிப் புதுப் பிரகாசம் ஏற்றிக் கொண்டிருந்தார்கள்.

அந்த மல்லண்ணாவின் வம்சத்தாரும் இப்படித் தான் தங்கள் கோபத்துக்குத் தாங்களே எண்ணெய் ஊற்றிப் புதுப்பித்துக் கொண்டு வருகிறார்கள் என்று எண்ணிக் கொண்டேன்.

அமைச்சர் வல்லபர் என்னை நெருங்கி வந்து, "ரொம்ப நன்றாகச் செய்தார்கள்" என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

"எது?" என்றேன், உடனே புரிந்துகொள்ளாமல்.

"தங்களுடைய 'ஜாம்பவதி பரிணயம்' நாடகம்தான் சக்ரவர்த்தி. கற்றுக்குட்டித்தனமாக எதுவும் செய்து கெடுத்து விடாமல் அர்த்தமும் பாவமும் அற்புதமாக விளங்கும்படி நடித்தார்கள்" என்றவர், என் முகத்தைப் பார்த்ததும் "சக்ரவர்த்திக்கு அவ்வளவாய்த் திருப்தி ஏற்படவில்லை போல் தோன்றுகிறதே?" என்றார்.

"சே, சே! அதெல்லாமில்லை" என்று அவசரமாய் மறுத்தேன். "அருமையாக நடித்தார்கள். அவரவர்க்குரிய பரிசுகளை எடுத்து வாருங்கள். கொடுத்து அனுப்பி விடலாம். நானும் அரண்மனைக்குத் திரும்பலாம் என்று நினைக்கிறேன்" என்றேன்.

அல்லஸானி என் முகத்தை நோக்கினார். அதில் சிந்தனைக் கோடுகளைக் கண்டார் போலும்.

"ரொம்ப நீளமாய்க் கதையைச் சொல்லித் தங்களுக்குச் சலிப்பு ஏற்படுத்திவிட்டேன் போலிருக்கிறது" என்றார்.

"அப்படியல்ல... தேவராய சக்ரவர்த்தி இழைத்த ஓர் அநீதியினால் வெறுப்பு ஏற்பட்டு, அந்த வெறுப்பு எத்தனை தலைமுறைகளைத் தாண்டி இன்றைக்கும் எரிமலையாய்க் குமுறிக் கொண்டிருக்கிறது பாருங்கள்!" என்று சொல்லிச் சமாளித்தேன்.

"அதுவும் இந்தப் பிள்ளை எதிராஜன் ரொம்ப பிடிவாதக்காரனாக இருக்கிறான். அசட்டுப் பிடிவாதம்! சக்ரவர்த்தி கையைச் சொடுக்கினால் அவனையும் அவன் தங்கை சின்னாதேவியையும் தரதரவென்று அரண் மனைக்கு இழுத்து வந்துவிட மாட்டார்களா!" என்றார் பெத்தண்ணா.

நான் பொய்ச் சிரிப்புச் சிரித்து, "அப்படியாவது அவர்களைப் பார்த்து. எனக்கு என்ன ஆகவேண்டும்?" என்றேன்.

"ஆமாம், ஆமாம். நஷ்டம் அவர்களுக்குத்தான்" என்றார் கவியரசு.

எனக்கு ஏற்பட்டிருக்கும் நஷ்டம்? அதை யாரால் கணக்கிட முடியும்? தொண்டைக்குள் சிக்கிக் கொண்டிருக்கும் முள்ளைப் போல, எடுக்கவும் வராமல் விழுங்கவும் இயலாமல் நான் படும் நரகவேதனை எனக்கல்லவா தெரியும்?

**கா**லையில் தேகப் பயிற்சிகளையும் குதிரைச் சவாரியையும் வழக்கம்போல் செய்து முடித்தேன். ஆனால், மனம் அதில் செல்லவில்லை.

அரண்மனையின் நீண்டுவிரிந்த கூடங்களில் வெகு நேரம் நடந்துகொண்டே இருந்தேன். மல்லண்ணாவின் மரணமும், மரணத்துக்கு முன்பு இந்தச் சாம்ராஜ்யத்துக்குக் கொடுத்த சாபமும் நினைக்க நினைக்க என் நெஞ்சு நடுங்கியது. எதிராஜனின் பகைமையுணர்வு எதனால் என்பது பிரிந்ததால் அவன்மீது கோபம் ஏற்படவில்லை. மாறாக, அனுதாபமும் பிரியமுமே உண்டாகின. அவனை எப்படிச் சமாதானப்படுத்தப்போகிறேன்! எப்படி அவன் தங்கை சின்னாதேவியை அடையப் போகிறேன்? தெரியவில்லை.

அரண்மனையின் அலங்கார விதானங்களையும் பளிங்குத் தரைகளையும் பார்க்கவே எனக்கு வெறுப்பாக இருந்தது.

மரண தண்டனை நிறைவேற்றப்படும் கொலைக் களம் இங்கேதான் முன்பு இருந்ததாம். இப்போது வேறிடத்துக்கு மாற்றிவிட்டார்கள். ஆனால், முன்னொரு காலத்தில் இந்த இடத்தில்தான், அரசர்களின் கண்முன்னே சிரச்சேதங்கள் செய்யப்படும் என்று சொல்வதுண்டு. அப்படி மாண்டவர்களில் மல்லண்ணாவைப் போல நிரபராதிகள் எவ்வளவு பேரோ!

அதை நினைக்கையில், தரையெல்லாம் ரத்தம் ஓட, தலைகளும் முண்டங்களும் துடித்துச் சிதறுவதுபோல ஒரு கோரமான பிரமை என்னுள் ஏற்பட்டது. அங்கே அடிவைத்து நடப்பதே அருவருப்பாகத் தோன்றியது.

இந்தப் பாவக் கறைகளைக் கழுவி அகற்ற முடியாது...

புராதன நகரமான மிதிலையில் பிறந்து, மாபெரும் பண்டிதராயும் பக்திமானாயும் விளங்கிய வித்யாபதியின் கதை எனக்கு நினைவு வந்தது. சிவசிங்க மகாராஜாவிடம் ஆஸ்தானப் புலவராக இருந்து 'ஸ்ரீமத் பாகவதம்' மொத்தத்தையும் தன் கையாலேயே நகலெடுத்தவர் அவர்.

வயோதிக காலத்தில் ஒருநாள் அவர் ஒரு சொப்பனம் கண்டார் தனது சடலத்தை நாலு பேர் தூக்கிச் செல்வதாக. அதிலிருந்து, தனது மரணம் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்தார். இறந்தால் கங்கைக் கரையிலே இறக்கவேண்டும் என்பது அவருடைய நெடுநாளைய அவா. ஆகவே, தன் மகளைத் துணைக்கு அழைத்துக்கொண்டு புறப்பட்டார். கங்கை நெடுந்தூரத்தில் இருந்தது. முதுமை காரணமாக அவரால் நடக்க முடியவில்லை. இன்னும் தொலைதூரம் போக வேண்டும். களைத்துச் சோர்ந்து விழுந்துவிட்டார். கங்கைக் கரையில் மரிக்காமல் எங்கோ ஒரு பிரதேசத்தில் மாய்கிறோமே என்று அவர் உள்ளம் துடித்தது.

அப்போது நிகழ்ந்தது ஓர் அதிசயம்.

கங்கை நதி வெள்ளமாகப் பெருகி, கரைகளை உடைத்துக்கொண்டு ஓடிவந்து வித்யாபதியின் உடலை நனைத்தது.

நதியின் பிரவாகம் வந்து திரும்பிய சுவடுகளை இப்போதும் அந்தக் கிராமவாசிகள் காட்டுகிறார்கள்.

அதுபோல இன்று நடக்கக்கூடாதா?

"துங்கபத்ரா தாயே! கிருஷ்ணா அன்னையே! கோதாவரி அம்மா! நீங்களெல்லாரும் பிரவாகமெடுத்து வந்து, இந்த அரண்மனையின் பாவக் கறைகளைக் கழுவ மாட்டீர்களா?" என்று வேண்டிக்கொண்டேன்.

அடுத்த கணமே என் கடமை புரிந்தது. வித்யாபதி போன்ற ஒரு புனிதனின் உடலைத் தொடடால் தனக்குப் பவித்திரம் என்று எண்ணியதால்தான் அன்று கங்கை ஓடிவந்தாள் அவரிடம்! துங்கபத்ரையும், கிருஷ்ணாவும், கோதாவரியும் இந்தப் பாவிகளின் வாசஸ்தலத்துக்கா வருவார்கள்? எதிர்த் திசையில் அதிக தூரத்துக்கு ஓடிப் போவார்கள்!

நடந்துகொண்டே இந்த விஸ்தாரமான இடத்தை எப்படித் தூய்மைப்படுத்தலாம், எவ்வாறு அழகு செய்யலாம் என்று யோசனை செய்தேன். அப்படி ஏதாவது பிராயச்சித்தம் பண்ணினால்தான் சின்னாதேவி எனக்குக் கிடைப்பாள் என்று என் உள்ளுணர்வு கூறியது.

சட்டென்று ஓர் எண்ணம் உதித்தது!

பிரதானி வெங்கய்யாவை வரச்சொன்னேன். அவர் வந்ததும், "என் உருவச்சிலையை வடிப்பதற்காக ஒரு சிற்பி வந்திருக்கிறாரென்று அப்பாஜி சொன்னார். அந்தச் சிற்பி எங்கே தங்கியிருக்கிறார் என்பதை விசாரித்தறிந்து, உடனே இங்கே அழைத்து வாருங்கள்" என்றேன்.

"உத்தரவு, சக்ரவர்த்தி!" என்று புறப்பட்டார் வெங்கய்யா.

"இருங்கள். அப்படியே நாட்டியாச்சாரியார் லக்ஷ்மி நாராயணாவையும் நான் கூப்பிட்டேன் என்று சொல்லியனுப்புங்கள்" என்றேன்.

நான் நின்றிருந்த கூடத்தை மறுபடியும் பார்த்தேன். இந்த வெறுமையான இடத்தில்...

என் கற்பனைகள் கிடுகிடுவென்று வளர்ந்தன.

# 14

சிற்பியின் வருகைக்காகக் காத்திருந்தபடி மறுபடியும் அரண்மனையின் நெடிய கூடங்களில் நடைபோட்டுக் கொண்டிருந்தேன்.,

விக்ரமன் செய்த படுகொலைகளும் அதற்குப் பழி வாங்குகிற மாதிரி மல்லண்ணா போன்ற நிரபராதிகளை இம்மாடி தேவராயர் சிரச்சேதம் பண்ணிய கொடுமை களும் என் நெஞ்சை ரணகளமாக்கின.

அந்தப் பாவங்களுக்கும் மல்லண்ணாவின் மனைவி காதம்பரியைப் போல நூற்றுக்கணக்கான பத்தினிப் பெண்டிர் இட்ட சாபங்களுக்கும் கழுவாய் தேட வேண்டும்... மரண தேவனுக்குப் பலி தரப்பட்ட இந்த இடங்களில் அழகுத் தேவதைகளுக்கு ஆராதனை நடக்க வேண்டும். ஒப்பாரிகள் கேட்ட இடத்தில் மதுர கானம் ஒலிக்க வேண்டும்...

ஏன் இன்னும் அந்தச் சிற்பி வரக்காணோம் என்று நினைத்த வேளையில் அப்பாஜி வந்தார்.

அவர் முகம் மலர்ந்திருந்தது. "மிகவும் சந்தோஷம்" என்றார்.

"எதற்கு?" என்றேன்.

"அந்தச் சிற்பியை வரச்சொன்னீர்களாமே? இதோ வந்து கொண்டிருக்கிறான். சக்ரவர்த்தியை அளவு எடுத்துக்கொண்டு, விரைவாகவே திருவுருவச் சிலையைத் தயார் செய்யச் சொல்கிறேன்..." என்று அப்பாஜி சொல்லிக்கொண்டே போனார்.

"பொறுங்கள் அப்பாஜி, பொறுங்கள்" என்று நிறுத்தினேன். "சிலை வைத்துக்கொள்ளும் அளவுக்கு நான் என்ன சாதித்துவிட்டேன்? எதுவுமில்லை. அதுவும் ஏழுமலையானின் திருக்கோயிலில் என் சிலையை வைப்பதென்றால், அதற்கு ஒரு தகுதி வேண்டாமா?" என்று நான் கூறியதும் மகாபிரதானியின் முகம் வாடியது. அவரைச் சமாதானப்படுத்தும் நோக்கத்துடன், "அத்துடன் நான் மட்டும் தனியாகச் சிலை வைத்துக்கொள்வதில் அர்த்தமில்லை, அப்பாஜி. வெறுமே தரிசனத்துக்காகக் கோயிலுக்குப் போகும்போதுகூடக் கணவனும் மனைவியுமாகப் போக வேண்டும் என்று பெரியவர்கள் சொல்வார்கள். அப்படியிருக்க, திருமலை க்ஷேத்ரத்தில் நான் ஒருவன் மட்டும் சிலையாக நிற்பானேன்? ஒரு பத்தினியும் வரட்டும்" என்றேன்.

"ஓ, சக்ரவர்த்தியின் சிந்தனை அப்படிச் செல்கிறதா?" என்று புன்னகை புரிந்தார் அப்பாஜி. "நான் ஏற்கெனவே ஏற்பாடு செய்து விடடேன். தங்கள் அன்னையும் சம்மதம் சொல்லிவிட்டார். இப்போதே ஸ்ரீரங்கப்பட்டணத்துக்குச் செய்தி அனுப்புகிறேன்..."

"அப்பாஜி, தாங்கள் ராஜீய விஷயங்களில் மிகுந்த நிதானம் காட்டுகிறீர்கள். தீர்க்கமாக யோசனை செய்கிறீர்கள். ஆனால், என் சொந்த விஷயத்தில் மட்டும் அவசரமாகச் சிந்தித்து, தப்பான முடிவுக்கு வந்துவிடு கிறீர்கள்! இது நியாயமா?" என்றேன். நான் சின்னாதேவியை மனத்தில் வைத்துக்கொண்டு பேசுகிறேன். அப்பாஜியோ திருமலாதேவியை மனத்தில் வைத்துக் கொண்டு பேசுகிறார்!

ஸ்ரீவில்லிபுத்தூரை நோக்கி என் எண்ணங்கள் பறந்தன. சின்னாதேவி! இந்தக் கணம் நீ என்ன செய்து கொண்டிருப்பாய்? வாசலில் கோலம் இடும்போது என்

பெயரும் அதில் மறைவாக வரும்படி சித்திரம் அமைப்பாயா? பூத்தொடுக்கும்போது கிருஷ்ணா, கிருஷ்ணா என்று என் பெயரைச் சொல்லிக்கொண்டே தொடுப்பாயா? அல்லது, 'அவளுடைய முகத்தை மலரென்று நினைத்துச் சுற்றி சுற்றி வந்து ரீங்காரமிடும் வண்டை விரட்டக்கூடத் தெரியாமல் அவள் உட்கார்ந்திருந்தாள்' என்று மகாகவி போத்தண்ணா எழுதினாரே, அந்த நிலையில் நந்தவனத்தில் உலவிக் கொண்டிருக்கிறாயா? நான் உன் நினைவில் வாடுவது போல் நீயும் என் நினைவில் வாடிக் கொண்டிருப்பாயா?

இருக்காது. என்னை நீ மறந்து விட்டாய். துறந்து விட்டாய். இல்லையெனில், ஒரு மாதகாலம் இந்த ஊரிலே தங்கியிருந்தவள் எனக்கு ஏன் தூது அனுப்பவில்லை? ஏன் என்னைப் பார்க்க அணுவளவும் முயற்சி செய்யவில்லை? அண்ணன் எதிராஜன் உன் கால்களுக்குச் சலங்கைதானே கட்டினான்? விலங்குமா மாட்டினான்...?

"பின்னே எதற்குத்தான் அந்தச் சிற்பியை வரச் சொன்னீர்கள்?" என்று அப்பாஜி கேட்டார். என் சிந்தனைகள் திரும்பின. அதற்குள் அந்தச் சிற்பியே வந்துவிட்டான். இளம் வயதுக்காரன். மேல் வேட்டியை இடுப்பில் சுற்றிக்கொண்டு எட்டத்தில் நின்றபடி இரு கைகளையும் தலைக்கு மேலே குவித்து வணக்கம் செலுத்தினான்.

"இப்படி அருகில் வா" என்று அழைத்தேன்.

தயங்கித் தயங்கிச் சமீபித்துக் கைகட்டி நின்றான். "உன் பெயரென்ன?" என்று கேட்டதற்கு, "முத்து மாணிக்க ராஜேந்திரன்" என்றான்.

"அடேயப்பா! ரொம்ப நீளமாக இருக்கிறதே?" என்று சிரித்தேன். "உன்னை அடிக்கடி கூப்பிட வேண்டியிருக்கும்.

அதனால் உன் பெயரை முத்து என்று சுருக்கிவிடுகிறேன். சம்மதமா?" என்றேன்.

சாம்ராஜ்யாதிபதி இப்படிச் சரளமாகப் பேசுகிறாரே என்று அந்த முத்துவுக்குத் திகைப்பு என்றால் அப்பாஜிக்கோ கோபம் 'ஒரு சாதாரணச் சிற்பியிடம் சக்ரவர்த்தி வேடிக்கையாகப் பேசலாமா' என்று. அதற்கென்ன செய்வேன்? அப்பாஜிக்குப் பயந்து பயந்து எவ்வளவு பொய்க் கவசங்கள்தான் போட்டுக் கொள்வது?

"சக்ரவர்த்தி எப்படி அழைத்தாலும் எனக்குப் பாக்கியம்தான்" என்றான் அந்தச் சிற்பி.

"உனக்கு வெண்கலத்தில் சிலை வடிக்க மட்டும்தான் தெரியுமா? அல்லது கல்லிலும் சிற்பம் செதுக்கத் தெரியுமா?" என்று கேட்டேன்.

"நான் பரம்பரையாகக் கல்லில் சிற்பம் வடிக்கும் கலைஞன்தான், சக்ரவர்த்தி. என் முன்னோர்கள் காஞ்சியிலும், மாமல்லபுரத்திலும் பல்லவ மன்னர்களின் கீழே கோயில்கள் எழுப்பியவர்கள்" என்றபோது அவன் குரலில் பெருமை தொனித்தது.

"நல்லது. நான் சொல்வதைக் கவனமாகக் கேட்டுக்கொள்" என்று கூறிவிட்டு மெதுவாக நடந்தவாறே பேசினேன். "இந்த வெறும் கூடம் அற்புதமான கலைக்கூடமாக மாறவேண்டும். அரச குடும்பத்தைச் சேர்ந்த பெண்களும் செல்வந்தர் வீட்டுக் குமரிகளும் நடனம் பயிலும் நாட்டிய மண்டபம் இங்கே உருவாக வேண்டும். உனக்கு நாட்டிய சாஸ்திரம் தெரியுமா?"

"கொஞ்சம், கொஞ்சம்."

"அது போதாது. உனக்குச் சொல்லித் தருவார். நாட்டியாசாரியர் லக்ஷ்மி நாராயணா இருக்கிறார். தெரியாததை அவரிடம் கேட்டுத் தெரிந்துகொள். அபிநவ

பரதாச்சாரியர் என்று புகழ் பெற்றவர் அவர். உனக்குச் சொல்லித் தருவார். இதோ இந்தச் சுவர்களைப் பார். இவற்றில் பரதமுனிவரின் நாட்டிய சாஸ்திரத்தை விளக்கும் வகையில் சிற்பங்கள் செதுக்க வேண்டும். உன் கீழே எவ்வளவு சிற்பிகள் வேண்டுமானாலும் நியமித்துக் கொள். கைதேர்ந்த கலைஞர்களாக இருக்க வேண்டும். அவர்கள் எத்தனை சன்மானம் கேட்டாலும் கொடு."

"உத்தரவு, சக்ரவர்த்தி."

"இரு, இரு. மீதியையும் சொல்கிறேன். கேள். சுவரில் செதுக்கப்படும் அத்தனை சிற்பங்களுக்கும் பொன் தகடு வேயவேண்டும். அந்த வேலைகளுக்குத் தனியே பொற்கொல்லர்களை நியமித்துக் கொள். அதன்பிறகு, சுவரிலிருந்து நான்கு முழம் இடைவெளி தந்து, ஓராள் உயரத்துக்கு இருபது தூண்கள் நிறுத்தவேண்டும். அப்படி நான்கு வரிசை. மொத்தம் எண்பது தூண்கள். அந்த எண்பதிலும் வரிசைக் கிரமமாக நாட்டிய முத்திரைகளைக் காட்டும் பெண்களின் சிற்பங்களைச் செதுக்க வேண்டும். இந்தக் கோடியில் நடனமாடத் தொடங்கும் பெண் நடனத்தை முடிக்கும் போது எந்த நிலையில் நிற்பாளோ அந்த நிலையை அந்தக் கடைசிச் சிற்பம் காட்டவேண்டும். ஆடுகிற பெண்ணுக்குச் சந்தேகம் வந்தால் அந்தச் சிற்பத்தைப் பார்த்து அவள் தன்னைத் திருத்திக் கொள்ள வேண்டும்" என்றவன், சற்று நிறுத்திக்கொண்டு, "நான் சொல்வதெல்லாம் புரிகிறதா?' என்று கேட்டேன்.

"புரிகிறது, சக்ரவர்த்தி" என்றான் அவன்.

"உன்னால் செய்ய முடியும், இல்லையா?" என்று மறுபடியும் கேட்டேன்.

"நிச்சயமாய் முடியும், சக்ரவர்த்தி" என்று அவன் உறுதி கூறினான்.

"இன்னொன்றும் கேள். நடனப் பயிற்சி செய்யும் எல்லாரையும் நான் பார்ப்பதற்கு வசதியாக இந்தக் கோடியில் எனக்கு ஓர் ஆசனம் ஏற்படுத்து. மறு கோடியில் எனக்கு நேர் எதிரே கிருஷ்ண விக்ரகம் பிரதிஷ்டை செய்யும்படி ஒரு சிறு மண்டபம் கட்டு'' என்று சொல்லிவிட்டு அவன் முகத்தைப் பார்த்தேன். முழுதும் புரிந்து கொண்டானா என்பது சந்தேகமாக இருந்தது. ஒரு கரித் துண்டு கொண்டு வரும்படி சேவகனுக்குப் பணித்தேன்.

தரையில் கோடுகள வரைந்து, எதெது எங்கெங்கே அமையவேண்டும் என்ற என் திட்டத்தைப் படமாகக் காட்டினேன்.

"இந்தக் கலைக் கூடத்தின் விதானம் வெறுமையாக இருக்கக்கூடாது. நல்ல ஓவியர்களை வரவழைத்து, மேற்கூரையில் மரம், செடி, கொடிகளையும், பறவைகளையும், மான்களையும், குதிரைகளையும், யானைகளையும் வண்ணச் சித்திரங்களாக வரையச் சொல்லு" என்று கூறிவிட்டு, "அப்பாஜி, தயவுசெய்து இவனுக்குத் தேவையான உதவிகளைச் செய்து கொடுங்கள். ஆசாரியர் லக்ஷ்மி நாராயணா விடமும் என் விருப்பத்தைத் தெரிவியுங்கள்" என்று கேட்டுக் கொண்டேன்.

"நீ போய் வெளியே இரு!'' என்று முத்துவை அனுப்பிவிட்டு அப்பாஜி என்னைக் கூர்ந்து பார்த்தார். "சக்ரவர்த்திக்கு நாட்டியக் கலையில் திடீரென்று ஆர்வம் பிறந்ததற்குக் காரணம் தெரிந்து கொள்ளலாமா?" என்றார்.

''வேறொன்றுமில்லை. இம்மாடி தேவராயரின் காலத்தில் நடைபெற்ற படுகொலையைப் பற்றி நினைத்துப் பார்த்தேன். மனம் சஞ்சலப்பட்டது. அதற்கு ஒரு சாந்தியாக இதைச் செய்கிறேன்" என்றேன்.

நாட்டியக் கலை மட்டுமல்ல, நாட்டியக்காரி ஒருத்தியும் என் மனதைப் பிடித்து ஆட்டிக் கொண்டிருக் கிறாள் என்பதை இப்போதாவது அப்பாஜியிடம் சொல்லலாமா என்று எண்ணினேன். ஆனால் சொல்ல வில்லை.

அன்று அரசவை நிரம்பி வழிந்தது. எல்லாப் பிரதானிகளையும், தளபதிகளையும் அமர நாயகர்களையும் தளவாய்களையும் வரச் சொல்லி நான் கட்டளையிட் டிருந்ததே காரணம். ஆனால், என்ன பிரச்னையை விவாதிப்பதற்காக வரவழைக்கப்பட்டிருக்கிறோம் என்று எவருக்கும் தெரியாது.

அரண்மனை வளாகத்தில் நடன மண்டபத்துக்கான சிற்றுளிகளின் ஓசை கேட்டவண்ணம் இருந்ததால், அங்கே எதுவும் பேசமுடியாதென்று வெங்கடவிலாச மண்டபத்தில் இந்த ஆலோசனைக் கூடட்த்தை வைத்திருந்தேன். எந்தெந்தப் பதவியினருக்கு எப்படியெப்படி ஸ்தானம் அளிக்கப் படுமோ அதேபோலவே இருக்கைகள் அமைக்கப் பட்டிருந்தன.

பிரதம விருந்தாளியான சந்திரசேகர பாண்டியர் எனக்கருகே அமர்ந்திருந்தார். துயரத்தாலும் வேதனை யாலும் அவமானத்தாலும் அவர் தலை குனிந்திருந்தது. இரு கைகளையும் கோத்து மடியில் வைத்துக் கொண்டு மௌனமாக இருந்தார்.

என் சார்பாக அப்பாஜி பேசினார். “அமைச்சர் களுக்கும் தளபதிகளுக்கும் வணக்கம். நமது மதிப்புக்குரிய சந்திரசேகர பாண்டியர் சென்ற பத்து நாட்களாகத் தலைநகரில் தங்கியிருப்பதும் இன்று எதற்காக இங்கே வந்திருக்கிறார் என்பதும் உங்கள் எல்லாருக்கும் தெரிந்ததே. சந்திரசேகர பாண்டியரின் ராஜ்யத்தில் ஒரு பகுதியை வீரசேகர சோழர் பறித்துக்கொண்டதால், தெற்குச்

சீமையில் சிறுசிறு சண்டைகள் நடந்து கொண்டிருந்தன. அதைத் தீர்த்து வைப்பதற்காகத் தளபதி நாகம நாயக்கரைச் சக்ரவர்த்தி அனுப்பியதும் உங்களுக்குத் தெரியும். வீரசேகர சோழரை வெகு சுலபமாக நாகமநாயக்கர் முறியடித்து, அவரிடமிருந்து பாண்டியப் பிரதேசங்களைத் திரும்பக் கைப்பற்றிவிட்டார். ஆனால், கைப்பற்றிய பகுதிகளைச் சந்திரசேகர பாண்டியரிடம் ஒப்படைக்காமல், சக்ரவர்த்தியின் அனுமதியும் பெறாமல், தானே அரசாண்டு வருகிறார்..."

"அநியாயமாய் இருக்கிறதே, அக்கிரமம்... இதை இப்படியே விடலாமா" - இதுபோலப் பல சலசலப்பு என் காதில் விழுந்தது.

"அமைதி, அமைதி!" என்று கையமர்த்திவிட்டு அப்பாஜி தொடர்ந்தார். "நாகம நாயக்கரின் துராக்ருதமான செயலைப் பற்றி முறையிடுவதற்காகவே பாண்டிய மன்னர் இங்கே வந்திருக்கிறார்..."

"நாகம நாயக்கருக்கு ஓலை அனுப்பினீர்களே, அதற்கு என்ன பதில் வந்தது?" என்று நான் கேட்டேன்.

"பல ஓலைகள் அனுப்பியாகிவிட்டது. இதோ வருகிறேன். அதோ வருகிறேன் என்று மழுப்பலான பதில்களையே அனுப்பிக் கொண்டிருக்கிறார். மதுரைப் பகுதியில் சொந்தமாக ஒரு ராஜ்யம் ஸ்தாபித்துக்கொள்ள அவர் திட்டமிட்டிருக் கிறார் என்று தோன்றுகிறது" என்று அப்பாஜி சொன்னதும் என் சினம் எல்லை மீறியது.

"அராஜகம்! ராஜத் துரோகம்! அந்த நாகம நாயக்கரைத் தட்டிக் கேட்க, அவர் கொட்டத்தை அடக்க இவ்வளவு பெரிய சபையில் யாருமே கிடையாதா?" என்று சீறினேன்.

"நான் இருக்கிறேன் சக்ரவர்த்தி' என்று ஒரு குரல் கேட்டது. அவையில் கடைசி வரிசையில் அமர்ந்திருந்த இளைஞன் ஒருவன் எழுந்து நின்றான்:

"இப்படி முன்னே வா!" என்றதும் வந்தான்.

அவன் பெயர் விசுவநாதன். சிறிய தளபதிகளில் ஒருவன். அவன் முகத்தைப் பார்த்ததும் என் ஆச்சரியம் வளர்ந்தது. "நீ... நீ நாகம நாயக்கரின் மகனில்லையோ?" என்று கேட்டேன்.

"ஆம், சக்ரவர்த்தி, தாங்கள் அனுமதி கொடுத்தால் மதுரைக்குப் படை நடத்திச் செல்கிறேன்!" என்றான் விசுவநாதன்.

அடுத்த வாக்கியத்தை நான் சொல்லியிருக்கக் கூடாது. துடுக்குத்தனத்தினால் நாக்கில் வந்துவிட்டது. "ஏன், இதுதான் சந்தர்ப்பம் என்று நீயும் உன் தந்தையுடன் சேர்ந்துகொள்ளப் பார்க்கிறாயா?" என்று கேட்டுவிட்டேன்.

"சக்ரவர்த்தி!" என்று உடைவாளை உருவிக் கொண்டு என்னை நோக்கி ஓடிவந்தான் விசுவநாதன். அவையிலிருந்த அத்தனை பேரும் குபீரென எழுந்து நின்றார்கள், எனக்கு ஆபத்து என்றெண்ணி.

விசுவநாதன் என்னிடம் வாளை நீட்டி தலையைத் தாழ்த்திக் குனிந்து கொண்டான். "சக்ரவர்த்தி, அப்படியொரு துரோக எண்ணம் எனக்கு இருக்கிறதென்று தாங்கள் நினைத்தால் இந்த வாளினாலேயே இங்கேயே என்னை இரண்டாக வெட்டிப் போடுங்கள்!" என்றான்.

குனிந்த தலை குனிந்தபடியே இருந்தது. நீட்டிய வாள் நீட்டியபடியே இருந்தது.

நான் அந்த வாளை வாங்கிக்கொண்டு அவன் தோளை மெதுவாகத் தட்டினேன். "எழுந்திரு! தந்தையையே சிறைபிடிக்கத் துணிந்த ராஜவிசுவாசி என்று உன் பெயர் வரலாற்றில் இடம்பெறும்" என்றேன்.

விசுவநாதன் நிமிர்ந்து வாளைப் பெற்றுக் கொண்டு உறையில் செருகிவிட்டு எனக்கு வணக்கம் செலுத்தினான்.

நேருக்கு நேராக அவன் முகத்தைப் பார்த்தேன். அதில் தென்பட்ட உறுதியும் வீரமும் தன்னம்பிக்கையும் எதிர்காலத்தில் அவன் பிரமாதமாக வருவான் என்று காட்டின. மகோன்னதமான மதுரையை ஸ்தாபிக்கப் போகிறான் என்று என் உள்ளுணர்வு கூறியது.

"விசுவநாதா, உன் கீழே உள்ள படைவீரர்கள் எவ்வளவு பேர்?" என்று கேட்டேன்.

"ஆறாயிரம், சக்ரவர்த்தி" என்றான்.

"உன் தீரத்தையும் வீரத்தையும் காட்ட இது உனக்கு நல்ல வாய்ப்பு. ஆகவே அந்த ஆறாயிரம் பேரை மட்டுமே வைத்துக் கொண்டு நீ படை நடத்திச் செல்ல வேண்டும். வேறு எந்த உதவியும் என்னிடம் எதிர்பார்க்கக் கூடாது. என்ன?" என்றேன்.

"அவர்களே போதும் சக்ரவர்த்தி" என்றான் விசுவநாதன்.

"நாளையே படையுடன் புறப்படு" என்று சொல்லிவிட்டு, "தைரியசாலி விசுவநாதனுக்கு நாம் எல்லாரும் வாழ்த்துக் கூறுவோம்" என்றேன் அவையினரைப் பார்த்து,

'ஜய விஜயீ பவ!" என்று ஒரே குரலாக எல்லாரும் ஆசி கூறினார்கள்.

விசுவநாதனிடம் தனிமையில் பேச என் மனம் தவித்தது. 'நீ போகும் மதுரைக்கு அருகேதான் ஸ்ரீவில்லிபுத்தூரில் என் ஆருயிர்க் காதலி சின்னாதேவி இருக்கிறாள். அவளைப் பார்த்து என் தாபத்தைத் தெரிவிப்பாயா?' என்று கேட்க வேண்டும் போலிருந்தது.

சித்ரவதையான எண்ணங்களை அழித்துக் கொண்டேன்.

அரண்மனை முழுதையும் இருள் போர்த்திக் கொண்ட இரவு வேளையில், தீவட்டி வெளிச்சத்துடன் செல்லப்ப தனநாயகர் வழக்கம் போல வந்தார். அவர் பின்னே பொக்கிஷப் பெட்டிகளுடன் ஆட்கள் வந்தார்கள்.

அவருடன் கஜானா அறைக்கு நடந்தேன். என்னுடைய பொக்கிஷப் பெட்டியைத் திறந்து, கொண்டு வந்திருந்த ஐசுவரியங்களை அதில் கொட்டினார் செல்லப்ப தனநாயகர்.

எதுவும் பிடிக்காதவனாக நான் அந்தப் பொக்கிஷ அறையில் பின்கை கட்டியவாறு உலாவிக் கொண் டிருந்தேன்.

ஒரு பெட்டியின் மீது என் பார்வை நிலைகுத்தி நின்றது.

ஒவ்வொரு பெட்டியின் மீதும் அதற்குச் சொந்தமான சக்ரவர்த்தியின் பெயரை எழுதி வைத்து, பூட்டி, பூட்டின் மீது அரக்கு முத்திரை இட்டிருப்பது வழக்கம்.

அந்த நாலாவது பெட்டி! 'வீரப்பிரதாப இம்மாடி தேவராய சக்ரவர்த்தி' என்று அதன்மீது எழுதப்பட் டிருந்தது. அந்தப் பொக்கிஷப் பெட்டிக்குள்ளே முத்தும் பவளமும் வைரமும் வைடூரியமும் பொன்னும் வெள்ளியுமான ஐசுவரியம் கூடை கூடையாகக் கொட்டிக் கிடக்கும்... அவற்றின் நடுவே...

இலங்கையிலிருந்து அந்த இளம் தளபதி மல்லண்ணா தன் ஆசை மனைவிக்காகக் கொண்டு வந்த ரத்தின ஹாரமும் இருக்கும் என்று நினைத்தேன்.

அன்று மல்லண்ணாவைக் காவலர்கள் இழுத்து வந்தபோது, அந்த ஹாரம் எகிறி இம்மாடி தேவராய சக்ரவர்த்தியின் மடியில் விழுந்தது என்று அல்லஸானி பெத்தண்ணா கூறினார். பிறகு அது என்ன ஆயிற்று? என்ன

ஆகியிருக்கும்? அதைப் பற்றி யாரும் எதுவும் சொல்ல வில்லை.

தேவராயரின் இந்தச் சொந்தப் பொக்கிஷத்தில் தான் அது சேர்ந்திருக்கும்...

"செல்லப்பரே, இப்படி வாருங்கள்" என்று அழைத்தேன். விரைந்து வந்தார்.

"இந்தப் பெட்டியின் திறவுகோல் யாரிடம் இருக்கிறது?" என்று கேட்டேன்.

# 15

'இம்மாடி தேவராயர்' என்று பெயர் எழுதப்பட்ட அந்தப் பொக்கிஷப் பெட்டியைப் பார்த்தபடியே நான் நின்றிருந்தேன். செல்லப்ப தனநாயகர் என் அருகில் வந்து நின்றிருப்பதுகூட மறந்துவிட்டது.

இந்தப் பெட்டிக்குள் மலைமலையாக அணிகலன்கள் கொட்டிக் கிடக்கும்... அவற்றுக்குள்ளே அந்த மல்லண்ணா கொண்டுவந்து, தன் ஆசை மனைவிக்கு அணிவிக்க முடியாமல் போன அந்த ரத்தின ஹாரமும் இருக்கும்.

இந்த ஆபரணக் குவியலிலிருந்து அதைக் கண்டெடுப்பது கஷ்டமான வேலையல்ல. இலங்கையில் வாங்கப்பட்டதால், அதன் அமைப்பு வித்தியாசமாக இருக்கும். பொற்கொல்லர்களைக் கூப்பிட்டுக் கேட்டால், உடனே அடையாளம் கண்டெடுத்துத் தந்துவிடுவார்கள்.

பிறகு...? எதிராஜனை ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து அழைத்துவர வேண்டியது. 'இந்தா, உன் பாட்டனாருக்குப் பாட்டனாரான மல்லண்ணா கொண்டு வந்த ஹாரம்... எடுத்துக்கொள். இம்மாடி தேவராயர் உன் முன்னோருக்கு இழைத்த அநீதிக்குக் கழுவாய் தேடிவிட்டேன். இதை உன் அருமைத் தங்கை சின்னாதேவியின் கழுத்தில் போடு. அவளை என்னிடம் அழைத்து வா. தலைமுறை தலைமுறையாக விஜயநகரப் பேரரசிடம் நீங்கள் கொண்டுள்ள பகைமை இன்றோடு ஒழியட்டும். நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும்... இனி நடக்கப்போவது யாவும் நல்லதாகவே இருக்கட்டும்... என்று சொல்ல வேண்டியது.

எதிராஜன் உள்ளம் நெகிழ்ந்து, 'சக்ரவர்த்தி... என்று என் காலில் விழப்போவான். அவனைத் தடுத்து, 'இதெல்லாம் கூடாது... நீ என் மைத்துனனாகப் போகிறவன்' என்று சொல்லி அவனை மார்புறத் தழுவிக்கொள்ள வேண்டியது.

அந்த அற்புதக் காட்சியைக் கண்டு மெய்சிலிர்த் தவளாகச் சின்னாதேவி நாணத்தால் தலைகவிழ்ந்து தேவதை போல் ஒயிலாக நின்று, ஓரக்கண்ணால் என்னைப் பார்ப்பாள். எங்கள் இருவருக்குள்ளும் ஓரே விதமாகப் பரவசம் ஓரே சமயத்தில் நாடி நரம்புகளில் பாயும்...

'இப்படிக்கூட ஒருவன் அசட்டுத்தனமாகக் கற்பனைகளை வளர்த்துக் கொண்டே போவானா...?' என்று இதைப் படிக்கும் உங்களில் சிலர் சிரிக்கக்கூடும். அவர்கள் காதல் வசப்பட்டிராதவர்களாக இருப்பார்கள். அல்லது, தாங்கள் காதலித்த காலத்தை மறந்துவிட்ட நடுவயதுக்காரர்களாக இருப்பார்கள். ஆனால், காதலின் வலிமையை உணர்ந்த காளைகளுக்கு என் உணர்ச்சிகள் புரியும்...

"சக்ரவர்த்தி, எதற்கோ என்னை அழைத்தீர்களே...?" என்று செல்லப்பா மெதுவாகக் குரல் கொடுத்த பிறகுதான் நான் யதார்த்த நிலைக்குத் திரும்பினேன்.

"இந்தப் பெட்டியின் திறவுகோல் யாரிடம் இருக்கிறது எனக் கேட்டேன்... காதில் விழவில்லையா...?" என்று படபடத்தேன்.

"விழுந்தது சக்ரவர்த்தி... ஏதோ தப்பாகச் சொல்கிறீர்கள் என்று நினைத்தேன் ..." என்றார் தனநாயகர்.

"ஏன், நான் என்ன கேட்கக்கூடாததைக் கேட்டு விட்டேன்...?" என்றேன் மறுபடியும்.

தனநாயகரின் முகத்தில் குழப்பம் கூத்தாடியது. "வந்து... இதோ, போய் எடுத்து வருகிறேன்..." என்று கிளம்பிப் போனார். அவருடன் வந்திருந்த ஆட்களும் திரும்பிச் சென்றார்கள்.

இம்மாடி தேவராயரின் பொக்கிஷப்பெட்டி அரை ஆள் உயரத்துக்கும் ஓராள் நீளத்துக்குமாகப் பெரிதாக இருந்தது. ஓரங்களில் தங்கப் பூண்கள் பதிக்கப்பட்டு, வெகு நேர்த்தியான சித்திர வேலைப்பாடுகளுடன் இருந்தது. அந்த அழகை ரசித்துக்கொண்டு நின்றிருந்தபோது, செல்லப்பரின் காலடியோசை கேட்டது.

திரும்பிப் பார்த்தால், அவருடன் அப்பாஜியும் வந்து கொண்டிருந்தார். ஆனால், இருவரும் வெறுங்கையாக இருந்தார்கள். அவர்களின் பின்னே ராயசம் கொண்டமராசு, காரணீகர் மங்கராசய்யா ஆகியோரும் வந்து கொண்டிருப்பதைக் கண்டேன்.

"சக்ரவர்த்தி, ஏதோ திறவுகோல் கேட்டீர்களாமே...?" என்றார் மகாபிரதானி அப்பாஜி.

"ஆமாம்... இம்மாடி தேவராயரின் இந்தப் பொக்கிஷப் பெட்டியைத் திறக்க வேண்டும்..." என்றேன்.

"பெட்டியை... திறப்பதா...?" அதிர்ச்சியில் வார்த்தையே வெளிவரவில்லை அவருக்கு. "சக்ரவர்த்தி, இது தங்களுடைய முன்னோர்களின் பொக்கிஷப் பெட்டிகள். அடுத்தடுத்து ஆட்சிக்கு வரும் மன்னர்கள், சொந்தமாகத் தங்களுக்கென்று புதிதாக ஒரு பொக்கிஷப் பெட்டி ஏற்படுத்திக் கொள்வார்களே தவிர, முந்தைய மன்னர்களின் பெட்டியை ஒரு போதும் திறந்ததில்லை... திறக்கவும் கூடாது...

"ஏன், திறந்தால் பேய், பிசாசு ஏதாவது வெளியே வந்துவிடுமா...? என்று என் கோபத்தைச் சிரிப்பில் மறைத்துக் கொண்டேன்.

“சக்ரவர்த்தி, இதை இப்போது திறக்க வேண்டிய கட்டாயம் என்ன வந்தது...?”

“அதை அப்புறம் சொல்கிறேன்... இப்போது இதன் திறவுகோலைக் கொடுங்கள்... என்றேன்.

“தயவுசெய்து நான் சொல்வதைக் கேளுங்கள், சக்ரவர்த்தி...” என்று கெஞ்சும் தொனியில் கூறினார் அப்பாஜி. “எப்படிப்பட்ட நெருக்கடி நேர்ந்தாலும், முன்னோர்களின் பெட்டிகளைத் திறப்பதில்லை என்று நூற்றாண்டு நூற்றாண்டுகளாகக் கடுமையான கட்டுப்பாடு இருந்து வந்திருக்கிறது...”

ராயசம் கொண்டமராசு மெதுவான குரலில், “சென்ற நூற்றாண்டில் விரூபாட்ச சக்ரவர்த்தியின் ஆட்சிக் காலத்தில், தென்னாடெங்கும் வானம் பொய்த்து, பூமி வறண்டு, பஞ்சம் தலைவிரித்தாடியது தங்களுக்குத் தெரியாததல்ல... நோக்கும் திசையெல்லாம் எலும்புக் கூடுகள்! மனிதனை மனிதன் அடித்துத் தின்றதால், யாரும் தனியாக வெளியே போகவே அஞ்சினார்கள். கொள்ளை நோய்கள் கூத்தாடின. துறைமுகங்களில் ஆயிரக்கணக்கான பெற்றோர்கள், தங்கள் குழந்தைகளை இடுப்பில் வைத்துக் கொண்டு வெளிநாட்டுக் கப்பல்காரர்களுக்குக் கூவிக்கூவி விற்றார்கள். அப்படிப்பட்ட கொடிய நிலையில்கூட, விரூபாட்ச சக்ரவர்த்தி தனது சொந்த நிதியிலிருந்தும் அரசாங்க கஜானாவிலிருந்தும் எடுத்து நிவாரணப் பணிகளுக்குச் செலவிட்டாரே தவிர, முன்னோர்களின் பொக்கிஷப் பெட்டிகளில் கைவைக்கவில்லை. சம்பிரதாயத்தை மீறவில்லை... என்றார்.

“நீங்களே இதைச் சம்பிரதாயம் என்றுதானே சொல்கிறீர்கள்...? சம்பிரதாயம் என்றாலே, மனிதன் வகுத்தது என்றுதான் பொருள். தெய்வத்தின் கட்டளை அல்ல...” என்றேன் விடாப்பிடியாக.

அப்பாஜி எதுவும் இயலாதவராக, என்னையும் பொக்கிஷப் பெட்டியையும் மாறி மாறிப் பார்த்தார். பிறகு 'ஹூம்' என்று ஒரு ஒரு பெருமூச்சுடன், இடுப்பில் செருகியிருந்த திறவுகோலை எடுத்து என்னிடம் கொடுத்தார். "கடைசியாக ஒருமுறை கேட்டுக் கொள்கிறேன். சக்ரவர்த்தி... என்று சொல்ல முற் பட்டவரை மெதுவே விலக்கிவிட்டு, பெட்டியை நோக்கி ஓரடி எடுத்து வைத்திருப்பேன்.

"கிருஷ்ணா! என்ன் காரியம் இதெல்லாம்?" என்று உரத்த குரலில் கூறியபடி எதிரே வந்து நின்று வழிமறித்தார் என் அன்னை நாகலாம்பிகை. அப்பாஜி அவருக்குச் செய்தி அனுப்பியிருந்தார் போலும்.

நான் சற்றே தடுமாறிப் போனேன். "அம்மா, இது ஒரு முக்கியமான விஷயம்... என் வாழ்க்கை சம்பந்தப்பட்டது. இதில்தான் என் எதிர்காலமே இருக்கிறது..." என்று சொல்லிவிட்டு மேலும் ஓரடி முன்வைத்தேன்.

இரு கைகளையும் அகல விரித்து என் பாதையைத் தடுத்தார் அன்னை.

"கிருஷ்ணா, முன்னோர்களின் பொக்கிஷப் பெட்டியைத் திறந்தால் உனக்கு எதிர்காலமே இருக்காது! அப்படி உனக்கு என்ன நிதி நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது? சொல்லு. நான் சீதனமாகக் கொண்டு வந்ததும் உன் தந்தை எனக்குக் கொடுத்ததும் ஏராளமாக இருக்கிறது என் அரண்மனையில். அங்கே வா, உனக்குத் தேவையான அளவுக்கு நீயே எடுத்துக் கொள். என்ன நெருக்கடியாக இருந்தாலும் சமாளித்துக் கொள்ளலாம். வா..."

"இது நிதியின் நெருக்கடி அல்ல, தாயே! விதியின் நெருக்கடி. இப்போது நான் எது சொன்னாலும் உங்களுக்குப் புரியாது. சொல்லக்கூடிய மனநிலையும் எனக்கில்லை. தயவுசெய்து தடுக்காதீர்கள்."

"தடுத்தே தீருவேன்... என்றார் அம்மா கடுமையாக. "நீ வியாச தீர்த்தரிடம் குருகுலவாசம் பயின்று தர்மசாஸ்திரங்கள் படித்ததும், மகாபிரதானி அப்பாஜி உன் உயிரைக் காப்பாற்றி ஆடசிப் பீடத்தில் அமர்த்தியதும், இந்தத் தகாத செயலைச் செய்வதற்குத்தானா? இப்படி நீ நடந்து கொள்வாய் என்று தெரிந்திருந்தால் அன்றே உன் மீது வைத்த பாசத்தைத் துறந்திருப்பேன். கிருஷ்ணன் என்று எனக்கு ஒரு பிள்ளை பிறக்கவேயில்லை என்று என் மனத்தைத் திடம் செய்து கொண்டிருப்பேன்... வெறும் சொல்லாலேயே ஒருவனின் காலைக் கட்டிப் போட முடியுமென்றால் அன்று அன்னை என்னைக் கட்டிப் போட்டுவிட்டார். முன்னேறுவதா பின்வாங்குவதா என்று என் மனத்துக்குள் இடியும் மின்னலுமாகச் சூறாவளி வீசியது.

இவ்வளவு அமளிகளுக்கிடையில் என் கையை மணிக்கட்டினருகே யாரோ பலமாக அழுத்துவதை உணர்ந்தேன்.

திரும்பி நோக்கியபோது, ஜங்கமய்யா என்னை உரசினாற்போல் வெகு நெருக்கமாக நிற்பதைக் கண்டேன். திகைப்பாகவும் இருந்தது. கோபமும் வந்தது. அவர் ஒரு சாதாரண அதிகாரி. நகரக் காவலர்களுக்கு - முக்கியமாக, இரவு வேளைகளில் ரோந்து செல்லும் காவலர்களுக்குத் தலைவர். அமைச்சர்களுக்குரிய அந்தஸ்து எதுவும் அவருக்குக் கிடையாது. என் எதிரில் வரவேண்டிய சந்தர்பபமே இருப்பதில்லை. எப்போதாவது என்னைப் பார்கக நேரிட்டால் வெகு தூரத்துக்குத் தள்ளி நின்று குனிந்து நமஸ்காரம் செய்வாரே தவிர, கிட்டே வந்து பேசமாடடார். பேசுவதற்கான தகுதி உடையவரல்ல.

அப்படிப்பட்டவர் எப்படியோ கூட்டத்தோடு கூடடமாகப் புகுந்து இவ்வளவு பக்கத்தில் வந்து நிற்கிறார்!

அது மட்டுமில்லை. என்னைத் தொட்டு, என் கையைத் தொட்டு அழுத்துகிறார்! என்ன திமிர்!

இருந்த ஆத்திரத்தில் அவரை ஒரே வெட்டாக வெட்டிப் போடுவதற்காக உடைவாளில் கையை வைத்தேன். ஆனால், 'அலர்மேல் மங்கை உறை மார்பா! நிகரில் புகழாய்! உலகமூன்றுடையாய்! என்னை ஆள்வோனே! நிகரில் அமரர் முனிக் கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே' என்று நம்மாழ்வார் போற்றிய அந்த ஏழுமலையான் உற்ற சமயத்தில் என்னைத் தடுத்து நிதானத்துக்குக் கொண்டு வந்தான்.

ஒரு சாமானியமான காவலர் அவ்வளவு உரிமையோடு என் கையை அழுத்துவதென்றால் நிச்சயமாய் ஏதோ குறிப்புக் காட்டுகிறார் என்று தான் அர்த்தம். அவருடைய கண்களைக் கவனித்தேன். 'தனியே சொல்கிறேன்' என்று அவர் மௌன பாஷையில் மொழிவது புரிந்தது. விநாடிக்கும் குறைவான நேரம்தான் அந்த 'உரையாடல்' நடந்தது.

சாமர்த்தியமாகப் பின்வாங்கினேன்; என் கோபமும் மிடுக்கும் குறைந்துவிடவில்லை என்று பாசாங்கு செய்தேன்.

"அன்னையே! தாங்களும் அப்பாஜியும் மிகவும் கடுமையாகப் பேசுகிறீர்கள். உங்களை மீறி ஒரு காரியம் செய்ய முடியாதவனாக, என்னை வளர்த்து விட்டீர்கள். ஆகையால், இப்போதைக்குத் தங்கள் கட்டளைக்குப் பணிகிறேன். ஆனால், ஏன் இந்தப் பெட்டியைத் திறப்பதில் பிடிவாதம் காட்டினேன் என்பதை இன்னொரு நாள் விளக்கி, திறக்கவும் திறப்பேன்... நிச்சயம்!" என்று சொல்லி விட்டுத் திரும்பி நடந்தேன்.

வெள்ளிச் சங்கிலிகளில் தொங்கிய சொர்ண மயமான ஊஞ்சலில், மெத்தென்ற சயனத்தில் படுத்

திருந்தேன். தோள்வளைகள், இடுப்புப் பட்டைகள், காப்புகள், வைர மாலைகள், முத்து வடங்கள் முதலிய சகல ஆபரணங்களையும் களைந்து அதிகாரியிடம் ஒப்படைத்து அனுப்பிவிட்டதால், உடலின் சுமை குறைந்து அப்பாடா என்றிருந்தது. ஆனால், உள்ளத்தின் சுமை! மாதங்க பர்வதத்தின் பாறைகளைப் போல அப்படியே கனத்திருந்தது.

ஜங்கமய்யாவின் வருகையை எதிர் நோக்கிக் காத்திருந்தபோது இதே போல் ஒரு நாள் காயத்ரி சைகை காட்டியதும், அவள் கொண்டு வரப்போகும் செய்திக்காகக் காத்திருந்ததும் ஞாபகம் வந்தது. அன்று போலவே இன்றும் ஓர் இளமங்கை வீணையுடன் வந்து ஒரு கோடியில் அமர்ந்துகொண்டு மெள்ள மீட்டத் தொடங்கினாள். இன்று அவளுக்கு அருகில் ஒரு பெரியவரும் உட்கார்ந்து, புராதன வாத்தியமான கஞ்சிராவில் தாளம் இசைத்தார்.

கலைஞர்களின் மனம் புண்படக்கூடாதென்பதற்காகச் சிறிது நேரம் கேட்டுக் கொண்டிருந்துவிட்டு, போதும் என்று சைகை காட்டினேன். அவர்கள் போனதும் பரிசாரகர் தர்மபாலன் வந்தார். எனக்கென ஏற்பட்டுள்ள சமையலறையில் இருக்கிற எட்டுச் சமையல்காரர்களின் தலைவர் அவர்.

“உணவு தயாராக இருக்கிறது. சக்ரவர்த்தி எழுந்தருளலாம்” என்றார்.

“இங்கேயே கொஞ்சம் கொண்டுவந்து விடுங்கள். போதும்” என்றேன்.

சக்கரம் வைத்த பெரிய தங்க முக்காலியை இழுத்து வந்து என் மஞ்சத்தினருகே வைத்தார்கள். வெள்ளிப் பாத்திரங்களில் பன்னீர் கலந்த தண்ணீரும், குழம்பும், ரசமும், பருப்பும், பச்சடியும், நெய்யும் வெண்ணெயும் கறிகாய் வியஞ்சனங்களும் வந்தன. ஒரு தட்டில்

இறைச்சிகளும் புத்தம் புதிதாக ஆற்றில் பிடித்துப் பக்குவம் செய்யப்பட்ட மீன் துண்டங்களும் இருந்தன. ஸ்ரீவைஷ்ணவன் என்ற முறையில் புலால் உணவை அறவே நீக்கத்தான் நான் விரும்பினேன். ஆனால், முழுக்க முழுக்கச் சாத்வீக உணவை மட்டுமே உட்கொள்வது நாடாளும் க்ஷத்திரிய வீரனுக்குச் சரிப்பட்டு வராதே!

ஏதோ சாப்பிட்டு முடித்தேன்.

ஒரு அலி வந்து சந்தனம் கரைத்த தண்ணீரை அறையெங்கும் தெளித்தான். ஒரு பெண் சொர்ணக் கலசத்தில் ரோஜா, சம்பங்கி, மல்லிகை, முல்லை, ஜாதி, இருவாட்சி முதலிய பூக்களைக் கொத்துக் கொத்தாகச் செருகி மஞ்சத்தின் மறுபுறத்தில் வைத்துவிட்டுச் சென்றாள்.

ஜாடியிலிருந்து சில புஷ்பங்களை எடுத்து அவற்றின் இனிய மணத்தை முகர்ந்து கொண்டிருந்த சமயம்...

ஜங்கமய்யா வந்தார்.

"சக்ரவர்த்தியின் திருக்கரத்தைத் தொட்டு அத்துமீறி நடந்து கொண்டுவிட்டேன்... மன்னிக்க வேண்டும்..." என்றார். மனப்பூர்வமாக அதைச் சொல்கிறார் என்பது அவர் குரலிலிருந்து தெரிந்தது.

"பாதகமில்லை. ஏதோ ஒரு முக்கிய நோக்கம் இருந்ததால்தானே அந்த உரிமையை எடுத்துக் கொண்டீர். அது இன்னதென்று சொல்லும்..." என்றேன்.

அப்போதுதான் அவர் கையிலிருந்த பித்தளைக் குழலைக் கவனித்தேன். அதன் மூடியைத் திருகி அகற்றி, அதனுள்ளிருந்து வெளிர் மஞ்சளான ஒன்றை எடுத்தார். லிகிதம் எழுதும் பட்டுத் துணியைப் போல லேசாகவும் இல்லை. ஆனால், சுருட்டி மடக்கக்கூடியதாக இருந்தது. அதில் ஏதோ எழுதப்பட்டிருப்பதும் தெரிந்தது.

“சக்ரவர்த்தி, இதன் பெயர் கடுதாசி, காகிதம் என்றும் சொல்கிறார்கள். பருத்தியையும் உலர்ந்த புல்லையும் மரக்கூழையும் கொண்டு இதைத் தயாரிக்கிறார்கள். சீனர்கள் ரகசியமாக வைத்திருந்த இந்தக் கலையை அரேபியர்கள் கற்றுக் கொண்டார்கள். பறங்கியர்கள் தற்சமயம் பாரத தேசத்தின் பல பகுதிகளில் ஓலைச்சுவடிகளுக்குப் பதில் இதைப் புழங்கவிட்டிருக் கிறார்கள்...” என்றார் ஜங்கமய்யா.

நான் பொறுமை இழந்தேன். “இந்த ஆராய்ச்சியைத் தெரிவிப்பதற்காகவா என்னை இத்தனை நேரம் காக்க வைத்திருந்தீர்?” என்று இரைந்தே கேட்டு விட்டேன்.

“இது எங்கிருந்து வந்ததென்று சக்ரவர்த்திக்குத் தெரிந்தால்... என்று அவர் இழுத்தார்.

“எங்கிருந்து?”

“ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து... என்று அவர் சொல்லி முடிக்கும் முன்னே அவர் கையிலிருந்த காகிதம் என்று சொல்லப் படும் அந்தப் பொருளைப் பறித்தேன். அதில் சில வரிகளே எழுதப்பட்டிருந்தன. ஆனால், என்ன மொழி என்பது தெரியவில்லை. கூர்ந்து பார்த்ததில், யோசித்துப் பார்த்ததில், ஒரிய மொழியாக இருக்கும் என்று தோன்றியது.

திராவிட மொழிகள் பலவும், வடபாரதத்து மொழிகள் சிலவும் எனக்குப் படிக்கவும், எழுதவும் தெரியும் என்றாலும், பக்கத்து ராஜ்யமான கலிங்கத்தின் ஒரிய மொழியை நான் கற்றது கிடையாது. கொஞ்சம் பயிலப் பார்த்து முடியாமல் விட்டுவிட்டேன். ஏனெனில், அந்த மொழியில் ஒரே சொல்லுக்குப் பல அர்த்தங்கள் உண்டு. உதாரணமாக, எதற்கெடுத்தாலும் பத்ர என்பார்கள். மகாபத்ர என்றால் மந்திரிகளுக்குத் தலைவரான பிரதம

மந்திரி என்றும் பொருள். நந்தவனத்துக் காவல்காரர் என்றும் பொருள். அந்தண சிரேஷ்டர் என்றும் பொருள்.

மறுபடியும் காகிதத்தைப் பார்த்தேன்.

“ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து வந்தது என்றா சொன்னீர்? யார்...? யார் அனுப்பியிருக்கிறார்கள்?” என்றேன்.

“காயத்ரி, சக்ரவர்த்தி... என்றார் ஜங்கமய்யா. “ஒரு குதிரை வீரன் அங்கிருந்து வந்து என்னிடம் தந்தான். ரகசியமாகத் தங்களிடம் உடனே சேர்ப்பிக்கும்படி காயத்ரி சொல்லியனுப்பியிருக்கிறாள்.”

என் குழப்பம் பின்னும் அதிகரித்தது. “காயத்ரியா... அந்தரங்கமான ஒரு வேலையை உம்மிடம் ஒப்படைக்கும் அளவுக்கு எப்படி அவளுக்கும் உமக்கும் பழக்கம்?”

“சக்ரவர்த்தி, நான் நகர ரோந்துப் பணியில் ஈடுபட்டிருப்பவன். அடிக்கடி அரண்மனையிலிருந்து இந்தப் பெண் வெளியே போவதும் வருவதுமாக இருப்பதைக் கவனித்தேன். விசாரித்தேன். சக்ரவர்த்திக்கு ஊழியமாகத்தான் அவள் காரியம் செய்கிறாள் என்று தெரிந்து கொண்டேன். யாரிடமும் தெரிவிக்க வேண்டாமென்று அவளே சொன்னாள். சக்ரவர்த்தி, அந்தப் பெண்ணிடம் எனக்கு அபிமானம் ஏற்பட ஒரு காரணம் உண்டு...

“என்ன காரணம்?”

“சிவசமுத்திரத்தில் என் மகள் தன் கணவனுடன் வசித்து வந்தாள். நமது படையெடுப்பின்போது அங்கே தளபதியாக இருந்த என் மருமகன் போரில் இறந்து போனான். என் மகள் சிவசமுத்திரம் நீர்வீழ்ச்சியில் விழுந்து உயிரை மாய்த்துக் கொண்டாள். இந்தப் பெண் காயத்ரிக்கு அவள் வயதுதான்... சாயல்கூட என் மகளைப் போலவே... அதனால் ஒரு பிரியம் ஏற்பட்டு...

*ஜங்கமய்யாவின் மகளின் கதையை என் செவிகள் கேட்கவில்லை. கையிலிருந்த அந்தக் கடுதாசியையும் அதிலிருந்த அந்நிய பாஷையையுமே என் கண்கள் வெறித்து நோக்கின.*

*காயத்ரி எனக்குச் செய்தி அனுப்பியிருக்கிறாள்! 'சக்ரவர்த்தி, தாங்கள் சந்தோஷமாக, உற்சாகமாக ஆரோக்கியமாக இருக்க வேண்டும்...' என்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தவள் செய்தி அனுப்பியிருக்கிறாள்! அப்படியானால் அது சின்னாதேவியைப் பற்றியதாகத்தான் இருக்கும்!*

*என்ன அது? என்ன அது? என்ன அது?*

# 16

காகிதம் என்று சொல்லப்பட்ட அந்தப் பொருளையும் அதில் எழுதப்பட்டிருந்த விசித்திரமான வாக்கியங்களையும் கையில் வைத்துக்கொண்டு, அழுவதா சிரிப்பதா என்று தெரியாதவனாக நின்றிருந்தேன். மறுபடி மறுபடி அதைப் பார்த்தேன். கலிங்க ராஜ்யத்தின் மொழியான ஓரிய எழுத்தைப் போலத்தான் தோன்றியது.

ஒரு பக்கம் காயத்ரியின் மீது நன்றி ஏற்பட்டது. எனக்குச் செய்தி அனுப்ப வேண்டுமென்பதற்காக இவ்வளவு மெனக்கெட்டிருக்கிறாளே என்று. இன்னொரு புறம் கோபமும் வந்தது. பெரும்பாலும் தமிழ்நாட்டு வழியே இந்தக் காகிதம் வரப்போவதால் யாருக்கும் ஓரிய மொழி தெரிந்திருக்காது என்று இவள் எண்ணியது சரிதான். ஆகவே, ரகசியமான செய்தியை யாரும் படித்தறிந்து கொள்ள முடியாது என்று நினைத்ததும் சரிதான். ஆனால் என்மேல் என்னதான் நம்பிக்கையிருக்கட்டும், என் அறிவின்மீது என்னதான் நம்பிக்கை இருக்கட்டும், எனக்கு ஓரிய மொழி தெரிந்திருக்கும் என்று இவள் எப்படி நினைக்கப் போயிற்று?

அத்துடன், காயத்ரிக்கும் கலிங்கத்துக்கும் என்ன சம்பந்தம்? இவளுக்கு எப்படி ஓரிய மொழி தெரிந்திருக் கிறது?

ஜங்கமய்யா இன்னும் நின்று கொண்டிருந்தார். ஒரு சாதாரண அதிகாரியின் முன்னே இப்படி அறிவிலி போல்

நிற்கிறோமே என்று எனக்கே அவமானமாயும் வெட்கமாயும் இருந்தது.

"நீங்கள் போங்கள்" என்று விடை கொடுத்தேன். "இதையெல்லாம் யாரிடமும் சொல்லவேண்டாம்!"

ஜங்கமய்யா பதறிப் போனார். "சக்ரவர்த்தி, நானும் என் குடும்பத்தினரும் பரம்பரை பரம்பரையாக இந்தப் பேரரசின் உப்பைத் தின்று உயிர் வாழ்ந்து வருபவர்கள். இந்த அடிமையின் வாயிலிருந்து எந்த ரகசியமும் வெளிப்படாது!" என்று உறுதி கூறிவிட்டுத் திரும்பினார்.

"இருங்கள்" என்று நிறுத்தினேன். "பறங்கியர்களும், அரேபியர்களும் இந்தக் காகிதம் செய்யும் முறையை அறிந்திருப்பதாகச் சொன்னீர்கள். அவர்களிடம் இந்தத் தொழிலில் பயிற்சி பெற்று, சாம்ராஜ்யத்தின் எல்லாப் பகுதிகளிலும் பரப்பும்படி நான் சொன்னதாக வாணிப அமைச்சரிடம் சொல்லுங்கள். வர்த்தக முன்னேற்றத்துக்கும் உதவும். ஏழை மக்களுக்குச் சிறு தொழிலாகவும் இருக்கும்" என்றேன்.

"இன்றே ஏற்பாடு செய்கிறேன் சக்ரவர்த்தி" என்று தெரிவித்துவிட்டு, இரு கைகூப்பி வணங்கியபடி புறப்பட்டார் ஜங்கமய்யா.

எல்லா எழுத்து விஷயங்களும் பனையோலைச் சுவடிகளிலேயே எழுதப்பட்டு வருகிறதே என்ற கவலை எனக்கு நெடுநாளாகவே உண்டு. பட்டுத்துணியில் எழுதப்படும் விஷயங்களும் ஓலை மாதிரிதான். அதிலும் அதிகம் எழுத முடியாது. செப்பேட்டிலும் கல்வெட்டிலும் அரசு, ஆலயங்களின் ஆணைகள்தான் பொறிக்கப் படலாமே தவிர காவியங்களைப் படைக்க முடியாது. அதற்கு ஒரு மாற்றாக இந்தக் காகிதக் கண்டுபிடிப்பு வந்ததே என்று ஓர் அற்ப சந்தோஷமும் உதித்தது. எனது எத்தனையோ கவலைகளுக்கிடையே.

அன்று இரவு காயத்ரியின் காகிதத்தைத் தலையணையின் கீழே வைத்துக்கொண்டு தூங்கினேன். அப்படியாவது அதன் பொருள் என் மூளைக்குள் ஏறாதா என்று ஒரு மூட நம்பிக்கை!

வாடிக்கைப்படி இரண்டு சேவகர்கள் இரண்டு கைகளிலும் இரண்டு பெரிய தீவட்டிகளை ஏற்றி எடுத்து என் முன்னிலையில் நின்று வணக்கம் செலுத்திவிட்டு, மாடத்துக்கு வெளியே அவற்றைக் கொண்டு சென்று மக்களுக்குக் காட்டிவிடடுப் போனார்கள். 'தீவட்டி சலாம்' என்று சொல்லப்பட்ட இந்த முறை யார் காலத்திலிருந்து ஏற்பட்டது, எப்படி வந்தது என்று எனக்குத் தெரியாது. அநேகமாக வடபாரதத்து முகலாய மன்னர்களிடமிருந்து வந்ததாக இருக்கும் என்பது என் ஊகம். 'தீவட்டி சலாம்' செய்தபின் வெளியே உள்ள மக்களுக்குக் காட்டினால் சக்ரவர்த்தி உடல் நலத்தோடு இருக்கிறார் என்று அர்த்தமாம்! காட்டப்பட வில்லை யென்றால் சக்ரவர்த்தி சுகவீனமாக இருக்கிறார் என்று பொருளாம்.

அதன்படி இந்தச் சடங்கைச் செய்தார்கள்.

சக்ரவர்த்தி உடல் நலத்தோடு இருக்கிறார். உள்ளம்தான் கந்தல் துணியாக இருக்கிறது என்பதைப் பிரஜைகளுக்குத் தெரிவிக்க எந்த முறையும் இல்லையே...!

பொழுது விடிந்தது.

வெளியே, ராஜதர்மங்களை நினைவூட்டும் வண்ணம் சஞ்சய நீதி, விதுரநீதி, சாணக்ய நீதி, பர்த்ருஹரியின் நீதி சதகம் ஆகியவற்றிலிருந்து சுலோகங்கள் பாடப்படும் குரல் கேட்டது. தினசரி வாடிக்கைதான் இது. சந்திரய்யா என்ற புலவரின் அன்றாடக் கடமை. ஆனால், அவருடைய குரல் கணீரென்று இருக்குமே? இன்று மென்மையாக, மெதுவாக இருக்கிறதே?

வெளியே பார்த்தேன். பத்துப் பன்னிரண்டு வயதுச் சிறுவன் ஒருவன் சுலோகங்களைப் பாடிக்கொண் டிருந்தான்.

என்னைக் கண்டதும் சாஷ்டாங்கத் தெண்டனிட்டு, பயந்த குரலில், ''அப்பாவுக்குக் காய்ச்சல், இன்று அரண்மனைக்கு வரமுடியவில்லை. என்னை அனுப் பினார்" என்றான்.

"நன்றாகத்தான் பாடுகிறாய். நல்ல குரல் இருக்கிறது உனக்கு. சுலோகங்களைத் தைரியமாகப் பாடு!" என்று சொல்லி முதுகில் தட்டிக் கொடுத்தேன்.

அதைச்சற்றும் எதிர்பாராத சிறுவன் பயத்தாலும் சந்தோஷத்தாலும் அதிர்ச்சியினாலும் உடல் நடுங்க மறுபடியும் விழுந்து விழுந்து நமஸ்காரம் செய்தான்.

அன்று அமைச்சரவைக் கூட்டத்தில் மிக முக்கியமான பிரச்னைகள் விவாதிக்கப் பட்டன.

"விஜயபுரம் சுல்தானான ஆதில்ஷாவை அடக்கியே ஆகவேண்டும். நாளுக்கு நாள் அவருடைய அத்துமீறல்கள் அதிகமாகி வருகின்றன" என்று விவாதத்தை ஆரம்பித்தார் பிரதம மந்திரி அப்பாஜி.

''மன்னிக்க வேண்டும்'' என்று குறுக்கிட்டார் அமைச்சர் நாடெண்டல கோபர். "இப்போது இருக்கிற பாமனி சுல்தான்களிலேயே விஜயபுரம் ஆதில்ஷா ஒருவர்தான் கொஞ்சத்துக்குக் கொஞ்சம் நேர்மை யானவராக இருக்கிறார். விஜயபுரம் என்றும் பீஜப்பூர் என்றும் பலவிதமாக அழைக்கப்படுகிற அவருடைய ராஜ்யத்தில், அவர் பரசுராமருக்கு ஒரு கோயில் கட்டியதாகக் கூடச் சொல்கிறார்கள். ஆதில் என்றாலே நியாயவான், நீதிமான் என்று பொருள்..." என்று அவர் சொல்லி முடிக்குமுன்-

"மேலும் நமக்கும் ஆதில்ஷாவுக்குமிடையே ஒரு சமாதான உடன்படிக்கை இருக்கிறது" என்று மெதுவான குரலில் எடுத்துக் காட்டினார் ராயசம் கொண்டமராசு.

அப்பாஜியின் செவியில் அது விழுந்ததாகத் தெரியவில்லை. "உடன்படிக்கையில் என்ன கூறியிருக்கிறது என்பதைத் தயவுசெய்து கவனியுங்கள். 'விஜயநகரப் பேரரசை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தவனோ, கலகம் புரிந்தவனோ, மோசடி பண்ணியவனோ விஜயபுர ராஜ்யத்துக்குச் சென்றால் சுல்தான் அவர்களுக்கு அங்கே அடைக்கலம் கொடுக்கக்கூடாது' என்பது ஒப்பந்தம். அப்படிப்பட்டவர்களை நம்மிடம் ஒப்படைத்துவிட வேண்டும். ஆதில்ஷா அப்படிச் செய்யவில்லையே? ஸித்தி என்பவரிடம் நாற்பதாயிரம் வராகன் கொடுத்து, கோவாவுக்கு அனுப்பினோம், பாரசீகத்திலிருந்து வந்திறங்கும் குதிரைகளை வாங்குவதற்காக. எவ்வளவோ வருடங்கள் நம்மிடம் விசுவாசமாக வேலை பார்த்தவர்தான் அந்த ஸித்தி. ஆனால், அவ்வளவு பெரிய தொகையைக் கண்டதும் பேராசை ஏற்பட்டுவிட்டது. கோவாவுக்குப் போகிற மாதிரி நமக்குப் போக்குக் காட்டிவிட்டு விஜயநகரத்துக்குப் போய் ஒளிந்து கொண்டார். சுல்தான் ஆதில்ஷா அவருக்கு விசேஷ மரியாதைகள் கொடுத்துத் தன்னிடம் வைத்துக் கொண்டிருக்கிறார். நாம் எவ்வளவு முறை சொல்லி அனுப்பியும் ஸித்தியை நம்மிடம் அனுப்பவுமில்லை... ஒப்படைக்கவுமில்லை... வெகு நீளமாகப் பேசியதால் வயோதிகர் அப்பாஜிக்கு மூச்சு இரைத்தது.

நான் இருப்பதையும் மறந்து காரணீகர் மங்கராசய்யா கடகடவென்று சிரித்து விட்டார். "எப்படி ஒப்படைப்பார் பாவம்! நான் கேள்விப்பட்ட வரையில் ஆதில்ஷா, ஸித்தியிடமிருந்து நாற்பதாயிரம் வராகன்களைப்

பறித்துக்கொண்டு அவரைக் கொலையும் செய்து விட்டாராம்!"

"எப்படியானால் என்ன? நாம் போர்ப் பிரகடனம் செய்ய வேண்டியதுதான்!" என்றார் அப்பாஜி.

நானும் அப்படித்தான் நினைத்தேன். முதலில் விஜயபுரம் சுல்தானை மடக்கிவிட்டால் பிறகு மற்ற நான்கு பாமனி சுல்தான்களையும் வீழ்த்திவிடுவது சுலபம் என்று நான் கணக்குப் போட்டு, எந்தெந்தப் படைக்கு யார் யாரைத் தளபதியாக நியமிக்கலாம் என்று கூடத் தீர்மானம் செய்து வைத்திருந்தேன். ஆனால், அதை உடனே அமைச்சரவைக் கூட்டத்தில் அறிவிக்காமல், 'யோசனை செய்து முடிவுக்கு வருவோம்" என்று சொல்லிவிட்டு எழுந்து கொண்டேன்.

ஏனெனில், இரண்டு அமைச்சர்கள் எதிரெதிராக வாதம் செய்யும்போது, மன்னராக இருப்பவர் உடனேயே ஒரு குறிப்பிட்ட அமைச்சருக்கு ஆதரவாகப் பேசிவிடக்கூடாது என்று நானே என் நூல்களில் எழுதியிருக்கிறேன். ஆதரிக்கப்பட்டவருக்குத் தலைக் கனமும் நிராகரிக்கப்பட்டவருக்குத் தலைக்குனிவும் ஏற்பட்டு விடும் என்பதால் இந்தக் கொள்கை.

அன்னையைப் போய்ப் பார்த்தாலென்ன என்று தோன்றியது. இதுவரை சொல்லாமல் வைத்திருக்கும் ரகசியங்களையெல்லாம் அவரிடம் சொல்லி ஒரு பாட்டம் புலம்ப வேண்டும் போலிருந்தது. சலவைக்குப் போடலாம், போடலாம் என்று அழுக்குத் துணிகளை மூட்டை மூட்டையாகச் சேர்த்து வைத்துக் கொண்டிருப்பவன் எவ்வளவு மூடனோ அவ்வளவு மூடன் நான்.

அன்னையின் அரண்மனைக்குப் போகலாமா என்று ஓரடி திரும்பியபோது எதிரில் இருவர் தயங்கித் தயங்கி என்னை நோக்கி வருவது தெரிந்தது.

ஒருவன், நாட்டியக் கூடம் அமைக்கும் பொறுப்பை ஏற்றுள்ள சிற்பி முத்து. மற்றவர் அவனுக்கு அவ்வப்போது யோசனைகள் கூறி வரும் நாட்டியாசாரியர். பந்தம் லக்ஷ்மிநாராயணா.

இருவருடனும் பேசிக் கொண்டு நிற்கும் மனநிலையில் நான் இல்லை. இருந்தாலும் பந்தம்காரு என்னுடைய வீணை ஆசானாகவும் இருப்பதால் மரியாதைக்காகச் சற்று நின்றேன். "என்ன முத்து, வேலையெல்லாம் வேகமாக நடக்கிறதா?" என்று விசாரித்தேன்.

"ரொம்ப நன்றாக நடக்கிறது, சக்ரவர்த்தி, தாங்கள் ஒரு பணி இட்டால் அது செவ்வையாக நடைபெறாமல் போகுமா?" என்று கூறிய முத்து, லக்ஷ்மிநாராயணாவின் முகத்தைப் பார்த்தான். இருவருமே ஒரே விஷயமாக வந்திருந்தாலும் அதை அவர் சொல்வதுதான் முறை என்று அவன் நினைப்பது தெரிந்தது.

"ஏதாவது பிரச்னையா, பந்தம்காரு?" என்று வினவினேன்.

"ஆமாம், சக்ரவர்த்தி. எங்களுக்குள் ஒரு சின்ன அபிப்பிராய பேதம்" என்றார் லக்ஷ்மிநாராயணா. அவர் இசைக்கும் வீணையைப் போலவே அவர் குரலும் மதுரமாக இருந்தது. "தயவுபண்ணி நாட்டியக் கூடத்துக்கு வந்து பார்த்தால்..." என்றார்.

"அதற்கென்ன, வருகிறேனே?" என்று அவர்களுடன் புறப்பட்டேன். முத்து கைகட்டிக் கொண்டு வழிகாட்டுகிற மாதிரி முன்னே நடந்தான்.

தேனீக் கூடு போல் சுறுசுறுவென்றிருந்தது நாட்டியக்கூடம். ஏராளமான சிற்பிகள் கல்லைக் கலையாக்கிக் கொண்டிருந்த நாதம் செவிக்குத் தேனாக இருந்தது. நான் சொன்னவாறே பல தூண்கள் வரிசையாக

நிறுத்தப்பட்டு, நாட்டியக் குமரிகளின் வகை வகையான கரணங்கள் வடிக்கப்பட்டிருந்தன.

"இப்படி வாருங்கள்" என்று என்னை ஒரு வரிசையின் கடைசித் தூணுக்கு அழைத்துச் சென்றார் லக்ஷ்மி நாராயணா.

"நடனத்தின் முடிவில் ஒரு பெண் எப்படி நிற்பாளோ அந்த நிலையைக் கடைசிச் சிற்பம் காட்ட வேண்டுமென்றும் அதைப் பார்த்து அந்தப் பெண் தன்னைத் திருத்திக் கொள்ள வேண்டுமென்றும் தாங்கள் சொன்னீர்கள், இல்லையா?" என்றார்.

"ஆமாம்" என்று கூறிவிட்டு அந்தச் சிற்பத்தை நோக்கினேன். அந்தச் சௌந்தர்யவதி நிற்கும் ஒயிலும் கைகளை வைத்துக் கொண்டிருக்கும் வனப்பும் அற்புதமாக இருந்தன.

"என்ன இதிலே, பந்தம்காரு? நன்றாகத்தானே இருக்கிறது?" என்றேன்.

"நாட்டிய சாஸ்திரப்படி சரியில்லை" என்றார் லக்ஷ்மிநாராயணா. "இந்தச் சிற்பம் மண்டல ஸ்தானத்தில் இருக்க வேண்டும். சமஸ்தானத்தில் இருக்கிறது..."

நான் குழம்பினேன். "இதோ பாருங்கள், பந்தம்காரு, நாட்டியக் கலையில் ஈடுபாடு கொண்டவன் நான். ஆனால் சாதாரண ரசிகன்தான். சாஸ்திர அறிவு துளியும் எனக்குக் கிடையாது. சம ஸ்தானம், மண்டல ஸ்தானம் என்றெல்லாம் சொல்லி என்னைப் பயமுறுத்தாதீர்கள்! சம ஸ்தானம் என்றால் என்ன, மண்டல ஸ்தானம் என்றால் என்ன?" என்றேன்.

"சக்ரவர்த்திக்கு நன்றாகத் தெரியும். தெரியாத மாதிரி நடிக்கிறீர்கள்" என்று சிரித்த லக்ஷ்மிநாராயணா, "சம ஸ்தானம் என்றால் நேராக நிற்பது, மண்டல ஸ்தானம்

என்றால் முழங்கால்களை மடித்தாற்போல் நிற்பது. இந்தக் கட்டடத்தில் இந்தப் பெண் மண்டல ஸ்தானத்தில்தான் நிற்க வேண்டும்" என்றார்.

"முத்து, உன் கட்சி என்ன?" என்றேன்.

"நாட்டியாசாரியருடைய கருத்து சரிதான், சக்ரவர்த்தி" என்று முத்து பணிவுடன் பதில் கூறினான். "சாஸ்திரப்படி பார்த்தால் ஆசாரியர் சொல்கிற மாதிரிதான் இந்தச் சிற்பம் இருந்திருக்க வேண்டும். ஆனால்..."

"ஆனால்?"

"சம ஸ்தானத்தில் நிற்கிற மாதிரி சிலை வடித்தால் நன்றாக இருக்குமே என்று நினைத்தேன். அதனால் என் கற்பனைப்படி செய்தேன்" என்றான் முத்து.

"சக்ரவர்த்தி என்ன நினைக்கிறீர்கள்?" என்று லக்ஷ்மிநாராயணா கேட்டார்.

"நான் நினைப்பதற்கு என்ன இருக்கிறது? தாங்கள் சாஸ்திரத்தை முக்கியமாக நினைக்கிறீர்கள். முத்து தன் கற்பனையை முக்கியமாக நினைக்கிறான்."

- முத்துவைப் பார்த்து புன்னகையுடன் சொன்னேன். "உன்னுடைய கற்பனை உள்ளத்தைப் பாராட்டுகிறேன் முத்து. ஆனால், முறைப்படி நாட்டியம் கற்றுக் கொள்கிறவர்களுக்கு உதவி செய்வதற்காகவே இந்தக் கூடத்தை நாம் கட்டி வருகிறோம். ஆகவே, சாஸ்திரம் எதுவோ அதுதான் இங்கே இடம் பெற வேண்டும். பந்தம்காரு சொல்கிறபடி மண்டல ஸ்தானத்தில் நிற்கிற மாதிரி சிற்பத்தை வடிப்பதுதான் முறை. இல்லையா?" என்றேன்.

முத்துவின் முகத்தில் சிறிது ஏமாற்றம் தெரிந்தாலும் அதை மறைத்துக் கொண்டு, "ஆசாரியர் சொல்கிறபடி

வேறு சிற்பம் செய்து இங்கே வைத்து விடுகிறேன் சக்ரவர்த்தி" என்றான்.

"கல்வியறிவு பணிவைத் தருகிறது என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். உன்னிடம் அறிவும் இருக்கிறது, பணிவும் இருக்கிறது" என்று அவனைப் பாராட்டிவிட்டுத் திரும்பினேன்.

பந்தம் லக்ஷ்மிநாராயணா என்னுடன் கூடவே வந்தார். "சக்ரவர்த்தி, என் சொந்த ஊரான கடகத்துக்குப் போய் மனைவி மக்களை இங்கே அழைத்து வந்துவிடலாம் என்றிருக்கிறேன்" என்றார்.

"ஆமாமாம், ரொம்ப நாளாகக் குடும்பத்தைப் பிரிந்திருக்கிறீர்களே?" என்றேன். அப்போதுதான் ஞாபகம் வந்தது அவர் கலிங்கத்தைச் சேர்ந்தவர் என்பது. கடகம் அதன் தலைநகர்.

இங்கே கலிங்கத்தைப் பற்றி உங்களுக்குக் கொஞ்சம் சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன்.

கிழக்குக் கடற்கரையில் உள்ள இந்த ராஜ்யம் வெளிநாட்டு வர்த்தகத்தினால் செழுமை பெற்றிருக்கிறது. சிலகாலம் விஜயநகர சாம்ராஜ்யத்துக்கு உட்பட்ட ராஜ்யமாகவும், சில காலத்துக்குப் பகை நாடாகவும் இருந்து வருகிறது. தற்சமயம் எங்கள் சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த சில இடங்களை இவர்கள் பிடித்து வைத்திருப்பதால் பகை நாடென்றே சொல்ல வேண்டும்.

ஒரு காலத்தில் சோழர்களுக்கு கப்பம் கட்டி வந்தவர்கள் இவர்கள். அதை நிறுத்தியதால் குலோத்துங்க சோழன் தன் தளபதி கருணாகரத் தொண்டமானை அனுப்பி, அனந்தவர்ம சோடகங்கன் என்ற கலிங்கத்து மன்னனைப் போரில் வென்றார். அந்த வெற்றியைப் போற்றிக் கவிஞர் செயங்கொண்டார் கலிங்கத்துப் பரணி பாடியதும், சோழவேந்தன் அவர் பாடிய ஒவ்வொரு

பாடலுக்கும் ஒவ்வொரு பொன் தேங்காய் பரிசளித்ததும் உங்களுக்கெல்லாம் தெரிந்ததே.

ஆனால், அப்போதிருந்த கலிங்கம் இப்போது இல்லை. எப்படி எப்படியோ மாறி இன்று கஜபதிகளின் வம்சம் ஆட்சி செலுத்தி வருகிறது. இவர்கள் தங்களைச் சூரியவம்சத்தார் என்று சொல்லிக் கொள்கிறார்கள். ராமபிரானுடைய குமாரர்களான லவன், குசன் இருவரில் குசனுடைய வழித் தோன்றல்கள் என்று பெருமையடித்துக் கொள்கிறார்கள். எந்த யானையை என்றைக்கு இவர்கள் அடக்கினார்களோ எனக்குத் தெரியாது ஆனால், ஒவ்வொரு மன்னனும் தன் பெயருடன் கஜபதி என்று சேர்த்துக் கொள்கிறார்.

இப்போது கலிங்கத்தின் மன்னராக இருப்பவர் பிரதாப ருத்ரகஜபதி. நல்ல அறிவாளிதான். கல்வி கேள்விகளில் ஒப்பற்றவர்தான். ஆனால், ஓரிய மொழியையும் தெலுங்கு மொழியையும் அலட்சியம் செய்து, சம்ஸ்கிருதத்துக்கு அதிக மதிப்பளிக்கிறார். அதனால் பல தெலுங்கு மொழி அறிஞர்களும் கலைஞர்களும் கஜபதியின் ஆஸ்தானத்திலிருந்து வெளி யேறி விஜயநகரத்தில் குடியேறி மதிப்புடன் வாழ்ந்து வருகிறார்கள்.

அப்படி வெளியேறிய சான்றோர்களில் ஒருவர் பந்தம் லக்ஷ்மிநாராயணா. என் வீணை குரு; நாட்டியாசாரியர்.

இவ்வளவையும் எழுதுவதற்குத்தான் இத்தனை நேரம் பிடித்ததே தவிர, ஒரு நொடியில் மின்னலென ஞாபகத்துக்கு வந்தன. கூடவே இன்னோர் எண்ணம்.

லக்ஷ்மிநாராயணா கலிங்கத்துக்காரர். ஓரிய மொழி அறிந்தவர். காயத்ரி கொடுத்தனுப்பியிருக்கும் காகிதத்தை இவரிடம் காட்டினால் அதில் என்ன செய்தி இருக்கிறது

என்பதைச் சொல்லக்கூடும். ஆனால், என் அந்தரங்கக் காதல் ஏற்கெனவே ஜங்கமய்யாவுக்குத் தெரிந்துவிட்டது இவருக்கும் தெரிந்தால்...

என் சிந்தனைகளைக் கலைத்தார் லக்ஷ்மிநாராயணா. "சக்ரவர்த்தி, இங்கே அரண்மனையில் பணிப்பெண்ணாக இருந்தாளே, காயத்ரி என்ற பெண், ஏன் அவளைக் கொஞ்ச நாளாகக் காணோம்?" என்று கேட்டார்.

"அவளை... உங்களுக்கு... என்று தடுமாறிப் போனேன் நான்.

"காயத்ரி எங்கள் ஊர்ப் பெண்ணாயிற்றே? மன்னர் பிரதாபருத்ர கஜபதியின் குடும்பத்தைச் சேர்ந்தவள். இங்கே ஏன் வந்து பணிப்பெண்ணாக இருக்கிறாள் என்று நான் அடிக்கடி ஆச்சரியப்படுவதுண்டு. அவளிடமே ஒருமுறை கேட்டேன்" என்று கூறி என்னை மேலும் மேலும் திடுக்கிட வைத்தார் பந்தம் லக்ஷ்மிநாராயணா.

# 17

"நிச்சயமாய்த்தான் சொல்கிறீர்களா?" என்று மீண்டும் ஒரு முறை கேட்டேன், பந்தம் லக்ஷ்மி நாராயணாவை. காயத்ரி ஏதோ ஒரு பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவள் என்று ஏற்கெனவே ஊகம் இருந்தபோதிலும், அன்னை அப்படிச் சொல்லியிருந்த போதிலும் கலிங்கத்துக் கஜபதியின் ராஜகுடும்பமாக இருப்பாள் என்று நான் கொஞ்சமும் நினைக்கவில்லை!

"சக்ரவர்த்திக்கு என் பூர்வீகம் தெரிந்ததுதானே?" என்றார் லக்ஷ்மிநாராயணா அமைதியாக. "முன்பு பிரதாப ருத்ர கஜபதியின் ஆஸ்தான கவிஞனாக இருந்தவன்தான் நான். உரிய மதிப்புக் கிடைக்காததால் அங்கிருந்து வெளியேறி இங்கே வந்தவன். கலிங்கத்தின் தலைநகரான கடகத்தில் இருந்தபோது பல சமயங்களில் அரண் மனைக்குப் போயிருக்கிறேன். அந்தப்புரத்துக்குக்கூடச் சென்றதுண்டு...

"அங்கே அரண்மனையில் இந்தப் பெண் காயத்ரியைப் பார்த்திருக்கிறீர்களா?"

"ஆமாம். பார்த்திருக்கிறேன். பிரதாப ருத்ரருக்குத் தம்பி மகள் என்றோ தங்கை மகள் என்றோ உறவு சொன்னார்கள். அரச மகளிரைப் பற்றி அதிகம் விசாரிப்பது நாகரிகமில்லை என்று விட்டுவிட்டேன். இந்த அரண்மனையில் அவளைப் பார்த்ததும் எனக்குத் திகைப்பாக இருந்தது. இங்கே எதற்காக வந்தாள், எப்படி வந்தாள் என்று ஆச்சரியப்பட்டேன்!"

"அவளையே கேட்டீர்களா?"

"கேட்டேன். 'ஒரு முக்கியமான காரியமாக வந்திருக்கிறேன். பிற்பாடு சொல்கிறேன்' என்றாள். 'யாருக்கும் என்னைப் பற்றிச் சொல்ல வேண்டாம்' என்றும் கேட்டுக் கொண்டாள். பாவம், அரசகுலத்துப் பெண்ணுக்கு என்ன கஷ்டமோ ஏதோ என்று இரக்கப்பட்டு நானும் பேசாமல் இருந்துவிட்டேன். தங்களுக்குக்கூடத் தெரிவிக்காதது தப்புதான். மன்னிக்க வேண்டும்" என்றார் லக்ஷ்மி நாராயணா.

"தப்பு ஒன்றுமில்லை, வீணாக வருத்தப்படாதீர்கள்" என்றேன். ஆனால், என் மனதுக்குள் ஒரு கொந்தளிப்பு நிகழத் தொடங்கிவிட்டது.

பகை நாடான கலிங்கத்திலிருந்து வந்திருப்பவள்... எதிரியான பிரதாப ருத்ரரின் குடும்பத்தைச் சேர்ந்தவள்....

அப்பாஜி ஆரம்பத்திலிருந்தே எச்சரித்துக் கொண்டிருந்தார், 'இவள் உளவு வேலைக்காக வந்திருக்கக்கூடும், நம்பாதீர்கள்' என்று. ஒருவேளை, அது உண்மைதானோ?

'தேரான் தெளிவும் தெளிந்தான் கண் ஐயுறவும் தீரா இடும்பை தரும்' என்ற குறளை வள்ளுவப் பெருமான் எனக்காகவே எழுதினார் போலும், யார், என்ன என்பதை ஆராயாமலே காயத்ரியை என் அந்தரங்க சேவகியாக ஏற்றுக் கொண்டாயிற்று. அதன்பின் அவளைப் பற்றி சந்தேகப் பட்டுக் கொண்டிருப்பது தீரா இடும்பை தரும் என்று உள்மனம் சொல்லிற்று. 'சக்ரவர்த்தி... தாங்கள் ஆரோக்கியமாக, சந்தோஷமாக, வெற்றி வீரராக வாழ வேண்டும். ஏனெனில், தங்கள் மூலம் நான் சாதித்துக் கொள்ள வேண்டிய காரியமொன்று இருக்கிறது' என்று காயத்ரி அடிக்கடி சொன்னதை ஞாபகப்படுத்திக் கொண்டேன். என்னால் ஒரு காரியம் ஆக வேண்டும்

என்றிருப்பவள் எனக்குத் துரோகம் செய்ய எண்ண மாட்டாள்.

"கொஞ்சம் என்னுடன் வருகிறீர்களா பந்தம்காரு?" என்றேன்.

"என் பாக்கியம்" என்று கூறிப் பின்தொடர்ந்து வந்தார் நாட்டியாசாரியர்.

தலையணையின் கீழிருந்த காகிதத்தை நான் வெளியெடுத்ததும், "ஓ, காகிதமா? இதை நான் பார்த்திருக்கிறேன்" என்றார்.

"நான் தங்களைக் கூப்பிட்டது இதைக் காட்டுவதற்காக அல்ல. இதில் என்ன எழுதியிருக்கிறது என்று தெரிந்து கொள்வதற்காக" என்றேன்.

காகிதத்தை வாங்கிக் கொண்டவர் இப்படியும் அப்படியுமாகத் திருப்பித் திருப்பிப் பார்த்தார்.

"ஓரிய லிபி மாதிரி இருக்கிறது. ஆகையால் தங்களுக்குத் தெரிந்திருக்கும் என்று நினைத்தேன்" என்றேன்.

"ஓரிய எழுத்துதான்... ஆனால், ஏதோ வித்தியாசம் தெரிகிறது" என்று தலையைச் சொறிந்து கொண்டார் லக்ஷ்மிநாராயணா.

"சிரமப்படாதீர்கள். இது ஒன்றும் பெரிய விஷயமில்லை. தற்செயலாகக் கிடைத்தது... காட்டினேன்" என்று நான் சொன்னதும், விட்டால் போதும் என்கிற மாதிரி அவர் வேகமாய்த் திரும்பிப் போய்விட்டார். அவர்மீது குற்றமில்லை. தெரியாத விஷயமொன்றைச் சந்திக்கும்போது அறிவாளியான எவருக்கும், ஏற்படுகிற லஜ்ஜை அவருக்கும் ஏற்பட்டு விட்டது போலும்!

முழுசாய் இரண்டு நாட்கள் இப்படியே ஓடிவிட்டன. எவ்வளவுக்கெவ்வளவு அவசரம் என்று சொல்லி காயத்ரி

செய்தி அனுப்பினாளோ, அவ்வளவுக்கவ்வளவு தாமதம் ஏற்பட்டுக் கொண்டிருந்தது.

மூன்றாம் நாள் காலை.

இருள் பிரியுமுன்பே தினசரி அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு வெளியே வந்தேன். செந்தழலாக வானத்தில் சூரியன் மெள்ள மெள்ள எழும்பிக் கொண்டிருக்கும் அழகை ரசித்தபோது 'ஆதித்ய ஹ்ருதய' ஸ்தோத்திரம் ஞாபகம் வந்தது. 'உதய பர்வதத்தில் வசிக்கும் உமக்கு நமஸ்காரம். மேற்கு மலையில் அஸ்தமிக்கிற உமக்கு நமஸ்காரம். ஜோதி மண்டலங்களுக்குத் தலைவராயும் தினத்துக்கு அதிபதியாயும் இருக்கும் உமக்கு நமஸ்காரம்' என்று சொல்லிக் கொண்டேன்.

திரும்பிப் பார்த்தபோது, அடுத்த அரண்மனை கண்ணில் பட்டது. அது அன்னையாரின் அரண்மனை.

வாசலில் காவலர்கள் நின்றிருந்த போதும், இரண்டு மூன்று பேர் பயந்து பயந்து வெளியேறிக் கொண் டிருப்பதைக் கண்டேன். கூர்ந்து பார்த்தபோது, அவர்கள் கிராம தேவதைகளுக்குப் பூஜை செய்யும் பூசாரிகள் என்று தோன்றியது.

அன்னை நாகலாம்பிகை வாசல் வரை வந்து, 'போங்கள்! சீக்கிரமாய்ப் போய்விடுங்கள்!' என்று சொல்கிற மாதிரி அவர்களுக்கு விடை கொடுத் தனுப்புவதைப் பார்த்தேன்.

தருமம் என்று கேட்டு யார் வந்தாலும் கையில் இருப்பதைத் தூக்கிக் கொடுத்து விடுவது என் அன்னையின் சுபாவம். தகுந்த அதிகாரி மூலம் தக்கபடி விசாரித்து விட்டுத் தானதருமம் செய்யும்படி அப்பாஜி எவ்வளவோ முறை சொல்லி விட்டார். நானும் சொல்லியிருக்கிறேன். அன்னை கேட்கவில்லை. அதுதான் அவருடைய

சந்தோஷம் என்று தெரிந்த பின்னர் தடுத்துக் கொண்டிருப்பானேன் என்று விட்டுவிடடோம்.

அம்மாவின் அப்பாவித்தனத்தை அறிந்து எனக்குச் சிரிப்பு வந்துவிட்டது. வெகுதூரத்தில் நின்றிருந்தபோதிலும் அவர் என்னையும் பார்த்து விட்டார். என் சிரிப்பையும் கண்டுவிட்டார்.

என்னை நோக்கி அவர் நடந்து வரவே, சிவிகை தூக்கிகள் ஓடி வந்தார்கள் அவரிடம். ஆனால், பல்லக்கு வேண்டாம் என்று தெரிவித்துவிட்டு நடந்தே வந்தார் அன்னை. நான் கீழே இறங்கிச் சென்று "வாருங்கள் அம்மா" என்று வரவேற்று, கையைப் பிடித்து மேல்தளத்துக்கு அழைத்துப் போனேன். இதற்கு முன்பும் எத்தனையோ தடவை என் கையைப் பிடித்துக்கொண்டு வந்திருக்கிறார். ஆனால் இம்முறை அவர் பிடியில் அழுத்தமில்லை. தளர்ந்திருந்தது. வயோதிகத்தின் அடையாளம் அது என்பதை நினைக்கையில் எனக்கு வருத்தமாயிருந்தது.

"சற்று முன் என்னைப் பார்த்ததும் சிரித்தாயே, எதற்கு, கிருஷ்ணா?" என்று கேட்டார் அம்மா.

"எதற்குச் சிரித்தேனென்று உங்களுக்கே தெரியும்" என்றேன். "கையும் களவுமாக ஒரு திருட்டுத் தனத்தில் பிடிபட்டு விட்டீர்கள் என்றுதான் சிரித்தேன்."

"சே... சே... திருட்டுத்தனமென்றெல்லாம் சொல்லாதே. அது தெய்வ காரியம்" என்றார் அம்மா.

"தெய்வ காரியம் என்று சொன்னால்தான் உங்களிடம் தாராளமாய்ப் பறிக்கலாம் என்று வருபவர் களுக்குத் தெரியாதா?" என்றேன்.

"கேலி பேசாதே, கிருஷ்ணா" என்று கண்டித்தார் தாய். "சித்தூருக்குப் பக்கத்தில் உள்ள ஒரு கிராமத்திலிருந்து வந்திருந்தார்கள் அவர்கள். எல்லம்மன் கோயிலுக்கு விரல்

அரிசி மானியம் வேண்டுமென்று கேட்டார்கள்... கொடுத்தேன்."

நான் சிரித்தேன். "அதென்னம்மா, விரல் அரிசி? பச்சரிசி என்று கேள்விப் பட்டிருக்கிறேன். புழுங்கல் அரிசி என்று கேள்விப்பட்டிருக்கிறேன். இது புது அரிசியாக இருக்கிறதே?"

"விரல் அரிசி என்றால்... என்று ஆரம்பித்தவர், "வேண்டாம், வேண்டாம்... உன்னிடம் சொன்னால் வம்பு" என்று நிறுத்திக் கொண்டார்.

"சொல்ல வேண்டாம்... இரண்டு சேவகர்களை அனுப்பி அந்த ஆட்களை இழுத்து வரச்சொல்லி, அவர்களிடமே கேட்டுத் தெரிந்துகொள்கிறேன்" என்றேன்.

"ஐயோ, அப்படி ஏதாவது செய்துவிடாதே. நானே சொல்கிறேன். ஆனால், ஒரு நிபந்தனை."

"என்னம்மா?"

"ஏற்கெனவே நீ நரபலிகளை நிறுத்த வேண்டுமென்று சொன்னதில் அப்பாஜிக்கு வருத்தம். ஜனங்களின் நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும் தானாக மாற வேண்டுமேயொழிய, அரசாங்கம் ஆணை போட்டுத் தடை செய்யக்கூடாது என்று அவர் நினைக்கிறார். ஆகையால், இந்த விஷயத்திலும் நீ தலையிட்டுத் தடை கிடை என்று ஆரம்பித்துவிடக் கூடாது. என்ன?"

"சரி, தாயே" என்றேன்.

"இப்போது வந்தவர்களின் கிராமத்தில் கால பைரவர் கோயில் இருக்கிறது. அங்கே விவசாயிகள் வேண்டிக் கொள்கிறார்கள். இந்த வருஷம் நல்ல மகசூல் இருந்தால்...

அன்னை தயங்கினார்.

"இருந்தால்?" என்று தூண்டினேன்.

"தாங்கள் மனைவியின் இரண்டு விரல்களை - சுண்டு விரலையும் மோதிர விரலையும் வெட்டிக் காணிக்கை தருவதாக" என்று அன்னை சொன்னதும்...

"நன்றாயிருக்கிறதே நியாயம்!" என்றேன் நான். "யார் வேண்டிக்கொண்டார்களோ அவர்கள் தங்கள் விரல்களை வெட்டிக் கொள்ளட்டுமே? மனைவிகளின் விரல்களை வெட்ட இவர்களுக்கென்ன உரிமை?"

"பார்த்தாயா, பார்த்தாயா? இதற்குத் தான் சொல்லமாட்டேன் என்றேன்" என்றார் அம்மா. "அந்தப் பெண்களே இஷ்டப்பட்டு வேண்டிக் கொள்கிறார்களோ என்னவோ, நமக்கு எப்படித் தெரியும்?"

"எதை எடுத்தாலும் ஒரு சமாதானம் வைத்திருக் கிறீர்கள்! இருக்கட்டும், அதற்கும் இந்த விரல் அரிசிக்கும் என்ன சம்பந்தம்?" என்று கேட்டேன்.

"காலபைரவர் கோயில்களில் இந்தக் காணிக்கையை நிறைவேற்றுவதற்காகவே ஒரு பொற்கொல்லர், நாவிதர், அர்ச்சகர், வைத்தியர், காவல்காரர் என்று பல பேர் இருக்கிறார்கள். விரல்களை வெட்டிய பிறகு, ரத்தம் கொட்டாதபடி மூலிகை கட்டி, துணி சுற்றுவதற்குச் சிப்பந்திகள் உண்டு. அவர்களுக்கெல்லாம் விவசாயிகள் அரிசி கொடுக்க வேண்டும். அதை 'விரல் அரிசி' என்று சொல்வார்கள். இப்போது வந்தவர்கள் அந்தக் கோயிலைச் சேர்ந்தவர்கள். பக்தர்கள் கொடுக்கிற விரல் அரிசி போதவில்லையாம். மானியம் தரவேண்டுமென்று கேட்டார்கள்."

"ஹூம் நல்ல பழக்கம்! நல்ல வழக்கம்!" என்று பெருமூச்சு விட்டபடி கீழே பார்த்தேன். ராஜவீதி 'ஜே ஜே' என்றிருந்தது. அரண்மனை வாசலில் குதிரைப்படை வீரர்கள் ஒவ்வொருவராகக் குதிரையுடன் வந்து, அன்றைய செலவுக்கான பணத்தைப் பெற்றுக்கொண்டு சென்றார்கள்.

அரண்மனையில் ஊழியம் செய்யும் தொழிலாளர்களுக்கு அதிகாரிகள் அச்சாரம் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அதிகாரிகள். அடுத்தடுத்துக் கடைவீதியாகையால், வியாபாரிகளும் தரகர்களும் மேல் வேட்டிக்குள் கைகளை மறைத்துக் கொண்டு தங்களுடைய சங்கேத பாஷையில் பண்டங்களின் விலை குறித்துப் பேரம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

வீதியின் கோடியிலிருந்து மேளவாத்தியங்களின் ஒலியும் பஜனை கோஷ்டியின் பாடலும் கேட்டன. அவற்றின் நடுவே ஒரு கம்பீரமான குரல் ஒலித்தது. 'ஹரி நாராயண, ஹரி நாராயண, ஹரி நாராயண எனு மனவே" என்று.

அதைக் கேட்டவுடனே அன்னை உப்பரிகையிலிருந்து எட்டிப் பார்த்து, "தாஸர் வருகிறார். கிருஷ்ணா, வா, வா" என்று பரபரத்து என்னையும் வேகமாக அழைத்துக்கொண்டு, "இந்த ராஜவீதியில், அதுவும் நமது அரண்மனை வாசலில் தாஸர் உஞ்சவிருத்திக்கு வருகிறாரென்றால் அது எப்பேர்ப்பட்ட பாக்கியம்!" என்று சொல்லிக்கொண்டு, என் அறையிலிருந்த பெட்டியிலிருந்து கை நிறையப் பொன் நாணயங்களை எடுத்துக்கொண்டு படிகளில் இறங்கினார். நானும் வேகமாகத் தொடர்ந்தேன்.

தாஸர் என்று அம்மா குறிப்பிட்டது மகான் புரந்தரதாஸரை. இதே ஊரில், வைர வியாபாரியாக வாழ்ந்து, கோடி கோடியாகச் சம்பாதித்து, சீனப்பநாயக்கன் என்ற அசல் பெயர் மாறி நவகோடி நாராயணன் என்று புகழ் பெற்றதும், பத்தினி சரஸ்வதி பாயின் பக்தியினாலும் ஒரு வைரமூக்குத்தியை வைத்துப் பாண்டுரங்கப் பெருமான் செய்த திருவிளையாடலினாலும் ஒரே நாளில் மனம் மாறி, சொத்து சுகங்களனைத்தையும் ஏழை எளியவர்களுக்குக் கொடுத்துவிட்டு ஊர் ஊராகச் சென்று இறைப்பணியிலும்

இசைப்பணியிலும் ஈடுபட்டதும் நீங்கள் எல்லாரும் அறிந்ததே.

சில வருடங்களுக்கு முன்பு வியாச தீர்த்தரிடம் சக்ஷு தீட்சை, கர தீட்சை, ஸ்பர்ச தீட்சை என்று மூன்று தீட்சைகளையும் பெற்ற பின், இமாசலம் முதல் கன்யாகுமரி வரையில் க்ஷேத்ராடனம் செய்துவிட்டு, சென்ற மாதம்தான் திரும்பியிருந்தார். பம்பா க்ஷேத்திரத்தில் ஒரு மடத்தில் அவரும் பத்தினியும் நான்கு பிள்ளைகளும் வசித்து வருகிறார்கள். ஒவ்வொரு நாள் ஒவ்வொரு தெரு வழியே செல்பவர் இன்று ராஜவீதிக்கு வந்தது எங்கள் பாக்கியம்தான்.

நாங்கள் அரண்மனை வாசலை அடைந்தபோது, புரந்தரதாஸர் ஒரு கையில் தம்புராவும் மறுகையில் சப்ளாக் கட்டையுமாகப் பாடியபடி வந்து கொண்டிருந்தார். அவருடைய தர்மபத்தினியின் கையில் செப்புச் செம்பு இருந்தது. அதில் பக்தர்கள் அரிசி போட்டு, வலம் வந்து வணங்கினார்கள். சற்றுப் பின்னே, தாஸரின் நான்கு பிள்ளைகளும் தந்தை பாடும் கன்னடப் பதங்களைப் பனையோலையில் எழுத்தாணிகொண்டு எழுதிக்கொண்டு வந்தார்கள்.

நானும் அன்னையும் தாஸரின் காலடியில் விழுந்து வணங்கினோம். 'பாண்டுரங்க விட்டலா' என்று மட்டுமே சொல்லி என் தலையில் அவர் கை வைத்து ஆசீர்வதித்த போது எனக்கு மெய் சிலிர்த்தது. பணிப்பெண்கள் கொண்டு வந்த தூய நீரால் அவர் கால்களைக் கழுவி, அந்தத் தீர்த்தத்தைத் தன் மேலும் என் மேலும் தெளித்து, சரஸ்வதி பாயின் செம்பில் பவுன் நாணயங்களைப் போட்டார் அம்மா.

விஜயநகர சாம்ராஜ்யத்தின் சக்ரவர்த்தியும் அவருடைய மாதாவும் நடுத்தெருவில் இப்படி விழுந்து

வணங்குகிறார்களே என்று சுற்றிலுமிருந்த ஜனக்கூட்டம் தான் ஸ்தம்பித்து நின்றதே தவிர, தாஸரிடம் எந்தச் சலனமும் தென்படவில்லை. 'பாரய்ய ரங்கா, பாரய்ய கிருஷ்ணா, பாரய்ய ஸ்வாமி பாரய்ய' என்று பாடியவண்ணம் எங்களைக் கடந்து சென்றுவிட்டார்.

அரண்மனைக்குள் திரும்பியதும் என் அன்னையார், "ஒரு பரிதாபம் கவனித்தாயா, கிருஷ்ணா?" என்றார்.

"கோடீசுவரராக வாழ வேண்டியவர் இப்படிக் குடும்பத்தோடு அலைந்து, ஜனங்களிடம் பிட்சை வாங்கி ஜீவிக்கிறாரே என்கிறீர்களா?" என்றேன்.

"அது அவர் விரும்பி ஏற்றுக்கொண்டிருக்கும் வாழ்க்கை. நான் அதைச் சொல்லவில்லை. இதுவரை தாஸர் இயற்றியுள்ள தேவர்நாமாக்கள், பதங்கள் இதெல்லாம் மூன்று லட்சம் இருக்கும், இல்லையா?"

"இருக்கலாம்" என்றேன்.

"அதனால்தான் அவரைச் சங்கீத பிதாமகர் என்று சொல்கிறார்கள். மாயாமாளவ கௌளை ராகத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, சங்கீத மாணாக்கர்களுக்கு அதை அடிப்படைப் பாடமாக அமைத்தவர் தாஸர்தான்" என்றார் அம்மா.

"அப்படியா?" என்றேன். அம்மாவின் அளவுக்கு எனக்குச் சங்கீத ஞானம் கிடையாது. நாட்டியத்தைப் போலத்தான் இதிலும். சாஸ்திரம் பற்றிய விவாதங்கள் எழும்போது மெதுவே நழுவி விடுவேன்.

"பரிதாபம் என்று ஏதோ சொன்னீர்களே?" என்றேன்.

"ஆமாம். அப்படிப்பட்ட ஞானியின் பதங்களை அவருடைய பிள்ளைகளும் சீடர்களும் ஓலைச்சுவடியில் எழுதி வைத்துக்கொள்வதைப் பார்த்தால் பரிதாபமாக இல்லையா? இவை எத்தனை நாளைக்குத் தாங்கும்? யுகம்

யுகமாகப் பாதுகாக்க வேண்டிய எவ்வளவோ பொக்கிஷங்கள் ஓலைச்சுவடிகளில் மக்கிக் காணாமற் போன மாதிரி இவையும் போய்விடும்!" என்று அன்னை வருத்தத்துடன் சொன்னபோது...

"பனையோலைக்குப் பதிலாக வேறொன்று கண்டுபிடித்திருக்கிறார்கள், அம்மா. இதோ பாருங்கள்" என்று என்னை மறந்து பேசியவன், என்னை மறந்து அந்தக் காகிதத்தைத் தலையணையின் கீழிருந்து எடுத்துக் காட்டினேன். "இதைக் காகிதம் என்று சொல்கிறார்கள். இது தேசமெங்கும் பரவினால் மேதைகளின் நூல்களைப் பத்திரப்படுத்த வழி கிடைக்கும்...

ஆனால், அன்னையின் கவனம் நான் சொன்ன தகவலில் செல்லாமல் நான் காட்டிய பொருளில் சென்றது. "என்ன இது, ஓரிய எழுத்துபோல் இருக்கிறதே?" என்று கூறி அந்தக் காகிதத்தை வாங்கிப் பார்த்தார்.

அப்போதுதான் என் முட்டாள்தனத்தை உணர்ந்தேன். அன்னைக்குத் தெரிந்த மொழிகள் ஏராளம். அதில் ஓரிய பாஷையும் ஒன்றாக இருந்தால் காயத்ரியின் செய்தியைக் கண்டுவிடுவாரே?

"ஆமாம், இது ஓரிய லிபிதான். ஆனால், தந்திரமாகத் திருப்பி எழுதியிருக்கிறார்கள் என்று தோன்றுகிறது. என்னோடு வா, காட்டுகிறேன்" என்றார் அம்மா.

வேறுவழியில்லாமல் சென்றேன்.

அடுத்த அறையில் இருந்த பெரிய நிலைக்கண்ணாடியின் முன்னே போய் நின்றார் அம்மா. அந்தக் காகிதத்தைக் கண்ணாடியில் காட்டினார்.

எழுத்துக்கள் திருப்பிப் போட்டாற்போல் தெரிந்தன இப்போது.

"பார்த்தாயா? நான் சொன்னது போல் இது ஒரிய மொழிதான்... திருப்பினாற்போல் எழுதியிருக்கிறார்கள்" என்று சொல்லிக் கொண்டிருந்தவர் சட்டென்று பேச்சை நிறுத்திக் கொண்டார். காகிதத்தில் இருந்த வாக்கியங் களையும் என்னையும் மாறி மாறிப் பார்த்தார். அவர் முகத்தில் கடுமை நிலவியது. குரலிலும்தான்.

"கிருஷ்ணா, என்ன இது?" என்றார்.

"வந்து... என்னம்மா..." என்று தடுமாறினேன்.

"கொஞ்ச நாளாகவே நீ என்னிடம் என்னென்னவோ மறைத்துக்கொண்டு வருகிறாய். உன் நடவடிக்கைகள் மர்மமாக இருக்கின்றன..."

அம்மாவிடம் எல்லாவற்றையும் சொல்லிவிட்டால் மனப்பாரம் குறையும் என்று இரண்டு தினங்களுக்கு முன் நான் நினைத்தது உண்மையே. ஆனால், அந்தத் தருணம் எதிரே வந்து நின்றதும் என் தைரியம் விடைபெற்றுக் கொண்டது.

"சொல்லு. கிருஷ்ணா" என்றார் அம்மா.

"அந்தக் காகிதத்தில் என்ன எழுதியிருக்கிறது?" என்று கேட்டேன்.

"அதை அப்புறம் சொல்கிறேன். முதலில் உன் விஷயத்தைச் சொல்லு" என்றவர், "பெற்ற தாயிடம்கூடவா உனக்கு ஒளிவு மறைவு?" என்றார்.

அந்த வாக்கியத்தைக் கேட்ட கணமே நான் உடைந்து போனேன்.

# 18

"பெற்ற தாயிடம் கூடவா உனக்கு ஒளிவு மறைவு?"

அன்னை இப்படிக் கேட்டதும், கொஞ்ச நேரத்துக்கு என்னால் எதுவுமே பேச முடியவில்லை.

சாளரத்தின் வழியே வெளியே பார்த்தபடி நின்றேன். நந்தவனத்தில் இருந்த அத்தனை செடிகளும் அத்தனை கொடிகளும் அத்தனை பூக்களும் என்னைப் போலவே வாயடைத்து நிற்கிற மாதிரி இருந்தன.

"என்ன கிருஷ்ணா? சொல்ல மாட்டாயா?" என்று மறுபடியும் அன்னை கேட்டார்.

நான் மெள்ள அவரை நோக்கித் திரும்பினேன் எனினும், அவருடைய கண்களை நேருக்கு நேர் சந்திக்கும் தைரியம் ஏற்படவில்லை. தலையைக் குனிந்து கொண்டு, "வேண்டாம், அம்மா, என் வேதனைகள் என்னுடனேயே இருக்கட்டும். எந்த மகனும் தன் தாயிடம் பேசக்கூடிய பிரசினை அல்ல என்னுடைய பிரசினை" என்றேன்.

"அப்படியா சொல்கிறாய்?" என்றார் அன்னை பரிவோடு, "எந்த மகனுக்கும் தாய்தான் மிக நெருங்கிய பந்து என்றல்லவா நான் நினைத்து வந்திருக்கிறேன்!"

நான் சுற்று முற்றும் பார்த்தேன். எழுத்தாணியும் ஓலையும் வைத்துக்கொண்டு அரண்மனை ஊழிய னொருவன் அருகில் நின்றிருந்தான்.

என்னைப் பார்க்க வருகிறவர்களைப் பற்றியும், நான் சொல்கிற விஷயங்களைப் பற்றியும் நாட்குறிப்புப் போல

அவ்வப்போது எழுதி வைத்துக் கொள்வது அவன் வேலை. பிற்பாடு நான் அதைச் சரிபார்ப்பேன். மிகவும் நம்பகமான, மிகவும் ராஜ விசுவாசியான ஆள்தான் அந்த வேலைக்கு அமர்த்தப்படுகிறான். இருந்தாலும், பல சமயங்களில் அவன் இருப்பதை நான் விரும்புவதில்லை. போகச் சொல்லிவிடுவேன். இப்போதும் அதுபோல் தலையை அசைத்ததும் அவன் போய் விட்டான்..

"அது ஒரு நீண்ட கதை, தாயே" என்று நான் தொடங்கியதும், பரவாயில்லை என்பது போலக் கை அசைத்தார்.

நான்கு வருடங்களுக்கு முன்னால் ஒரு பாகவத மேளா நாடகத்தின்போது சின்னாதேவியை நான் சந்தித்தது முதல் கஜபதியின் குடும்பத்தைச் சேர்ந்தவள் காயத்ரி என்று பந்தம் லக்ஷ்மிநாராயணா தெரிவித்தவரை... சொல்லி முடித்தேன்.

அம்மா என் மீது வைத்த கண்ணை எடுக்காமல் என்னையே பார்த்துக்கொண்டிருந்தார். குறுக்கிட்டு ஒரு வார்த்தையும் பேசவில்லை. இந்த விஜயநகர சாம்ராஜ்யம் மண்ணோடு மண்ணாகி விடும் என்று மல்லண்ணா கொடுத்த சாபத்தைப் பற்றி நான் சொன்னபோது மட்டும் அவர் — உடல் லேசாக நடுங்கியது. 'ஹரி, ஹரி' என்று சொல்லியபடி கழுத்தில் அணிந்திருந்த துளசிமாலையை எடுத்துக் கண்ணில் ஒற்றிக்கொண்டார்.

நான் பேசி முடித்ததும் ஒரு கணம் மௌனமாக இருந்தார். பிறகு "இம்மாடி தேவராயரின் பொக்கிஷப் பெட்டியைத் திறக்க வேண்டுமென்று நீ பிடிவாதம் பிடித்ததும் இதனால்தானா?" என்று கேட்டார்.

"ஆமாம், அம்மா. மல்லண்ணாவின் நவரத்தின ஹாரத்தை எடுத்துத் தந்து எதிராஜனைச் சமாதானப்

படுத்த வேண்டுமென்று நினைத்தேன். எப்படியாவது.. எப்படியாவது..."

நான் சொல்லக் கூச்சப்பட்டதை அன்னை புரிந்து கொண்டார். "சின்னா தேவியை அடைய வேண்டும் என்கிறாய்?" என்றார்

''ஆமாம் அம்மா'' என்று தலைகுனிந்தவாறு பதிலளித்தேன். 'அவள் மீது நான் கொண்டுள்ள... கொண்டுள்ள...

"காதலை? தைரியமாகச் சொல்லேன் அந்த வார்த்தையை!" என்றார் அம்மா. 'நல்லது, என்றபடி மஞ்சத்தின் மீது வைத்திருந்த காகிதத்தை எடுத்தார்.

"நல்லது. இப்போது இதில் உள்ள செய்தியைச் சொல்கிறேன். கேள்."

ஆவலை அடக்க மாட்டாதவனாக அவரருகில் போய் நின்று கொண்டேன். அம்மா படித்தார்.

"சின்னாதேவி இந்த ஊரில் இல்லை. நேரில் வந்து விவரம் சொல்கிறேன் காயத்ரி."

நான் துடித்தேன். ஆனால், வாய் திறந்து. எதுவும் பேசுவதற்கு முன்

ஒரு பணிப்பெண் கையில் வெள்ளிப் பூக்குடலை யுடன் எட்டிப் பார்த்தாள்.

"பிறகு பேசலாம். என்னுடன் கோயிலுக்கு வா. நீ பிறக்க வேண்டும் என்பதற்காக மாதங்க பர்வதத்தின் அடிவாரத்தில் நாகப்பிரதிஷ்டை செய்தேன். அன்று முதல் மாதம் தவறாமல் அங்கே போய்க் கொண்டிருக்கிறேன். இன்று நீயும் வா" என்றார் அன்னை.

அம்மாவின் முகத்திலிருந்தும் பேச்சிலிருந்தும் என்னால் எதையும் ஊகிக்க முடியவில்லை. சின்னா தேவிக்கும் எனக்கும் உள்ள காதலை அவர்

அங்கீகரிக்கிறாரா நிராகரிக்கிறாரா என்று தெரியாமல் என் உள்ளம் குழம்பியது. அத்துடன் சின்னாதேவியைக் காணோம் என்ற காயத்ரியின் செய்தி என் திகிலை விநாடிக்கு விநாடி அதிகரித்துக் கொண்டிருந்தது.

வீதியில் இறங்கியபோது அப்பாஜி பதைபதைப்புடன் எதிரில் வந்து, "என்ன சக்ரவர்த்தி, இப்படிச் சாதாரணமாகப் புறப்படுகிறீர்கள்?" என்று என்னையும், "ராணி, தாங்கள் பல்லக்கில் செல்லாமல் இப்படிப் போகலாமா?" என்று அம்மாவையும் கடிந்து கொண்டார் பிரஜைகளின் மத்தியில் சாதாரண மனிதர்களைப் போலப் போவது எனக்கும் அம்மாவுக்கும் பிடித்த விஷயம். அப்பாஜிக்குப் பிடிக்காத விஷயம்.

"பாதகமில்லை. கொஞ்சம் காலாற, காற்றாட நடக்கிறோம்" என்று அன்னை சொல்லவே, அப்பாஜியினால் முணுமுணுப்பதைத் தவிர வேறெதுவும் செய்ய முடியவில்லை.

புரவி வீரனொருவன் மட்டும் வழியேற்படுத்தியபடி முன்னே சென்று கொண்டிருந்தான். ஆங்காங்கே ஜனங்கள் பயபக்தியுடன் ஒதுங்கி நின்றார்கள். சிலர் நெடுஞ்சாண் கிடையாக அம்மாவின் காலில் விழுந்து வணங்கினார்கள்.

வெளிக்கோட்டை வாசலை அடைந்த சமயம் ஒரு சிறு கும்பல் கூடியிருந்தது. ஓர் ஏழைப் பெண் நடுத்தெருவில் நின்றிருந்தாள். அவளைச் சுற்றி இரண்டு முழதூரத்துக்கு இடம்விட்டு வட்டமாக ஒரு கோடு கிழிக்கப்பட்டிருந்தது.

தலைகுனிந்து அழுது கொண்டிருந்த அந்தப் பெண், என்னையும் அன்னையாரையும் கண்டவுடன் இரு கைகளாலும் முகத்தைப் பொத்திக்கொண்டு விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள். ஆனால், கிழித்திருந்த வட்டத்தை விட்டு வெளியே வரவில்லை.

வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியாதவர்களை இப்படிச் 'சிறை' வைப்பது கடன் கொடுத்தவரின் உரிமையாக இருந்து வருகிறது. கடன் வாங்கியவரைத் தெருவில் நிற்க வைத்து அவரைச் சுற்றி வட்டமாகக் கோடு கிழித்து விடுவார்கள். கடனைத் திருப்புகிற வரையில் அவர் அந்த வட்டத்துக்குள்ளேயேதான் நிற்க வேண்டும் என்பது ஊர்க் கட்டுப்பாடு.

அவ்ளுடைய நிலைமை எனக்குப் புரிந்துவிட்டது. "சே! எங்கேயோ மூலை முடுக்குக் கிராமங்களில் இருந்த இந்த மட்டமான பழக்கம் தலைநகர் வரையில் வந்துவிட்டது பாருங்கள்!'' என்று அம்மாவிடம் சொன்னவன், எங்களைப் பார்த்ததும் ஓடி வந்த அதிகாரியிடம், "அரசாங்கச் செலவில் அந்தப் பெண்ணின் கடனை அடைத்து அவளை விடுதலை செய்து அனுப்புங்கள்!" என்றேன்.

"உடனே செய்... என்று அம்மாவும் சொன்னார்.

அந்தப் பெண் கண்ணீர் வழிய நன்றியுடன் எங்களைக் கும்பிட்டாள்.

நாங்கள் மேலே நடந்தோம்.

கிருஷ்ணர் கோயிலையும் வீரபத்திரர் ஆலயத்தையும் நரசிம்மர் சிலையையும் கணேசர் சிலையையும் கடந்து நடந்தோம். அன்னையார் எந்த வார்த்தையும் பேசாமல் வந்தார். மௌனமாகவே மாதங்க மலையின் அடிவாரத்தை அடைந்தோம். அங்கே அரசும் வேம்பும் இணைந்து வளர்ந்திருந்த இடத்தில் பிரதிஷ்டை செய்யப்படடிருந்த நாகக்கல்லுக்குப் பூஜை செய்து முடித்த பின், எங்களுடன் வந்திருந்த புரவி வீரனையும் பணிப்பெண்ணையும் 'நீங்கள் போகலாம்' என்று சொல்லித் திருப்பி அனுப்பினார் அன்னை. என்னிடம், "மலையின் மீது ஒரு சிறு கோயில் இருக்கிறது. அங்கே போய் வெகு நாளாகிறது. வா" என்றார்.

மலை என்று பெயரேயொழிய, இது ஒரு குன்றுதான். ஆனால் செங்குத்தாக, உயரமாக இருந்தது.

ராமாயணத்தில் விவரிக்கப்பட்டுள்ள ‘மாதங்க பர்வதம்’ இதுதான் என்று சொல்வார்கள். அருகிலேதான் கிஷ்கிந்தா நகரம் இருந்ததாம். வாலியினால் துரத்தப்பட்ட சுக்ரீவன் தஞ்சம் புகுந்தது இங்கேதான். வாலி தனது ஆசிரமத்தின் தூய்மையைக் கெடுத்தானென்று மாதங்கமுனிவர் கோபம் கொண்டு, அவன் இங்கே வந்தால் தலை சுக்குநூறாக வெடிக்கக் கடவது என்று சாபம் கொடுத்திருந்தார். ஆகவே சுக்ரீவன் இங்கே தங்கி யிருந்தான். ஸ்ரீராமரை ஆஞ்சநேயர் தரிசித்ததும், சுக்ரீவனும் ராமரும் சக்கியம் செய்து கொண்டதும் இந்த மலையில் தான். ராவணனால் சீதை ஆகாய மார்க்கமாகத் தூக்கிச் செல்லப்பட்டபோது அவள் எறிந்த ஆபரணங்களைச் சுக்ரீவன் ஒளித்து வைத்த இடம் சுக்ரீவன் குகை என்று சொல்லப்படுகிறது. வாலி தகனம் செய்யப்பட்ட இடத்தில் ஒரு சாம்பல் மேடு இருக்கிறது. எங்கெங்கும் தாளியோடும் வானரங்கள் வாலி சுக்ரீவர்களின் வழித் தோன்றல்கள் என்று கூறுகிறார்கள்.

இருட்டும் நேரம். குளிர் கொஞ்சம் கொஞ்சமாகப் பரவிக் கொண்டிருந்தது. நடமாட்டமே இல்லை. பல நூற்றாண்டுகளுக்கு முன் கூட்டப்பட்ட பழைய கோயில் சிதிலமான நிலைமையில் இருந்தது. இதைப் புனருத் தாரணம் செய்ய வேண்டும் என்று நினைத்துக்கொண்டு திரும்பிப் பார்த்த போது திடுக்கிட்டேன். கோயிலுக்குப் பக்கத்தில் இருந்த இன்னொரு குன்றின்மீது அம்மா ஏறிக்கொண்டிருந்தார்.

“அம்மா!” என்று கூவினேன்.

அவர் திரும்பிப் பார்க்கவில்லை.

குன்றின் உச்சிக்குச் செல்வதற்காகச் சிறிது தூரம் வரைதான் படிகள் வெட்டியிருந்தார்கள். என்ன காரணத்தாலோ அவை பாதியிலேயே நின்றுவிட்டன. அதற்கு மேல் படிகள் கிடையாது.

பாறைகளில் சின்னச் சின்ன இடுக்குகள்தான் இருந்தன. கால் பெருவிரலை மட்டும் அல்லது இரண்டு மூன்று விரல்களை மட்டும் வைக்கக்கூடிய சிறிய பொந்துகள்.

அவற்றில் கால் வைத்து, அன்னை மேலே மேலே ஏறிக்கொண்டேயிருந்தார்.

"நில்லுங்கள், அம்மா. அவ்வளவு உயரத்துக்கு ஏன் போகிறீர்கள்? அங்கே கோயில் எதுவும் இல்லை?" என்று இரைந்து சொன்ன வண்ணமே நானும் பின்தொடர்ந்தேன். பிள்ளைப் பிராயத்தில் எவ்வளவோ தடவை இதே பாறைகளில் நான் ஏறியிருக்கிறேன். இறங்கியிருக்கிறேன். கீச்சுக் கீச்சென்று கூவியவாறு இதோ குதித்து ஓடிக்கொண்டிருக்கும் வானரங்களைக் காட்டிலும் வேகமாய்க் கூடப் பாறைக்குப் பாறை தாவியிருக்கிறேன். அம்மாவும் கூட அவருடைய சிறுமிப் பிராயத்தில் இங்கே ஓடி ஆடி விளையாடியிருக்கலாம். ஆனால் இப்போது...? கடவுளே!

"அம்மா! அந்த உச்சியில் ஏறி என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்டேன். காற்றின் இரைச்சல் என் பேச்சை எங்கோ தள்ளிக்கொண்டு போய்விட்டது. இன்னும் உரக்க, மறுபடியும் "அம்மா" என்று கூவினேன்.

அம்மா என்னை நோக்கிக் குனிந்தார் "ஏன் கிருஷ்ணா, பயமாயிருக்கிறதா உனக்கு?" என்றார் சிரிப்புடன்.

"உங்கள் சிரிப்பே எனக்குப் பயமாயிருக்கிறது அம்மா" என்றேன். "அவ்வளவு உயரத்துக்குப் போய் என்ன

செய்யப் போகிறீர்கள்?'' என்று மேலும் பலமாகக் கத்தினேன்.

சற்று முன்னால் வரையில் அவருடைய பாதங்களை என் கையால் தொடக்கூடிய உயரத்தில் ஏறியிருந்தவர் இப்போது இரண்டு ஆள் உயரத்துக்குப் போய்விட்டார். திடீரென்று குள்ளமாகிவிட்டவர் போல அவர் உருவம் சிறுத்துத் தெரிந்தது.

"விஜயநகரம் ரொம்ப அழகான நகரம் கிருஷ்ணா! இங்கிருந்து பார்த்தால் சோலைகளும் மாளிகைகளும் கோயில்களும் என்ன அற்புதமாய்த் தெரிகின்றன தெரியுமா?'' என்று கூறி அன்னை மறுபடி சிரித்தார். அந்தச் சிரிப்புக்குக் காரணம் இல்லாததால் இனம் தெரியாத அச்சமொன்று என் அடிவயிற்றைப் புரட்டியெடுத்தது.

"அம்மா! இறங்கி வாருங்கள்! நகரத்தின் அழகைப் பார்க்க இன்னும் எவ்வளவோ உயரமான, பந்தோபஸ்தான இடங்கள் நகரத்துக்குள்ளேயே இருக்கின்றன. அங்கே நானே அழைத்துப் போகிறேன்" என்று கத்தினேன்.

நன்றாக இருட்டத் தொடங்கிவிட்டது. அவர் எந்த இடுக்கில் எப்படிக் கால் வைத்து ஏறினார் என்பது எனக்குத் தெரியவில்லை. ஆகவே, அவரைப் பின் தொடர முடியாமல் இரண்டடி கீழே இறங்கினேன். நான் நின்றிருந்த இடம் இரண்டு கால்களையும் அகட்டிக்கொண்டு நிற்ப தற்கு போதுமானதாக இருந்தது. பேய் அறைகிற மாதிரி காற்று என்னை அறைந்து கொண்டு போயிற்று. சிலீரென்ற குளிர்காற்று உடம்பை வெட்டியது. அங்கவஸ்திரத்தை இழுத்துப் போர்த்திக் கொள்ளலாம் என்று பிரித்தேன். விர்ரென்று அடித்த காற்றில் அது கையிலிருந்து நழுவி வளைந்து வளைந்து பறந்து கண்ணுக்குத் தெரியாமல் மறைந்தது. இருட்டு சமீபித்துக் கொண்டிருந்ததால் வானரங்கள் தாவிக் குதித்துத் தங்கள் உறைவிடத்துக்குத்

திரும்பிக் கொண்டிருந்தன. ஒவ்வொரு சாதாரணக் குரங்கும் ஓர் ஆஞ்சநேயராக என் கண்ணுக்குத் தெரிந்தது. கையெடுத்துக் கும்பிட்டு 'என் அன்னையை நீங்கள்தான் காப்பாற்ற வேண்டும்' என்று பிரார்த்தித்துக் கொண்டேன்.

அண்ணாந்து பார்த்தபோது, குன்றின் உச்சியில் அன்னை நின்று கொண்டிருப்பது நிழல் போலத் தெரிந்தது.

மனிதர்களுக்குத் திடீர் திடீரென்று சித்தப்பிரமை ஏற்படும் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அதுபோல என் அன்னைக்கும் ஏதாவது ஏற்பட்டு விட்டதா என்ன? குளிரில் என் உடம்பு விறைத்தது போலவே உடம்புக் குள்ளும் ரத்தம் உறைந்து விட்டது என்று தோன்றியது.

உச்சியில் நின்றிருந்தார் அன்னை. அதற்கு மேலே ஏறுவதற்கு எதுவும் இல்லை.

குன்றின் இந்தப் பக்கம் நோக்கினால், மின்மினிப் பூச்சிகள் பறப்பது போல விஜயநகரத்தின் மாடங்களில் தீபங்களின் ஒளி தென்பட்டது. குன்றின் மறுபக்கம்? கிடுகிடு சரிவு. புதர் மண்டிய காடு. துங்கபத்திரை நதியை நோக்கிச் சீறி வரும் சிற்றோடைகள். படைகள் கடந்து போவதானால்கூட வேறுவழியாகத்தான் போவார்கள். இந்த வழியில் போக மாட்டார்கள்.

"அம்மா! அப்படியே, அங்கேயே நில்லுங்கள்... நான் வந்து உங்களைப் பிடித்துக்கொண்டு கீழே இறக்கி அழைத்து வருகிறேன்" என்று சத்தமாகச் சொன்னேன்.

"வராதே, கிருஷ்ணா! நானே இறங்கி வருவேன். நீ அங்கேயே நில்!" என்று ஆணையிட்டார் அன்னை. உண்மையில், நான் ஏறிப்போனால் கூட அவரைப் பிடித்துக்கொண்டு நிற்பதற்கோ இறங்குவதற்கோ அங்கே இடம் இருக்கவில்லை. அவ்வளவு குறுகலான இடத்தில் அவர் நின்றிருந்தார்.

“சரி, நீங்களே இறங்கி வாருங்கள். அபாயமான இடத்தில், அதுவும் உங்கள் வயதில் என்ன விளையாட்டு அம்மா இதெல்லாம்?” என்று கத்தினேன். ஆனால் இது விளையாட்டு அல்ல, வேறு ஏதோ வினை என்று என் உள்ளுணர்வு சொல்லிக் கொண்டிருந்தது. காற்றின் சீற்றத்தில் அவர் தள்ளாடுகிற மாதிரி தோன்றவே என்னைப் பயம் மேலும் பிடித்தாட்டியது. மேலே ஏறிச்சென்று அவரைப் பிடித்துக் கொள்ளலாமா என்று எண்ணினேன். ஆனால், இம்மி தவறுதலாகப் பிடித்தாலும் அவர் தடுமாறி விழுந்துவிடக்கூடும் என்ற அச்சமும் ஏற்பட்டது.

“இறங்கி வாருங்கள், தாயே! உங்களுக்குப் புண்ணியமாய்ப் போகட்டும். ஏன் என்னை இப்படி வதைக்கிறீர்கள்? கீழே வாருங்கள் அம்மா!” என்று மன்றாடினேன். உணர்ச்சி வசப்பட்டதால் என் குரல் எனக்கே கேட்காதபடி கரகரத்துப் போயிற்று.

“வருகிறேன், கிருஷ்ணா! வரத்தான் போகிறேன். நீ வாக்குக் கொடுத்தவுடன் வரப்போகிறேன்” என்றார் அன்னையார்.

என் சப்த நாடிகளும் ஒடுங்கின. “வாக்கா? என்ன வாக்கு அம்மா கேட்கிறீர்கள்?” என்றேன்.

“அந்தப் பெண்ணை, நடனக்காரி சின்னாதேவியை மறந்து விடுகிறேன் என்று வாக்குக் கொடு!” என்று அம்மா சொன்னதும்...

ஆயிரம் இடிகள் ஒரே சமயத்தில் என் தலையில் இறங்கினாற்போலிருந்தது. “அம்மா! என்னம்மா சொல்கிறீர்கள்? முதலில் கீழே வாருங்கள்!” என்றேன்.

“வருவதற்கு முன்னால்தான் வாக்குக் கேட்கிறேன்!” என்றார் அம்மா தீர்மானமாக. “நாட்டியக்காரியின் மீது காதல், அவளை மணந்துகொள்ள வேண்டும் என்றெல்லாம்

நீ சொல்வது நடவாத காரியம். அவளை மறந்துவிட்டேன், துறந்துவிட்டேன் என்று சொல்லு!"

"சொல்லாவிட்டால்?" என்றேன் குரல் நடுங்க.

"சொல்லாவிட்டால் என்ன நடக்கும் என்பது உனக்குத் தெரியவில்லையா? இதோ இங்கிருந்து மறுபக்கத்தில் குதித்து விடுகிறேன். வெகு சுலபம்!"

"அம்மா!" அலறிவிட்டேன் நான். "இப்படியொரு பேரம் செய்வதற்காகத்தான் இவ்வளவு தூரம் என்னை அழைத்து வந்தீர்களா?"

"ஆமாம் கிருஷ்ணா, ஆமாம்!" என்று ஒளிவு மறைவு இல்லாமல் ஒப்புக் கொண்டார் அன்னை. "வேறே எந்த இடத்தில், எந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டிருந்தாலும் உன்னிடம் வாக்கு வாங்க முடியாதே. அதனால்தான் இப்போது, இங்கே கேட்கிறேன். சொல்லு, சீக்கிரமாய்ச் சொல்லு! என்னால் அதிக நேரம் இங்கே நிற்க முடியாது என் வயதைப் பற்றி நீதானே கொஞ்சம் முன்னால் ஞாபகப்படுத்தினாய்! சொல்லு!"

"என்ன சொல்ல வேண்டும் என்று கேட்கிறீர்கள், அம்மா"

"எவ்வளவு தடவை சொல்லட்டும்? அந்தச் சின்னாதேவியின் மீது வைத்திருக்கும் காதலை விட்டேனென்று சொல்லு. அம்மா வேண்டுமா, சின்னாதேவி வேண்டுமா?"

கோபத்திலும், பொறியிலே சிக்கிக்கொண்ட ஆத்திரத்தில் என் உதடுகள் துடித்தன. "உங்களுக்கு முன்னாடியே அவளுக்கு வாக்குக் கொடுத்திருக்கிறேனே, அம்மா, அவளை மணந்து கொள்வதாக?" என்றேன்.

"அதெல்லாம் எனக்குத் தெரியாது, அன்னையா, காதலியா? சொல்லு!"

கண் காணுகிற காட்சியையும் காது கேட்கிற பேச்சையும் என்னால் நம்ப முடியவில்லை. இல்லை, இல்லை. இதெல்லாம் பயங்கர சொப்பனம். இதோ விழித்துக் கொள்ளப் போகிறேன். அம்மாவின் அரண்மனையில் கீதங்கள் கேட்கப் போகின்றன. நாட்டியங்கள் நடக்கப் போகின்றன. நான் அங்கே போகப்போகிறேன். 'உட்கார், கிருஷ்ணா, ஞானேசுவரரின் பாட்டு இது. ஞானேசுவரரைப் பற்றி உனக்குத் தெரியுமோ? கோதாவரி தீரத்தில் பிறந்த மகான். உட்கார்ந்து கேள்!' என்று அம்மா சொல்லப் போகிறார். நானும் அம்மாவும் பக்கத்தில் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு பணிப்பெண் தங்கத் தட்டில் எடுத்து வரும் மாதுளை முத்துக்களை ருசிக்கப் போகிறோம்... இதோ, இதோ...

இல்லை... அப்படி எதுவும் நிகழவில்லை.

என் அன்னை அதோ குன்றின் உச்சியில் நின்று கொண்டிருக்கிறார், ஒரு கொடுமையான பேரத்துடன்.

எவ்வளவோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இந்த மாதங்கக் குன்றுகள் முழுதாக ஒரே மலையாக இருந்ததென்றும், ஒரு பெரும் பூகம்பம் ஏற்பட்டு, சிறு சிறு குன்றுகளாக வெடித்துச் சிதறியது என்றும் சொல்வார்கள். அதே போன்று இன்னொரு பூகம்பம் இப்போது என் கண்முன்னே நிகழ்ந்து கொண்டிருந்தது.

# 19

குன்றின் உச்சியில் என் அன்னை நாகலாம்பிகை நின்றிருந்தார் என்றால், நரகத்தின் விளிம்பில் நான் நின்றிருந்தேன்.

'சின்னாதேவியின் மீதுள்ள காதலைத் துறக்கிறாயா அல்லது நான் மலையிலிருந்து குதித்துத் தற்கொலை செய்து கொள்ளட்டுமா?' என்கிறார் அம்மா.

என்ன பதில் சொல்வேன்? என்ன பதில் சொல்ல முடியும்?

பத்து மாதம் பெற்று வளர்த்துச் சீராட்டி என்னை ஆளாக்கிய தாய் ஒருபக்கம். அதே பத்து மாத காலம் என்னோடு பழகி, மனமாரக் காதலித்து, இப்போது எங்கே இருக்கிறாள் என்றே தெரியாத அபலைப் பெண் இன்னொரு பக்கம். அன்னையின் மீது நான் கொண்டுள்ள மட்டற்ற வாஞ்சை ஒருபுறம். சின்னாதேவி மீது நான் கொண்டுள்ள மட்டற்ற காதல் இன்னொருபுறம்.

"என்ன கிருஷ்ணா, முடிவு செய்துவிட்டாயா?" என்று குன்றின் உச்சியிலிருந்து அம்மா கேட்டார்.

நான் பல்லைக் கடித்துக் கொண்டு முடிவெடுத்தேன்.

"செய்துவிட்டேன் அம்மா!" என்றேன்.

"நீ சத்புத்திரன் என்று எனக்குத் தெரியும். காதலைத் துறக்க முடிவு செய்வாய் என்று எனக்குத் தெரியும்!" என்றார் அம்மா. நாலுபுறமும் இருட்டு சூழ்ந்துவிட்ட

போதிலும் அவர் முகத்தில் இருந்த சந்தோஷத்தை என்னால் காண முடிந்தது.

"நீங்கள் நினைப்பது தவறு, தாயே" என்றேன்.

"என்ன?"

"இந்த சாம்ராஜ்யம், சக்ரவர்த்திப் பதவி, சுகபோகம், அரண்மனை ஆடம்பரம், பொன், மணி, இந்த உலகம் எதுவுமே எனக்கு வேண்டாம் அம்மா. நீங்களும் சின்னாதேவியும்தான் எனக்கு வேண்டும்!" என்றேன்.

அன்னை மறுபடி கேட்டார்: "நிச்சயமாகத்தான் சொல்கிறாயா?"

"நிச்சயமாகத்தான் சொல்கிறேன்" என்று கூறிவிட்டு, நிகழப்போகும் அந்த விபரீதத்தைக் காணச் சகிக்காதவனாய்க் கண்களை மூடிக் கொண்டேன்.

ஹோவென்று அலறிக்கொண்டு அம்மா கீழே விழும் சத்தத்தைக் கேட்கப் பொறுக்காமல் காதைப் பொத்திக் கொண்டேன்.

ஆனால்... ஆனால்... மறுநொடி...

வேகமாக, ஆனால் ஜாக்கிரதையாக என் அன்னை குன்றின் உச்சியிலிருந்து இறங்கிவரும் காட்சியைத்தான் கண்டேன்.

"அம்மா!" என்று ஓடிச் சென்று அவரைக் கட்டிப் பிடித்துக் கொண்டேன்.

"கிருஷ்ணா!" அன்னையும் இறுக்கி அணைத்துக் கொண்டார். வயோதிகத்தினால் தளர்ந்த கைகள் பாசத்தினால் உரமேறி இரும்பாகியிருந்தன.

"ஜெயித்துவிட்டாய், கிருஷ்ணா! நான் வைத்த பரீட்சையில் ஜெயித்துவிடடாய்!" என்று என்னை உச்சிமோந்தவாறே சொன்னார் அன்னை.

நான் திகைத்தேன். கடைசி விநாடியில் அவர்தான் மனம் மாறி, தற்கொலை செய்து கொள்ள விருப்ப மில்லாமல் இறங்கி வந்துவிட்டார் என்று நினைத்திருக்க, இவர் பரீட்சை என்று ஏதோ சொல்கிறாரே?

"ஆமாம், கிருஷ்ணா. காதல் என்பதும், ஒரு பெண்ணின் மனசில் புகுந்துகொண்டு விளையாடுவதும் உன்னைப் போன்ற இளைஞர்களுக்கு, அதிலும் அரச குமாரர்களுக்கு ஒரு பொழுது போக்கு. என் வயதில் நான் எவ்வளவோ பேரை அப்படிப் பார்த்து விட்டேன். நீயும் அந்தக் கும்பலில் சேர்ந்தவனா அல்லது மெய்யான, உறுதியான காதல் கொண்டவனா என்பதை நிச்சயப் படுத்திக் கொள்ள விரும்பினேன். உனக்கு என் மீதிருக்கும் பாசமும் பக்தியும் எத்தனை என்று எனக்குத் தெரியும். அதனால் அதையே பணயம் வைத்துப் பரீட்சை செய்தேன். என் பிள்ளை ஒரு மாணிக்கம்! பத்தரை மாற்றுத் தங்கம்!" என்று பேசியபடி என் கைகளைப் பிடித்துக் கொண்டு அடிவாரத்துக்கு இறங்கினார் அன்னை.

"அம்மா!" என்று அவர் கைகளை எடுத்துக் கண்ணில் ஒற்றிக்கொண்டேன். சின்னாதேவியை அடைவது பற்றி எனக்கிருந்த அச்சம், கவலை, சந்தேகம் யாவும் மறைந்தன.

எனினும் கேட்டேன்:

"அம்மா! சற்று முன்னால் நீங்கள் உயிரை விட்டு விடுவேன் என்று சொன்னது உண்மையா? அல்லது சும்மா பரீட்சை பண்ணினேன் என்று இப்போது சொல்வது உண்மையா? என்னால் எதையும் நம்ப முடியவில்லை, தாயே!"

எங்களுக்காகவே இருக்கை போட்ட மாதிரி மழமழவென்று ஒரு சிறிய பாறை அடிவாரத்தில் இருந்தது.

"கொஞ்சம் இங்கே உட்கார். உன் படபடப்பு நீங்கட்டும்" என்றார் அம்மா. "உன்னிடம் கொஞ்சம் பேச வேண்டும்."

என் கையைப் பிடித்துப் பாறையில் அமர்த்தி, தானும் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டார்.

அடிவார கிராமத்தில் தீபங்களின் வெளிச்சமும் மக்களின் ஆரவாரமும் நிறைந்திருந்தன. சிறுவர்கள் ஆடிப் பாடிக் குதித்துக் கொண்டு ஒருவர் மீதொருவர் வண்ணச் சாயங்களை இறைத்தபடி வந்து கொண்டி ருந்தார்கள்.

"இன்று இங்கே ஹோலிகா பண்டிகை போலிருக்கிறது" என்றார் அன்னை. "ஒவ்வொரு ஊரில் ஒவ்வொரு நாளில் கொண்டாடுவது இந்த ஒரு பண்டிகையைத்தான். ஹோலிகா என்ற ஒரு அரக்கி குழந்தைகளை விழுங்கிக் கொண்டிருந்தாளாம். குழந்தைகள் எல்லாருமாகச் சேர்ந்து அவளைத் திட்டி சிரித்து, கெட்ட வார்த்தைகள் பேசி, பீய்ச்சாங்குழலால் சாயம் அடித்தால் அவள் செத்து விடுவாள் என்று ஒரு சன்னியாசி சொல்லித் தந்தாராம். அதன்படி செய்து அந்த ஹோலிசா அரக்கியைக் குழந்தைகள் கொன்று விட்டார்களாம். அதுதான் இந்தப் பண்டிகை.. என்று அம்மா சொல்லிக் கொண்டிருந்த போது, சில குழந்தைகள் வண்ண வண்ணமான சாயங்களை எங்கள் மீது பீய்ச்சிவிட்டுச் சிரித்துக் கொண்டே ஓடி மறைந்தார்கள்.

"குழந்தைகள் குழந்தைகள்தான். அவர்களுக்குச் சக்ரவர்த்தியும் ஒன்றுதான். சாதாரணப் பண்டாரமும் ஒன்றுதான். நம்மை அவர்களுக்குத் தெரியவில்லை பார்" என்று சொல்லி அம்மா பட்டுச் சேலையின் தலைப்பால் என் முகத்தைத் துடைத்துத் தன் முகத்தையும் துடைத்துக் கொண்டார். ஆனால், அவர் முகத்தில் அங்கே கொஞ்சம் இங்கே கொஞ்சம் பட்டிருந்த சாயம், இப்போது முகம் பூரா தீற்றிக் கொண்டு முன்னைவிட மோசமாகி விட்டது. எனக்கும் அப்படித்தான் இருந்திருக்கும். என்று ஊகித்துக் கொண்டேன்.

“குன்றின் உச்சியில் நின்றிருந்தபோது சொன்னது உண்மையா, கீழிறங்கி வந்த பிறகு சொன்னது உண்மையா என்று கேட்டாயல்லவா? இறங்கி வந்த பிறகு சொன்னதுதான் உண்மை, கிருஷ்ணா'' என்றார் அன்னையார். “இன்று முதல் நான் உன் கட்சி. அந்தப் பெண் சின்னாதேவியை இந்தத் தேசத்தின் எந்த மூலையில் யார் ஒளித்து வைத்திருந்தாலும் மீட்டு வந்து உன்னிடம் ஒப்படைப்பேன். என்ன செய்வேன், எப்படிச் செய்வேன் என்று கேட்காதே. ஆனால், செய்வேன். அதை மட்டும் நம்பு.”

அன்னையின் ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு தேன் துளியாக என் காதில் பாய்ந்தது. இப்படி ஒரு பாய்மரக் கப்பல் பக்கத்திலேயே இருக்க, நான் துரும்பைத் தேடி அலைகடலில் தத்தளித்துக் கொண்டிருந்தது என் பேதமை.

இடுப்பில் கூடையுடன் ஒரு பெண் வந்து, “அவித்த கடலை வேணுமாம்மா?” என்று கேட்டாள்.

எங்களை அவள் பார்த்ததில்லை போலும் அல்லது விஜயநகர சக்ரவர்த்தியும் அவருடைய தாயும் இங்கே உட்கார்ந்திருப்போம் என்று நினைத்திருக்க மாட்டாள். சிறுவர்கள் பீய்ச்சிய சாயம் வேறு எங்கள் முகங்களுக்குக் கோரமாக ஒப்பனை செய்திருந்தது.

“கொடு” என்று சொல்லி அம்மா தன் முந்தானையில் வாங்கிக் கொண்டார்.

“அம்மா, என்னிடம் பணம் கிடையாது. நீங்கள் வைத்திருக்கிறீர்களா?” என்றேன்.

“அடடா! கையில் இருந்ததை அந்த நாகப் பிரதிஷ்டை உண்டியலில் போட்டு விட்டேனே!” என்ற அன்னை, அந்தப் பெண்ணிடம், “ஏனம்மா, நாளைக்கு அரண்மனைக்கு வந்து வாங்கிக் கொள்கிறாயா? பெரிய

ராணி கொடுக்கச் சொன்னார் என்று கேள். கொடுப்பார்கள்" என்றார்.

அந்தப் பெண் விருட்டென்று கூடையைத் தூக்கிக் கொண்டாள். "ஏன் கிழவி, கையும் காலும் எனக்கு ஒழுங்கா இருக்கிறது உனக்குப் பிடிக்கவில்லையா? அரண்மனைக்குப் போய், பெரிய ராணி பெயரைச் சொல்லி அரைப்பணம் கேட்டால் என்னை வெட்டிக் கூறு போட்டுவிடுவார்கள். எனக்குப் பணம் வேண்டாம், பாட்டி! சும்மாவே தின்னு!"

கழுத்தை ஒரு நொடி நொடித்துவிட்டு அவள் போய்விட்டாள்.

"பாவம், நம்மை யாரென்று தெரியவில்லை. நான் என் காப்பையாவது கழட்டிக் கொடுத்திருக்கலாம்." என்றேன்.

"அது இன்னும் பெரிய ஆபத்து! நாளைக்கு அதை அவள் கடைத்தெருவுக்கு எடுத்துப் போய் விற்கப் பார்த்தால், அரண்மனையிலிருந்து திருடியிருக்கிறாள் என்று அங்கேயே வெட்டிப்போட்டு விடுவார்கள். நல்ல காலம் உயிர்தப்பினாள்." என்றார் அன்னை.

சிரித்துக்கொண்டே இருவரும் அந்த அவித்த கடலையை ஒவ்வொன்றாய்ச் சாப்பிட்டோம். அரண் மனையின் போஜன சாலையில் வகைவகையாகச் சமைக்கப்படும் எந்த அற்புத பட்சணமும் இந்தக் கூடைக்காரியின் கடலைக்குச் சமமாகாது என்று தோன்றியது.

தவறிக் கீழே விழுந்துவிட்ட கடலையை எடுத்து வாயில் போட்டுக் கொண்டேன்.

"மண்ணில் விழுந்ததைப் போய்ச் சாப்பிடுகிறாயே?" என்று அன்னை கடிந்தார்.

“அம்மா, மனசில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும்போது மண்ணைத் தின்றாலும் அமிர்தமாகத்தான் இருக்கும். இப்போது நான் அந்த நிலையில்தான் இருக்கிறேன்” என்றேன்.

“சாம்ராஜ்ய சக்ரவர்த்தி நீ. மண்ணை ஆளலாம். மண்ணைத் தின்னக்கூடாது. வாயைத் திறந்து காட்டு!” என்றார் அம்மா.

நான் சிரித்தேன். “அம்மா... பாகவதமும், பாரதமும், அஷ்டபதியும், திவ்யப்பிரபந்தமும் படித்துப் படித்து நீங்கள் உங்களை யசோதா பிராட்டியாகவே நினைக்க ஆரம்பித்து விட்டீர்கள். என்னைப் பாலகிருஷ்ணனாக நினைக்கிறீர்கள். நான் பாமரக் கிருஷ்ணன்! பகவான் கிருஷ்ணன் அல்ல. நான் வாயைத் திறந்து காட்டினால் அண்ட சராசரங்களும் பிரபஞ்சங்களும் தெரியுமென்று எதிர்பார்க்காதீர்கள்.

‘உலகம் உண்ட பெருவாயா!
உலப்பில் கீர்த்தி அம்மானே!
நிலவும் சுடர் சூழ் ஒளிமூர்த்தி!
நெடியாய் அடியேன் ஆருயிரே!”

என்று ஆழ்வார் பாடிய மாதிரி நீங்கள் பாட முடியாது! இந்த வாய்க்குள் பல்லும் நாக்கும்தான் தெரியும். அதுகூட அழகான பல்லுமல்ல, அழகான நாக்குமல்ல!” என்றேன்.

நான் பேசி முடிக்கும் வரையில் தலையை லேசாகச் சாய்த்துக்கொண்டு என் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார் அன்னை. “நிஜமாகவே நீ ரொம்ப சந்தோஷமாகத் தான் இருக்கிறாய்” என்றார்.

“இருக்காதா அன்னையே? எது மிக மிகக் கடினமான காரியமாக இருக்கும் என்று நான் பயந்திருந்தேனோ அது மிக மிகச் சுலபமாக முடிந்துவிட்டது. ராஜ மாதாவான நீங்கள், நான் ஒரு தேவதாசியை மணப்பதற்கு அனுமதித்து விட்டீர்களே! எவ்வளவு மகிழ்ச்சிக்குரிய விஷயம்!”

என்றேன். கூடவே சின்னாதேவி ஸ்ரீவில்லிபுத்தூரில் இல்லை என்ற காயத்ரியின் செய்தி ஞாபகம் வந்து சிறிது கலக்கம் ஏற்பட்டது, என்றாலும் உற்சாகத்தைக் கைவிடாமல் "சின்னாதேவி எந்த ஊரில் இருந்தாலும் அவளைத் தேடிக் கண்டுபிடித்து மணம் புரிந்து கொள்ள இனி எந்தத் தடையும் இல்லை, அம்மா." என்றேன்.

அன்னை மீண்டும் என் முகத்தையே நோக்கியவாறு இருந்தார்.

பிறை நிலவும் தாரகைக் கூட்டங்களும் தந்த மங்கிய வெளிச்சத்துடன், தூரத்திலிருந்து வந்த தீபங்களின் ஒளியும் சேர்ந்து அவர் முகத்தில் குறுக்கும் நெடுக்கும் விழுந்து விளையாடின. பச்சையும் நீலமும் சிவப்புமாக அவர் மீது பாய்ச்சப்பட்டிருந்த பலவகைச் சாயங்கள், முகத்தில் அங்கங்கே உள்ள சுருக்கங்களில் திட்டுத் திட்டாகப் படிந்து எனக்குச் சிரிப்பை வரவழைத்தது. என் முகமும் அப்படித்தான் இருந்திருக்கவேண்டும். ஆனால் சிரிக்காமல் தீவிரமான பார்வையுடன் இருந்தார்.

"என்னம்மா சிந்தனை?" என்று கேட்டேன்.

"ஒன்றுமில்லை. நீ தேவதாசி என்று சின்னா தேவியைப் பற்றிச் சொன்னாயே, அதைப் பற்றி யோசனை செய்து கொண்டிருந்தேன்" என்றார் அம்மா. அடுத்த வார்த்தை...

"நான்கூடத்தான் தாசி. நீ கூடத்தான் தாசி மகன்" என்றார்.

"அம்மா!" என்று அலறிவிட்டேன். "என்ன வார்த்தை சொல்கிறீர்கள்?"

"பதட்டப்படாதே" என்று மெலிந்த புன்னகையுடன் பேசினார் அம்மா. "நீ நினைக்கிற அர்த்தத்தில் நான் சொல்லவில்லை. அது வேசி. நான் சொன்னது தாசி.

வேலைக்காரி. அரண்மனையில் நூற்றுக்கணக்கில் வேலை பார்க்கிறார்களே பணிப்பெண்கள், அவர்களில் ஒருத்தியாக இருந்தவள்தான் நானும்."

நம்ப முடியாதவனாக அன்னையையே வெறித்து நோக்கிய வண்ணம் இருந்தேன். நினைவு தெரிந்த நாள் முதல் அவரை ராணியாகத்தான் பார்த்திருக்கிறேன். ராஜ மாதாவாகத்தான் அறிந்திருக்கிறேன். வேலைக்காரியாக,,,?

"உன்னால் நம்ப முடியாதுதான்" என்றார் அன்னை, என் மனத்தில் ஓடும் எண்ணங்களை ஊகித்தவராக. "உனக்கு யாரும் அதைச் சொல்லியிருக்க மாட்டார்கள். உன் பெரியம்மா - உன் தமையனார் வீரநரசிம்மரின் தாய் திப்பாம்பாவுக்கும், உன் தந்தை நரசநாயக்கருக்கும், மகா பிரதானி அப்பாஜிக்கும் மட்டுமே இந்த விஷயம் தெரியும். திப்பாம்பா ஒருவேளை பிற்காலத்தில் அவர் பிள்ளை வீர நரசிம்மருக்கும் சொல்லியிருப்பார்."

என் ஐந்து புலன்களும் செயலற்றுப் போய்விட்டன. என் மூச்சு இரைச்சலாக வந்து கொண்டிருந்ததைக் கவனித்த அம்மா, "நீ விரும்பினால் மேலே சொல்கிறேன்" என்றார்.

"பாதகமில்லை அம்மா, சொல்லுங்கள். அதிர்ச்சி யான தகவல்களைக் கேட்டுக் கேட்டு, அதிர்ச்சியான அனுபவங்களை அடைந்து அடைந்து, மரத்துப் போயிருக்கிறது என் மனம். மேலும் ஒன்றைக் கேட்பதால் எதுவும் ஆகிவிடாது. சொல்லுங்கள்" என்றேன்.

"சொல்ல வேண்டிய அவசியம் இன்றைக்கு ஏற்பட்டிருப்பதனால் சொல்கிறேன். இல்லாவிட்டால் இந்தப் பேச்சே எடுத்திருக்க மாட்டேன்" என்ற பீடிகையுடன் அம்மா தொடர்ந்தாள்.

"வீரத்திலும் தீரத்திலும் நிகரற்று விளங்கிய தேவராயரின் காலத்துக்குப் பிறகு சாம்ராஜ்யம் சிதறிப்

போய்க் கொண்டிருந்தது. அவருடைய குமாரர்களான விரூபாட்சரும் மல்லிகார்ஜுனரும் விளையாட்டுப் பிள்ளைகளாகவே இருந்து காலமாகிவிட்டார்கள். ஐம்பது அறுபது வருட காலத்துக்கு ராஜ்யமெங்கிலும் குழப்பம். அப்போதுதான் எல்லா அமர நாயகர்களும் பிரதானிகளும் சேர்ந்து உன் தந்தை நரசநாயக்கரை முடிசூட வைத்தார்கள். அவரும் ராஜகுடும்பத்தைச் சேர்ந்தவர்தான். நோயாளி போலப் பாயும் படுக்கையுமாகக் கிடந்த ஆட்சியை எழுப்பி உட்கார வைத்தார் உன் தந்தை. அதுமட்டுமல்ல, பழைய கீர்த்தியை மறுபடி பெறும்படி பலமுள்ளதாகவும் பண்ணினார். ஜனங்களின் பிரியத்தை வெகு வேகமாகச் சம்பாதித்துக் கொண்டார்...

இந்தப் பழைய சரித்திரமெல்லாம் எனக்குத் தெரிந்ததுதான். ஆனால், தான் ராஜகுலத்தைச் சேர்ந்தவரல்ல என்றும், பணிப்பெண்ணாக இருந்தவர் என்றும் அம்மா சொன்னாரே, அதைத் தெரிந்து கொள்ளும் ஆவலினால் காத்திருந்தேன். 'அதைச் சொல்ல வேண்டிய அவசியம் இன்றைக்கு வந்திருக்கிறது' என்று அவர் முன்னுரை போட்டது வேறு என்னை அச்சுறுத்தியது.

"திப்பாம்பாவை அதாவது, ராஜ வம்சத்தைச் சேர்ந்த திப்பாம்பாவை உன் தந்தை மணந்து கொண்டார். அவள் கருவுற்றிருந்த சமயம், திருமலைக்குச் செல்கிற வழியில் இருந்த ஓர் அரண்மனையில் சக்ரவர்த்தியும் திப்பாம்பாவும் தங்கியிருந்தார்கள். அந்த மாளிகையில் ஒரு பணிப் பெண்ணாக இருந்தேன் நான். இரவு வேளைகளில் ராணி திப்பாம்பா எங்காவது சென்றால், தீவட்டி பிடித்துக் கொண்டு முன்னே சென்று வழிகாட்ட வேண்டிய வேலை என்னுடையது."

சிறிது நிறுத்திவிட்டு என் முகத்தை நோக்கினார் அம்மா. பிறை நிலா இப்போது நல்ல பிரகாசத்துடன்

விளங்கிய போதிலும் என் உணர்ச்சிகளைப் பார்த்துத் தெரிந்துகொள்ள முடியவில்லை போலும். "கேட்டுக் கொண்டுதான் இருக்கிறேன், அம்மா. சொல்லுங்கள்" என்று நான் தூண்டினேன்.

"ஒரு நாள் சக்ரவர்த்தியும் ராணியும் பின்னே வர, நான் தீவட்டியைப் பிடித்துக் கொண்டு, வழிகாட்டிச் சென்று கொண்டிருந்தேன். திடீரென்று தீவட்டியிலிருந்து எரியும் சுள்ளியொன்று என் சேலையின் மீது விழுந்து குப்பென்று தீப்பற்றிக் கொண்டது..."

"ஐயோ! அப்புறம்?"

"உன்னைப் போலவே உன் தந்தையும் பதறிப் போனார். கெட்டியான போர்வை ஒன்று போர்த்திக் கொண்டிருந்தவர் உடனே அதை என்மீது வீசித் தீயை அணைத்தார். தீயை மட்டுமல்ல, என்னையும்தான்."

எத்தனையோ வருடங்களுக்கு முன்பு நடந்த சம்பவமானாலும்,அதைச் சொல்கையில் இன்றைக்கும் அம்மாவின் குரலில் வெட்கம் படர்ந்தது.

"இரண்டு மாத காலம் அந்த அரண்மனையில் தங்கியிருந்தார் சக்ரவர்த்தி. அதற்குள் அவருக்கும் எனக்கும்..." சொல்லத் தயங்கிவிட்டுச் சொன்னார். "நெருக்கம் ஏற்பட்டுவிட்டது. எங்கள் காதல் திப்பாம்பாவுக்குத் தெரிந்துவிட்டது. ஆனால், அவரால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. அவரிடம் வற்புறுத்திச் சம்மதம் வாங்கிக் கொண்டார் உன் தந்தை. சத்தியமும் வாங்கிக் கொண்டார், நான் வேலைக்காரப் பெண் என்பதை யாரிடமும் சொல்வதில்லை என்று. தலைநகருக்குத் திரும்பினோம். ஏதோ ஒரு ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவள் என்றே எல்லோரிடமும் சொல்லிவிட்டு, என்னை மணந்து கொண்டார். மகாபிரதானி அப்பாஜியிடம் அவருக்கு

நம்பிக்கையும் மதிப்பும் உண்டு. அதனால் அவரிடம் மட்டும் உண்மையைச் சொல்லியிருந்தார்."

சுற்றுப்புறமெங்கும் அமைதி நிலவியது. இரவு வெகு நேரமாகிவிட்டது என்பதை உணர்ந்தேன். இன்னும் நாங்கள் திரும்பி வராததால், அரண்மனை அமளி துமளிப்பட்டுக் கொண்டிருக்கும். எங்களைத் தேடிப் பல்லக்குகளுடன் ஆட்கள் வந்துவிடுவார்கள். மீதியையும் சீக்கிரமே கேட்டுவிட வேண்டும் என்ற ஆர்வத்தினால் "பிறகு?" என்று கேட்டேன்.

"திப்பாம்பாவுக்கு வீரநரசிம்மர் பிறந்தார். எனக்கு நீ பிறந்தாய். மூன்றாவது மனைவியாக ஓபாம்பாவைச் சக்ரவர்த்தி மணந்தார். அவருக்கு அச்சுதன், ரங்கன் என்ற பிள்ளைகள் பிறந்தார்கள். ஓபாம்பா அரச வம்சத்தைச் சேர்ந்தவள். மிகவும் சாது. அக்கா அக்கா என்று என்னிடம் பிரியமாக இருப்பாள். ஆனால், உன் பெரியம்மா திப்பாம்பா மட்டும் என்னை ஏற்றுக் கொள்ளவுமில்லை. மன்னிக்கவும் இல்லை. 'எனக்குத் தீவட்டி பிடித்து வழி காட்டியவளுக்கு இன்றைக்கு ராணி வாழ்வா!" என்று என் காதுபடப் பொருமிக் கொண்டேயிருந்தார். சக்ரவர்த்தி இறைவனடி சேர்ந்த கொஞ்ச நாளைக்கெல்லாம் அவரும் காலமாகி விட்டார். ஆனால், கடைசிவரை என் மீதிருந்த காழ்ப்பை விடவில்லை. இறக்கும் போது தன் பிள்ளையிடம் — உன் தமையனார் வீரநரசிம்மரிடம் — ஒரு வேண்டுகோள் கேட்டதாக அப்பாஜி சொன்னார்...

"என்ன வேண்டுகோள்?" என்றேன்.

"ராஜ வம்சத்து வீரநரசிம்மருக்கும் அவர் மணந்துள்ள ராஜவம்சத்துப் பெண்ணுக்கும் பிறந்திருக்கிற அவருடைய குமாரன்தான் — அவன் சிறுவனாகவே இருந்தாலும் — அவருக்குப் பின் பட்டத்துக்கு வர வேண்டுமே தவிர எக்காரணம் கொண்டும் வேலைக்

காரியின் மகனான நீ — தனக்குத் தீவட்டி தூக்கிய ஒரு பணிப்பெண்ணின் மகனான நீ — பட்டத்துக்கு வந்துவிடக் கூடாது என்று அவரிடம் கேட்டிருக்கிறார். அதனால்தான் உன் தமையனார் தன்னுடைய கடைசிக் காலத்தில் அப்பாஜியைக் கூப்பிட்டு உன் கண்ணைப் பறித்து உன்னைச் சிறையில் அடைக்கும்படியும் தன் மகனுக்கு முடிசூட்டும்படியும் சொல்லி யிருக்கிறார். ஆனால், மிகக் குழந்தையான ஒருவன் அரசனாக வருவதை அப்பாஜி விரும்பவில்லை. உன்னையே அரசனாக்க நினைத்தார். ஏனெனில் தமையனாரின் பிரதிநிதியாக நீ சாம்ராஜ்யத்தின் எட்டுத் திசைகளுக்கும் விஜயம் செய்திருந்தாய். ஜனங்களிடையே பழகியிருந்தாய். அவர்களுடைய அபிமானத்தைப் பெற்றிருந்தாய். நீதான் ஆட்சிக்கு வரவேண்டும் என்று தளபதிகளும் பிரபுக்களும் அமரநாயகர்களும் தீவிரமாய் விரும்பினார்கள். ஆகவே, அப்பாஜி உன்னை அரியணையில் ஏற்றிவிட்டார்."

என்னால் எதுவும் சொல்ல முடியவில்லை. எவ்வளவு அவமானங்களையும் இழிவுகளையும் தன்னுள் அமுக்கிக் கொண்டு, பொறுத்துக் கொண்டு இத்தனை காலமும் வாழ்ந்து வந்திருக்கிறார் என் அருமை அன்னை! அதை நினைக்கையில் என் இதயம் கனத்தது.

"ராணி திப்பாம்பா நினைத்ததில் எந்தத் தப்பும் கிடையாது கிருஷ்ணா" என்றார் அம்மா. "அவர் அன்று என்ன நினைத்தாரோ அதையேதான் நானும் இன்று நினைக்கிறேன்."

"அதாவது... அதாவது... என்று திணறினேன். அவர் என்ன சொல்லப் போகிறார் என்பதை என்னால் ஊகிக்க முடிந்தது.

# 20

**எ**ன் பெரியம்மா ராணி திப்பாம்பா அன்று என்ன நினைத்தாரோ அதை — அன்று தன் குமாரனும் என் தமையனாருமான வீரநரசிம்மருக்கு அவர் தாய் என்ன சொன்னாரோ, அதே கருத்தை — தானும் கொண்டிருப்பதாக அன்னையார் சொன்னதும்...

"என்னம்மா சொல்கிறீர்கள்?" என்றேன், கலவரத்துடன்.

அன்னை நாகலாம்பிகை எனக்கு உடனே விடை கூறவில்லை. சிறிது நேரம் மௌனமாக இருந்தார். பிறை நிலவும் தாரகைக் கூட்டங்களும் தந்த மங்கிய வெளிச்சத்துடன் தூரத்திலிருந்து வந்த தீபங்களின் ஒளியும் சேர்ந்து அவர் முகத்தில் குறுக்கும் நெடுக்கும் விழுந்து விளையாடின. மஞ்சளும் நீலமும் சிவப்புமாக அவர்மீது பீய்ச்சப்பட்டிருந்த சாயங்களை, அவர் துடைத்துக்கொண்டு விட்டபோதிலும், முகத்தில் அங்கங்கே உள்ள சுருக்கங்களில் அவை திட்டுத் திட்டாகத் தேங்கியிருந்தன.

கடைசியில் ஒரு பெருமூச்சுடன் சொன்னார்: "சின்னாதேவியை மக்கள் ஒரு நாளும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்...

நான் பதைத்தேன். "என்ன தாயே, இப்படிக் கல்லைத் தூக்கித் தலையில் போடுகிறீர்கள்? என் கடசியில் இருப்பேன் என்றும், சின்னாதேவியை இந்தத் தேசத்தில் யார் எந்த மூலையில் ஒளித்து வைத்திருந்தாலும் மீட்டுவந்து என்னிடம் ஒப்படைப்பேன் என்றும், சற்று முன் நீங்கள்

கொடுத்த வாக்கு இந்த மலைக்காற்றிலே பறந்துவிட்டதா?" என்றேன்.

"இல்லை கிருஷ்ணா... நான் வாக்குக் கொடுத்தது கொடுத்ததுதான். சொன்னதை நிறைவேற்றியே தீருவேன். அதை எப்படி நிறைவேற்றுவது என்பதைப் பற்றி எனக்கு ஒரு திட்டம் இருக்கிறது. அதற்கு நீ ஒப்புக் கொள்ள வேண்டும்.." என்றவர், 'சட்!' என்று வாயில் இருந்த கடலையைத் துப்பினார். 'கடைசிக் கடலை சொத்தைக் கடலையாக இருக்குமென்று வேடிக்கையாகச் சொல் வார்கள். அது உண்மைதான் போலிருக்கிறது!" என்று சிரித்தார்.

"என்னிடம் பாக்கி இருக்கிறது. இந்தாருங்கள், ஒரு நல்ல கடலை... என்று சொல்லி அவரிடம் கொடுத்தேன். அவர் வாயில் போட்டுக்கொண்டு மெல்லும் வரையில் காத்திருந்து, "இப்போது சொல்லுங்கள். என்ன திட்டம்?" என்று கேட்டேன்.

அதற்குள் தொலைவில் தீவட்டிகளின் வெளிச்சம் பிரகாசமாகத் தெரியத் தொடங்கியது. ஆட்களின் ஆரவாரமும் காதில் விழுந்தது.

"அரண்மனை ஆட்கள் நம்மைத் தேடிக்கொண்டு வருகிறார்கள். ரொம்ப நேரம் பேசிக்கொண்டிருந்து விட்டோம். வா. மீதியை நாளைக் காலை அரண்மனையில் பேசிக் கொள்ளலாம்..." என்று எழுந்து கொண்டார் அன்னை.

வ்ந்தவர்கள் அரண்மனை ஆட்கள்தான். இரண்டு பல்லக்குகள் கொண்டு வந்திருந்தார்கள். ஒன்று சிறியது. ஒருவர் மட்டுமே உட்காரக்கூடியது. இன்னொன்று பெரியது. எதிரெதிராக இருவர் அமரலாம்.

"இதிலே போகலாம்... என்று கூறி, அம்மாவை முதலில் ஏறிச் சௌகரியமாக உட்கார்ந்து கொள்ளும்படி

திண்டுகளைச் சரிசெய்து தந்த பின், நானும் ஏறிக்கொண்டு அவர் எதிரில் அமர்ந்தேன். பலசாலியான எட்டு ஆட்கள், வரிசைக்கு நாலு பேராகச் சுமந்து சென்றார்கள். இம்மியும் குலுக்கலோ, ஆட்டமோ இல்லாமல் வெண்ணெயில் வழுக்கிக் கொண்டு போவது போல இருந்தது. இடது பக்கம் இருந்த பல்லக்குத் தூக்கிகள் 'ஹரே ராமா, ஹரே ராமா' என்று சொல்ல, வலது பக்கம் இருந்தவர்கள் 'ஹரே கிருஷ்ணா ஹரே கிருஷ்ணா' என்று குரல் கொடுத்தார்கள். கண்களை மூடிக்கொண்டு அன்னையும் அவர்களுடன் சேர்ந்து ஜபித்துக் கொண்டிருந்தார்.

"சொல்லுங்கள், அம்மா... என்னவோ திட்டம் என்றீர்களே, என்ன? அதைத் தெரிந்து கொள்வதற்காகத் தான் நானும் உங்கள் சிவிகையிலேயே ஏறிக்கொண்டேன்..." என்றேன்.

"உஷ்! சுவர்களுக்கும் காதுகள் உண்டு என்பார்கள். பல்லக்குக்குச் சுவர்களே கிடையாது..." என்று கூறி என்னை அடக்கி விட்டார் அன்னை நாகலாம்பிகை.

ஏன்தான் சக்ரவர்த்தியாக அரியணை ஏறினோமோ என்று அடுத்த தினம் காலையில் நான் மனம் வெறுத்த மாதிரி அதற்கு முன் என்றைக்கும் வெறுத்ததில்லை. சாதாரணக் குடிமகனாக, அன்றாடம் காய்ச்சியாக இருந்தால் நாலு செம்பு தண்ணீரை மேலே விட்டுக் கொண்டு குளித்ததாகப் பேர் பண்ணலாம் அல்லது குளிக்காமலேகூட இருக்கலாம். உடற்பயிற்சிகள் செய்யத் தேவையில்லை. பன்னீர் தெளிக்கவும், ரோஜா இதழ்களைத் தூவவும், தண்ணீர் ஊற்றவும், தேகத்தைத் தேய்த்து விடவும் ஆட்களுக்காகக் காத்திருக்கத் தேவை இல்லை. உடைகளைப் பார்த்துப் பார்த்து உடுத்தத் தேவையில்லை. ஆபரணங்களை அழகழகாய்ப் பூட்டிக் கொண்டிருக்கத் தேவையில்லை. வணக்கம் தெரிவிக்க வரும் அமர

நாயகர்களுக்குப் பதில் வணக்கம் கூறத் தேவையில்லை. ஈசன் சந்நிதிக்குச் சென்று ஸ்தோத்திரங்களைச் சொல்லிப் பூசை செய்யத் தேவையில்லை. அந்தணர்கள் கூறும் ஆசீர்வாத வசனங்களைப் பயபக்தியுடன் கேட்டுக் கொண்டு நிற்கத் தேவையில்லை.

ஆனால், சக்ரவர்த்தி என்ற வேஷத்தைப் போட்டுக் கொண்டிருக்கிறேனே! அதற்குண்டான போலிச் சடங்கு களைச் செய்து முடித்துவிட்டுத்தான் அம்மாவின் அரண்மனைக்குப் போக முடிந்தது. அதுகூட ஓட்டமும் நடையுமாகப் போக முடியவில்லை. அமரிக்கையாக, ராஜகம்பீரமாக, 'என் உள்ளத்துக்குள்ளே எந்தக் கவலையும் கிடையாது! எந்தப் பிரச்னையும் கிடையாது' என்று உலகத்துக்கெல்லாம் பிரகடனப்படுத்துகிற மாதிரி வதனத்தைப் பிரசன்னமாக வைத்துக் கொண்டு நடை போட்டேன்.

எனக்கு முன்பே மகாபிரதானி அப்பாஜி வந்திருந்து அம்மாவுடன் பேசிக்கொண்டிருந்தார்.

"வா, கிருஷ்ணா... என்று அம்மாதான் வழக்கம் போல வாய் நிறைய வரவேற்றார். அப்பாஜி சம்பிர தாயத்துக்குக் கைகுவித்து விட்டுப் பேசாமல் உட்கார்ந் திருந்தார். என் விஷயங்களை அன்னை அவரிடம் சொல்லியிருப்பார் என்று ஊகித்தேன். ஒரு வகையில் மனசின் சுமை இறங்கிய மாதிரி இருந்தது.

அம்மா புன்சிரிப்புடன் "மகாபிரதானிக்கு உன்மீது கோபம்..."என்றார்.

"அதெல்லாமில்லை... என்று முணுமுணுத்தார் அப்பாஜி.

"சரி, வருத்தம்... என்றார் அன்னை. "உன் விஷயத்தையெல்லாம் சொன்னேன்... இத்தனை நாளும்

தன்னிடம் எதுவும் நீ சொல்லவில்லையே என்று வருத்தப்படுகிறார்..."

அப்பாஜி மெள்ளச் சொன்னார்: ''அதுகூட வருத்தமில்லை... எத்தனை வருடங்களாக சக்ரவர்த்திக்கு விசுவாசமாக நான் இருந்து வந்திருக்கிறேன்! ஆனால், என்னை நம்பாமல், நேற்று வந்த புதுப் பெண்ணிடம் அதுவும், பகைவனின் நாட்டிலிருந்து வந்தவளிடம், சக்ரவர்த்தி நம்பிக்கை வைத்து, இவ்வளவு அந்தரங்கமான விஷயத்தை ஒப்படைத்திருக்கிறாரே என்றுதான் எனக்கு வருத்தம்..."

பணிப்பெண் கொண்டு வந்த பழரசத்தை உறிஞ்சியபடி நான் சொன்னேன்: "அப்பாஜி, தங்களிடம் நம்பிக்கை இல்லாமல் இல்லை. ஆனால், சொல்வதற்குக் கூச்சமாக இருந்தது. மகாபிரதானியிடம் ராஜீயப் பிரச்னையைப் பேசலாம். படையெடுப்புகளைக் குறித்துத் திட்டமிடலாம். சொந்த சமாசாரத்தை விவாதிப்பது தங்களை அவமரியாதை செய்வதாக இருக்கும் என்று நினைத்தேன்... என்றேன்.

"சரி, விடுங்கள்..." என்றார் அப்பாஜி. அவர் முகத்தில் இருந்த இறுக்கம் சிறிது குறைந்தது. "தங்கள் அன்னை எல்லா விஷயமும் சொன்னார்... அதற்கு ஒரு வழி சொல்ல வேண்டியது என் கடமை..." என்றார்.

"அப்பாஜி ஒரு யோசனை சொல்கிறார்" என்றார் அன்னை நாகலாம்பிகை. பொதுவாக மகாபிரதானி என்றுதான் அப்பாஜியை அவர் குறிப்பிடுவார். ராஜ குடும்பத்துக்கு நெருக்கமானவர் என்பதை நான் உணரவேண்டும் என்பதற்காகவே அப்பாஜி என்று குறிப்பிட்டார் என்று புரிந்துகொண்டேன்.

காலை கண்விழித்தது முதல் எனக்குள்ளிருந்த படபடப்பு இப்போது அதிகரித்தது.

"நீங்களல்லவா ஏதோ வழி சொல்கிறேன் என்று நேற்று சொன்னீர்கள்?" என்று அம்மாவைக் கேட்டேன். அன்னை யாரையாவது சமாளிக்கலாம். அப்பாஜியைச் சமாளிப்பது கடினம்.

"நான் சொல்வதாக இருந்ததும், அப்பாஜி சொல்லப் போவதும் ஒன்றுதான். கிருஷ்ணா" என்று அன்னையார் புன்னகையுடன் சொன்னது என் குழப்பத்தைக் கூட்டியதே யொழியக் குறைக்கவில்லை.

அவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். பிறகு, அப்பாஜி தொண்டையைக் கனைத்துக் கொண்டு, "நானும் கவிஞன்தான், சக்ரவர்த்தி... கவிதைகள் எழுதியவன். கவிதைகளை ரசித்தவன். கவிதைகளில் சிறந்த ரசம் காதல் ரசம்தான் என்பதை உணர்ந்திருப்பவன். ஆகவே, சக்ரவர்த்தியின் உணர்ச்சி காதல் உணர்ச்சி எப்படி இருக்குமென்பதை நான் அறிந்தவன். சக்ரவர்த்தியாக இருப்பவர் காதலிக்கவே கூடாதென்றோ, அப்படியே காதலித்தாலும் உயர்குலத்து ராஜகுமாரியைத் தான் காதலிக்க வேண்டுமென்றோ கட்டுப்பாடு விதிப்பது அபத்தம் என்றுதான் நான் எண்ணுகிறேன், ஆகையால் தாங்கள் சின்னாதேவி என்ற நாட்டிய மங்கையைக் காதலிப்பதிலோ, அவளை மணக்க வேண்டுமென்று ஆசைப்படுவதிலோ எந்தத் தப்பும் கிடையாது..."

இவ்வளவு நீண்ட முன்னுரை மொழிந்துவிட்டு, என் முகத்தைப் பார்த்தார் அப்பாஜி. நான் மௌனமாக இருந்தேன். புயல் அடிப்பதற்கு முன்னால் தென்றல் வீசுகிறது என்று புரிந்தது.

"ஆனால், தங்கள் அன்னை சொல்வதிலும் நியாயம் இருக்கிறது. பட்டமகிஷியாக ஒரு நாட்டிய மங்கை வருவதை மக்கள் விரும்ப மாட்டார்கள்..." என்றார் அப்பாஜி. தாசி என்றோ, தேவதாசி என்றோ சொல்லாமல்,

நாட்டிய மங்கை என்றே அவர் குறிப்பிட்டுக் கொண்டிருப்பதைக் கவனித்தேன்.

"அதனால் நான் என்ன சொல்கிறேனென்றால்...

"சொல்லுங்கள்" என்றேன்.

"ஜனங்களைச் சந்தோஷப்படுத்துவதற்காக, அவர்களைத் திருப்தி செய்வதற்காக, முதலில் ஒரு அரச குலத்துப் பெண்ணை மணந்து கொள்ளுங்கள். அப்படியொரு பெண் எங்கே இருக்கிறாள் என்று தேடவும் தேவையில்லை...

நான் உடனே குறுக்கிட்டு, "இதோ, ஸ்ரீரங்கப் பட்டணத்து ராஜகுமாரி திருமலாதேவி இருக்கிறாள் என்று சொல்லப் போகிறீர்கள்? அப்படித்தானே... சுற்றிச் சுற்றிக் கடைசியில் அங்கே வந்துதான் முடிப்பீர்களென்று எனக்குத் தெரியும்!" என்றேன். என்னையும் மீறி என் குரலில் சீற்றம் வெளிப்பட்டுவிட்டது. "அப்பாஜி, உங்களுக்கும் சொல்கிறேன். அம்மா, உங்களுக்கும் சொல்கிறேன். என் இதயத்தில் சின்னாதேவியைத் தவிர யாருக்கும் இடம் கிடையாது..."

அப்பாஜி புன்னகை செய்தார்.

"அடடா! திருமலாதேவிக்குத் தங்கள் உள்ளத்தில் இடம் கொடுங்கள் என்று நான் எப்போது சொன்னேன், சக்ரவர்த்தி?" என்றார் பதட்டமில்லாத சாந்தமான குரலில். "கைப்பிடியுங்கள், மணந்துகொள்ளுங்கள், சிம்மாதனத்தில் தங்களருகே உட்கார்த்தி வைத்துக்கொள்ளுங்கள் என்றுதான் சொன்னேன். பட்டமகிஷியாக, முதல் பத்தினியாகத் திருமலாதேவி வரட்டும். பிறகு சின்னாதேவியை அல்லது தங்களுக்கு விருப்பமான எந்தப் பெண்ணை வேண்டுமானாலும் மணந்து கொள்ளுங்களேன்! யார் என்ன சொல்லமுடியும்?"

"கைப்பிடிப்பது ஒருத்தியை, காதலிப்பது வேறொரு த்தியை என்றெல்லாம் வேஷம் போட என்னால் முடியாது அப்பாஜி..." என்றேன்.

"அவர் சொல்வதைப் பொறுமையாக, முழுக்கத்தான் கேளேன் கிருஷ்ணா..." என்று அன்னை கடிந்து கொண்டார்.

"இதில் சாம்ராஜ்யத்தின் நலனும் இருக்கிறது, சக்ரவர்த்தி..." என்றார் அப்பாஜி.

"எதில்...? ஸ்ரீரங்கப்பட்டணம் ராஜகுமாரியை மணப்பதிலா?" என்று ஏளனம் செய்தேன்.

"ஆம், சக்ரவர்த்தி... என்றார் அப்பாஜி பொறுமை இழக்காமல் "கோல்கொண்டா சுல்தான் குதுப் ஷாஹியும் அகமது நகர் சுல்தான் நிஜாம் ஷாஹியும் விஜயபுரம் சுல்தானான ஆதில்ஷாவுக்குத் தூது அனுப்பியிருக் கிறார்கள். ஒருவரோடொருவர் சமரசம் ஏற்படுத்திக் கொள்ளப் பேச்சுவார்த்தை நடக்கிறது என்று ஒற்றர்கள் மூலம் நமக்குச் செய்தி கிடைத்திருக்கிறது. இன்னும் சிறிது நாளில் பிதார் சுல்தான் பரித் ஷாஹியும் பேரார் சுல்தான் இமாத் ஷாஹியும் அவர்களுடன் சேர்ந்து கொள்ளும் அபாயம் இருக்கிறது. கலிங்கத்துப் பிரதாபருத்ர கஜபதியும் சேர்ந்து கொள்ளலாம். அதையெல்லாம் தடுப்பதற்காக, ஆதில் ஷாவை அடக்குவதற்காக, எந்த நிமிடமும் நாம் விஜயபுரத்தின்மீது படையெடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. அப்படிப் படையெடுக்கும் பட்சத்தில், நமது சிற்றரசர்கள் அனைவரிடமும் படை உதவி பெற வேண்டும். ஸ்ரீரங்கப்பட்டணம் மன்னரையும் சேர்த்தே சொல்கிறேன்..."

நான் கோபத்துடன் நகைத்தேன். "உம்மத்தூர் படையெடுப்பைத் தொடர்ந்து சிவசமுத்திரமும்

ஸ்ரீரங்கப்பட்டணமும் நம் காலடியில் விழுந்தன. அங்கே நமது உறவினர்களான சில சுண்டைக்காய்களை நமது பிரதிநிதிகளாக நியமித்தோம். அவர்கள் இன்று சிற்றரசர் அந்தஸ்துக்கு உயர்ந்து விட்டார்களா? அவர்களிடமே உதவி கேட்கும் கேவல நிலைமை வந்து விட்டதா இந்த விஜயநகர சாம்ராஜ்யத்துக்கு?"

"சக்ரவர்த்தி, தாங்கள் சொல்வது நான்கு வருடத்துக்கு முந்தைய நிலைமை... இப்போது எந்தச் சிற்றரசருமே சுண்டைக்காய் அல்ல... ஏதோ பழைய விசுவாசத்துக்காகக் கட்டுப்பட்டிருக்கிறார்களே தவிர, ஒவ்வொருவரும் பூசணிக்காயாக வளர்ந்து விட்டார்கள். எல்லாச் சிற்றரசர்களிடமும் இருக்கும் மொத்தப் படைகளின் எண்ணிக்கையைக் கூட்டினால், நமக்குச் சொந்தமாக உள்ள படைகளைக் காட்டிலும் அதிகம் இருக்கும். ஆகவே, ஒவ்வொரு சிற்றரசரையும் கூட்டாளிகளாகச் சேர்த்துக் கொள்வதுதான் இந்தச் சமயத்தில் முக்கியம். திருமலாதேவிக்காக அல்ல, ஸ்ரீரங்கம் மன்னருக்காக அல்ல, சின்னாதேவிக்காக அல்ல, சாம்ராஜ்யத்தின் நலனுக்காகச் செய்யவேண்டிய திருமணம் இது...."

என்று அப்பாஜி சொல்லிக் கொண்டிருந்தபோதே, நான் எழுந்து கொண்டுவிட்டேன். அவர் சொன்ன உண்மைகள் கசந்தன.

அன்னையையும், அப்பாஜியையும் பார்த்துவிட்டுத் திரும்பியது முதல், என் மனம் யானை இறங்கிய அல்லிக்குளம் போல அலங்கோலமாகியிருந்தது. வேறு எதிலாவது புத்தியைச் செலுத்தாவிட்டால், நிச்சயமாய்ப் பைத்தியம் பிடித்துவிடும் என்று பயம் ஏற்பட்டது.

நடனக்கூடத்தில் வேலை எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்பதைப் பார்க்கலாம் என்று அந்தத்

திசையில் திரும்பி நடந்தேன். அப்போதுதான் ஞாபகம் வந்தது சென்ற சில நாட்களாக அங்கிருந்து ஓசைகள் எதுவும் வரவில்லை என்பது.

காலைகளில் எனக்குத் திருப்பள்ளி பாடுவது சிற்றுளிகளின் சப்தமே. இரவில் தாலாட்டுப் பாடுவதும் கற்கள் புரட்டி நகர்த்தப்படும் ஓசைகள்தான். எனக்கிருந்த மன உளைச்சலில் இரண்டு மூன்று தினங்களாக அங்கே நிசப்தம் நிலவுவதைக் கவனிக்கத் தவறிவிட்டேன்.

தேடிப்போன மூலிகை காலில் சிக்கினாற்போல, பந்தம் லக்ஷ்மிநாராயணா எதிரில் வந்து கொண்டிருந்தார்.

"நமஸ்காரம்..." என்றார் நாட்டியாசாரியர், என்னைக் கண்டதும்.

"சின்னவனாகிய நான்தான் தங்களுக்கு வணக்கம் சொல்ல வேண்டும், பந்தம்காரு... தாங்கள் கையை உயர்த்தி ஆசி கூறினால் போதும்..." என்றேன். குரலில் உற்சாகத்தை வரவழைத்துக் கொண்டு, 'உற்சாகம் இல்லாதபோது உற்சாகம் இருப்பது போல் நடி. நிஜமான உற்சாகம் வரும்' என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

சோகையாகப் புன்சிரிப்புக் காட்டினார். அவர் முகத்தைக் கவனித்தபோது, என் உற்சாகம் அவரைத் தொற்றிக் கொண்டதாகத் தெரியவில்லை.

"எல்லாம் சரிவர நடந்து கொண்டிருக்கிற தில்லையா?" என்று விசாரித்தேன்.

"ஊம்... ஊம்... நடக்காமலென்ன?" என்றார்.

பாவம், மனிதர் ஏதோ கவலையில் இருக்கிறார் என்று நினைத்துக்கொண்டு, "எங்கே உங்கள் சிஷ்யப்பிள்ளை முத்து? தூங்கிக் கொண்டிருக்கிறானா?" என்றேன் விளையாட்டாக.

"சக்ரவர்த்தி, அவனைப் பற்றிச் சொல்லத்தான் வந்தேன்..." என்றார் லக்ஷ்மிநாராயணா. அவர் குரல் தழுதழுப்பதைக் கண்டதும் எனக்குத் திகீரென்றது.

"ஏன்? என்ன ஆயிற்று அவனுக்கு?" என்றேன்.

"வேறொன்றுமில்லை... தாண்டவக்ஷேத்திரமான சித்திரக்கூடத்தில்..."

"சிதம்பரத்தைச் சொல்கிறீர்களா?" என்றேன்.

"ஆமாம்... அங்குள்ள பொன்னம்பலநாதர் கோயிலின் பிரகாரங் களிலும், கோபுரங்களிலும் குலோத்துங்க சோழர் அருமையான நாட்டியச் சிற்பங்களை வடித்திருக்கிறார் என்று சொன்னார்கள். அதைப் பார்த்து வந்தால் இங்கே நமது நாட்டிய மண்டபத்துக்கு உபயோகமாக இருக்கும் என்று முத்து சொல்லிக் கொண்டிருந்தான்...

'சொல்லிக் கொண்டிருக்கிறான்' என்று கூறாமல், 'சொல்லிக் கொண்டிருந்தான்' என்று கடந்த காலத்தில் அவர் குறிப்பிட்டது எனக்குத் திகில் ஏற்படுத்தியது. குறுக்கிட்டுப் பேசக்கூடத் தைரியமில்லாதவனாக அவர் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

"சக்ரவர்த்தியிடம் சொன்னால் சகல வசதியினரும் செய்தி தருவார், நாம் இரண்டு பேரும் போகலாம். பொறுத்திரு என்று நான் சொன்னேன். சக்ரவர்த்திக்கு ஆயிரம் பிரச்னை இருக்கும். நாம் வேறே தொல்லை கொடுப்பானேன் என்று சொல்லிக் கொண்டிருந்தான்.."

மறுபடியும் கடந்த காலம்!

"என்ன ஆயிற்று அவனுக்கு? அதைச் சொல்லுங்கள் முதலில்!" என்று அவர் என் குரு என்பதையும் மறந்து இரைந்தே கேட்டுவிட்டேன்.

"போன வாரம் என்னிடம்கூடச் சொல்லிக் கொள்ளாமல் சிதம்பரத்துக்குப் புறப்பட்டுவிட்டான்..."

“தனியாகவா?”

“இல்லை. வர்த்தக விஷயமாகவோ, க்ஷேத்ராடன மாகவோ பல பேர் சேர்ந்து பயணம் போகிறார்களல்லவா, அவர்களில் ஒருவனாகச் சேர்ந்து கொண்டான்...

“புத்திசாலித்தனம்தான்... என்றேன்.

“அது புத்திசாலித்தனம்தான். ஆனால், இன்னொரு காரியம் செய்துவிட்டான். அதுதான் முட்டாள்தனம்...” என்றார் லக்ஷ்மிநாராயணா. “தன் மனைவியையும் அழைத்துக்கொண்டு போனான். சின்னப்பெண், கல்யாணமாகி ஒரு வருஷம்தான் ஆகிறது... என்றவர். “சோலை, இப்படி வாம்மா... என்றார்.

அப்போதுதான் கவனித்தேன். ஓங்கி உயர்ந்த தூணை ஒட்டியபடி, திரைச் சீலைக்குப் பின், பாதி தெரிந்தும் பாதி மறைந்தும் ஒரு பெண் நின்றிருப்பதை...

“தைரியமாக வாம்மா, சோலை... என்று லக்ஷ்மிநாராயணா மறுபடி சொன்ன பிறகே, அந்தப்பெண் என் முன்னே வந்தாள். வரும்போதே பெரும் விம்மலுடன் அழுதுகொண்டே வந்தாள். தடாலென்று என் காலில் விழுந்துவிட்டாள். என் இரு பாதங்களுக்கிடையில் முகத்தைப் புதைத்துக்கொண்டு அவள் கிடந்தபோது தாழ்ந்து எழுந்து அடங்கும் அவளுடைய முதுகு சொல்ல முடியாத சோகத்தையெல்லாம் சொல்லியது.

“எழுந்திரம்மா, எழுந்திரு... என்ன நடந்தது?” என்று நான் கேட்டதும், அந்தப் பெண் துயரம் தாங்காதவளாக மறுபடியும் தூணுக்குப் பின்னே ஒளிந்துகொள்ள ஓடினாள்.

“இரு, சோலை... இரு... என்று அவளைத் தடுத்து நிறுத்திய லக்ஷ்மிநாராயணா, அவளுடைய வலது கையைப் பிடித்து என் முன்னே காட்டினார். அவமானத்துடன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள் முத்துவின் மனைவி.

கையைப் பார்த்த நான் பதைத்துப் போனேன்.

பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கோலினால் அங்கே சூடு போடப்பட்டிருந்தது. ஆனால் என்னைப் பதைக்க வைத்தது. ஆறாமல் செவசெவத்துக் கொண்டிருந்த அந்தப் பச்சைக் காயம் மட்டுமல்ல...

பெருக்கல் குறி போலக் குறுக்காக இரண்டு கோடுகளாகச் சூடு போடப்பட்டிருந்ததைக் கண்டுதான் நான் அதிகமாகப் பதைத்துப் போனேன். அதற்கு அர்த்தம் எனக்குத் தெரியும். 'ஒழுக்கம் கெட்டவள், நடத்தை தவறியவள்' என்று ஒரு பெண்ணைப் பற்றித் தெரிய வந்தால், அந்தச் சாதியினர் தங்கள் சாதியிலிருந்து அவளை விலக்கிவைத்து, அதற்கு அடையாளமாக இப்படிப் பெருக்கல் குறியாகச் சூடு போடுவது வழக்கம்.

ஆனால், இந்தப் பெண்... முத்துவின் புது மனைவி... இவருக்கா இப்படி...

# 21

அந்தப் பெண்ணின் இளமை ததும்பும் கறுத்த கையையும், சொதசொதவென்றிருக்கும் ரணத்தையும், நடத்தை தவறியவள் என்பதைக் குறிப்பதற்காகச் சூட்டுக்கோலால் போட்டிருந்த பெருக்கல் குறியையும், துயரம் தாங்காமல் திரும்பிய முகத்துடன் அழுதுகொண்டு நின்றிருக்கும் அந்த அவமானப்பட்ட பெண்ணின் நிலையையும் பார்த்து என் மனத்தில் வேதனை மிதமிஞ்சி உண்டாயிற்று.

ஆர்வமுள்ள, சுறுசுறுப்பான, மூத்தோர் சொல்லும் வார்த்தையைப் பணிவுடன் ஏற்றுக்கொள்கிற நல்ல கலைஞன் முத்து. அவனைக் காணவில்லை என்பது ஒருபுறமிருக்க, அவன் சென்ற வருடம்தான் மணந்திருந்த இந்தப் பெண் சோலையை ஏன் இப்படிக் கொடுமைப் படுத்தி இருக்கிறார்கள்...? அவளைப் பார்த்தால் களங்கமற்ற குழந்தையாகத் தெரிகிறாளே...?

என்னைப் போலவே தானும் துயரமுற்றவராகக் கையைப் பிசைந்து கொண்டு நின்றிருந்தார், அவளை அழைத்து வந்த நாட்டியாசாரியர் பந்தம் லக்ஷ்மி நாராயணா.

''என்ன இதெல்லாம் பந்தம்காரு...? எனக்குப் புரியவில்லையே...? என்றேன்.

“இவள் வாயிலிருந்து தகவல் வரவழைப்பதற்குள் போதும் போதும் என்றாகி விட்டது...'' என்றார் லக்ஷ்மிநாராயணா. “எனக்குத் தெரிந்தவரையில், இவளும்

முத்துவும் இன்னும் சிலரும் நடைபயணமாகப் பொன்னம்பலத்துக்குப் புறப்பட்டிருக்கிறார்கள். காஞ்சி புரத்துக்கும் திருவண்ணாமலைக்கும் நடுவே, தோப்பு வழியே போய்க் கொண்டிருந்தபோது வழிப்பறிக் கொள்ளைக்காரர்கள் திடீரென்று தாக்கியிருக்கிறார்கள். விடியற்காலை, இருட்டுப் பிரியாத நேரம்... அந்த வேளையில் ஏன் இவர்கள் காஞ்சியை விட்டுக் கிளம்பினார்களோ, தெரியவில்லை... கொள்ளைக்காரர்கள் கத்தி, அரிவாள், ஈட்டி எல்லாம் வைத்திருக்கிறார்கள். இந்தப் பயணிகளோ நிராயுதபாணிகள், பாவம்... கட்டையோ, மட்டையோ, கல்லோ, பாறையோ... கையில் கிடைத்ததை எடுத்து வீசிச் சண்டை போட்டி ருக்கிறார்கள்...

லக்ஷ்மிநாராயணா சற்று நிறுத்தினார். அந்தப் பெண் என் முன்னிலையில் மேலும் நிற்கக் கூச்சப்பட்டு, பழையபடி தூண் ஓரத்துக்கு ஓடிவிட்டாள். திரையின் பின்னாலிருந்து அவள் விம்மல் கேட்டுக் கொண்டிருந்தது.

"கொள்ளைக்காரர்கள் பயணிகளின் உடைமை களைப் பறித்துக்கொண்டு ஓடியபோது, முத்துவும் இன்னும் சிலரும் அவர்களைத் துரத்திக்கொண்டு போனார்களாம். சில பயணிகள் பயந்து போய், அந்த வழியே திரும்பி வந்துவிட்டார்கள். முத்து இவளிடம், 'நீ அவர்களுடன் போ... நான் பத்திரமாக வருகிறேன்' என்று சொல்லிவிட்டுக் கொள்ளைக்காரர்களை விரட்டிக்கொண்டு போயி ருக்கிறான். இதுவரை அவன் திரும்பி வரக் காணோம். இவள் மட்டும் திரும்பிவிட்டாள்..."

"அதுசரி... இந்தப் பெண்... இவள் கையில்... எப்படி அதைக் கேட்பதென்று எனக்கே கஷ்டமாக இருந்தது.

"வழிப்பறிக்காரர்களிடம் சிக்கிக் கொண்டாள் என்று கேள்விப்பட்டு இவளுடைய ஜாதிக்காரர்கள் இவளைச்

சந்தேகப்படுகிறார்கள்... கெட்டுப் போயிருப்பாள் என்று அவர்களாகவே தீர்மானித்து, ஜாதி விலக்கு செய்து, அதற்கு அடையாளமாகக் கையில் சூடு போட்டிருக்கிறார்கள்..."

நான் கோபத்தில் கொதித்தேன்.

"ஒவ்வொரு பெண்ணும் சீதாப்பிராட்டி போலத் தான் தூய்மையானவள் என்பதை அக்னிப்பிரவேசம் செய்தா நிரூபிக்க முடியும்!" என்று கூறி, அவளிடம்... "நீ போம்மா. முத்துவைப் பத்திரமாக அழைத்துவர ஏற்பாடு செய்கிறேன்..'' என்றேன். பின்னர், வாசல் காரியம் பார்க்கும் அதிகாரியைக் கூப்பிட்டு, "இந்தப் பெண்ணுக்கு அந்தப்புரத்தில் வேலை கொடுத்து இருக்க வையுங்கள்..." என்றேன்.

சோலை மறுபடியும் ஒரு தடவை என் காலில் விழுந்து வணங்கிவிட்டு, கண்களைத் துடைத்தபடி புறப்பட்டுச் சென்றாள்.

''சக்ரவர்த்தியின் தர்ம ராஜ்யம் நீடூழி வாழ வேண்டும்... என்று வாழ்த்திவிட்டுப் பந்தம் லக்ஷ்மி நாராயணாவும் விடைபெற்றார்.

ஜங்கமய்யாவைக் கூப்பிட்டனுப்பினேன். நடந்ததை அவரிடம் சொல்லி, "நமது ராஜ்யத்தின் பெருவழிகள் எல்லாமே இந்த லடசணத்தில்தான் இருக்கின்றனவா...? என்ன உத்தியோகம் பார்க்கிறீர்கள் நீங்களெல்லாம்...? பயணிகளுக்கு வசதிகள் செய்து தராவிட்டாலும், கேவலம் பாதுகாப்புக் கூடவா கொடுக்க முடியவில்லை...?" என்று வெடித்தேன்.

"மன்னிக்கணும், சக்ரவர்த்தி... எவ்வளவு முடியுமோ, அவ்வளவும் செய்து கொண்டிருக்கிறோம். ஆனால், பல சமயங்களில் இந்த வழிப்பறிக்காரர்கள் பயணிகளுடன் பயணிகளாகச் சேர்ந்து கொண்டு விடுகிறார்கள். யார்

கொள்ளைக்காரன், யார் வழிப்போக்கன் என்பதே தெரிவதில்லை..." என்றார் ஜங்கமய்யா.

"இதெல்லாம் கையாலாகாதவர்களின் வெறும் பேச்சு!" என்றேன். "பெரிய பெரிய ராஜ்யங்களின் மீதெல்லாம் படையெடுத்து மாபெரும் மன்னர்களை மண்டியிட வைக்கும் விஜயநகரப் பேரரசுக்குக் கேவலம் சிற்சில வழிப்பறிக் கொள்ளைக்காரர்களைப் பிடிக்கச் சாமர்த்தியம் இல்லையென்றால், அதைக் காட்டிலும் அவக்கேடு இல்லை!"

"அது... வந்து... சக்ரவர்த்தி... என்று மீண்டும் சமாதானம் சொல்ல முயன்றார் ஜங்கமய்யா.

"நீங்கள் போங்கள்... நான் யோசனை செய்து, இதற்கு ஒரு வழி கண்டு பிடிக்கிறேன்... என்று சொல்லி அவரை அனுப்பிவிட்டு, இங்குமங்குமாக நடந்து கொண்டிருந்தேன். எண்ணங்களும் என்கூடவே ஓடின.

ஸ்ரீரங்கப்பட்டணத்து ராஜகுமாரி திருமலாம்பாவை நான் மணப்பதுதான் ராஜ்யத்தின் நலனுக்கு உகந்தது என்று அன்னையும் மகாபிரதானியும் வற்புறுத்திக் கூறியது திரும்பத் திரும்ப என் நினைவில் மோதியது. காதலுக்காக அரசாட்சியைத் துறப்பது மன்னனுக்கு அழகல்ல என்றால், அரச போகத்துக்காகக் காதலைத் துறப்பது மனிதனுக்கு அழகல்லவே!

சாளரத்தின் வழியே வெளியே பார்த்தேன். கொய்யா மரத்தின் கிளையில் ஓர் அணில் ஏறுவதும், பட்சியொன்று பறந்து வருவதைக் கண்டவுடன் சரசரவென்று இறங்கி ஓடுவதும், பட்சி திரும்பிப் போனவுடன் மறுபடி கிளையில் ஏறுவதுமாக இருந்தது. நானும் அந்த அணிலும் ஒன்று என்று நினைத்துக் கொண்டேன். சின்னாதேவியின் நினைவை ஒழிக்க நினைத்தால், திருமலாம்பா வந்து நிற்கிறாள். திருமலாம்பாவின் நினைவை ஒழிக்க

நினைத்தால் சின்னாதேவி வந்து நிற்கிறாள். இரண்டு நினைப்பையும் விட்டேனென்றால், பாமனி சுல்தான்களின் போர் முழக்கம் பற்றிய பிரச்னை!

சேவகன் ஒருவன் உள்ளே நுழைந்து, "சக்ரவர்த்தியைத் தரிசிப்பதற்காக அமைச்சர் வடமலையண்ணன் வந்திருக்கிறார். உள்ளே வரலாமா என்று அனுமதி கேட்கிறார்..." என்றான்.

"இப்போது வேண்டாம்" என்று சொல்ல வாயெடுத்தேன், சொல்லவில்லை.

வடமலையண்ணன் தொண்டை நாட்டைச் சேர்ந்த தமிழர். தமிழ்ச் சீமைகளுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென்பதற்காக, என் அமைச்சரவையில் அவரைச் சேர்த்துக் கொண்டிருந்தேன். தமிழ்நாட்டின் நிலைமைகளை அவ்வப்போது தெரிவிப்பார். கல்வி கேள்விகளில் திறன் பெற்ற தமிழர். ஓய்வு கிடைக்கும்போதெல்லாம், இலக்கியச் சிறப்புப் பெற்ற தமிழ் நூல்களைப் பற்றி எனக்குப் பாடம் சொல்லித்தந்த ஆசானும் கூட,

ஆனால்...

அப்பாஜியின் நெருங்கிய சகாக்களில் ஒருவர் இந்த வடமலையண்ணன். பாமனி சுல்தான்களின் சதியாலோசனைகளைக் குறித்து எனக்கு எடுத்துக் கூறி, ஸ்ரீரங்கப் பட்டணத்து மன்னரைப் போன்ற சிற்றரசர்களின் நட்பை நான் சம்பாதித்துக் கொள்ள வேண்டிய அவசியத்தை எடுத்துரைப்பதற்காக அப்பாஜி இவரைத் தூது அனுப்பியிருக்கிறார் என்பது என் சந்தேகம். ஆகவேதான் அவரை வரவேண்டாம் என்று சொல்ல நினைத்தேன். ஆனால், என் அமைச்சர்களில் ஒருவரை அப்படிப் பகிரங்கமாக அவமதிப்பது தவறு; அதுவும் சேவகன் மூலம் சொல்லியனுப்புவது பின்னும் தவறு. எனவே, மரியாதைக்காக அவர் சொல்வதை இந்தக் காதால் வாங்கி, அந்தக்

காதால் விட்டுவிட்டால் போயிற்று என்று எண்ணிய வனாக, "வரச் சொல்... என்றேன்.

அமைச்சர் மட்டும் வரவில்லை. அவர் பின்னே, அவருடைய தம்பி அரிதாசர் என்ற சிறந்த தமிழ்ப் புலவரும் வந்தார். சில தினங்களுக்கு முன் 'இரு சமய விளக்கம்' என்ற தமது நூலை என்னிடம் தந்து, நான் படித்துப் பார்த்துக் கருத்துச் சொல்ல வேண்டுமென்று வேண்டிக் கொண்டி ருந்தார்.

கொஞ்ச நாட்களாக இந்தக் கவிஞர்களின் அன்புத் தொல்லை எனக்கு அதிகமாகியிருந்தது.

கலைஞர் அல்லஸானி பெத்தன்னாவுக்கு நான் மரியாதை கொடுப்பதைப் பார்த்து இந்தத் தொல்லை.

அல்லஸானி இயற்றிய மிகச் சிறந்த பிரபந்தம் 'மனுசரிதம்' மார்க்கண்டேய புராணத்தை ஒட்டி அற்புதமாக எழுதியிருந்தார். எனக்கே அந்த நூலைச் சமர்ப்பணம் செய்திருந்தார். என்னிடம் அதைக் கொடுப்பதற்காக அரண்மனைக்கு வந்திருந்தபோது, அவருக்குச் சகல மரியாதைகளும் செய்தேன். அவர் காலைத் தொட்டு வணங்கி, வைரம் இழைத்த காப்பை என் கையாலேயே அணிவித்தேன். அவரைப் பல்லக்கில் ஏற்றி, சிவிகை சுமக்கும் ஆட்களோடு நானும் ஒருவனாகச் சில அடி தூரம் அவரைச் சுமந்து சென்றேன். ஒருநாள் எனக்குச் சமமாக யானைமீது ஏற்றிக் கொண்டதை முன்பே சொல்லியிருக்கிறேன். தெலுங்கு இலக்கியத்துக்கு அவர் ஆற்றிய மாபெரும் பணிக்காக, நான் கொடுத்த கௌரவம் அது.

அதன் விளைவு, தெலுங்குப் புலவர்கள், தமிழ் அறிஞர்கள், சம்ஸ்கிருதக் கவிஞர்கள், கன்னட வித்தகர்கள் ஏன் அரபு, பாரசீக மொழி விற்பன்னர்கள் கூடத்

தங்கள் படைப்பை என்னிடம் காட்டுவதற்காக வந்து கொண்டிருக்கிறார்கள். நான் கவிஞர்களை ஆதரிப்பவன், இலக்கியத்தைப் போற்றுகிறவன் என்று சரியாகவோ, தப்பாகவோ ஒரு அபிப்பிராயம் மக்களிடையே பரவி விட்டதால், நானும் அந்த அபிப்பிராயத்தைக் கெடுத்துக் கொள்ளாமல், எந்த மொழிப் புலவர் வந்தாலும் சன்மானத்துடன் அனுப்புவதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தேன்.

அப்படி என் அறிமுகத்தைப் பெற்றவர் தான் அரிதாசர். அமைச்சர் வடமலையாரின் தம்பி என்ற சலுகை வேறே.

சம்பிரதாயமாகக் கொஞ்சநேரம் பேசிவிட்டு வெகுமானித்து அனுப்பிவிட வேண்டியதுதான் என்று முதலில் நினைத்தவன், 'இரு சமய விளக்கம்' நூலைச் சில தினங்களுக்கு முன் படித்தபோது, அது குறித்து ஏற்பட்டிருந்த எண்ணத்தை இன்று புலவர் பெருமானிடம் சொல்லிவிட வேண்டியதுதான் என்று தீர்மானித்துக் கொண்டேன். சற்று நேரம் கவலைகளை மறந்திருக்க இதுவே தருணம் என்று தோன்றியது.

"வரவேண்டும், வரவேண்டும்... என்று அன்போடு வரவேற்று, இருக்கை தந்து அமரச் சொன்னேன் அண்ணன், தம்பி இருவரையும்.

இதைப் படித்துக் கொண்டிருக்கும் உங்களுக்கு அரிதாசரின் நூலைப் பற்றி நன்கு தெரிய வந்திருக்கும். இருந்தாலும் சிறு குறிப்புத் தருகிறேன். இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட பாடல்களைக் கொண்டுள்ளது அரிதாசரின் நூல். சைவம், வைணவம் ஆகிய இரு சமயங்களையும் பற்றி விளக்குவது. இரண்டு இளம்பெண்களின் விவாதமாக அதை அமைத்திருந்தார்.

ஒருத்தியின் பெயர் ஆரணவல்லி. சிவனடியாள். இன்னொருத்தியின் பெயர் ஆகமவல்லி. திருமாலடியாள். இருவரும் தோழிகள். நீராடிக் கொண்டிருக்கும்போது அவள் 'நம முக்கணனே நமவே' என்று சொல்லி ஒரு பாட்டை முடித்தால், இவள் 'அச்சுதனே பரிபூரணனே நமவே' என்று தன் பாட்டை முடிப்பாள். இரண்டு தோழிகளும் விளையாட்டாகச் சண்டை போட்டுக் கொள்வார்கள்.

அரிதாசரிடம், "தங்கள் நூலைப் படித்துவிட்டேன். கடினமான கவிதையாக இல்லாமல், எளிதில் விளங்கிக் கொள்ளும்படி கிட்டத்தட்ட வசன நடை போலவே இருந்தது, திருமலையப்பரே... என்றேன். 'திருமலையப்பன்' என்பதுதான் அவருடைய இயற்பெயர். வைணவக் கோயில்களில் கைங்கரியம் செய்து வந்ததால், அரிதாசர் என்று பெயர் ஏற்பட்டிருந்தது.

அவ்ருடைய சொந்தப் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டதிலேயே புலவருக்கு மட்டற்ற மகிழ்ச்சி. படைப்பைப் பாராட்டியும் சொன்னதால், மெய்சிலிர்த்துப் போனார். "சக்ரவர்த்தியின் திருவாயினால் இப்படியொரு பாராட்டைப் பெற்றது என் பாக்கியம்..'' என்றார் உணர்ச்சிவசப்பட்டவராக.

"ஆனால் ஒன்று. 'இரு சமய விளக்கம்' என்று சாமர்த்தியமான தலைப்பு வைத்திருந்த போதிலும், வைணவ சமயத்தைத் தான் உயர்த்திச் சொல்லியிருக் கிறீர்கள்... என்றேன்.

புலவர் அசட்டுச் சிரிப்புடன், "இருக்கலாம்... நான் வைணவக் கோயில்களில் திருப்பணி செய்யும் வைணவனாயிற்றே! அந்தப் பழக்கம் எப்படிப் போகும்...?'' என்றார்.

"அத்துடன், வைணவனான என்னைத் திருப்திப் படுத்த வேண்டும் என்பதும் நோக்கமாக இருக்கலாம்... என்று கேலி செய்தேன். அறிஞர்களை மதிப்புக் குறைவாகப் பேசக்கூடாது என்பது உடனே ஞாபகம் வந்ததாகையால், பேச்சை மாற்றி "ஏதோ ஒரு திருக்கோயிலுக்கு நிதி உதவி வேண்டுமென்பதற்காக வந்திருப்பீர்கள்... எந்தக் கோயில்...?" என்றேன்.

அமைச்சர் வடமலையண்ணன், "இந்த முறை சக்ரவர்த்தியைத் தொல்லைப்படுத்துவதற்காகத் தம்பி வரவில்லை... என்றார் சிரித்தபடி.

"பின்னே...?!"

"மிக அதிக நாள் தலைநகரில் தங்கிவிட்டேன்... ஊர் திரும்ப வேண்டும். தங்களிடம் சொல்லிக் கொண்டு போகத் தான் வந்தேன்..." என்றார் அரிதாசர்.

"தங்கள் சொந்த ஊர் தொண்டை நாட்டில் உள்ள அரிகண்டபுரம்தானே... இல்லையா...?" என்று நான் சொன்னதும், அரிதாசர் பரவசமடைந்தார். சக்ரவர்த்தி யிலிருந்து சாதாரணக் குடிமகன் வரை யாராயிருந்தாலும் சொந்த ஊரைப் பற்றிப் பேச்செடுத்தால் கிறங்கி விடுகிறார்கள் என்பதை நான் அனுபவத்தில் கண்டி ருக்கிறேன்,

"இந்தத் தடவை நேரே என் ஊருக்குப் போகவில்லை. திருவரங்கம் போய்ப் பெருமானைச் சேவித்துவிட்டு ஊர் திரும்ப எண்ணியிருக்கிறேன்... என்றார் அரிதாசர்.

வெளியூர்ப் பயணம் என்று அவர் சொன்னதுமே, எனக்கு முத்து மேற்கொண்ட அபாயமான பயணம்தான் ஞாபகம் வந்தது. முத்துவின் மனைவி சோலை அழுதுகொண்டு நின்ற காட்சி கண்முன் நின்றது.

“காஞ்சி, திருவண்ணாமலை, சிதம்பரம் வழியாகத் தானே போவீர்கள்...?” என்று கேட்டேன்.

அமைச்சர் வடமலையண்ணன், “தற்சமயம் அது ஒன்றுதான் வசதியான பெருவழியாக இருந்து வருகிறது. வேறு பெருவழிகள் அமைக்க ஏற்பாடு செய்து வருகிறோம்...” என்றார்.

“காஞ்சி, திருவண்ணாமலைச் சாலைகளில் வழிப்பறிக்காரர்கள் கொட்டமடிக்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன்... என்றேன், அமைச்சரைப் பார்த்து.

மறுக்க முடியாமல் மௌனமாக இருந்தார் வடமலையண்ணன். அவருக்குப் பரிந்து பேசுகிற மாதிரி அரிதாசர், “தனியாகப் பயணம் செய்தால்தான் பயம்... ஐந்தாறு பேராகச் சேர்ந்து போனால், எந்த வழிப்பறிக் காரனும் வரமாட்டான்...” என்றார்.

“அப்படியா...?! நீங்கள் எவ்வளவு பேர் போகிறீர்கள்...?” என்றேன்.

“ஐந்து பேர்... என்றார் அரிதாசர்.

“தண்டு கௌரவம் பெற்ற புலவராயிற்றே நீங்கள்...? பல்லக்கில்தானே போகிறீர்கள்...?” என்று கேட்டேன். ‘தண்டு கௌரவம்’ என்பது சில குறிப்பிட்ட அறிஞர் பெருமக்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டிருந்த பிரத்தியேகச் சலுகையாகும். அந்த உரிமை பெற்றவர்கள் மட்டுமே பல்லக்கில் செல்ல முடியும்.

“இல்லை... மற்ற எல்லோரும் நடந்து வரும்போது, நான் மட்டும் பல்லக்கில் செல்வது நன்றாயிருக்காது...” என்றார் அரிதாசர்.

“என்றைக்குப் புறப்படுகிறீர்கள்...?”

“நாளை சாயந்தரம்...

“இன்னொரு பதினைந்து பேர் உங்கள் கோஷ்டியில் வந்து சேர்ந்து கொள்வார்கள்... என்றேன்.

“யார் அவர்கள்...?” என்றார் அரிதாசர்.

“யாரோ தெரியவில்லை... என்னிடம் வந்து கேட்டிருந்தார்கள். ‘தகுந்த துணை சேரும்போது சொல்கிறேன்’ என்று சொல்லியனுப்பினேன். நாளை மாலை நீங்கள் புறப்படும் நேரத்துக்கு அவர்கள் வந்து சேர்ந்து கொள்வார்கள். ஆனால், அவர்களிடம் நீங்கள் எதுவும் கேட்க வேண்டாம்...” என்றேன்.

அமைச்சர் வடமலையண்ணன் சந்தேகத்துடன் என்னைப் பார்த்தார். நான் ஏதோ திட்டமிட்டிருக்கிறேன்' என்பதை ஊகிக்க முயற்சிக்கிறார் என்று தோன்றியது. ஆகவே, அவரைப் பேசவிடாமல், “வழக்கம்போல ஆற்றங்கரைச் சத்திரத்திலிருந்துதானே புறப்படுவீர்கள்...? அங்கே அவர்கள் வந்து சேருவார்கள்... என்றேன்.

சொல்லிவிட்டு எழுந்து கொண்டேன். விடை கொடுப்பதற்கு அது அறிகுறி என்று புரிந்து கொண்ட அமைச்சரும் அவருடைய இளவலும் வணக்கம் தெரிவித்துவிட்டுப் புறப்பட்டார்கள்.

அவர்கள் தலை மறைந்ததுமே, ஜங்கமய்யாவை அழைத்தேன்.

“நாளை மாலை காஞ்சி, திருவண்ணாமலைச் சாலையில் நாம் செல்கிறோம். மொத்தம் பதினைந்து பேர். நான் ஒருவன். நீங்கள் ஒருவர். மீதி பதின்மூன்று பேரைத் தயார் செய்யுங்கள். வாலிப வயதாயும் பலசாலிகளாயும் இருக்க வேண்டும்... என்றேன்.

ஜங்கமய்யா திகைத்து, “தாங்கள் ஏன்... என்று தயங்கினார்.

“மறுபேச்சுப் பேசாமல் செய்யுங்கள்... ஒவ்வொரு வரிடமும் பெரிய பெரிய மூட்டைகள் இருக்க வேண்டும். சமையல் பாத்திரங்கள், துணிமணிகள் இருப்பது போல வெளிப்பார்வைக்குத் தெரிய வேண்டும். ஆனால், மூட்டைக்குள்ளே கத்தி, அரிவாள், குத்தீட்டி, சிறுவாள் முதலியன இருக்க வேண்டும். நம்பகமான ஆட்களைத் தேர்ந்தெடுங்கள். நாம் எல்லோருமே மாறுவேடத்தில் இருப்போம். விஷயம் ரகசியமாக இருக்கட்டும்...” என்றேன்.

என் திட்டத்தை அவர் புரிந்து கொண்டார். “வழிப்பறிக் கொள்ளைக்காரர்களை மடக்குவதற்குச் சக்ரவர்த்தி ஏன் கஷ்டப்பட வேண்டும்...?” என்றார் மெதுவாக.

“சக்ரவர்த்தியின் ஊழியர்கள் அப்படியொன்றும் கஷ்டப்படுவதாகத் தெரியவில்லை... ஆகவே, தானே கஷ்டப்படுவது என்று சக்ரவர்த்தி முடிவு செய்தி ருக்கிறார்...” என்றேன்.

என் குரலின் கடுமையைப் புரிந்து கொண்ட ஜங்கமய்யா, “உத்தரவு...” என்றார்.

“ராணியிடமும் மகாபிரதானியிடமும் மட்டும் சொல்லுங்கள்... அவர்கள் ஏதாவது ஆட்சேபம் சொன் னால், ‘நான் பிடிவாதமாக இருக்கிறேன்’ என்பதைத் தெளிவாகத் தெரிவித்துவிடுங்கள். வேறு யாரிடமும் சொல்ல வேண்டாம்...” என்று மீண்டுமொரு முறை எச்சரித்தேன். அவர் புறப்பட்டுச் சென்றார்.

‘புத்தியை எதிலாவது செலுத்தினாலொழியப் பைத்தியம் பிடித்துவிடும்’ என்று காலையில் நினைத் திருந்தேன். இப்போது வேலை கிடைத்துவிட்டது.

நான் சுறுசுறுப்பானேன்.

# 22

'மறுநாள் பிற்பகலிலேயே புறப்பட்டால்தான் இருட்டுகிற நேரத்துக்குப் பெண்ணாற்றைக் கடந்து மறுகரையில் உள்ள சத்திரத்தில் இரவு தங்கி, காஞ்சி வழியாகத் திருவண்ணாமலை செல்லலாம்' என்று ஜங்கமய்யா சொல்லியிருந்தார்.

"களைப்புத் தரும் பயணம்... சக்ரவர்த்திக்கு உடல்நலம் குன்றினால், எல்லாரும் என்னைப் பிடித்துக் கொள்வார்கள். யாரிடமும் சொல்ல வேண்டாமென்று வேறு உத்தரவிட்டிருக்கிறீர்கள்... என்றார் கவலையுடன்.

"என் உடல்நலத்துக்கு எந்தக் கேடும் வராது... அப்படியே வந்தாலும், அதற்கு நீர் பொறுப்பாளியல்ல என்று முன்னதாகவே ஓர் உத்தரவாதப் பத்திரம் எழுதிக் கொடுத்துவிடுகிறேன். சரிதானா...?" என்று சிரித்தேன்.

பிற்பகல் செய்யவேண்டிய வேலைகளை முற்பகலி லேயே முடித்துக் கொண்டேன். 'அன்றைய அலுவல்கள் என்னென்ன இருக்கின்றன' என்பதை ராயசம் என்ற எழுத்தரிடம் கேட்டபோது, "இக்கேரிப் பாளையக் காரனுக்குச் சக்ரவர்த்தி இன்று மாலை கசையடி கொடுக்க வேண்டும்" என்று தெரிவித்தார்.

"ஏன், அந்த ஆள் ரொம்ப முக்கியமானவனா...?" என்று கேட்டேன்.

"ஆமாம்... அந்தஸ்துள்ள பாளையக்காரனாக இருக்கிறான். அத்தோடு அமைச்சர் அய்யப்பராசுவின் மைத்துனன் என்று தெரிகிறது... என்றார் ராயசம்.

"சரி, அவர் இதுவரையில் வந்து சேரவில்லை என்றால், இன்னொரு நாள் ஏற்பாடு செய்து விடுங்கள். இன்று சாயந்தரம் எனக்கு வேறு முக்கியமான வேலை இருக்கிறது. இன்னும் நாலைந்து நாடகளுக்கு என்னைத் தேடிவந்து தொந்தரவு செய்யாதீர்கள்..." என்று கூறி ராயசத்தை அனுப்பினேன்.

இந்தச் சாட்டையடி வேலை சங்கடம் பிடித்த சமாசாரம். சரிவரத் திறை செலுத்தாத பாளையக் காரர்களை அதுவும், 'அவர்கள் சாம்ராஜ்யத்துக்கு எதிராகக் கலகம் செய்ய முயன்று கொண்டிருக்கிறார்கள்' என்று செய்தி கிடைத்திருந்தால் 'சக்ரவர்த்தி பார்க்க விரும்புகிறார்' என்று சொல்லி அனுப்புவார்கள். நான் ஏதோ விசேடமாக மரியாதை செய்யப் போகிறேன் என்று நினைத்து, பல்லக்கில் அமர்ந்து, குதிரை வீரர்கள் புடைசூழ முரசு, மத்தளம், பேரிகைகள் முழங்க, படாடோப ஆடம்பரங்களுடன் அவர் வந்து சேருவார்.

இவர்களுக்காகவே அரண்மனை வளாகத்தில் சாடடையடி மண்டபம் ஒன்று இருக்கிறது. அங்கே அவரை மட்டும் அழைத்துப் போய் உடைகளைக் கழற்றச் சொல்லி, கையில் கசையை எடுக்கும்போதுதான் தங்கள் நிலை மையை உணர்ந்து, காலில் விழுந்து மன்னிப்புக் கேடபார்கள். என்னையும், கசையடி கொடுக்கும் ஆளையும் தவிர, வேறு யாரும் அந்த மண்டபத்தில் இருக்க மாட்டார்கள்.

இதிலே ஒரு சம்பிரதாயமும் உண்டு.

குறிப்பிடட பாளையக்காரன் அவ்வளவாக முக்கிய மில்லாத நபர் என்றால், கசையடி ஆளே அவனை அடிப்பான். நான் பார்த்துக்கொண்டு நிற்பேன். அப்படி இல்லாமல், அவன் அந்தஸ்து உள்ள பாளையக்காரன் என்றாலோ, அல்லது அமைச்சர்களுக்கு உறவினன்

என்றாலோ, ஆளைவிட்டு அடிக்கச் சொல்வது ரொம்ப அவமரியாதையாக இருக்கும். ஆகவே, நானே என் கையால் சாட்டையை எடுத்து உரிய அடிகளைக் கொடுத்து வெளியே அனுப்பி வைப்பேன்.

இது ஒன்றும் என் மனதுக்கு உகந்த காரியமல்ல. ஆனால், ராஜநீதி என்று வரும்போது மனதைக் கல்லாக்கிக் கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. இது விஜயநகர மன்னர்கள் பரம்பரை பரம்பரையாகக் கடைப்பிடித்து வரும் தண்டனையாகையால், நானும் பின்பற்றி வருகிறேன். எப்படியாயினும், கசப்பான அந்தக் காரியத்திலிருந்து இப்போதைக்குத் தப்ப முடிந்தது குறித்துச் சந்தோஷ மாகவே இருந்தது.

ஜங்கமய்யா வந்து, மாறுவேடத்துக்கான ஆடை களைக் கொடுத்துவிட்டு, புறப்படலாமென்று ஜாடை காட்டிவிட்டுப் போனார் சேவகர்களை வெளியே அனுப்பிவிட்டு, கதவைத் தாளிட்டுக் கொண்டு உடைகளை மாற்றிக் கொண்டேன். பொய் மீசை, பொய்த் தாடி ஒட்ட வைத்துக் கொண்டேன். பள்ளியறைக்குப் பக்கத்தில் நீண்ட நெடுங்காலமாக ஒரு ரகசியப் பாதை இருந்து வருகிறது. வெகுநாட்களாகத் திறக்கப்படாமல் தூசும் தும்பட்டையு மாக இருந்த அந்தப் பாதையின் வழியே வெளியேறி, ராஜவீதியை அடைந்தேன்.

சத்திரத்தை அடைந்தபோது, எனக்குச் சற்றுப் பின்னாலேயே ஜங்கமய்யாவும் அவருடைய ஆட்களும் வந்து சேர்ந்து கொண்டார்கள். அரிதாசரும் அவருடைய தோழர்களும் சித்தமாக இருந்தார்கள். யாரும் எங்களை அடையாளம் கண்டுகொள்ளவில்லை.

இவர்களைத் தவிர, வேறு சிலரும் இருந்தார்கள். அவர்களில் மூன்று பெண்மணிகளும் கண்டேன். இரண்டு பெண்கள், கணவருடன் திருவண்ணாமலையிலுள்ள

தங்கள் பிள்ளைகள் வீட்டுக்குச் செல்வதாகச் சொன்னார்கள். மூன்றாவது பெண்மணியின் கணவர் சொன்ன விஷயம் விசித்திரமானது.

"போன வாரத்தில் ஒரு நாள் இவள் தாம்பூலம் போடும்போது, தட்டிலிருந்த வெற்றிலையை இடது கையால் எடுத்து விட்டாள்... அது பெரிய பாவ மில்லையா...? அதற்குப் பிராயச்சித்தமாக, அண்ணா மலையார் கோயிலின் புஷ்கரணியில் ஸ்நானம் செய்ய வேண்டுமென்று பெரியவர்கள் சொன்னார்கள். அதனால் இவளை அழைத்துக்கொண்டு வருகிறேன்..." என்றார் அந்தக் கணவர்.

இதை மூடநம்பிக்கை என்று சிலர் நினைக்கலாம். ஆனால், ஜனங்களுக்குப் பாவ புண்ணியங்கள் பற்றி எவ்வளவு தீர்மானமான கருத்து இருக்கிறது என்றெண்ணி வியந்தேன்.

நாங்கள் மொத்தம் இருபத்து மூன்று பேர் இருந்தோம். ஜங்கமய்யா அழைத்து வந்திருந்த ஆட்களைத் தவிர மற்ற எல்லாருமே நடு வயதை நெருங்கிக் கொண்டிருப்பவர்கள்.

எங்கள் கூட்டத்தில் ஒரு வைதீகமான வயோதிகரும் இருந்தார். ஆசார சீலர் என்பது பார்த்த மாத்திரத்திலேயே தெரிந்தது. எங்கள் யார் மேலும் பட்டு விடாமல் கொஞ்சம் ஒதுங்கினாற் போலவே நின்று கொண்டிருந்தார். பிற்பாடு நடைப்பயணமாகப் போகும்போதும் கவனித்தேன். அப்படித்தான் இருந்தார். நார்ப் பட்டினாலான மடிசஞ்சி ஒன்று வைத்துக் கொண்டிருந்தவர் அதை எப்போதும் தன் மார்புடனேயே அணைத்துக் கொண்டிருந்தார். எங்கேயாவது இளைப்பாறுவதற்காக தங்கிய சமயங்களில் கூட அதைத் தரையில் வைக்காமல் தன் மடியிலேயே வைத்துக் கொண்டிருந்தார். அப்படி என்னதான்

விலைமதிக்க முடியாத பொருள் வைத்திருக்கிறாரோ அந்த மடிசஞ்சிக்குள்!

புறப்படும் வேளை வந்தது. எங்கிருந்தோ ஒரு சிவனடியார் ஓட்ட ஓட்டமாக ஓடிவந்து சேர்ந்து கொண்டார். முப்பது முப்பத்தைந்து வயதிருக்கும். நல்ல செழுமையான தேகத்துடன் காணப்பட்டார்.

"ஐயா... ஐயா! நீங்கள் எல்லாரும் அண்ணா மலையாரைத் தரிசிக்கக் கிளம்பியிருக்கிறீர்களாமே...? இப்போது தான் கேள்விப்பட்டேன். உடனே ஓடி வந்தேன். சிவனடியாரான என்னையும் சேர்த்துக் கொள்ளுங்கள், தயவுபண்ணி... என்றார் அவசரமான, ஆனால் மரியாதையான குரலில்.

அரிதாசர் உடனே, "நீங்கள் திருவண்ணாமலைக்குப் போவது இதுதான் முதல் தடவையா...?" என்று கேட்டார்.

"நன்றாய்க் கேட்டீர்களே...? வருடத்துக்கு ஒரு முறை தவறாமல் போய் வருவேன். ஆனால், தனியாகப் போகப் பயம்... உங்களைப் போலப் பக்தர் திருக்கூட்டம் கிடைத்தால் சேர்ந்துகொண்டு விடுவேன்" என்றார் அவர்.

எங்கள் கூட்டத்தில் இருந்த இன்னொருவர், "திருவண்ணாமலைக்குப் போகும் வழி உங்களுக்கு நன்றாய்த் தெரியும், இல்லையா...?" என்றார்.

"வெகு நன்றாய்... நானே உங்களுக்கு வழிகாட்டி அழைத்துச் செல்வேன்... என்று அந்தச் சிவனடியார் கூற, "அப்படியானால் மிக்க மகிழ்ச்சி! எங்களுடன் வாருங்கள்..." என்றார் அரிதாசர்.

எல்லோருமாகச் சத்திரத்திலிருந்து புறப்பட்டோம்.

"நாம் இவ்வளவு பெரிய கூட்டமாக இருக்கிறோம். எந்தத் திருடனும் நம்மை வழிமறிக்க மாட்டான்!' என்று ஒருவர் புன்னகையுடன் கூறினார்.

"இவருக்குத் தெரிந்தது அவ்வளவுதான்... என்று ஜங்கமய்யா எனக்கு மட்டும் கேட்கும்படியாக முணுமுணுத்தார். "புதிதாக வந்து சேர்ந்துகொண்ட ஆள் வேஷதாரி என்று நினைக்கிறேன் சக்ரவர்த்தி... அவர் கழுத்தில் அணிந்திருப்பது அசலான ருத்திராட்ச மாலை அல்ல... போலி மணிமாலை!"

"உங்கள் கண்ணுக்கு அத்தனை சக்தி உண்டா என்ன! பேசாமல் வாருங்கள்..." என்றேன்.

"அதுமட்டுமில்லை சக்... என்று ஆரம்பித்தவர், என் எச்சரிக்கை ஞாபகம் வரவே, மீதி வார்த்தையைச் சொல்லாமல் நிறுத்திக் கொண்டார். பிறகு, "அதுமட்டுமில்லை... நாம் புறப்பட்டபோது அவ்வளவு நீளநீளமாகப் பேசியவர், பிறகு யாருடனும் எதுவும் பேசுவதில்லை. எதையாவது பேசி, எங்காவது மாட்டிக் கொண்டுவிடுவோமோ என்று ஜாக்கிரதையாக இருக்கிறார்..."

ஜங்கமய்யா கிளப்பிய சந்தேகம், என் உள்ளத்தை உறுத்தத் தொடங்கிவிட்டது.

யோசித்துக்கொண்டே நடந்தேன். ஜங்கமய்யா திரும்பிப் பார்த்தார். "நீங்கள் போங்கள்... நான் பின்னால்தான் வந்து கொண்டிருக்கிறேன்... என்றேன். மனைவிகளுடன் வந்திருந்த மூன்று ஆண்களும் தங்கள் மூட்டைகளையும் மனைவியிடமே கொடுத்துத் தூக்கி வரும்படி சொல்லி, தாங்கள் உல்லாசமாக நடைபோட்டுக் கொண்டிருந்தார்கள். மனைவி இருக்கையில், மூடடையைத் தாங்கள் சுமப்பது கௌரவக் குறைவான காரியம் என்பது அவர்கள் எண்ணம்!

**கா**ஞ்சி நகருக்குள் நுழைந்து கொண்டிருந்தோம். அங்கே ஒரு சமணர்கள் மடம் இருக்கிறது.- விஜயநகரத்தில்

ஒரு ஜைனக் கோயிலைக் கட்டிய தளபதி இருசப்பாதான் இதையும் கட்டியிருந்தார். வர்த்தமானர் கோயில் என்று சொன்னார்கள். அதற்குப் பக்கத்து வீட்டின் வாசலில் ஏழெட்டுப் பேர் நின்றிருந்தார்கள். கணவனை இழந்த ஒரு பெண் உண்ணாவிரதம் இருந்து உயிர் துறக்கிறாள் என்று தெரிந்தது.

வீட்டுக்குள் எட்டிப் பார்த்தேன். இளம் வயதுப் பெண் ஒருத்தி வெறும் தரையில் படுத்திருந்தாள். கடைசி இழையாக மூச்சு ஓடிக்கொண்டிருந்தது.

சமணர்களில் ஒரு பிரிவினர் இந்த முறையைப் பின்பற்றி வருகிறார்கள். உடன்கட்டை மாதிரிதான் இதுவும். ஆனால், எரியும் சிதையில் விழுந்து உயிர் துறக்காமல் பட்டினி கிடந்து மெள்ள மெள்ள இறக்கிறார்கள். மரணம் என்பதை ஏதோ தவிர்க்க முடியாத விபத்து என்று எண்ணாமல், விரும்பி வரவேற்க வேண்டுமென்பது இவர்கள் கருத்து. முதல் சில நாட்கள் வழக்கமான உணவு; பிறகு சில நாட்களுக்குத் திரவ உணவு மட்டுமே; அடுத்துச் சில நாட்களுக்குச் சுடுநீர் மாத்திரம். கடைசியில் அதுவும் அருந்தாமல் பிராணனை விடுகிறார்கள். இந்த முறையைப் 'பண்டித மரணம்' என்கிறார்கள். இப்படி உயிர் துறந்தால் மோட்சம் நிச்சயம் என்று நம்புகிறார்கள்.

அந்த இளம்பெண்ணின் முகத்தெளிவையும் மனஉறுதியையும் எண்ணி வியந்தவாறு மேலே நடந்தபோது, இன்னொரு தெருவில் பெண்கள் கோலாட்டம் விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டேன். பதினாலு, பதினைந்து வயது இருக்கும். இரண்டிரண்டு பெண்களாக ஜோடி சேர்ந்து, தாளம் தப்பாமல் கோலினால் அடித்துக் கொண்டிருந்தார்கள். பின்வரிசையில் நாதசுரமும் மேளமும் முழங்கிக்

கொண்டிருந்தன. ஒருத்தி ரொம்ப வேகமாகக் கோலைத் தட்டி விட்டாள் போலிருக்கிறது. அடுத்தவளின் கையிலிருந்த கோல் பறந்து என்னை நோக்கி வந்தது. அதை லாகவமாகப் பிடித்துவிட்டேன். அந்தப் பெண் சிரித்தபடி ஓடிவந்து, "மன்னிக்கணும்... என்று கூறிக் கோலை வாங்கிச் சென்றாள்.

கொஞ்சம் முன்னால் போய்க் கொண்டிருந்த எங்கள் கூட்டத்தில், சிவனடியார் என்று சொல்லிக்கொண்ட அந்த நபரும் சென்று கொண்டிருந்தார். கோலாட்டத்தின் போது அந்தப் பெண்கள் பாடிய முறையே என் நினைவில் இருந்ததால், சட்டென்று ஒரு யோசனை என் மனத்துக்குள் உருவாயிற்று. அதைத் திரும்பத் திரும்ப ஒத்திகை பார்த்துக் கொண்டேன். திருப்தியின் அறிகுறியாக, என்னையும் அறியாமல் என் உதட்டில் புன்னகை அரும்புவது எனக்கே தெரிந்தது.

ஏகாம்பரேசுவரர் கோயிலிலும், வரதராஜஸ்வாமி கோயிலிலும், காமாட்சியம்மன் சந்நிதியிலும் தரிசனம் முடித்துக் கொண்டோம். அடுத்த முறை இந்த மாதிரி சாதாரண மனிதனாக இந்த ஸ்தலத்துக்கு வராமல் சக்ரவர்த்தியாக விஜயம் செய்து, இந்த ஆலயங்களில் பல பகுதிகளைச் சீரமைத்துத் திருப்பணி செய்வதோடு, துலாபாரம் நிறுத்தி, ஏராளமாய் மானியங்களும் வழங்க வேண்டுமென்று தீர்மானம் செய்து கொண்டேன்.

திருவணாமலையை நோக்கிப் பயணமானோம். இரவு ஒரு சத்திரத்தில் தங்கினோம். சிவனடியார், "அதிகாலையில் எனக்குக் கண்விழித்துப் பழக்கம் உண்டு. விடியற்காலை சமயத்தில் உங்களையெல்லாம் 'எழுப்புகிறேன்... அப்போது கிளம்பினால்தான் வெயில் ஏறுவதற்கு முன் ஊரை அடையலாம்... என்றார்.

அரிதாசர் உட்பட அனைவரும் "அப்படியே செய்யலாம்..." என்றார்கள் ஒருமித்த குரலில்.

சத்திரத்தில் சாப்பிட உட்கார்ந்தோம். இங்கெல்லாம் இலையோ, தாம்பாளமோ போட்டுச் சாப்பாடு பரிமாறுவது கிடையாது. வழவழவென்ற கடப்பைக் கல் ஒரு மேடை போல நீளமாக அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் பெரிய குழி, சிறிய குழி என்று இரண்டு வகை உண்டு. வசதி படைத்தவர்கள் அதிகப் பணம் கொடுத்துப் பெரிய குழியின் முன்னே அமர்ந்து கொள்வார்கள். சோறு, குழம்பு, கறி, தயிர் முதலியன பரிமாறப்படும். வசதியில்லாதவர்கள் குறைவாகப் பணம் கொடுத்துச் சிறிய குழியின் முன் உட்கார்ந்து கொள்வார்கள். அவர்களுக்குச் சோறும், குழம்பும் மாத்திரம்தான். அதுகூடக் குறைந்த அளவில்தான்.

ஜங்கமய்யா பணம் எடுத்து வந்திருந்தார். எனக்கும் சேர்த்து அங்கங்கே செலவு செய்தார். நான் நன்றாகச் சாப்பிட்டுப் பழக்கப்பட்டவனாகையால், அநேகமாகப் பெரிய குழிகளிலேயே சாப்பிடுவேன். ஜங்கமய்யா அடிக்கடி என்னைப் பார்த்துக் கொண்டிருப்பார். அவர் பார்வையில் அளவற்ற வருத்தமும் பரிதாபமும் நிறைந்திருக்கும். 'விஜயநகர சாம்ராஜ்யத்தின் சக்ரவர்த்தி சாப்பிடுகிற இடமா இது! உண்ணுகிற உணவா இது! என்ன அநியாயம்!" என்று வாய்விட்டுச் சொல்ல முடியாமல் பார்வையாலேயே மறுகிப் போவார், பாவம்... நான் புன்சிரிப்பின் மூலம் அவருக்கு ஆறுதல் கூறுவேன்.

சாப்பிட்டு முடிந்து சத்திரத்தின் திண்ணையில் படுத்துக் கொண்டோம். ஆனால், தூங்கவில்லை. தங்கள் தங்கள் அனுபவங்களைச் சொல்லிக் கொண்டிருந்தோம். பதிகங்களைப் பாடினார்கள் சிலர்.

சைவம், வைணவம் இரண்டையுமே சமமாக மதிக்கிறவன்தான் நான். ஆனால், ஆழ்வார்களின் பாசுரங்களை அறிந்த அளவுக்கு நாயன்மார்களின் பாசுரங்கள் தெரியாது. எல்லோருக்கும் தெரிந்த, பிரபலமான இரண்டொரு பாடல்களைத் தெரிந்து வைத்திருந்தேன். என் திட்டத்தை அமல் செய்ய இதுவே ஏற்ற தருணம் என்று முடிவுசெய்து, 'சொற்றுணை வேதியன், சோதிவானவன், பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழ' என்ற அடிகளை உரக்கப் பாடினேன். பிறகு நிறுத்தி, அடுத்த இரண்டு அடி மறந்து விட்டது... நெஞ்சில் இருக்கிறது., வாயில் வரவில்லை..." என்றேன்.

உடனே அரிதாசர், "நெஞ்சில் இருப்பதுதான் முக்கியம்... வாய்க்கு வராவிட்டால் பரவாயில்லை... என்றார் சிலேடையாக.

வெற்றிலைப் பாவத்துக்காக க்ஷேத்ராடனம் வந்திருந்த பெண்மணி, "எனக்குத் தெரியும்... என்றார்.

அவரைத் தடுத்து, "இருந்தாலும், நமது சிவனடியார் அதைச் சொல்லி, அதற்கு விளக்கமும் சொன்னால் அதைக் கேட்டு நாமெல்லாம் இன்புறலாம்... என்று கூறி, அவரிடம் "தாங்கள் சொல்லுங்கள்..." என்றேன்.

அந்த நபர் பெரிதாக நகைத்துவிட்டு, "பால்யத்தில் எவ்வளவோ படித்தேன்... எல்லாம் மறந்துவிட்டது... என்றார்.

"இப்போது மட்டும் தாங்கள் கிழவராகவா ஆகிவிட்டீர்கள்...? இளம் வயதுதானே... ஞாபகப்படுத்திச் சொல்லுங்கள்... என்று மறுபடியும் வற்புறுத்தினேன்.

"ஊகூம், சுத்தமாக ஞாபகம் வரவில்லை. தூங்குங்கள்... காலையில் சீக்கிரம் எழுந்துகொள்ள

வேண்டும்... என்று சொல்லி, மறுபக்கம் திரும்பிப் படுத்துக் கொண்டு விட்டார் அவர்.

‘‘நீங்கள் சொல்லுங்கள்... என்றேன், அந்தப் பெண்மணியிடம்.

“சொல்கிறேன்... ‘கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சிவாயமே... சரி தானா...?” என்றார் அவர்.

“அதே, அதே! எனக்கும் ஞாபகம் வந்துவிட்டது... ரொம்ப நன்றி...” என்றேன்.

என் பரீட்சை பலித்துவிடடது.

பிரபலமான இந்தப் பதிகம் தெலுங்குக்காரனான எனக்கே தெரிந்திருக்கும்போது, சிவனடியார் என்று சொல்லிக் கொள்ளும் இந்தத் தமிழனுக்குத் தெரியவில்லை! இவன் வேஷதாரி என்பதைக் காட்ட இது ஒன்றே போதும்.

ஜங்கமய்யா என்னை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். என் மர்மமான புன்னகையைப் புரிந்து கொண்டார்.

எல்லோரும் படுத்துக் கொண்டோம்.

ஆழ்ந்த நித்திரை.

“ஊம்... ஊம்... எழுந்திருங்கள்! விடியப்போகிறது... எல்லாரும் புறப்பட வேண்டும்... என்று அந்த ஆள் குரல் கொடுத்தான். (இதற்கு மேலும் அவனைச் சிவனடியார் என்று குறிப்பிட்டு, உண்மையான சிவபக்தர்களை அவமதிக்க நான் விரும்பவில்லை.)

எல்லோரும் பரபரவென்று எழுந்து கொண்டார்கள். நான் திண்ணையிலிருந்து இறங்கிச் சென்று வானத்தைப் பார்த்தேன்.

இந்தச் சித்திரை மாத இறுதி நாட்களில், அஸ்தமித்து ஒரு நாழிகைக்கெல்லாம் கேட்டை நட்சத்திரம் வானத்தின் கிழக்குத் திசையில் கிளம்பும். விடியற்காலை நேரமாக இருந்தால், மேற்குத் திசையில் மறைந்து கொண்டிருக்கும்.

ஆனால், இப்போது விருச்சிக ராசியைச் சேர்ந்த அந்தக் கேட்டை நட்சத்திரம், கொடுக்குடன் கூடிய தேள் வடிவத்துடன் நடுவானத்தில் பிரகாசமாக ஜொலித்துக் கொண்டிருந்தது.

அதாவது, நடுராத்திரி தாண்டிக் கொஞ்ச நேரம்தான் ஆகியிருக்கிறது. விடிவதற்கு இன்னும் வெகுநேரம் இருக்கிறது. இவனோ, விடியப்போகிறது என்கிறான்!

நானும் ஜங்கமய்யாவும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டோம். ஜங்கமய்யா தன் ஆட்களுக்கு ஜாடை காட்டினார். அவர்களும் புரிந்து கொண்டார்கள்.

# 23

'வின்னவி அன்னி விஸ்வசிஞ்ச வத்து, விஸ்வசிஞ்சினவி அன்னி வெலிபுச்ச வத்து.' என்று தெலுங்கில் ஒரு பழமொழி உண்டு. அதாவது, 'கேட்பதையெல்லாம் நம்பாதே. நம்புவதை எல்லாம் சொல்லாதே' என்று.

அதுபோல நானும் ஜங்கமய்யாவும் அந்தச் சிவனடியார் வேஷம் போட்ட ஆளைப் பற்றி எவரிடமும் சொல்லவில்லை. எங்களுடைய ரகசியத்தை எங்களுட னேயே வைத்துக்கொண்டோம். ஜங்கமய்யாவின் ஆட்கள் தங்கள் மூட்டைகளை, ஒரு சுருக்கை இழுத்தால் உடனே அவிழ்ந்து கொள்ளும்படி தயாராகத் தோள் மீது வைத்துக் கொண்டிருந்தார்கள்.

"எனக்கு ஒரு குறுக்கு வழி தெரியும். அந்த வழியில் போனால் விடிவதற்கு முன்னால் சத்திரத்தை அடைந்து, குளித்துச் சாப்பிட்டு, வெயில் ஏறுவதற்குள் திருவண்ணா மலைக்குப் புறப்பட்டு விடலாம்" என்று கூறிய அந்த ஆள், பெரிய பாதையிலிருந்து கிளைத்த ஒரு சிறிய வழியில் திரும்பினான். இருபுறமும் புதர்கள் நிறைந்த ஒற்றையடிப் பாதை.

எல்லாரும் அவனுடன் சுறுசுறுப்பாகப் புறப் பட்டோம்.

"இந்த வழி ஒரே இருட்டாக இருக்கிறதே?" என்று ஒரு பெண் முணுமுணுத்தாள்.

"அம்மா, எந்த வழியில் போனாலும் இருட்டாகத் தான் இருக்கும். இன்னும் கொஞ்ச நேரம்தான். சூரியோதயமாகி வெளிச்சம் வந்து விடும்" என்றான் அவன்.

நான் மறுபடியும் வானத்தைப் பார்த்தேன். கேட்டை நட்சத்திரம் அப்படியேதான் இருந்தது, விடிவதற்கு இன்னும் வெகுநேரம் இருக்கிறது என்பதைத் தெரிவித்த வண்ணம்.

"நேற்று ராத்திரி நாம் சத்திரத்தில் தங்கியிருந்தபோது அந்தக் கிராமத்தைச் சேர்ந்த ஒருவன் வந்து என்னிடம் ஒரு விஷயம் சொன்னான்" என்றார் அரிதாசர்.

"என்ன விஷயம்?" என்று ஜங்கமய்யா கேட்டார்.

"ஒன்றுமில்லை. பயணம் போகிறவர்கள், சில சமயம் முதலில் சில வில்லாளிகள் போகும்படி அமர்த்திக் கொள்வார்களாம். வில்லில் அம்பு பொருத்தி நாணேற்றி வைத்துக்கொண்டு அவர்கள் முன்னே நடக்க, பயணிகள் பின்னால் வருவார்களாம். அந்த மாதிரி பாதுகாப்பு இருப்பதைக் கண்டதும் எந்த வழிப்பறித் திருடனும் வரமாட்டானாம்." என்றார் அரிதாசர். "தங்கள் கிராமத்தில் அப்படிச் சில வில்லாளிகள் இருக்கிறார்கள் என்று அந்தக் கிராமவாசி சொன்னார். தகுந்த கூலி கொடுத்தால் திருவண்ணாமலை வரையில் பாதுகாப்புக்கு வருவார்கள் என்றார்."

"நீங்கள் என்ன சொன்னீர்கள்?"

"வேண்டாம் என்று சொல்லிவிட்டேன். 'கூலி கொடுத்து ஆள் அமர்த்தும் அளவுக்கு நாங்கள் பணக்காரர்கள் அல்ல. கொள்ளையடிக்கும் அளவுக்கு எங்களிடம் செல்வமும் கிடையாது' என்று சொல்லி விட்டேன்" என்றார் அரிதாசர்.

எங்கள் பேச்சைக் கேட்டபடி நடந்து கொண்டிருந்த அந்த மோசடிக்காரன், “பெரியவரே, வில்லும் அம்பும் எதற்கு, நான் இருக்கிற வரையில்? பயப்படாமல் என்கூட வாருங்கள். பத்திரமாக அழைத்துப் போகிறேன், உத்தரவாதம்” என்றான்.

நானும் ஜங்கமய்யாவும் சிரித்துக் கொண்டோம்.

இரண்டு பக்கமும் பனந்தோப்புகள் சூழ்ந்திருந்தன. நட்சத்திர வெளிச்சத்தில் ஒற்றையடிப்பாதை லேசாகத் தெரிந்தது. தலைநகரில் இருக்கும்போது, வசதியுள்ளவர்கள் மட்டும்தான் காலணி அணிவது வழக்கமென்றாலும் இப்போது வெகு தூரம் நடைப்பயணமாகப் போவதால் எல்லாருமே காலுக்குப் பாதுகாப்புக் கொடுத்திருந்தார்கள். பெரும்பாலோர் அணிந்திருந்தது மரத்தினால் செய்த பாதக் குறடுதான். நாங்களும் இன்னும் இரண்டொருவரும் தோலில் செய்த செருப்பை அணிந்திருந்தோம்.

இருந்தாலும் பாதையின் இரண்டு பக்கமும் நெருக்கமாய் வளர்ந்திருந்த முள்செடிகள் எங்கள் தேகத்தைக் குத்தின. ஆகவே, பரவலாகச் செல்லாமல் ஒருவர் பின் ஒருவராகச் சென்றோம்.

வழிகாட்டுவதாக அழைத்துப் போகிறவன் கபடப் பேர்வழி என்று தெரிந்தது முதல், எனக்கு ஒரு சந்தேகம் இருந்தது. இப்போது நானும் ஜங்கமய்யாவும் எல்லாருக்கும் பின்னால் கடைசியாக நடந்து கொண்டிருந்ததால் அதை மெதுவே கேட்டேன்.

“ஏன் ஜங்கமய்யா, நாம் இவ்வளவு பேர் இருக்கிறோம். இந்த ஒண்டி ஆள் நம்மை எப்படிக் கொள்ளையடிக்க முடியும்?” என்றேன்.

“தாங்கள் நினைப்பதுபோல இவன் ஒண்டி ஆள் அல்ல” என்றார் ஜங்கமய்யா... “பெரிய திருட்டுக் கூட்டத்தைச் சேர்ந்தவன். அவர்களுடைய கையாள்,

பயணிகளுக்கு வழிகாட்டுவதாகச் சொல்லிக்கொண்டு, தப்பான பாதையில் அழைத்துப் போவான். ஒரு குறிப்பிட்ட இடத்தை அடைந்ததும் சீழ்க்கை அடிப்பான். ஒளிந்திருக்கும் திருடர்கள் வெளியே வந்து மடக்கிக் கொள்வார்கள். இப்போது இவன் நம்மை அழைத்துச் செல்வது நிச்சயமாய்த் தப்பான வழிதான்'' என்றார் ஜங்கமய்யா.

நான் திரும்பி அண்ணாந்து பார்த்தேன்.

திருவண்ணாமலையை நெருங்கிக் கொண்டிருக்கும் பட்சத்தில், வலப்புறமாக, தூரத்தில் ஒரு சிறு குன்றும் அதன்மேல் ஒரு கோயிலும் கண்ணில் படுவது வழக்கம். வெறும் போர்வீரனாக இந்த பகுதிகளில் சுற்றித்திரிந்த காலத்தில் பார்த்திருக்கிறேன். அது என்ன குன்று என்றோ என்ன பெயர் என்றோ எனக்குத் தெரியாது. ஆனால், இவன் குறுக்குவழி என்று அழைத்துக்கொண்டு போவது அதற்கு எதிரான இடது திசையில். இங்கிருந்து பார்த்தபோது எந்தக் குன்றும் எந்தக் கோயிலும் கண்ணில் படவில்லை.

“சில சமயம், நமது பாளையக்காரர்களிலேயே கூடச் சில பேர் ஆள் வைத்து இந்த வழிப்பறிகளை நடத்துவதாகக் கேள்விப்பட்டேன்'' என்று ஜங்கமய்யா தெரிவித்தார்.

“சரி, நான் முன்னே போகிறேன்'' என்றதும் ஜங்கமய்யா என்னைத் தடுத்தார்.

“நாங்கள் இவ்வளவு பேர் இருக்கிறோம்...

“ஜங்கமய்யா, நான் படையெடுத்துச் செல்லும்போது பார்த்திருப்பீர்களே?... பாசறைகளில் என் கூடாரம்தான் முன்னணியில் இருக்கும். மற்ற தளபதிகள் அத்தனை பேருடைய கூடாரமும் பின்னால் இருக்கும். அது, நான் கோழையல்ல என்பதை நிரூபிப்பதற்காக மட்டும் செய்கிற காரியம் அல்ல. எதிரியின் நடமாட்டங்களை எல்லாருக்கும்

முன்பு நான் அறிந்துகொள்வதற்காகத்தான். அந்த வழக்கப்படி இப்போதும் நான் முன்னால் போகிறேன்" என்று கூறி முன்னே சென்றேன்.

நான் உத்தரவு கொடுக்கும் வரையில் உங்கள் ஆயுதங்களை எடுக்க வேண்டாம். ஆட்களுக்கும் சொல்லி வையுங்கள்" என்று கூறிவிட்டு, ஜங்கமய்யா மேலும் தயங்குவதற்கு இடம் கொடுக்காமல் எல்லாரையும் தாண்டிக்கொண்டு அவனை அடைந்தேன்.

அவனுடைய கருத்த மேனி, அந்த இருட்டில் இன்னும் கறுப்பாய்த் தோன்றியது. இருந்தாலும் போலி ஆளாகையால் வழக்கத்துக்கு மீறி, தேவையில்லாத இடங்களிலெல்லாம் திருநீறு பூசிக் கொண்டிருந்ததால் அது பளிச்சென்று தெரிந்தது.

தொண்டையைக் கனைத்துக் கொண்டேன். "சிவனடியாரின் பூர்வாசிரமத்தைப் பற்றி எதுவுமே தெரியவில்லை. தங்களுடைய திருநாமம் என்னவோ?" என்றேன்.

"இந்தக் கட்டைக்குப் பெயராவது மண்ணாவது!" என்று சிரித்தான் அவன். "செங்கோடன் என்று சில பேர் கூப்பிடுவார்கள். அப்படியே வைத்துக் கொள்ளுங்களேன்" என்று வேகமாக நடந்தான்.

நானும் வேகமாகவே அவனைப் பின் தொடர்ந்து, "தங்கள் உறவினர் யாரேனும் இங்கே இருக்கிறார்களா? இப்படி ஒரு குறுக்கு வழி இருப்பது உங்களுக்கு எப்படித் தெரிந்திருக்கிறது?" என்று வினவினேன்.

"துறவிக்கு ஊரெல்லாம் உறவுதான்" என்றான் அவன்.

"உண்மைதான், உண்மைதான்" என்று பொய்யான பணிவுடன் அவன் சொல்வதை ஆமோதித்தபடி

சுற்றுப்புறத்தை ஆராய்ந்தேன். மரங்களும் செடிகளும் காடாய் வளர்ந்திருந்தன. அவற்றுடன் பெரிய பெரிய கல்மேடுகளும் மண்மேடுகளும் கண்ணுக்குப் புலப்பட்டன. வழிப்பறிக்காரர்கள் எங்கு வேண்டுமானாலும் ஒளிந் திருக்கக்கூடும் என்று தோன்றியது.

மிகவும் அடர்த்தியான இடத்தை அடைந்தபோது செங்கோடன் நின்றான். வாய்க்குள் இரண்டு விரலை விட்டு, பலமாக ஒரு சீழ்க்கை அடித்தான்.

பயணிகள் கலவரமடைந்து, "என்ன? என்ன? யார் சீழ்க்கை அடிப்பது?" என்று ஒருவரையொருவர் கேட்டுக் கொண்டிருந்தபோது

"டாய்! நில்லுங்கள்" என்று கூச்சலுடன் திமுதிமு வென்று எங்கிருந்தோ நாலு பேர் எதிரில் வந்து வழிமறித்தார்கள். "எடுங்கள் எல்லாவற்றையும்!" என்று கை நீட்டினார்கள்.

செங்கோடன், "என்னப்பா இது? யார் நீங்கள்?" என்றவன் எங்களை நோக்கி, "அடடா! தெரியாத்தனமாக இந்த வழியில் அழைத்து வந்து விட்டேன். திருட்டுப் பேர் வழிகள் இருபபார்களென்று தெரியாமல் போச்சே!" என்றான் ஒன்றுமறியாதவன் போல.

"ஐயையோ! திருடர்கள்!" என்று ஒரு பெண் அலற, அவள் கணவன் அவளைத் தன்னோடு அணைத்துக் கொண்டு, "பயப்படாதே, பயப்படாதே" என்று சொல்ல, ஒவ்வொருவரும் அச்சத்துடன் உளற ஆரம்பித்தார்கள்.

ஜங்கமய்யா என் உத்தரவை எதிர்பார்த்து என்னருகில் ஓடிவந்தார். அவருக்கு மட்டும் கேட்கும் படியாக, "இன்னும் சில பேர் இருப்பார்கள். அவர்களும் வரட்டும்" என்றேன். பிறகு இரைந்து, மரியாதையாய் விலகிப் போங்கள்! எதுவும் தர முடியாது!" என்றேன்.

திருடர்கள் ஒரு கையில் கத்தியும் ஒரு கையில் தடியும் வைத்திருந்தார்கள். "கொடுக்க மாட்டீர்களா? கொடுக்கும் படி பண்ணுகிறேன்!" என்ற ஒருவன், எதிர்ப்புறம் திரும்பி, செங்கோடனைப் போலவே சீழ்க்கை அடித்தான். மேலும் நாலு பேர் வந்து எங்களை வழிமறித்தார்கள்.

எங்கள் கூட்டத்தில் அரிதாசரின் தோழராக வந்திருந்த அந்த வயோதிக ஆசாரக்காரர், குரல் நடுங்க, "தம்பி, தம்பி! என் மடிசஞ்சியைத் தொடாதே, அதற்குள் நான் பூஜை செய்யும் சுவாமியும் பூஜைப் பாத்திரங்களும் தான் இருக்கிறது. அதை மட்டும் நானே எடுத்துக்கொண்டு மீதியைக் கொடுத்து விடுகிறேன்" என்றார். அவருடைய மடிசஞ்சியின் மர்மம் தெரிந்ததும் நெகிழ்ந்து போனேன்.

அரிதாசரும் இன்னும் இரண்டு மூன்று பேரும் தங்கள் மூட்டைகளில் சிலவற்றைப் பக்கத்தில் இருந்த புதர்களுக்குள் மெதுவே எறிந்தார்கள். வழிப்பறிக்காரர்கள் போன பிறகு அதை எடுத்துக் கொள்ளலாமென்பது அவர்கள் எண்ணம்!

ஒரு பயணி, "ஐயா, ஐயா! உங்களுக்குப் புண்ணியமாய்ப் போகட்டும். பெண் பிள்ளைகளை எதுவும் செய்யாதீர்கள்! நாங்களாகவே அவர்களிடமிருந்து நகைகளைக் கழற்றித் தந்து விடுகிறோம்! தயவு செய்யுங்கள்!" என்று கெஞ்சினார்.

பெண்களின் அழுகை உச்சஸ்தாயியில் ஆரம்பித்து விட்டது. ஆண்களிலும் பயந்த சுபாவம் உள்ளவர்கள், "எங்களிடம் எதுவும் இல்லை! எங்களை விட்டு விடுங்கள்" என்று புலம்பினார்கள்.

இன்னும் சிலர் வந்த வழியே ஓடி விடலாமென்று நாலு புறமும் பார்த்துக் கொண்டார்கள். இருட்டில் எந்த வழியும் அவர்களுக்குப் புலப்படவில்லை. ஒரு பெண் உரத்த குரலில், "இப்படி எங்களை மறிக்கிறீர்களே? நீங்கள்

நன்றாய் இருப்பீர்களா? உங்கள் பிள்ளை குட்டி விளங்குமா?'' என்று கத்தினாள். ஏதோ அவளுடைய சாபத்துக்குப் பயந்து அவர்கள் ஓடிவிடுவார்கள் என்கிற மாதிரி.

''யாரும் பயப்படாதீர்கள்! ஓடாதீர்கள் நான் பார்த்துக் கொள்கிறேன்!'' என்றேன் நான்.

வெறும் மிரட்டலிலேயே எல்லாரும் தங்கள் உடைமைகளைக் கொடுத்து விட்டு ஓடி விடுவார்கள் என்று நினைத்திருந்த திருடர்கள், என் கட்டளையைக் கேட்டதும், "டேய்!'' என்று என்மீது பாய வந்தார்கள்.

"ஊம்!'' என்று நான் ஜங்கமய்யாவுக்கு உத்தரவிட்டது தான் தாமதம் —

கண் இமைக்கும் நேரம்கூட இருக்காது. ஜங்கமய்யாவின் ஆட்கள் வாளையும் ஈட்டியையும் வெளியே எடுத்துச் சுழற்றத் தொடங்கினார்கள். ஜங்கமய்யாவும் சளைக்கவில்லை.

திருடர்கள், கபடப் பேர்வழியும் சேர்த்து ஒன்பது பேர்தான். முறையான பயிற்சி பெறாத சாதாரண முரடர்கள். ஆனால், ஜங்கமய்யாவின் ஆட்களோ பதினைந்து பேர். வாள் போரில் தேர்ச்சிபெற்ற பலசாலிகள். திருடர்களில் எவனும் தப்பிவிடாதபடி வளைத்துக்கொண்டு வாளை வீச, 'ஐயோ! அம்மா!'' என்ற அலறலுடன் வழிப்பறிக்காரர்கள் கண்ட துண்டமாக வெட்டப்பட்டு விழுந்தார்கள். செக்கச் செவேலென்று ர்த்தம் பீரிடுவது அந்த இருட்டிலும் தெரிந்தது.

அதே சமயம் இன்னொன்றையும் கண்டேன் செங்கோடன் என்ற அந்த முதல் திருடன் தப்பி ஓடுவதை.

முக்கியமாக அவனைத்தான் பிடிக்க வேண்டுமென்று தீர்மானித்தவனாக, "ஜங்கமய்யா! நீங்கள் இவர்களைக்

கவனித்துக் கொள்ளுங்கள்! நான் இதோ வருகிறேன்!" என்று குரல் கொடுத்தேன். எங்கள் ஆட்களிடமிருந்து ஒரு வாளை வாங்கிக்கொண்டேன். செங்கோடனை விரட்டிக் கொண்டு ஓடினேன்.

இப்போது கீழ்வானம் ரொம்ப ரொம்ப லேசாக வெளுக்கத் தொடங்கியிருந்தது. இருந்தாலும் போதுமான வெளிச்சம் என்று சொல்ல முடியாது. இந்தப் புதர்களின் நடுவில் ஓடி எனக்குப் பழக்கமுமில்லை. செங்கோடனோ இந்தப் பகுதியைச் சேர்ந்தவன். எல்லா வழிகளையும் அறிந்தவன். கல்லையும் முள்ளையும் புதர்களையும் லட்சியம் செய்யாமல் ஓடிக் கொண்டிருந்தான். எனக்கும் அவனுக்குமிடையே இருந்த தூரம் சிறிது சிறிதாக அதிகப்படடுக் கொண்டிருந்தது. எனினும் நான் விடவில்லை. அவன் தலை என் பார்வையிலிருந்து மறைந்து விடாமல் பார்த்துக்கொண்டே துரத்தினேன்.

வெகுதூரம் ஓடிய பின் திடீரென்று எனக்கு ஓர் ஆச்சரியம் காத்திருந்தது.

அதுவரையில் ஒற்றையடிப் பாதையாக இருந்த அந்த வழி ஒரு பெரிய பாதையில் போய் இணைந்து கொண்டது. மனிதர்களும் வண்டிகளும் போவதற்கு வசதியான அகலச் சாலை.

இது எந்த ஊர்? இந்தப் பாதை எங்கே செல்கிறது?

எதுவும் தெரியவில்லை. இன்னும் நன்றாக விடியாததால், விசாரிப்பதற்குச் சாலையில் எந்த நடமாட்டமும் இல்லை.

கொஞ்ச தூரம் ஓடியதும் இன்னொரு கிளைப்பாதை பிரிந்தது. இதுவும் நல்ல பாதைதான். ஆனால், சற்றே சிறியது. தெரு என்றே சொல்லலாம். இருபுறமும் மரங்கள் ஒழுங்காக வளர்ந்திருந்தன.

அந்தத் தெருவில் வேறு எந்த வீடும் இருக்கவில்லை. கோடியில் தெருவை அடைத்தாற்போல் ஒரு மாளிகை தென்பட்டது. செங்கோடன் அந்த மாளிகைக்குள் ஓடி மறைவதைக் கண்டேன்.

மின்னலென என் மனத்துக்குள் ஊகங்கள் ஓடின.

'செங்கோடன் ஒரு சாதாரணத் திருடன். அப்பாவிப் பயணிகளை ஏமாற்றிக் கொள்ளைக்காரர்களிடம் பிடித்துக் கொடுக்கும் ஒரு வஞ்சகத் திருடன். அவன் ஒரு நாளும் இவ்வளவு பெரிய மாளிகைக்குச் சொந்தக்காரனாக இருக்க முடியாது. அவன் இங்கே தஞ்சம் புகுகிறானென்றால் இந்த மாளிகைக்கு உரியவன் அவனுக்கு வேண்டியவனாக அல்லது அவனுடைய எஜமானனாக இருக்க வேண்டும்.'

என்று வேகமாகச் சிந்தித்த வண்ணமே நானும் அந்த மாளிகைக்குள் நுழைந்தேன். மிக அதிகாலை வேளை. யாருமே அயர்ந்த நித்திரையில் ஆழ்கின்ற நேரம். நுழைவுவாசலில் இருந்த காவலாளும் அப்படித்தான் தூங்கியிருக்க வேண்டும். எனினும் செங்கோடன் உள்ளே ஓடிய வேகத்தில் சிறிது தூக்கம் கலைந்து, என்ன ஏது என்று புரியாமல் தடுமாறிக் கொண்டிருந்த சமயம் அவனைத் தள்ளிவிட்டு நானும் உள்ளே புகுந்து விட்டேன்.

முந்தின மாலையில் ஏற்றப்பட்டிருந்த தீபங்கள் எண்ணெய் வற்றி ஒளி குன்றிக்கொண்டிருந்தன. முன்புறமிருந்த பெரிய அறையில் ஆசனங்களும் திரைச்சீலைகளும் நிலைக்கண்ணாடிகளும் ஓவியங்களும் ஓவியங்களுக்குச் சூட்டப்பட்டிருந்த ரத்தின ஹாரங்களும் பளபளவென்று பிரகாசித்த தேக்குமரக் கதவுகளும் அந்த மாளிகையின் செல்வச் செழிப்பைக் காட்டின.

அந்தப் பெரிய அறையின் இருமருங்கும் இரண்டு கதவுகள் காணப்பட்டன. இந்தப்புறம் ஓர் அறையும் அந்தப்புறம் ஓர் அறையும் இருக்க வேண்டுமென்று

தீர்மானித்து, முதலில் இடது பக்கமிருந்த அறையின் கதவைத் திறந்தேன். செங்கோடனோ அல்லது வேறு ஆளோ என் வருகையை எதிர்பார்த்து ஆயுதத்துடன் ஒளிந்திருக்கலாம் என்று தோன்றியதால் கையில் பிடித்த வாளுடன் மிக மெதுவாகவே திறந்தேன்.

ரொம்பக் கொஞ்சமாகத் திறக்கும் போதே அது ஒரு சயன அறை என்பது தெரிந்துவிட்டது. விளக்கு மங்கலாக எரிந்து கொண்டிருக்க, சப்ரமஞ்சக் கட்டிலில் ஒரு வாலிபன் படுத்திருந்தான். அவன் மீது சாய்ந்தாற்போல ஒரு பெண் கொஞ்சிக் கொண்டிருந்தாள். இருவர் முகமும் எனக்குத் தெரியவில்லை.

என்னதான் பகைவனின் இல்லம் என்றாலும் ஒரு படுக்கையறையில், ஓர் ஆணும் பெண்ணும் அந்தரங்கமாக இருக்கும்போது அங்கே எட்டிப்பார்ப்பது அநாகரிகம் என்று எண்ணினேன். திரும்பி, வலதுபக்கமிருந்த கதவைத் திறந்தேன்.

அதுவும் ஒரு படுக்கையறைதான். ஆனால், கட்டிலில் ஓர் ஆண் மட்டுமே இருந்தான். அறுபது வயதிருக்கும். பலவகைச் சந்தடிகளைக் கேட்டு அவனுக்குத் தூக்கம் விழித்து விட்டது போலிருக்கிறது அல்லது வயோதிகர் களின் இயல்புப்படி இரவு வேளைகளில் நிம்மதியான நித்திரையாக இல்லாமல் அரைத்தூக்கமும் அரை விழிப்புமாக இருந்திருக்கலாம்.

நான் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்ததும், திடுக்கிட்டு எழுந்து, "யார், யாரது?" என்று கேட்டபடி மஞ்சத்தின் அருகே வைத்திருந்த வாளை எடுக்கப் போனான். ஆனால், விநாடிகூட அதற்கு அவகாசம் கொடுக்காமல் நான் அவனைக் கீழே தள்ளினேன்.

மல்லாந்து விழுந்தான் அவன். ஒரு காலை அவன் வயிற்றின் மீது வைத்துப் பலமாக ஊன்றிக்கொண்டு,

வாளை ஓங்கி, "எங்கே உன் கையாள்? எங்கே அந்தச் செங்கோடன்? மரியாதையாய் உடனே சொல்லு! இல்லாவிட்டால்."

என்று சொல்லிக் கொண்டிருந்தவன், அப்போது தான் அவன் முகத்தை விளக்கு வெளிச்சத்தில் நன்றாகப் பார்த்தேன். "நீயா!" என்று திடுக்கிட்டுப் போனேன்.

காரணம், அவன் ஒரு குட்டிப் பாளையக்காரன். இந்த வட்டாரங்களில் வரி வசூல் செய்யவும். கோயில், குளங்களைப் பராமரிக்கவும் நீதியை நிலைநிறுத்தி அமைதி காக்கவும் ஏற்பட்டவன். சிங்கப்பிரான் என்று பெயர். வருடத்துக்கு இரு முறை மகாநவமி பண்டிகையின் போதும், வருடப் பிறப்பன்றும் தலைநகருக்கு வந்து எனக்குக் காணிக்கை செலுத்தி வணங்கிவிட்டுச் செல்கிறவன்.

சில பாளையக்காரர்கள் தாங்களே வழிப்பறிக்காரர் களைக் கூலிக்கு அமர்த்துகிறார்கள் என்று ஜங்கமய்யா சொன்னது நினைவு வந்தது. அந்த ரகத்தைச் சேர்ந்தவன் இந்தப் பாளையக்காரன்!

அதை நினைத்துப் பிரமித்ததால் ஒரு கணம் என் கவனம் சிதறிவிட்டது. அவன் திமிறி எழுந்து, என் வாளைப் பறித்து, என்னைக் கீழே தள்ளினான். என் தலையை வெட்டுவதற்கு அவன் கை ஓங்கியது.

கை சொடுக்கும் நேரத்தில் என் தலை வேறு உடல் வேறாக ஆகியிருக்கும். ஆனால், அதே நொடியில் கதவு மடேலெனத் திறக்க, ஓர் இளைஞன் ஓடிவந்து சிங்கப்பிரானைக் கீழே தள்ளியதோடு, அவன் வாளைப் பறித்து என்னிடம் நீட்டி, "இந்தாருங்கள்! இப்போதே இங்கேயே இவனைக் கொல்லுங்கள் சக்ரவர்த்தி!" என்றான்.

சக்ரவர்த்தி!

அந்தச் சொல் காதில் விழுந்ததும் அவனைப் பார்த்தேன்.

முத்து! வழிப்பறிக்காரர்களிடம் சிக்கிக்கொண்டு காணாமற்போன சிற்பக் கலைஞன்!

அவன் எங்கிருந்து வந்தான், எப்படி வந்தான் என்று கேட்டுக் கொண்டிருக்காமல், முதலில் அந்தச் சிங்கப் பிரானைச் சிரச்சேதம் செய்ய வேண்டுமென்று தீர்மானித்தேன். வாளை ஓங்கினேன். இந்த முறை ஏமாறக்கூடாது என்று உறுதியாக இருந்தேன்.

ஆனால், அந்தப் பாளையக்காரன் என்னை யாரென்று தெரிந்து கொண்டவுடன் தரையில் கிடந்த படியே, இரு கையையும் கூப்பி, "சக்ரவர்த்தி! என்னை மன்னியுங்கள்... தெரியாமல் செய்து விட்டேன்!" என்று கெஞ்சினான்.

"நீ தெரியாமல் செய்திருந்தாலும் சரி, தெரிந்து செய்திருந்தாலும் சரி, தண்டனை நிச்சயம்!" என்று வாளை மேலும் மேலே உயர்த்தினேன்.

"சக்ரவர்த்தி! என்னை உயிருடன் விட்டால் தங்களுக்கு ஒரு பெரிய உதவி செய்வேன்" என்றான் அவன்.

"உன்னிடமிருந்து எனக்கு எந்த உதவியும் தேவையில்லை" என்றேன்.

"அப்படிச் சொல்லாதீர்கள்... தங்கள் அன்புக்குரிய காதலி, நாட்டிய மங்கை, சின்னாதேவி எங்கே இருக்கிறாள் என்பதை என்னால் சொல்ல முடியும்! என்னைக் கொல்லாதீர்கள்!" என்றான்.

என் கை தானாகவே வாளைக் கீழே போட்டது.

# 24

அல்லும் பகலும் அறுபது நாழிகையும் எந்தப் பெயரை என் உள்ளம் மனனம் செய்து கொண்டிருக்கிறதோ அந்தப் பெயரைக் கேடடவுடன் புல்லரித்துப் போனவனாக வாளைக் கிழே போட்டேன். இதோ அந்தப் பாளையக்காரன் சிங்கப்பிரான் வாயைத் திறக்கப் போகிறான்! இதோ சொல்லப் போகிறான்! இதோ தெரியப்போகிறது என் உயிருக்கு உயிரான சின்னாதேவி எங்கிருக்கிறாள் என்பது! இதோ, இதோ, இதோ என்று என் மனம் துள்ளிய துள்ளலில் விதி என்று ஒன்று இருப்பதை மறந்தே போனேன். இறைவன் என்று ஒருவன் இருப்பதையும் அவன் இட்ட ஆணையின்படிதான் துரும்பும் தூணும் அண்ட சராசரங்களும் இயங்குகின்றன என்பதையும் உணராத முட்டாளாக நான் ஆனேன்.

உலகம் குரூரமானது. முடடாள்களுக்குத் தண்டனை கொடுக்காமல் விடுவதில்லை. எனக்கும் கொடுத்தது.

ஆம். நான் வாளைக் கீழே போடட அந்தக் கணமே, பாளையக்காரனின் தலையில் மடேலென்று ஓர் அடி விழுந்தது. என்ன ஏது என்று நான் சுதாரிப்பதற்குள், “அடேய் சிங்கப்பிரான், எங்கள் சக்ரவர்த்தியிடமா உன் திமிரைக் காட்டுகிறாய்!'' என்று சீறிய வண்ணம் கையிலிருந்த தடியினால் இன்னோர் அடியும் போட்டு விட்டார்.

ஜங்கமய்யா!

“இருங்கள்! இருங்கள்!” என்று அவரைத் தூரப் பிடித்துத் தள்ளியிருக்காவிட்டால் அடுத்த அடியிலேயே அந்தப் பாளையக்காரனின் உயிர் பொசுக்கெனப் போயிருக்கும். இப்போதுகூடப் பிராணன் போக வில்லையே தவிர, தலையிலிருந்து ரத்தம் பீரிட மயக்கம் போட்டு விழுந்தான் அவன். ஏற்கெனவே வயதானவன், ஜங்கமய்யாவோ சண்டைப் பயிற்சி பெற்ற பலசாலி.

சாளரத்திலிருந்த ஒரு திரைச் சீலையைச் சட்டெனக் கிழித்து அந்தப் பாளையக்காரனின் தலையில் இறுகக் கட்டினேன்.

“முத்து! ஓடிப்போய் அருகில் எவரேனும் வைத்தியர் இருக்கிறாரா, பார்! இவனைத் தூக்கிப் போ! சீக்கிரம்!” என்றேன்.

ஏதோ தப்பு செய்துவிட்டோம் என்பதை ஜங்கமய்யா உணர்ந்துவிட்டார் ஆனால், என்ன தப்பென்று தெரியவில்லை.

அவரைக் குற்றம் சொல்வது பிசகு. வழிப்பறிக் கொள்ளைக்காரர்களைக் கொன்று தீர்த்துவிட்டு என் பின்னாலேயே வந்தவர், சிங்கப்பிரானால் எனக்கு ஆபத்து என்று நினைத்து அவனை அடித்து விட்டார் என்று புரிந்தது.

பாளையக்காரனின் முகத்தைப் பார்த்தேன். கண்ணையே திறவாமல் கிடந்தான். தலையில் கட்டியிருந்த துணி சிவந்து சொதசொதத்துக் கொண்டிருந்தது. மூக்கில் விரலை வைத்துப் பார்த்தேன். மூச்சு லேசாக இழையோடிக் கொண்டிருந்தது. ஆனால், இன்னும் எத்தனை நேரத்துக்கு ஓடுமோ தெரியவில்லை.

இதற்குள் நன்றாகப் பொழுது விடிந்து வெளிச்சம் வந்துவிட்டது. முந்தின இரவு சாலையில் வந்ததும் திருடர்கள் வழி மறித்ததும் அவர்களுடன் ஜங்கமய்யாவின்

ஆட்கள் போராடியதும் இங்கே வந்ததும் பாளையக்காரன் சிங்கப்பிரான் என்னைக் கொல்லப் பார்த்ததும் முத்து வந்து காப்பாற்றியதும் நினைத்துப் பார்க்கையில் எல்லாமே ஏதோ ஒரு நீண்ட பயங்கரக் கனவாகத் தோன்றியது.

கொடிய நோயில் படுத்துக் கிடப்பவனின் குடும்பத்தில் கூட, வெளிச்சம் வந்ததும் ஒரு தெம்பு வருவதுண்டு. அதுபோல நானும் தெம்பு பெற்றேன். அதற்கேற்றாற்போல் அந்த மாளிகையின் வேலையாட்கள் பலர் வந்து, இட்ட வேலைகளைப் பயபக்தியுடன் செய்தார்கள். நான் யாரென்பது தெரிந்துவிட்டதால் பக்தியைவிட பயமே அதிகம் என்று சொல்லவேண்டும். ஒரே ஓர் இளம்பெண் அந்தப் பரந்த முன்னறையின் மறுகோடியில் பேசாமல் நின்றிருந்தாள். மஞ்சத்தில் கொஞ்சிக் கொண்டிருந்த பெண் என்று ஊகித்தேன். ஆனால், அவள் யாருடன் குலவிக் கொண்டிருந்தாளோ அவனைக் காணவில்லை. கோழை! ஓடிவிட்டான் போலிருக்கிறது.

நாலு பேராகச் சிங்கப்பிரானைத் தாங்கிக் கொண்டு எடுத்துச் சென்றார்கள்.

அரிதாசருக்கு என்னிடம் சிறிது உரிமை உண்டு, புலவர் என்பதால். ஆகவே மெதுவாக என்னிடம் வந்தார்.

"யாரோ பயணிகள் வரப்போகிறார்கள் என்று சொன்னீர்கள்... நானும் அப்படித் தான் நினைத்தேன். ஆனால், தாங்களே வருவீர்கள் என்று எதிர்பார்க்கவே இல்லை. இப்படியெல்லாம் ஆபத்தை வருவித்துக் கொள்ளலாமா?" என்று தயங்கித் தயங்கிப் பேசினார்.

அவருடைய அன்பு என் சினத்தைத் தணித்தது. "இதெல்லாம் என் கடமை தானே?" என்றேன். பிறகு ஜங்கமய்யாவிடம், "எல்லோருக்கும் வசதிகள் செய்து தரும்படி இங்குள்ள ஆட்களிடம் சொல்லுங்கள்" என்றேன்.

சிங்கப்பிரானைக் காப்பாற்ற நான் ஏன் அத்தனை முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்ற குழப்பம் தீராமலே அவர் சென்றார்.

எனக்குப் பணிவிடைகள் தேவையிருக்குமென்பதற்காக முத்து மட்டுமே இருந்தான். நெடுநேரமாக என் மனதுக்குள் உறுத்திக் கொண்டிருந்த கேள்வியைக் கேட்டேன்.

"ஏன் முத்து, இங்கே ஓர் இளம்பெண் இருக்கிறாளே, அவள் யார்?"

"சிங்கப்பிரானின் மனைவி. இந்த வயதான காலத்தில் இளம்பெண்ணை மணந்திருக்கிறான்" என்றான் முத்து.

எனக்குத் திகைப்பாயிருந்தது. "மஞ்சத்தில் அவளுடன் ஓர் இளைஞனல்லவா கொஞ்சிக் கொண்டிருந்த மாதிரி இருந்தது?" என்றேன்.

"அது.. அது...

"சொல்லு."

"சக்ரவர்த்தியான தங்களிடம் பேசக்கூடிய விஷயமல்ல...

"சக்ரவர்த்திக்குத் தெரியக்கூடாத விஷயம் என்று எதுவும் இருக்கக்கூடாது. சொல்லு," என்று வற்புறுத்தினேன்.

"அது... அவன்... வேறு யாருமில்லை, சக்ரவர்த்தி. நான்தான்..." என்றான்.

"என்னது!" நான் அதிர்ந்துபோனேன். "அங்கே நீ தாலி கட்டிய மனைவி உனக்காக உருக்குலைந்து கொண்டிருக்கிறாள்! அவளைச் சாதியை விட்டு விலக்கி, கையில் சூடு போட்டிருக்கிறார்கள்! இங்கே உனக்குக் காதலி தேவைப்படுகிறாள்! அதுவும் மாற்றான் மனைவி! வெட்கமாயில்லையா?" என்று படபடத்தேன்.

"சக்ரவர்த்தி, சற்றுப் பொறுமையுடன் நான் சொல்வதைக் கேட்க வேண்டும்" என்று கைகுவித்து வேண்டிக் கொண்டான் முத்து. "என் மனைவி சோலை மீது நான் உயிரையே வைத்திருக்கிறேன். அவள்மீது ஆணையாகச் சொல்கிறேன். தாங்கள் நினைக்கிறபடி அல்ல."

"பின்னே என்ன நாடகம் இது?"

"நாடகம்தான் சக்ரவர்த்தி. இன்று தாங்கள் வந்த அதே பாதையில்தான் அன்று நானும் வந்தேன். சிங்கப்பிரானின் ஆட்கள் என்னை வளைத்துப் பிடித்துக் கொண்டுவிட்டார்கள். நான் தலைநகரில், அரண்மனையில் சிற்பக்கூடம் அமைக்கும் பணியில் ஈடுபட்டிருப்பவன் என்பதை சிங்கப்பிரான் தெரிந்துகொண்டான். அரண் மனையில் தங்கள் அறை எங்கே இருக்கிறது, கோட்டைக்குள் யார் யாருடைய அரண்மனைகள் எங்கெங்கே இருக்கின்றன, ரகசிய வழிகள் என்னென்ன உண்டு என்றெல்லாம் சொல்லும்படி என்னைக் கட்டாயப்படுத்தினான். சொன்னால் என்னை விட்டு விடுவதாகச் சொன்னான். எனக்கு அரண்மனையைப் பற்றித் தெரியவும் தெரியாது. தெரிந்தாலும் ஒரு சதிகாரனுக்குச் சொல்வேனா? மறுத்துக் கொண்டிருந்தேன். என்னை இங்கே ஓர் அறையில் கட்டிப்போட்டிருந்தான்...

"இருக்கட்டும். இதில் அந்தப் பாளையக்காரனின் மனைவிக்கு என்ன சம்பந்தம்?" என்று குறுக்கிட்டேன்.

முத்து தலையைத் தாழ்த்திக் கொண்டான். அடிக்கண்ணால் என்னைப் பார்த்தான். அவன் உதட்டில் வெட்கம் தவழ்ந்தது. "சக்ரவர்த்திக்குத் தெரியாத விஷயமல்ல..."

"சக்ரவர்த்திக்கு தெரியாத விஷயம் ஏராளமாக இருக்கிறது" என்றேன்.

"வயோதிகர்களைக் கல்யாணம் செய்து கொள்ளும் எல்லாப் பெண்களுக்கும் இருக்கக்கூடிய சபலம் இவளுக்கும் இருக்கிறது. நானொன்றும் அழகனல்ல. இருந்தாலும்... இருந்தாலும்... என்னை... என்னிடம்... அவளுக்கு ஒரு மயக்கம் ஏற்பட்டுவிட்டது. கணவனுக்குத் தெரியாமல் என்னை விடுவித்தாள். நான் அவளிடம் மயங்குகிற மாதிரி நடித்து, தப்புவதற்கு வழிபார்த்துக் கொண்டிருந்தேன். பொய்யில்லை... சத்தியம்... அப்போது தங்கள் குரல் கேட்டது."

"ஓடி வந்து என்னைக் காப்பாற்றினாய்!" என்றேன் புன்முறுவலுடன். சற்று முன் அவனைத் தப்பாக எடை போட்டுவிட்டோமே என்று வருத்தம் ஏற்பட்டது.

"ஐயோ! அப்படியெல்லாம் பெரிய வார்த்தை சொல்லாதீர்கள். கோடிக்கணக்கான குடிமக்களைக் காப்பாற்றும் சக்ரவர்த்தி தாங்கள்...

கும்பிட்டுவிடடு அவசரமாக வெளியேறினான் முத்து. தன் மனைவியைப் பற்றிய விவரங்களை ஜங்கமய்யாவிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள எண்ணினான் போலும்.

அந்த வட்டாரத்தின் தலையாரியைக் கூப்பிட்டனுப்பினேன். பொதுவாக அவன்தான் குற்றவாளிகளைக் கண்டு பிடித்து, சட்டம் ஒழுங்கு நிலைமைகளைக் கண்காணிக்க வேண்டிய அதிகாரி. இவர்களுக்கு நில மானியமும் பாளையக்காரர்களால் ஊதியம், இடவசதி யாவும் கிடைக்கின்றன. விஜயநகரத்தில் ஜங்கமய்யாவுக்கு என்ன பொறுப்புகளும் அதிகாரங்களும் உண்டோ அவ்வளவும் இவர்களுக்கு உண்டு.

சக்ரவர்த்தியான நானே நேரில் வந்து கொள்ளைக் காரர்களைப் பிடித்து, அவர்களைக் கையாளாக வைத்திருந்த பாளையக்காரனையும் மடக்கியிருக்கிறேன் என்பது இதற்குள் ஊரெங்கும் பரவி விட்டது.

தலையாரி வரும்போதே நடுக்கத்துடன் வந்தான். நான் அரச உடையில் இல்லா விட்டாலும் பொய்த் தாடியையும் பொய் மீசையையும் எடுத்துவிட்டதால் என்னை அடையாளம் கண்டுகொண்டு விட்டான். "சக்ரவர்த்தி! என்னை மன்னியுங்கள்!" என்று என் காலில் நெடுஞ்சாண்கிடையாக விழுந்தான்.

"சே, சே! எழுந்திருங்கள்! நீங்கள் என்ன தப்புச் செய்தீர்கள்? ஒன்றுமேயில்லை." என்றேன். ஆனால் என் குரலில் இருந்த கேலியும் கடுமையும் அவனுக்குத் தெரிந்துவிட்டது. எழுந்து கொண்டவன் தலைகுனிந்து நின்றான். புயல் காற்றில் சிக்கிய பனை மரம் போலக் கால் முதல் தலைவரை ஆடியது.

"நீங்கள் எந்தத் தப்பும் செய்யவில்லை, தலையாரி, பாளையக்காரன் எப்படியோ அப்படித்தானே அவன் ஊழியனும் இருப்பான்! அவனிடம் கையூட்டு வாங்கிக் கொண்டு அப்பாவிப் பிரயாணிகளை வழிமறித்துக் கொள்ளையடித்து, பாளையக்காரனுக்கும் கொஞ்சம் கொடுத்து நீங்களும் கொஞ்சம் எடுத்துக் கொண்டீர்கள்! அதென்ன பெரிய குற்றம்" என்று சீற்றத்துடன் சிரித்தேன்.

நான் அவனை மன்னிக்கத் தயாராயில்லை.

அருகிலிருந்த ஜங்கமய்யாவின் ஆட்களிடம், "இவனை இழுத்துக் கொண்டு போய் என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யுங்கள்" என்று கட்டளை இட்டேன். அந்த வார்த்தை போதும் அவர்களுக்கு. ஒன்று, தலையை வாங்கிவிடுவார்கள் அல்லது மாறுகால் மாறுகை வெட்டி விடுவார்கள்.

"சக்ரவர்த்தி' என்று கதறிக்கொண்டே போனான் அந்தத் தலையாரி. தரதரவென்று தரையோடு அவனை இழுத்துக் கொண்டு சென்றார்கள். அப்படியும் திரும்பித் திரும்பி என்னைப் பார்த்து, "நான் பண்ணியது தப்புதான். ஒப்புக் கொள்கிறேன். ஆனால், காஞ்சிபுரத்திலிருந்து திருவண்ணாமலை வரை பாதையும் சரியில்லை. போதுமான ஆட்களும், அவர்கள தங்கியிருப்பதற்குக் காவல்நிலையங்களும் இல்லை" என்று அழுதுகொண்டே போனான்.

"எந்தக் காவலும் இல்லாதபோதுகூட ஜனங்கள் அச்சமில்லாமல் நடமாட வேண்டும். அதுதான் விஜயநகர அரசுக்கு அழகு. 'தலைநகரில் நடுராத்திரியில்கூடப் பெண்கள் நகைகள் அணிந்து தனியாகப் போய் வர முடிகிறது' என்று ஒரு நாள் பாரசீக தூதர் என்னிடம் சொன்னார். அப்போது எனக்கு எவ்வளவு பெருமையாக இருந்தது! இந்த மாதிரி பாளையக்காரர்களும் இந்த மாதிரி தலையாரிகளும் இருந்தால் தேசம் என்னாவது!" என்றேன் ஜங்கமய்யாவிடம்.

சிங்கப்பிரானுக்குச் சிகிச்சை செய்த கிராமத்து வைத்தியர் வந்தார். எண்பது வயது இருக்கும்.

"எனக்குத் தெரிந்த வரையில் பாளையக்காரருக்குச் சிகிச்சை செய்து ரத்தப் போக்கை நிறுத்தியிருக்கிறேன். ஆனால், அவர் பிழைப்பாரா மாட்டாரா என்று சொல்வதற்கில்லை. தலைநகருக்கு எடுத்துப் போய்ப் பெரிய வைத்தியர்களிடம் காட்டினால்தான் தேவலை" என்றார் அந்த வயோதிகர்.

"விரைவாகச் செல்லக்கூடிய மாடடு வண்டி தயார் செய்யுங்கள்" என்றேன் ஜங்கமய்யாவிடம். சிங்கப்பிரான் இருந்த நிலைமையில் குதிரைமீது கிடத்த முடியாது.

பழைய சோழர்கள் காலத்தோடும் பாண்டியர்கள் காலத்தோடும் ரதங்கள் வழக்கொழிந்துவிட்டன. வேகமான பயணங்களுக்குக் குதிரைகள்தான் இப்போது. அல்லது மாட்டுவண்டிகள். பொதிகள் சுமந்து செல்ல மாடுகள், கோவேறுக் கழுதைகள்.

வண்டி வந்தது. தகுந்த உத்தரவுகள் கொடுத்து அனுப்பி வைத்தேன். நேரே ராஜ வைத்தியரின் இல்லத்துக்குப் போகும்படி ஆணையிட்டேன்.

'சின்னாதேவி எங்கிருக்கிறாள் என்று எனக்குத் தெரியும்... சின்னாதேவி எங்கிருக்கிறாள் என்று எனக்குத் தெரியும்.' இந்த வாக்கியங்களே என் காதில் ஒலித்துக் கொண்டிருந்தன. அதைச் சொல்வதற்காகவாவது சிங்கப்பிரான் உயிரோடு பிழைத்தெழுந்து கொள்ள வேண்டும் என்று ஏழுமலையானையும் காளத்தி நாதனையும் காஞ்சியில் நான் தரிசித்த எல்லாத் தெய்வங்களையும் வேண்டிக்கொண்டேன்.

அரிதாசர் என்னுடன் தலைநகருக்கே திரும்புவதாகச் சொன்னார். புறப்பட்ட வேளை சரியில்லை என்பது அவர் எண்ணம். மற்றவர்கள் திருவண்ணாமலைக்குச் சென்று விட்டார்கள்.

அரிதாசர், "சக்ரவர்த்தி, தாங்களும் ஜங்கமய்யாவும் குதிரையில் செல்லலாமே? அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டாமா?" என்றார்.

"வேண்டாம்" என்றேன் உறுதியாக. "எப்படி வந்தேனோ, அப்படியே திரும்புகிறேன். இது ஒரு புனிதப் பயணம் மாதிரி ஆகிவிட்டது." என்றேன்.

ஜங்கமய்யா சிறிது பதற்றத்துடன் "வந்திருப்பது சக்ரவர்த்தி என்பது இங்கே எல்லாருக்கும் தெரிந்து விடடது. இப்போதே மக்கள் கூட்டம கூட்டமாக நிற்கிறார்கள் தங்களைக் காண்பதற்காக.. செய்தி பரவி

அடுத்தடுத்த ஊர்களிலும் ஜனங்கள் சேர்ந்து விடுவார்கள்... என்றார்.

"பாதகமில்லை. சேவகர்களில் இரண்டு பேரை முன்னால் அனுப்பி யாரும் கூட்டம் போடாதபடி பார்த்துக் கொள்ளச் சொல்லுங்கள்" என்றேன்.

குறுகிய பாதையின் இருபுறமும் பிரஜைகள் நின்றிருந்தார்கள். அவர்கள் முகத்தில் தென்பட்ட ஆச்சரியத்தை எழுத்தால் சொல்வது இயலாத காரியம். கொள்ளைக்காரர்களை ஒழித்ததற்காகக் கைகூப்பி நன்றி செலுத்தினார்கள். சிலர் விழுந்து நமஸ்காரம் செய்தார்கள். அவர்களுக்கு வணக்கம் தெரிவித்தபடி நல்ல பாதையை அடைந்தேன்.

நெடுஞ்சாலையை அடைந்தோம். போகும்போது தான் ஜங்கமய்யாவிடம் நடந்த விஷயங்களைச் சொன்னேன். காரியத்தைக் கெடுத்துவிட்டது தெரிந்ததும் பதறிப்போய் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

பாதைதான் நன்றாக இருந்ததே தவிர, கண்ணுக் கெட்டிய தூரத்துக்கு மனிதர்கள் யாரும் கண்ணில் படவில்லை.

முத்து என்னை நெருங்கிப் பணிவாக, "சாலை இவ்வளவு வெறிச்சென்று எந்தக் காவலும் இல்லாமல் இருப்பதால்தான் வழிப்பறிக் கொள்ளைக்காரர்களுக்குத் துணிச்சல் வந்துவிடுகிறது. ஜனங்கள் ஐயோ அப்பா என்று கத்தினால்கூட ஏனென்று கேட்பதற்கு யாருமில்லையே!" என்றான்.

அவன் அந்த விஷயத்தை ஆரம்பித்து விட்டதால் ஜங்கமய்யாவுக்குச் சிறிது தைரியம் வந்தது. "சக்ரவர்த்தி, ஒரு விஷயம்... என்று தாழ்ந்த குரலில் ஆரம்பித்தவர், "அந்தத் தலையாரி சொன்னதும் ஒருவகையில் சரிதான். இந்தச்

சாலையில் நிறையக் காவல் விடுதிகள கட்டி, காவலர்களை நியமிக்க வேண்டும்" என்றார்.

"எந்தெந்த இடங்களில் விடுதி கட்ட வேண்டும்? அதைச் சொல்லுங்கள்" என்றேன்.

அரிதாசர், "எனக்கு என்ன தோன்றுகிறதென்றால்... என்று தயங்கினார்.

"சொல்லுங்கள் புலவரே?" என்று ஊக்குவித்தேன்.

"மக்களுக்கு நன்மையான எதைக் கட்டுவதானாலும் மன்னனுடைய விருப்பம் மட்டும் போதாது. தெய்வமும் வழிகாட்ட வேண்டும்" என்றார் அரிதாசர்.

"புரியவில்லையே?" என்றேன்.

"மூன்று நாலு வருடங்களுக்கு முன்பு தாமிரபரணி நதி தீரத்தில் உள்ள கோயில்களுக்கு யாத்திரை சென்றிருந்தேன். நதியில் அடிக்கடி வெள்ளம் வந்து சேதம் விளைவிப்பதோடு, பாசனத்துக்குத் தேவையான நீரும் வீணாகிறதென்று கருதி, பல இடங்களில் அணைகட்டி யிருக்கிறார்கள். அதைப்பற்றி ஒரு தகவல் சொன்னார்கள்..."

"என்ன தகவல்?"

"கனடியன் என்று ஒரு செல்வந்தர் திருப்பதியிலிருந்து அங்கே வந்தாராம். தன்னுடைய ஏராளமான செல்வத்தை எப்படிச் செலவழிக்க வேண்டுமென்று ஒரு சந்நியாசியிடம் கேட்டபோது, 'மக்களுக்கு உபயோகமாக நிறைய அணைகள் கட்டு' என்று சொல்லி, ஒரு பசுவைக் கொடுத்தாராம்.

"பசுவா... எதற்கு?"

"தாமிரபரணி கரையோரமாக அந்தப் பசுவைப் போக விடும்படி சொன்னாராம். 'அது எங்கெங்கு படுத்து இளைப்பாறுகிறதோ அங்கங்கே அணையைக் கட்டு. தெய்வமே அந்த இடத்தைத் தேர்ந்தெடுத்துச் சொல்கிறது

என்று அர்த்தம்' என்றாராம் அந்த சந்நியாசி. அதன்படி அந்தத் தனவான் அணைகள் கட்டினான் என்றார்கள். நாமும் இப்படிச் செய்யலாம்" என்றார் அரிதாசர்.

எனக்கு இது வேடிக்கையாகவும் புதுமையாகவும் தோன்றியது. ஆனால், இறைவனின் விருப்பத்தைத் தெரிந்து கொள்வதில் என்ன தவறு என்று நினைத்தேன்.

அரிதாசர் சொல்வது எனக்குச் சம்மதம்தான் என்று தெரிந்ததும் ஜங்கமய்யாவும் முத்துவும் போய் எங்கிருந்தோ ஒரு பசுமாட்டையும் அதன் சொந்தக்காரியான பெண்ணையும் அழைத்து வந்தார்கள்.

அந்தப் பெண் முதலில் கொஞ்சம் பயந்தாள். ஆனால், சக்ரவர்த்தி இட்ட பணியில் ஈடுபடுகிறோமென்ற பெருமை முகத்தில் ஜொலித்தது.

பசு முன்னே நடந்தது. அதன் பின்னே அந்தப் பெண் நடந்தாள். அவள் பின்னே நாங்கள் நடந்தோம்.

இரவென்பது கிடையாது, பகலென்பது கிடையாது. அந்தப் பசு எங்கெங்கே இளைப்பாறியதோ அங்கேதான் நாங்களும் இளைப்பாறினோம். அரிதாசரும் முத்துவும் ஜங்கமய்யாவும் அந்த இடங்களைக் குறித்து வைத்துக் கொண்டு, பக்கத்துக் கிராமத்து மக்களைக் கூட்டி, சாலையில் கல்லும் பதித்துக்கொண்டு வந்தார்கள். வழியிலே மக்களைச் சந்தித்துக்கொண்டுதான் இருந்தேன். ஆனால், அவர்களால் இடையூறு ஏற்படவில்லை.

தலைநகருக்குள் நுழையும்போது, செய்தி கேள்விப்பட்டு முதலில் ஓடி வந்தவள் முத்துவின் மனைவி சோலை தான். நான் இருப்பதைக்கூட மறந்து கணவனைக் கட்டிக்கொண்டு விம்மி விம்மி அழுதாள்.

அவளைப் பார்த்ததுமே, அவள் கையில் இன்னும் ஆறாமலிருந்த ரணத்தைக் கண்டதுமே, அவளுக்காக என்ன

செய்ய வேண்டும் என்பது குறித்து ஒரு முடிவு செய்து கொண்டேன். ஆனால், அதை அங்கே அப்போது வெளியிடவில்லை.

நேரே ராஜவைத்தியரின் இல்லத்துக்குத் தான் சென்றேன். பாளையக்காரனின் நிலைமையை அறிந்து கொள்ள என் மனம் துடியாகத் துடித்தது.

ஆனால்...

# 25

**வை**த்தியரின் இல்லத்துக்கு விரைந்தேன் என்று சுலபமாகச் சொல்லி விட்டேனே தவிர, அதற்கு முன் எவ்வளவு இடையூறுகள்!

தலைநகருக்கு ஏழு கோட்டை வாசல்கள் இருக்கின்றன. நாலாவது வாசலைத் தாண்டிய பிறகு வைத்தியர், கலைஞர் முதலான அறிவாளிகள் வசிக்கும் வீதி வருகிறது.

ஆனால், முதல் வாசலை அடையும் போதே ஒரு சிவிகை வந்து நிற்பதையும் அதிலிருந்து என் அன்னை நாகலாம்பிகை இறங்கி வருவதையும் கண்டேன். "கிருஷ்ணா!" என்று உரக்கக் கூவியபடி ஓடிவந்து என்னை அணைத்துக்கொண்டார். ஜங்கமய்யாவின் ஆட்களில் ஒருவன் முன்னதாகவே போய் என் வருகையைப் பற்றி அறிவித்திருந்தான் போலிருக்கிறது.

தளர்ந்த அன்னையின் உடம்பைத் தாங்கிக் கொண்டு, "என்னம்மா, ஏன் இப்படிப் பதறுகிறீர்கள்? என்ன ஆகிவிடடது எனக்கு? அதுதான் பத்திரமாக உருப்படியாக வந்துவிட்டேனே?" என்றேன்.

"யாரோ ஒரு பாளையக்காரன் உன்னைக் கொலை செய்யப் பார்த்தானாமே... ஜங்கமய்யா அவனை அடித்துப் போட்டாராமே?" என்றார் அம்மா.

"அரண்மனைக்கு வந்து விவரங்கள் சொல்கிறேன். தயவுபண்ணி இப்போது எனக்கு வழி விடுங்கள்" என்று

சொல்லி அவர்கள் கரங்களைப் பற்றி வலுக்கட்டாயமாக பல்லக்கில் ஏற்றி அனுப்பி வைத்தேன்.

ஆனால் அதற்குள், 'சக்ரவர்த்தி வருகிறார்! பேரரசர் வாழ்க!' மன்னர் மன்னன் வாழ்க! என்ற கோஷங்கள் நாலு திசையிலும் கிளம்பிவிட்டன. ஜனங்கள் கூடத் தொடங்கி விட்டார்கள். என்னை அப்படியொரு கோலத்தில் அவர்கள் பார்த்ததில்லை.

வயோதிகர் ஒருவர் எல்லாரையும் முண்டியடித்துத் தள்ளிக்கொண்டு என்னிடம் வந்தார். "சென்ற பத்து தினங்களாகச் சக்ரவர்த்தியைப் பார்த்து ஒரு முக்கியமான விஷயம் சொல்ல வேண்டும் என்று முயற்சி பண்ணிக் கொண்டிருக்கிறேன்" என்றார் பதற்றமான குரலில்.

அவரை அம்மாவின் அரண்மனையில் பல முறை பார்த்திருக்கிறேன். அன்னையாருக்கு அவர் ஆஸ்தான ஜோசியர் மாதிரி.

பணிவுடன், "இப்போது நேரமில்லை. இன்னொரு சமயம் பார்க்கிறேன்" என்று சொல்லிவிட்டு அவரைக் கடந்து சென்றேன்.

"ஜாதகப்படி சக்ரவர்த்தியின் கால பலம் இப்போது சரியில்லை... என்று அவர் சொல்வதும், "உங்கள் ஜாதகத்தை முதலில் பார்த்துக் கொள்ளுங்கள் பெரியவரே" என்று யாரோ கேலி செய்வதும் கூடியிருந்த ஜனங்கள் சிரிப்பதும் என் காதில் விழுந்தன. இருந்தாலும், நிற்காமல் மேலும் இரண்டு கோட்டை வாசல்களைத் தாண்டியபோது, மகாபிரதானி அப்பாஜியும் இன்னும் இரண்டு மூன்று அமைச்சர்களும் என்னை எதிர் கொண்டார்கள். அப்பாஜியின் முகத்தில் கவலை தென்பட்டது.

குறிப்பறிந்து மற்ற அமைச்சர்கள் ஒதுங்கிக் கொண்டார்கள். ஜனங்களை விலகிச் செல்லும்படி

காவலர்கள் துரத்தி விட்டார்கள். நானும் அப்பாஜியும் மட்டுமே தனியாக இருந்தோம். இப்படியொரு மந்திராலோசனைக் கூட்டம் நடுவீதியில் நடப்பது இதுவே முதல் தடவை!

"என்ன அப்பாஜி?" என்றேன்.

அப்பாஜி குரலைத் தாழ்த்திக் கொண்டு பேசினார். "முன்பே தங்களிடம் சொன்னதுதான். கோல்கொண்டா சுல்தான் குதுப் ஷாஹியும் அகமது நகர் சுல்தான் நிஜாம் ஷாஹியும் தங்கள் தூதர்களை விஜயபுரம் சுல்தான் ஆதில்ஷாஹியிடம் அனுப்பியிருந்தார்கள். அவர்களுடைய பேச்சுவார்த்தை வெற்றிகரமாக முடிந்திருக்கிறது என்று தோன்றுகிறது. அகமது நகர் சுல்தான் தன் படைகளைப் பீமா நதிக்கரையோரமாக நடத்தி வந்து கொண்டிருக்கிறான். விஜயபுரத்தை அடைந்ததும் இரண்டு சுல்தான்களின் படைகளும் பீமா நதி கிருஷ்ணாவுடன் கலக்குமிடத்தில் முகாம் அமைக்கும். கோல்கொண்டா படைகளும் அவர்களுடன் சேர்வதற்காக வந்து கொண்டிருக்கின்றன. எல்லைப்புறத்தில் உள்ள அவர்களுடைய கோட்டைகளைப் பலப்படுத்தி வருகிறார்கள். முற்றுகையிட்டால் தாக்குப் பிடிப்பதற்காக ஏராளமான உணவுத் தானியங்களும் ஆயுதங்களும் அங்கே சேகரித்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள்...

ஒரே மூச்சில் சொன்ன இந்த விவரங்களைக் கேட்டதும் அப்பாஜியின் பதற்றம் நியாயமானதுதான் என்று புரிந்தது.

"நல்லது. நீங்கள் போய்க் கொண்டே இருங்கள். வைத்தியரின் வீட்டில் எட்டிப் பார்த்துவிட்டு இதோ பின்னாலேயே வருகிறேன்" என்றேன்.

சின்னாதேவி எங்கிருக்கிறாள் என்பதை அந்தச் சிங்கப்பிரான் வாயினால் கேட்டுத் தெரிந்து

கொள்ளத்தான் நான் அப்படித் துடியாய்த் துடிக்கிறேன் என்று அவருக்குப் புரிந்துவிட்டது. மன்னர்களுக்கெல்லாம் மன்னனாகத் திகழும் இந்த கிருஷ்ண தேவராயன் ஒரு பெண்ணிடம் பித்துக் கொண்டு இப்படி அலைகிறானே என்று அவருக்கு விந்தையாக இருந்திருக்கும். கடமையை உதறித் தள்ளுகிறானே இந்தச் சக்ரவர்த்தி என்று சினமும் ஏற்பட்டிருக்கும்.

ஆனால், அவருக்குக் காதலைப் பற்றித் தெரிந்திருக்க நியாயமில்லை. அகஸ்தியரின் பால பாகவதத்துக்கு 'மனோரமா' என்ற பெயரில் வியாக்கியானம் எழுதிய அறிவாளியே தவிர, காதல் சாஸ்திரத்தின் அரிச்சுவடியும் அறியாதவர்.

நாலாவது கோட்டை வாசலைக் கடந்து வைத்தியரின் இல்லத்தை அடைந்தேன். என் வருகையை எதிர்பார்த்து ராஜ வைத்தியர் வாசலிலேயே நின்றிருந்தார். "வரவேண்டும் சக்ரவர்த்தி" என்று வரவேற்றார்.

"சிங்கப்பிரான் எப்படி இருக்கிறான்?" என்று கேட்டவண்ணம் உள்ளே நுழைந்தேன்.

சிங்கப்பிரானைக் காணோம்.

ஒரு சிறு முக்காலியில், மொட்டையடிக்கப்பட்ட தலையுடன் ஒருவன் உட்கார்ந்திருந்தான். ஒரு பெண் கையிலிருந்த பாத்திரத்தைச் சாய்த்து அவனுடைய உச்சந்தலையில் ஏதோவொரு தைலத்தை ஊற்றிக் கொண்டிருந்தாள். தடதடவென்று கொட்டாமல் ஒரே சீராக, தடித்த கம்பி போல் சீராக விரல்களின் வழியே ஊற்றியவாறு இருந்தாள்.

"எங்கே அந்தச் சிங்கபிரான் நான் அனுப்பிய பாளையக்காரன்? இங்கே வந்து சேரவேயில்லையா?" என்றேன் வைத்தியரிடம் கடுமையாக்.

“அதோ இருக்கிறானே, சக்ரவர்த்தி?” என்று அந்த மொட்டைத் தலையனைக் காட்டினார் வைத்தியர். “அவனுக்குத்தான் சிகிச்சை நடந்து கொண்டிருக்கிறது” என்றார்.

திடுக்கிட்டவனாகப் பார்த்தேன். ஆம். சொன்னது சரிதான். தலை மழுங்க மழிக்கப்படடிருந்ததால் உடனே அடையாளம் தெரியாமல் போய்விட்டது.

என் அடுத்த திகைப்பு. அவன் கண்களைக் கண்டதும்!

அந்த விழிகளில் ஜீவன் இல்லை. என்னை யாரென்று தெரிந்து கொண்டதாகவோ, தனக்கு என்ன நடக்கிறது என்பதை உணர்ந்து கொண்டதாகவோ இம்மியும் தெரியவில்லை. சற்றும் சலனமில்லாமல் சூனியத்தில் நிலைத்திருந்தன அந்த உயிரற்ற விழிகள்.

“இவன்... இவனுடைய காயம்...?” என்று தடுமாறினேன்.

அந்தப் பெண், தன் பாட்டுக்கு ஒரு பாத்திரம் காலியானதும் இன்னொரு பாத்திரத்தை எடுத்து எண்ணெய் ஊற்றிக் கொண்டிருந்தாள்.

“சக்ரவர்த்தி, இவன் மண்டையின் வெளிப்புறத்தில் ஏற்பட்டிருந்த காயம் பெரிதில்லை. ஆனால், உள்ளே மூளைக்குள் ஏதோ ஒரு நரம்பு பிசகிவிட்டது...” என்றார் வைத்தியர்.

“அதாவது?”

“இதற்குப் பெயர் பிரம்மை என்று சொல்வோம், சித்தப்பிரமை என்பார்களே, அதுபோல.”

தூக்கிவாரிப் போட்டது எனக்கு.

“பைத்தியம் பிடித்துவிட்டது என்றா சொல்கிறீர்கள்?” என்றேன்.

“இல்லை. பைத்தியம் என்றால் பிறரை அடிப்பார்கள். கல்லை எடுத்து எறிவார்கள். கட்டியிருப்பதைக் கிழித்துக் கொள்வார்கள். இவன் அப்படியல்ல. பச்சிளங்குழந்தை மாதிரி இருக்கிறான். பேச்சு வரவில்லை. நினைவு வரவில்லை. என்ன நடந்தது என்பதைச் சொல்லத் தெரியவில்லை. எங்கே அழைத்துப் போகிறோமோ அங்கே வருகிறான். எங்கே உட்கார்த்தி வைக்கிறோமோ அங்கே உட்காருகிறான்.”

சிங்கப்பிரானுக்கு ஏற்பட்ட அடியைக் காட்டிலும் எனக்கு ஏற்பட்ட அடிதான் பெரியது. என் வலிதான் பெரியது.

“இன்னும் எத்தனை நாளில் சரியாகும்?” என்றேன்.

“சொல்ல முடியாது. ஒரு மாதமுமாகலாம், ஆறு மாதமும் ஆகலாம்” என்றார் வைத்தியர்.

வேறொரு சமயமாயிருந்தால், ‘இவன் செய்த பாவங்களுக்குக் கடவுள் கொடுத்த தண்டனை’ என்று சொல்லியிருப்பேன். இப்போது சொல்ல முடியவில்லை. என் காரியமல்லவா கெட்டுவிட்டது! என்ன பாவம் செய்தேனோ, கடவுள் எனக்கல்லவா தண்டனை கொடுத்திருக்கிறார்! சின்னா தேவியைப் பற்றி இனி இவன் எப்போது சொல்லப் போகிறான்!

அந்தப் பாளையக்காரனைக் காட்டிலும் அதிக ‘பிரம்மை’ பிடித்தவனாக நான் வாசலுக்கு வந்தபோது, நாடெண்டல கோபமந்திரி, சாளுவ கோவிந்தராசு, அய்யப்பராசு, மங்கராசய்யா முதலிய பல அமைச்சர்கள் எனக்காகக் காத்திருப்பதைக் கண்டேன். மந்திரா லோசனைக்காக என்னை அரண்மனைக்கு விரைவாக அழைத்துப் போகத்தான் வந்திருந்தார்கள்.

தள்ளி நின்றிருந்த கூட்டத்தின் நடுவே முத்துவும் அவன் மனைவி சோலையும் இருந்தார்கள். முத்துவிடம்,

"இன்று மாலை இரண்டு பேரும் அரண்மனைக்கு வாருங்கள்" என்றேன்.

"உத்தரவு சக்ரவர்த்தி" என்றான்.

வைத்தியரின் வீட்டில் நான் எதிர்பார்த்து வந்த தென்ன, கிடைத்த ஏமாற்றம் என்ன! 'சின்னாதேவி, நீ இந்த விநாடியில் எங்கே இருக்கிறாய்? என்ன பண்ணுகிறாய்?' என்ற கேள்விகளில் என் உள்ளம் சித்திரவதைப்பட்டு கொண்டிருக்கிறது.

படையெடுப்பு பற்றிய ஆலோசனைக் கூட்டம் சுறுசுறுப்பாக நடைபெற்றது. மண்டலேசுவரர்கள், தளபதிகள், தளவர்ய்கள், தனநாயகர்கள் எல்லோருமே ஆர்வத்துடன் பேசினார்கள்.

அப்பாஜி தொண்டையைக் கனைத்துக் கொண்டார். "நமக்கு எவ்வளவு குதிரைகள், எவ்வளவு காலாட்கள் தேவைப்படும் என்பதை முதலில் கணக்கெடுக்க வேண்டும். பிறகு எந்தெந்தச் சிற்றரசர்கள், எந்தெந்த அமரநாயகர்கள் எத்தனை படை உதவி செய்வார்கள் என்பதைக் கவனிக்க வேண்டும்..."

நான் பார்வையைத் திருப்பிக் கொண்டேன். சிற்றரசரின் உதவி என்று வந்ததுமே ஸ்ரீரங்கப்பட்டணம் மன்னனின் பெயர் வரும்; ஸ்ரீரங்கப்பட்டணம் என்றதுமே, அரசகுமாரி திருமலாம்பாவின் திருமணப் பேச்சு வரும்.

ஆனால், நல்லவேளையாக ஓர் இடையூறு ஏற்பட்டது.

சேவகன் உள்ளே வந்து, "முத்துவும் அவன் மனைவியும் வந்திருக்கிறார்கள், சக்ரவர்த்தியைப் பார்ப்பதற்காக" என்று தெரிவித்தான்.

"இப்போதுதான் வேளை பார்த்தார்களோ? நாளைக்கு வரச்சொல்லு!" என்று அப்பாஜி கோபமாகச்

சொல்ல, நான் குறுக்கிட்டு, "நான்தான் வரச்சொன்னேன்" என்று கூறி, சேவகனிடம், "அவர்களை வரச்சொல்லு" என்றேன்.

முத்துவும் சோலையும் பயத்துடன் வந்து கைகட்டிக் கொண்டு நின்றார்கள். சேவகனிடம், "தாம்பூலம் எடுத்து வா" என்றேன்.

வெற்றிலையும் பாக்கும் ஒரு தட்டில் வைத்து எடுத்துவரப்பட்டன.

"சோலை, இப்படி வாம்மா" என்று அழைத்து, தாம்பூலத்தை அவளிடம் தந்தேன். அவளை ஒரு முக்கியப் பதவியில் நியமிக்கப் போகிறேன் என்பதற்கான அடையாளம் அது.

நடக்கக்கூடாதது நடந்துவிட்டது போல அவையினர் திடுக்கிட்டு எழுந்து நின்று பார்த்தார்கள்.

"செஞ்சியில் நமது மண்டலேசுவரராக வையப்ப நாயக்கர் இருக்கிறார். ஆனால், அவருக்குக் கீழே வலுவான அமரநாயகர்கள் இல்லை என்று தோன்றுகிறது. வென்று மண்கொண்ட ஏகாம்பர சம்புவராயர் காலம் தொட்டுச் சீரும் சிறப்புமாக இருந்து வந்த ராஜகம்பீர ராஜ்யத்தில் வழிப்பறிக்காரர்கள் நிறைந்திருக்கிறார்கள் ஆகவே, காஞ்சிக்கும் திருவண்ணாமலைக்கும் இடைப்பட்ட பகுதியில், உன்னை அமரநாயகராக நியமிக்கிறேன் சோலை" என்று நான் சொன்னவுடன்

"என்னது!' என்று ஒருமித்த வியப்புக் குரல் ஓங்கி எழுந்தது.

அப்பாஜி கடுமையாக ஆட்சேபித்தார். "சக்ரவர்த்தி, இதென்ன புதிய வழக்கம்! அமரநாயகனாக ஒரு பெண் இருப்பதாவது!"

"அமரநாயகன் என்ற சொல் தப்புதான். அமரநாயகி என்று வேண்டுமானால் வைத்துக்கொள்வோம்" என்றேன் நான் புன்சிரிப்புடன்.

"இது விளையாடுகிற விஷயமல்ல, சக்ரவர்த்தி. பெண்களுக்குப் போய் இப்படிப்பட்ட பதவி கொடுப்பது இதற்கு முன்...

"பல முறை நடந்திருக்கிறது" என்று அவருடைய வாக்கியத்தை முடித்தேன். "ப்ரௌத தேவராய சக்ரவர்த்தி தன் தங்கை ஹரிமாதேவிக்கு மகாமண்டலேசுவரர் பதவியையே கொடுத்திருக்கிறார். பொம்மலா தேவியின் புத்திரியான கலாலா தேவி பாகுஞ்ச் பகுதிகளில் ராஜப் பிரதிநிதியாக இருந்திருக்கிறார். ஏன், நம் காலத்திலே கூட, பசவப்ப உடையாரின் தாயான பார்வதியம்மா எவ்வளவோ கிராமங்களை நிர்வகித்து வருகிறார். பல மண்டலேசுவரர்களின் சகோதரிகளும் மனைவிகளும் தாயார்களும் நிர்வாகப் பொறுப்பேற்றிருக்கிறார்கள். கல்லரசியம்மா, ரமாதேவி, சாவம்மா, பெரிய நரசம்மா, பாலம்மாதேவி... இப்படிப் பலர்...

நான் சொன்னதெல்லாம் சரித்திர உண்மையாகையால், ஆட்சேபிக்க எழுந்தவர்கள் ஒவ்வொருவராகத் திரும்ப உட்கார்ந்தார்கள்.

ஆனால், சோலையும் முத்துவும் பதற்றத்துடன் பல முறை என்னை விழுந்து வணங்கி, "சக்ரவர்த்தி, எங்களுக்கு இவ்வளவு பெரிய பதவிகள் வேண்டாம். நாங்கள் இதற்குத் தகுதியுடையவர்கள் அல்ல" என்று கண்ணீர் விட்டபடி கெஞ்சினார்கள். "நான் படிக்காதவள். எந்தத் நிர்வாகமும் எனக்குத் தெரியாது" என்று சோலை விம்மினாள்.

"கவலைப்படாதே. படித்தவர்களையும் நிர்வாகம் தெரிந்தவர்களையும் உனக்கு உதவியாக அனுப்புகிறேன்" என்று சொல்லிவிட்டு, முத்துவிடம், "நீ மட்டும் தலைநகரில்

தங்கி இரு. நடனக்கூடம் முடிவடைந்த பிறகு போகலாம்" என்றேன்.

சோலை எழுந்து கைகுவித்துவிட்டுச் சென்றாள். அவளுடைய வலது கையில் போடப்பட்டிருந்த சூட்டுக்கோல் தழும்பு நன்றாகத் தெரிந்தது.

"அப்பாஜி! தாங்களும் மற்ற பிரதானிகளும் அந்தத் தழும்பைப் பார்த்தீர்களா? ஒரு தப்பும் செய்யாத பெண்ணுக்கு இப்படி ஒரு தண்டனை கொடுத்திருக் கிறார்கள். இவளைச் சாதியை விட்டு விலக்கியிருக் கிறார்கள். இனிமேல் நிலைமை மாறும். பெரிய பதவிக்கு வந்துவிட்டதால், இவள் சாதியினரே இவளைத் தலைமேல் தூக்கி வைத்துக் கொண்டு கொண்டாடுவார்கள். எல்லா உயர் சாதிக்காரர்களும் இவளை மதிக்கத் தொடங்குவார் கள்" என்று நான் சொன்னேன்.

"இருக்கலாம்" என்று வேண்டா வெறுப்பாக ஒப்புக்கொண்ட அப்பாஜி, "படையெடுப்பின்போது சிற்றரசர்களின் பங்கு என்னென்ன என்பதை இப்போது விவாதிக்கலாம்" என்று ஆரம்பித்தார்.

அன்று தொடங்கி, நான்கு நாட்களுக்கு விவாதம் நடைபெற்றது. சிற்றரசர்களின் ஆதரவைப் பெற வேண்டியது எத்தனை அவசியம் என்று எல்லோரும் வற்புறுத்தினார்கள்.

முக்கியமாக, ஸ்ரீரங்கப்பட்டணத்தின் துணை இன்றியமையாதது என்பதையும், அந்தத் துணை கிடைக்க வேண்டுமானால் நான் ஸ்ரீரங்கப்பட்டணம் மன்னரின் குமாரி திருமலாம்பாவைத் திருமணம் செய்துகொள்வதே சரியான வழி என்பதையும் சுட்டிக் காட்டினார்கள். ஸ்ரீரங்கப்பட்டணம் என்னை எதிர்க்கத் தொடங்கினால் மற்றச் சிற்றரசர்களுக்கும் துணிச்சல் ஏற்பட்டுவிடும் என்று எச்சரித்தார்கள்.

நான் தவித்தேன். யாரிடம் என் காதல் வேதனையைச் சொல்லி அந்தரங்கமாக யோசனை கேட்பது? குழம்பினேன்.

ஐந்தாவது நாள், இருண்ட வானத்தில் சிறிது வெளிச்சம் தெரிந்தது.

காயத்ரி வந்து விட்டாள்.

# 26

'காயத்ரி ஊருக்குத் திரும்பிவிட்டாள்' என்று சேவகன் மூலமாக எனக்குத் தெரிய வந்ததும், அன்னையின் அரண்மனையில்தான் அவள் இருப்பாள் என்று ஊகித்தேன்.

மனசுக்குள் ஒரு திடீர்ப் பரபரப்பும் உற்சாகமும் ஏற்பட்டன. 'சின்னாதேவியைக் கண்டுபிடிக்க முடியாமல் வெறும் கையுடன்தான் அவள் திரும்பியிருக்கிறாள்' என்று தெரிந்தபோதிலும், அவள் இங்கே அரண்மனையில் இருக்கிறாள் என்பதே தெம்பைத் தந்தது.

சாளரத்தின் கதவில் ஒரு சிட்டுக்குருவி அமைதியாக உட்கார்ந்திருந்தது. இருந்தாலும், படபடவென்று சிறகை அடித்துக் கொண்டிருப்பது போல் தோன்றியது. அறைக்கு வெளியே தோத்திரப் பாடல்களைப் பாடிக் கொண்டிருந்தார் பௌராணிகர். சரீரம் நன்றாயில்லை. இருந்தாலும், இனிமையாகவே தோன்றியது. மனதுக்குள் சூரியோதயம் ஏற்படும்போது, உலகம் மொத்தமும் பிரகாசமாகும் போலும்

'காயத்ரி முதலில் என்னைப் பார்க்க வராமல், அன்னையைப் பார்க்கப் போயிருக்கிறாளே... என்று கொஞ்சம் வருத்தமாக இருந்தது. எனினும், அவள் அந்தப்புரப் பணிப்பெண். தான் வந்துவிட்டதை முதலில் அங்கேதான் தெரிவிக்க வேண்டும்.

வாடிக்கையான அலுவல்களைச் சுருக்கமாகவே முடித்துக்கொண்டு, அம்மாவின் இருப்பிடத்துக்குப் போனேன்.

அங்கே காயத்ரி இருக்கவில்லை.

'சே... என்றாகிவிட்டது எனக்கு. 'இங்கே இவள் இல்லை. அங்கே அவன் இல்லை...' என்பதே என் வாழ்க்கையாகப் போய்விட்டதே!

அன்னை ஏதோ ஒரு சுவடியைப் படித்துக் கொண்டிருந்தார். 'இவருடைய வயதை நான் அடையும்போது, இவரளவுக்கு எனக்குக் கண்பார்வை இருக்குமா...?' என்று நினைத்துக் கொண்டேன்.

"வா கிருஷ்ணா, உட்கார்... என்றார் அம்மா.

சரி, தான் படிப்பதைப் பற்றி ஆரம்பிக்கப் போகிறார் என்று தெரிந்துவிட்டது.

எனினும், மரியாதை நிமித்தமாக அருகிலிருந்த திண்டில் சாய்ந்து உட்கார்ந்தேன். என் பார்வை சுற்றும்முற்றும் அலைந்தது, காயத்ரி கண்ணில் படுகிறாளா என்று.

"பார் கிருஷ்ணா, நமக்குச் சம காலத்தில், கொஞ்ச நாள் முன்பு கபீர்தாஸ் என்ற ஞானி வாழ்ந்திருக்கிறார். எவ்வளவு அருமையாகப் பாடியிருக்கிறார் தெரியுமா...? ராம பக்தராகவும் இருந்திருக்கிறார்... முசல்மானாகவும் இருந்திருக்கிறார்..." என்றார் அன்னை.

கபீர்தாஸைப் பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ராமானந்தர் என்ற மகான் இங்கே காஞ்சிக்கு வந்து பெரியவர்களிடம் தீட்சை பெற்றுச் சென்றதாகச் சொல்வார்கள். அந்த ராமானந்தரின் சீடர்தான் இந்தக் கபீர்தாஸ் என்ற வரையில் எனக்குத் தெரியும்.

அவந்தி மொழியிலிருந்து கபீரின் சில வரிகளை மெல்லிய குரலில் பாடிக் காட்டினார் அம்மா. "மூன்று உலகங்களும் சொல்கிற ராமன் அல்ல, நான் சொல்லும் ராமன். எல்லாவற்றையும் கடந்த நிரஞ்சன் என் ராமன்' என்கிறார்...

அதற்குமேல் என்னால் பொறுக்க முடியவில்லை. "காயத்ரி வந்திருக்கிறாள் என்று கேள்விப்பட்டேன் அம்மா... எங்கே அவள்...?" என்றேன்.

"கொஞ்சம் பொறுமையாகத்தான் இரேன்... என்று அன்னை புன்னகை செய்தார். ஏதேதோ அஸ்திரங்களைப் பற்றிப் புராணங்களில் படித்திருக்கிறேன். அந்த அஸ்திரங்களுக்கெல்லாம் நான் விழமாட்டேன். அம்மா கனிவோடும் புன்சிரிப்போடும் என்னைப் பார்க்கும்போது மட்டும் அந்த அஸ்திரத்தில் நான் வீழ்ந்துவிடுகிறேன்.

"நான் ஆன்மீக விஷயம் பேச ஆரம்பித்தால் எல்லாரும் ஓட்டம் பிடிக்கிறார்கள். கேவலம், பணிப்பெண்கள் கூட வேறு வேலை இருப்பதாகச் சாக்குச் சொல்லி நழுவி விடுகிறார்கள். நீ ஒருத்தன்தான் நடுநடுவே மாட்டிக் கொள்கிறாய். உன்னையும் விட்டுவிட்டால் எப்படி....?" என்று அம்மா சிரித்தார்.

"சரி, சொல்லுங்கள்..." என்றேன்.

"சற்று முன் நீ என்ன கேட்டாயோ, அதற்குப் பதில் சொல்கிறேன்... கபீர்தாஸ் சில வருடங்களுக்கு முன்புதான் முக்தியடைந்தார். அவருடைய பிறப்பு வளர்ப்பைப் பற்றிப் பல கதைகள் உண்டு. ஆனால், நம்மவர்கள், முசல்மான்கள் இருவருமே அவரை மகானாக மதித்து வணங்கினார்கள். அவர் இறந்தபோது, இரண்டு பேருமே அந்த உடலுக்குப் பாத்தியதைக் கொண்டாடினார்கள். நம்மவர்கள் அவரைத் தகனம் செய்ய வேண்டும் என்றார்கள். முசல்மான்கள் அவரை நல்லடக்கம் செய்ய வேண்டும் என்றார்கள்.

இரண்டு கடசியும் வாக்குவாதம் செய்து கொண்டிருந்த போது ஓர் அசரீரி கேடடது. அதன்படி, கபீரின் தேகத்தை மூடியிருந்த துணியை அகற்றிப் பார்த்தால்...

நான் பிரமிப்பும் திகைப்புமாகக் கேட்கிறேன் என்று அம்மா நினைத்தார். நானோ, 'அவருடைய கதைக்கும் காயத்ரிக்கும் என்ன சம்பந்தம்...?' என்று குழப்பம் கொண்டேன்.

"துணியை அகற்றிப் பார்த்தால், அங்கே கபீரின் உடல் இல்லை. பதிலாக, பெரிய புஷ்பக் குவியல்தான் இருந்தது. அதை ஆளுக்குப் பாதியாக எடுத்துக்கொண்டு போனார்கள். நம்மவர்கள் அதைக் காசியில் தகனம் பண்ணினார்கள். அந்த இடத்தில் ஒரு சமாதி கடடினார்கள். இப்போது அந்த இடத்துக்குக் 'கபீர் சௌரா' என்று பெயர். முசல்மான்கள் மகாகர் என்னுமிடத்தில் புதைத்துக் கல்லறை மண்டபம் எழுப்பியிருக்கிறார்கள்..." என்ற அன்னை, "அவ்வளவுதான் கதை... இனிமேல் நீ போகலாம்..." என்றார்.

"காயத்ரி இருக்கும் இடத்தைப் பற்றித் தங்கள் கதையில் எங்கே வந்தது...?" என்று திகைத்தேன்.

"புஷ்பக் குவியல் என்று வந்ததல்லவா...?"

"வந்தது...

"புஷ்பக் குவியல் எங்கே இருக்கும்...?"

சற்று யோசித்து, "பூந்தோடடத்தில்... நந்தவனத்தில்... என்றேன்.

"அங்கே போய்ப் பார்... பூஜைக்காக மலர்கள் கொண்டு வரச் சொன்னேன். அங்கேதான் போயிருக் கிறாள்..." என்று அம்மா சொன்னதுமே புறப்படடு விடடேன்.

அரண்மனைக் கட்டடத்தைப் போல் இரண்டு மடங்கு விஸ்தாரமானது அரண்மனை நந்தவனம். 'காயத்ரியை எங்கே கண்டுபிடிக்க முடியும்...?' என்று நினைத்த சமயம் -

சிரிப்பும் பேச்சுக் குரலும் கேட்டன.

அடர்த்தியாகச் செடிகள் வளர்ந்திருந்த இடத்தில் காயத்ரியும் யாரோ ஓர் இளைஞனும் இருந்தார்கள். யாரோ ஓர் இளைஞன் அல்ல... இத்தாலிய வைத்தியனான நிக்கோலஸ்தான் அவன். வேட்டி, துண்டு அணிந் திருந்தான். இருவரும் பேசிச் சிரித்தபடியே செடிகளை ஆராய்ந்து கொண்டிருந்தார்கள். அவன் மண்ணைக் கிளறியபடி இருந்தான். காயத்ரி ஒரு பூவைப் பறித்து முகர்ந்து பார்க்க, அந்தக் கிளுகிளுப்பு நாசியை நெருடவே, தும்மினாள். இருவரும் சிரித்தார்கள்.

'அவர்கள் ஸ்ரீவில்லிப்புத்தூர் வரை சேர்ந்தே சென்றுவிட்டு, சேர்ந்தே திரும்பி யிருக்கிறார்கள்' என்பது எனக்கு ஞாபகம் வந்தது. பல நாடகள் பயணம். நெருக்கமாகப் பழக வேண்டிய நேரங்கள் நிறையவே வந்திருக்கும். அதை நினைக்கையில், ஒரு விநாடி பொறாமை உதித்தது என் உள்ளத்தில்.

நிழலாடுவதைக் கண்டு திரும்பிய இருவரும், ஒரே சமயத்தில் தங்கள் விளையாட்டு முகங்களை மாற்றிக் கொண்டு, "வணக்கம் சக்ரவர்த்தி... என்றார்கள்.

"தமிழ் கற்றுக் கொண்டுவிட்டீர்கள் போலிருக் கிறதே...?" என்றேன், நிக்கோலஸைப் பார்த்து.

"நன்றாகவே.... என்று சிரித்தவன், "சக்ரவர்த்தியிடம் ஒரு விண்ணப்பம்... நான் இளைஞன். சாதாரணக் குடிமகன். 'நீங்கள்', 'வாருங்கள்' என்றெல்லாம் என்னைக் கூப்பிடாமல், 'வா... போ என்றே அழைத்தால் சந்தோஷப்படுவேன்... என்றான்.

அவனுடைய பேச்சில் கொஞ்சம் கொஞ்சம் தடங்கல் இருந்தது. எனினும், இவ்வளவு சுத்தமாகப் பேசுவது ஆச்சரியம் ஏற்படுத்தியது. "ரொம்பக் காலமாக இங்கே இருந்தவன் மாதிரி பேசுகிறாயே...?" என்று பாராட்டினேன்.

"உண்மையிலேயே நான் இந்தத் தேசத்தில் ரொம்பக் காலமாக இருப்பவன்தான்... என்றான் நிக்கோலஸ்.

"என்னது...?!" என்று திடுக்கிட்டேன்.

"தங்களிடம் பொய் சொன்னதற்காக என்னை மன்னிக்க வேண்டும் சக்ரவர்த்தி... 'வெளிநாட்டிலிருந்து புதிதாக வந்திருப்பவன் என்று சொல்லிக் கொண்டால், தனியான மதிப்பும் வசதிகளும் விஜயநகர சாம்ராஜ்யத்தில் செய்து கொடுப்பார்கள்' என்று லூயி பாதிரியார் சொன்னார். அதனால் தங்களுக்கும் அப்படியே அறிமுகம் செய்து வைத்தார். உண்மையில், நான் இந்தத் தேசத்துக்கு வந்து பத்து வருடமாகிறது... என்று அந்த இத்தாலியன் சொல்லச் சொல்ல, என் வியப்பும் திகைப்பும் அதிகரித்தன.

"பத்து வருடமாக என்ன செய்து கொண்டிருந்தாய்.... இதற்கு முன்னே எங்கே இருந்தாய்....?" என்றேன்.

அதன் பின்னர் அவன் சொன்ன விவரங்கள் என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தின.

நிக்கோலஸ், இத்தாலியைச் சேர்ந்த ஏழைத் தொழிலாளியின் மகன், எதனாலோ, அவனுக்கு வைத்திய சாஸ்திரத்தில் ஆர்வம் ஏற்பட்டது. அவனுக்குக் குருவாக ஒரு வயோதிகர் கிடைத்தார் மனித உடம்புக்குள் என்னென்ன உறுப்பு, எங்கெங்கே, எப்படியெப்படி இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்வதற்காகப் பிணத்தை அறுத்து ஆராய்ந்தார்கள் இருவரும். அப்படிச் செய்வது மத விரோதமானது. சட்ட விரோதமானது. ஆகவே, கல்லறையில் புதைத்த உடல்களைத் திருடி எடுத்து ஆராய்ச்சி செய்தார்கள். ஒரு நாள் அவர்களுடைய திருட்டு

வெளியே தெரிந்துவிட்டது. அந்த வயோதிக வைத்தியரை உயிரோடு கொளுத்திவிட்டார்கள். நிக்கோலஸ் தப்பி யோடி, போர்ச்சுகல் நாட்டை அடைந்து, அங்கேயிருந்து புறப்பட்ட ஒரு கப்பலில் மாலுமியாக வேலைக்கு அமர்ந்து கோவாவுக்கு வந்து சேர்ந்திருக்கிறான்.

"உன் வாழ்க்கையை ஒரு தனிக் கதையாக எழுதலாம் போலிருக்கிறது... என்பதற்குமேல் என்னால் பேச முடியவில்லை. பிரமிப்புடன் அவனை ஏற இறங்கப் பார்த்தேன். அதிகம் போனால் இருபத்தைந்து, இருபத்தாறு வயதுதான் இருக்கும். அப்படியானால் பதினைந்து வயதிலேயே இவன் வாழ்க்கையில் எவ்வளவு வீர சாகசங்கள் தொடங்கிவிட்டன!

'ரோமாபுரியில் இருக்கும்போது ரோமானியனாக நடந்து கொள்' என்று எங்கள் நாட்டில் ஒரு பழமொழி உண்டு. அதுபோல, இந்த நாட்டுக்கு வந்ததும் உங்கள் மக்களைப் போலவே நானும் நடை, உடை, பாவனைகளை மாற்றிக் கொண்டேன். லூயி பாதிரியார் என்னைத் தங்களிடம் அழைத்து வந்தபோது மட்டும் மேனாட்டு உடையணிந்து வந்தேன்... என்றான் நிக்கோலஸ்.

"இந்த நாட்டில் உன் ஆராய்ச்சி தொடர்கிறதா, நின்றுவிட்டதா...?" என்று கேட்டேன்.

"மனித உடல்களை அறுத்து ஆராய்வதற்கு இங்கேயும் கிறிஸ்தவர்கள் எதிர்க்கிறார்கள். முசல்மான்களும் சம்மதிப்பதில்லை..." என்று அவன் சொல்ல, நான் குறுக்கிட்டு, "எங்கள் மதத்தினரின் உடல்கள் உனக்குக் கிடைக்கவே கிடைக்காது... ஏனெனில், நாங்கள் தகனம் செய்துவிடுகிறோம்... என்றேன்.

"அதிர்ஷ்டவசமாக எல்லாரும் அப்படிச் செய்வதில்லை சக்ரவர்த்தி... என்றான் நிக்கோலஸ். பிறகு விளக்கினான்.

பல வருடங்கள் அவன் வடநாட்டில் அலைந்து திரிந்தானாம். கங்கைக் கரையில் வசிக்கிற பலர், இறந்து போனவர்களின் உடல்களைக் கங்கையாற்றில் தள்ளிவிடுவதைப் பார்த்தானாம். அப்படிச் செய்தால் இறந்தவர்களுக்கு மோட்சம் கிடைக்கும்' என்று ஒரு நம்பிக்கை. அழுகிவிடாமலோ, கெட்டுப் போகாமலோ மிதந்து செல்லும் நல்ல உடல்களை இவன் கரைக்கு இழுத்து வந்து ஆராய்ச்சி செய்தானாம். யாரும் ஆட்சேபிக்கவில்லை. சஸ்திர சிகிச்சை செய்யும் பல மருத்துவர்கள் இவனுக்கு உதவியும் செய்தார்களாம். வைத்திய சாஸ்திரத்தைக் கரை கண்டவர்களின் இல்லங்களில் தங்கி, அவர்களுக்குப் பணிவிடை செய்து ஆயுர்வேதமும் சித்த வைத்தியமும் படித்தானாம்.

இதையெல்லாம் விவரித்தபோது, அவனுடைய குரலில் ஆணவம் தென்படவில்லை. ஆனால், அவனைக் கண்ணாலேயே விழுங்கிவிடுகிற மாதிரி பார்த்துக் கொண்டிருந்த காயத்ரியின் முகத்தில் பெருமை பொங்கிக் கொண்டிருந்தது.

நந்தவனத்தில் நாங்கள் பேசிக் கொண்டிருப்பதை அமைச்சர் லக்கண்ணாவும் அவருடைய உதவியாளர்களும் தூரத்தில் இருந்தவாறு கவனித்துக் கொண்டிருந்தார்கள். 'அப்படி என்ன தலைபோகிற விஷயம் விவாதிக்கிறோம்' என்பது தெரியாமல் குழம்பி, குறுக்கிட முடியாமல் தயக்கம் கொண்டவர்களாக அவர்கள் நின்றிருப்பது தெரிந்தது.

நான் சுதாரித்துக் கொண்டேன். காயத்ரியிடம் பேச விரும்பி வந்ததென்ன, எவனோ ஓர் பறங்கி இளைஞனின் வாழ்க்கை வரலாற்றைக் கேட்டுக்கொண்டு நிற்பதென்ன!

"நல்லது... உன் ஆராய்ச்சி வெற்றிபெற என் வாழ்த்துகள் இங்கே மண்ணைக் கிளறிக்கொண்டு நிற்காதே... எந்தப் பிணமும் கிடைக்காது... என்றேன்.

காயத்ரி முதன்முறையாகப் பேசினாள்.

"சக்ரவர்த்தி, ஒரு முக்கியமான நபர் பிணமாகி விடாமல் தடுப்பதற்காகவே மூலிகை தேடிக்கொண்டிருக் கிறார் இவர்..." என்றாள்.

"என்ன சொல்கிறாய்...?"

நிக்கோலஸ் சொன்னான்: "அந்தப் பாளையக்காரன் சிங்கப்பிரான் சித்தப் பிரமையுடன் படுத்திருக்கிறான் என்று தெரிந்தது. சங்கபுஷ்பிச் செடியிலிருந்தும் பிரம்மிச் செடியிலிருந்தும் தைலம் எடுத்துத் தேய்த்தால் நினைவாற்றல் திரும்பும் என்று படித்திருக்கிறேன் அரண்மனைத் தோட்டத்தில் அவை கிடைக்குமென்று சொன்னார்கள். அதனால்தான் தேடிக் கொண்டிருக் கிறேன்...

காயத்ரி அவனிடம், "நீங்கள் தேடிக்கொண்டே போங்கள்... செடிகள் கிடைத்ததும் தைலம் எடுக்க ஏற்பாடு செய்யுங்கள். நான் சக்ரவர்த்தியிடம் கொஞ்சம் பேசிவிட்டு வருகிறேன்..." என்றாள்.

நிக்கோலஸ் எனக்கு வணக்கம் தெரிவித்துவிட்டுப் புறப்பட்டவன், கொஞ்ச தூரம் சென்றதும் திரும்பி வந்தான். "சக்ரவர்த்தி, அந்தப் பாளையக்காரனுக்கு உறவினராவது தெரிந்தவராவது இருந்தால் என்னுடன் அனுப்புங்கள்... என்றான்.

"எதற்கு...?"

"ஒரு வைத்தியர் நோயாளியின் வீட்டுக்குள் நுழையும்போது, அவனுடைய உறவினரையோ, நண்பர்களையோ தன்னுடன் அழைத்துப் போக வேண்டும். சுத்தமான உடையணிந்து, தலை தாழ்த்தி, இனிமையான பேச்சுடன், தன்னம்பிக்கையுடன் வைத்தியர் இருக்க வேண்டும்..."

"யார் சொன்னார்கள் அப்படியெல்லாம்...?"

"சரக சம்ஹிதையில் படித்திருக்கிறேன். சுச்ருத சம்ஹிதையும் அதேபோல் சொல்கிறது...'' என்றான் நிக்கோலஸ்

எனக்குச் சிரிப்பு வந்தது. அவனை முதுகில் தட்டிக் கொடுத்து, "உன்னுடைய வைத்திய சாஸ்திர அறிவை மெச்சுகிறேன். ஆனால், பேசிக்கொண்டிருக்க இது நேரமில்லை. முதலில் அந்தச் சிங்கப் பிரானுக்குச் சிகிச்சை தொடங்கு. அவனுடைய உறவுக்காரரோ சிநேகிதரோ யாரும் இங்கே இருப்பதாகத் தெரியவில்லை. அதோ, அமைச்சர் லக்கண்ணா நிற்கிறார். அவரிடம் நான் சொன்னதாகச் சொல்லு... தகுந்த ஆளை உனக்குத் துணையாக அனுப்புவார்..." என்றேன்.

நிக்கோலஸ் தலை மறைகிறவரை அவனையே பார்த்துக்கொண்டு நின்றாள் காயத்ரி.

''என்ன, இனிமேல் என்னுடன் பேசலாமில்லையா...?'' என்று நான் கேட்டதும் திடுக்கிட்டுத் திரும்பி வெட்கத்துடன் சிரித்தாள்.

"உன் கதையைச் சொல்லு... என்றேன்.

"டாக்டரின் கதை அளவுக்கு என்னுடைய கதை நீளமில்லை..." என்று மெதுவே சொன்னாள் காயத்ரி. 'டாக்டர்' என்ற சொல்லை நான் அப்போதுதான் முதன்முறையாகக் கேட்டேன். அது 'வைத்தியர்' என்பதைக் குறிக்கும் சொல் என்றும் புரிந்து கொண்டேன். காயத்ரியிடம் அவன் தமிழ் கற்றுக் கொண்டது போல, இவளும் அவனிடம் சில புது வார்த்தைகளைக் கற்றுக் கொண்டாள் போலிருக்கிறது.

"ஓரிய மொழியில் நீ ரகசியமாக எழுதியனுப்பிய செய்தி கிடைத்தது. அதற்குமேல் என்ன சொல்லப் போகிறாய்?" என்றேன்.

"அதிகம் இல்லைதான்... சின்னா தேவியும் அவள் அண்ணனும் ஸ்ரீவில்லிபுத்தூருக்கு வரவேயில்லை என்று தெரிந்தது. நானும் டாக்டரும் பல இடங்களில் விசாரித்து அதை உறுதிப்படுத்திக் கொண்டோம். வந்த வழியே திரும்பி, ஒவ்வோர் ஊரிலும் கேட்டோம். திருவண்ணா மலையைத் தாண்டிய பிறகுதான், நீங்கள் வந்து வழிப்பறிக்காரர்களை மடக்கி, அந்தப் பாளையக்காரனை அடித்து இங்கே இழுத்து வந்தீர்கள் என்று தெரிந்தது. சொன்னால் தப்பாக எடுத்துக் கொள்ளக்கூடாது சக்ரவர்த்தி... ஒரு விஷயத்தில் தாங்கள் தவறு செய்துவிட்டீர்கள்..." என்றாள் காயத்ரி.

அவளுடைய துணிச்சல் ஆச்சரியமாயிருந்தது. "என்ன தவறு...?" என்று கேட்டேன்.

"அந்தப் பாளையக்காரனை அழைத்து வந்தவர், அவனுடைய இளம் மனைவியை விட்டுவிட்டீர்களே...? அவனுக்குத் தெரிந்த ரகசியம் அவளுக்கும் தெரிந்திருக்கலா மில்லையா...?" என்றாள் காயத்ரி.

"அட, ஆமாம்!" என்று ஒப்புக் கொண்டேன். "அவளை நீ பார்த்தாயா என்ன...?"

"பார்த்தேன். ஆனால், லேசில் அவளைக் கண்டுபிடிக்க முடியவில்லை. பயந்துபோய் எங்கேயோ ஒரு குடிசையில் ஒளிந்திருந்தாள். தேடிக் கண்டுபிடித்தேன்..."

"கண்டுபிடித்து...?"

"கண்டுபிடித்து, சின்னாதேவி இருக்கும் இடத்தையும் தெரிந்து கொண்டேன்... என்ற காயத்ரி, நான் குறுக்கே பேசுவதற்கு இடம் தராமல், "சின்னாதேவி இப்போது பீஜபூர் என்று அழைக்கப்படும் விஜயபுரம் ராஜ்யத்தில் இருக்கிறார் ஆகவே, தாங்கள் விஜயபுரத்தின்மீது படையெடுத்துச் செல்ல வேண்டியது மேலும் அவசியமாகி விடடது..." என்றாள்.

“காயத்ரி, எனக்குள்ள தவிப்பு உனக்குத் தெரியாது... என்றேன்.

‘‘தெரியும் சக்ரவர்த்தி, விஜயபுரம் படையெடுப்புக்குத் தங்களுக்குச் சிற்றரசர்களின் சேனை உதவிகள் தேவை. அதன் பொருட்டுத் தாங்கள் ஸ்ரீரங்கப்பட்டணம் ராஜகுமாரியைக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டியிருக்கும்... என்றவள், “செய்து கொள்ளுங்கள் சக்ரவர்த்தி, தயங்காமல் செய்து கொள்ளுங்கள்... என்றாள்.

# 27

திருமலாம்பாவைத் திருமணம் செய்து கொள்ளும்படி காயத்ரி அழுத்தமாகக் கூறியதைக் கேட்டு நான் கற்சிலையாக நின்றேன். அரண்மனையின் வாடிக்கையான சந்தடிகள், ஆரவாரங்கள் அத்தனையும் ஒரு விநாடி ஸ்தம்பித்து நின்றுவிட்டாற்போலவும் ஒரு மாபெரும் நிசப்தம் நிலவுவது போலவும் எனக்குப் பிரமை ஏற்பட்டது.

"காயத்ரி... நீ கூடவா அப்படிச் சொல்கிறாய்? சின்னாதேவியின்மீது எனக்குள்ள காதலை முற்ற முழுக்க அறிந்திருக்கிற நீ கூடவா அதைத் துறக்கும்படி சொல்கிறாய்?" என்றேன்.

"அந்தக் காதலுக்கு எந்தக் குந்தகமும் வராது. நான் உத்தரவாதம்" என்றாள் அவள்.

"எதை வைத்துச் சொல்கிறாய்?'

"எதை வைத்தும் சொல்லவில்லை. என் மனதுக்குப் படுகிறது அப்படி. தாங்கள் படையெடுப்புக்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டு, திருமலாம்பாதேவியைக் கைப்பிடிக்கவும் சித்தமாக இருங்கள். ராஜ்யத்தின் நலன்தான் முக்கியம் என்பது நான் சொல்லியா சக்ரவர்த்திக்குத் தெரிய வேண்டும்? பாரததேசம் கண்டிராத மாபெரும் சக்ரவர்த்தியாகத் தாங்கள் திகழுகிறீர்கள். தென்னாட்டை அந்நியப் படையெடுப்பிலிருந்து ரட்சித்து வருகிறீர்கள். அந்தப் பெருமை நீடிக்க வேண்டாமா? நான் இன்றைக்கு ஸ்ரீரங்கப்பட்டணம்

செல்கிறேன். திருமலாம்பாதேவியை நேரில் பார்த்துப் பேசிவிட்டு வருகிறேன்" என்றாள் காயத்ரி.

"நீ எதற்குப் போக வேண்டும்? அப்பாஜியும் என் அன்னையும் ஏற்கெனவே எல்லா ஆயத்தங்களும் செய்து முடித்துக் காத்திருக்கிறார்கள். அவர்கள் விரித்திருக்கிற வலையில் நான் விழுந்து, அவர்கள் நீட்டுகிற விலங்கை மாட்டிக்கொள்ள வேண்டியதுதான் பாக்கி" என்றேன் வெறுப்புடன். காயத்ரிகூட இப்படிக் கட்சி மாறுவாள் என்று நான் எதிர்பார்க்கவேயில்லை.

"அது அன்பு வலை சக்ரவர்த்தி; பாச விலங்கு!" என்று சிரித்தாள் காயத்ரி. அந்தச் சிரிப்பு என் வெறுப்பை அதிகமாக்கியது.

"அதிருக்கட்டும். சின்னாதேவி விஜயபுரத்தில் இருக்கிறாள் என்று எப்படி சொல்கிறாய்?" என்று கேட்டேன்.

"தெரிந்ததால் சொல்கிறேன்" என்று புன்னகை செய்தாள் காயத்ரி. "சின்னாதேவியும் அவருடைய அண்ணனும் அவர்களுடைய பாகவதமேளா நாடகக் குழுவும் திருவண்ணாமலையைச் சமீபித்துக் கொண்டிருந்த சமயம், பீஜப்பூர் என்று சொல்லப்படுகிற விஜய புரத்திலிருந்து சுல்தானின் உளவாளிகள் கூட்டமொன்று அங்கே வந்திருக்கிறது. கிராமத்து மக்களோடு மக்களாக உட்கார்ந்து; அவர்களுடைய நாடகத்தைப் பார்த்திருக்கிறது. சின்னாதேவியைக் கடத்திச் செல்லத் தீர்மானித்திருக்கிறது. அந்த உளவாளிகள் தங்கள் ஊருக்கு நாடக கோஷ்டி வரவேண்டுமென்று எதிராஜனிடம் மன்றாடிக் கெஞ்சி யிருக்கிறார்கள். ஆனால், தாங்கள் எந்த ஊர் என்று சொல்லவில்லை. எதிராஜன், தாங்கள் ஸ்ரீவில்லி புத்தூருக்குப் போகவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்.

இருந்தாலும், 'உடனே திரும்பிவிடலாம்' என்று அவர்கள் சொன்னதால் சம்மதித்திருக்கிறார். பீஜப்பூர் சுல்தானின் ஆட்களுக்குச் சிங்கப்பிரானும் உடந்தை. இதையெல்லாம் சிங்கப்பிரானின் மனைவி மூலம் தெரிந்து கொண்டேன்" என்று முடித்தாள் காயத்ரி.

நான் பெருமூச்சு விட்டு, "சரி. ஸ்ரீரங்கப்பட்டணம் போ," என்றேன் வேண்டா வெறுப்பாக.

"மணமாலையுடன் திருமலாம்பாதேவி வருவார் சக்ரவர்த்தி'' என்றாள் காயத்ரி புன்னகையுடன், "ராணியைப் பார்த்து அனுமதி பெற்றுக் கொண்டு புறப்படுகிறேன்.'"

அவள் புன்னகை எப்போதும் ரம்மியமாக இருக்கும். இப்போது இருக்கவில்லை.

அவள் புறப்பட்டுப் போய் வெகு நேரமான பிறகும் நான் குறுக்கும் நெடுக்குமாக உப்பரிகையில் உலாவிக் கொண்டிருந்தேன்.

அடுத்த வீதியில் ஒரு பிச்சைக்காரன் விநோதமான முறையில் பிச்சையெடுத்துக் கொண்டிருந்தான். ஒரு கல்லை எடுத்துத் தன் மண்டையில் மடேர் மடேரென்று அடித்து ரத்தம் வழியச் செய்து கொள்வது தெரிந்தது. கத்தியை எடுத்துத் தன் கையிலும் கழுத்திலும் தோளிலும் குத்திக் கொண்டான். ரத்தம் பீறிட்டது. இந்தக் கோரக் காட்சியைக் காண விரும்பாத மக்கள், அவன் கையில் காசைப் போட்டு, 'போய்த் தொலை!' என்று விரட்டினார்கள்.

இந்தப் பிச்சைக்காரனுக்கும் எனக்கும் என்ன வித்தியாசம்?

இவனைப் போலவேதான் நானும் இருக்கிறேன். என்னை நானே குத்திக் கொள்கிறேன். என்னை நானே காயப்படுத்திக் கொள்கிறேன். இவனைப் போலவே நானும் 'என் ராஜ்யத்தைக் காப்பாற்றுங்கள்! படைப் பிச்சை போடுங்கள்!' என்று கேவலம் ஒரு சிற்றரசனிடம் யாசகம் கேட்கிறேன்! என் காதலி சின்னாதேவிக்குத் துரோகம் செய்கிறேன்!

திடீரென்று என் நினைவுகள் விழித்துக்கொண்டன.

சுல்தானின் நாட்டில் சின்னாதேவி சிக்கியிருக்கிறாள்! இத்தனை காலமும் சுதந்திரமாக நடமாடிக்கொண்டிருந்தாள். இன்று பீஜப்பூரில் கைதி போல.... அல்லது அதைக் காட்டிலும் மோசமாக.

நினைக்கும்போதே நெஞ்சம் பதறியது.

படையெடுப்பைத் துரிதப்படுத்த வேண்டியதுதான் என்று தீர்மானித்தேன்.

விஜயபுரம் ராஜ்யத்தில் எங்கோ என் சின்னாதேவி இருக்கிறாள். அவளைக் கண்டு பிடித்து விட்டால், அடைந்துவிட்டால், என் மார்போடு அணைத்துக்கொண்டு விட்டால், எல்லாத் துன்பங்களும் தீயினில் தூசாகும்!

அன்று ஆலோசனை மண்டபத்துக்குச் சென்ற போது, எல்லாருக்கும் நான் திருமணத்துக்குச் சம்மதித்து விட்ட விஷயம் தெரிந்து விட்டது. அவர்களுடைய முகத்தில் தென்பட்ட மலர்ச்சியிலிருந்தே அது தெரிந்தது.

நான் பேச ஆரம்பிக்கும் முன்பே பிரதானி கொண்டமராசு எழுந்து, "சக்ரவர்த்திக்கு எங்கள் இதயபூர்வமான வாழ்த்துக்கள்" என்றார்.

அவர்களுக்குச் சுருக்கமாக நன்றி கூறிவிட்டு, "அப்பாஜி! எனக்கு ஒரு சந்தேகம்" என்றேன்.

"சொல்லுங்கள் சக்ரவர்த்தி" என்றார்.

"உம்மத்தூர் படையெடுப்பின்போது ஸ்ரீரங்கப் பட்டணம் கோட்டையையும் சிவசமுத்திரம் கோட்டையையும் நாம் வீழ்த்திேனோமில்லையா? மொத்தப் பகுதிகளையும் மூன்றாகப் பிரித்து, நமது பிரதிநிதிகளாகக் கெம்பகௌடா, வீரப்பகௌடா, சிக்கராஜா ஆகிய மூவரைத்தானே நியமித்தோம்? இப்போது எங்கிருந்து ஸ்ரீரங்கப்பட்டணம் மன்னர் என்ற பட்டத்துடன் இந்தக் குமார வீரய்யா முளைத்தார்?"

"அந்த மூவரும் குமார வீரய்யாவைத் தங்கள் மன்னராக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். தங்கள் அன்னையாரின் வழியில் அவர் உறவினர். ஆகவே, ராஜவம்சத்தைச் சேர்ந்தவர்தான்" என்றார் அப்பாஜி. 'ராஜவம்சம்' என்று அழுத்திச் சொல்வதில் அவருக்கு ஒரு தனியான திருப்தி. திருமலாம்பாவை நான் மணக்கப் போகிறேன் என்பதில் அவருக்குச் சந்தோஷம்தானென்றாலும், அதற்குப் பின்னர் ராஜவம்சத்தைச் சேராத ஒரு நாட்டியக்காரியையும் கைப்பிடிக்கவிருக்கிறேன் என்பதில் அவருக்கு இன்னமும் உடன்பாடில்லாமலே இருந்தது.

படையெடுப்பைப் பற்றிய ஆலோசனை என்பதால், சேனாதிபதிகளும் சர்வ சைன்யாதிகாரிகளும், தளவாய்களும் தண்டநாயகர்களும், வந்திருந்தார்கள். அவர்களில் ஒருவர், "சக்ரவர்த்திக்கு ஒரு தகவல். பீஜப்பூர் சுல்தானும் அவரது படையினரும் கிருஷ்ணா நதியைக் கடந்து நமது பிரதேசத்துக்குள் நுழைந்திருக்கிறார்கள். அவர்களுடைய படைகளில் உள்ள சில வெறியர்கள் கரையோரமுள்ள ஊர்களில் அட்டகாசம் செய்வதாகச் செய்தி வந்திருக்கிறது" என்றார்.

துங்கபத்ரா நதிக்கும் கிருஷ்ணா நதிக்கும் இடையேயுள்ள நிலப்பகுதியின் மீது எப்போதுமே என் எதிரிகளுக்கு ஒரு கண். கிருஷ்ணாவில் வெள்ளம் இருக்கும் சமயம் மறுகரையிலேயே இருப்பதும், நீர்மட்டம் குறைவாக உள்ள காலங்களில் இக்கரைக்கு வந்து அட்டூழியங்கள் புரிந்துவிட்டுத் திரும்பிப் போவதும் அவர்களுடைய வாடிக்கையாக இருந்தது. அவர்களை விரட்டியடிக்கும்படி வியாசகுருவும் பல முறை என்னிடம் சொன்னதுண்டு. எனினும், அந்த இடங்களில் பலமான படைகளை நிரந்தரமாக நிறுத்தாமல் விட்டுவிட்டது என் தவறுதான்.

"போருக்கு நானே தலைமை தாங்கி நடத்திச் செல்கிறேன்" என்றேன் உறுதியான குரலில். அடுத்து, "பிரதம தளபதியாக வரப்போகிறவர் யார்?" என்று கேட்டதும், "நான் வருகிறேன் சக்ரவர்த்தி" என்றார் பெம்மசானி ராமலிங்க நாயகர் என்ற தளபதி. இதற்குமுன் பல படையெடுப்புகளில் எனக்கு வலது கையாக விளங்கியவர் அவர். ஆகவே, எல்லாரும் உற்சாகத்துடன் அவருக்கு வாழ்த்துக் கூறினார்கள்.

"நான் ஒரு திட்டம் வைத்திருக்கிறேன் சக்ரவர்த்தி. அதைப் போர்க்களத்தில் இருக்கும்போது தங்களுக்குத் தெரிவிக்கிறேன்" என்றார் ராமலிங்கம்.

எல்லாரும் கலைந்து சென்ற பிறகும், அப்பாஜி மட்டும் உட்கார்ந்திருந்தார். போர் என்ற சொல்லைக் கேட்டதுமே இருபது வயதுக் காளையைப் போல் தோள் தட்டிக்கொண்டு ஆர்ப்பரித்து எழுந்திருப்பவர் இன்று ஏனோ அதிகம் பேசாமலே இருந்தார்.

"அப்பாஜிக்கு ஏதோ வருத்தம் போலிருக்கிறது?" என்று நான் கேட்டதற்கு அவர் மறுக்கவில்லை. "ஆமாம்" என்றார்.

"ஏன்?" என்றேன்.

"வேறொன்றுமில்லை. ஸ்ரீரங்கப்பட்டணம் மன்னரின் மகளை மணக்கும்படி நான் எவ்வளவோ முறை சொன்னேன். பெரிய ராணியும் சொன்னார்கள். அப்போதெல்லாம் கேட்காத தாங்கள், எங்கிருந்தோ வந்த ஒரு பெண் சொன்னதும் சம்மதித்து, அவளையே தூதாகவும் அனுப்பியிருக்கிறீர்கள். எனக்கு அவமானமாக இருக்கிறது" என்று ஒளிவு மறைவின்றிப் பேசினார் அப்பாஜி.

சட்டென்று பதில் சொல்ல எனக்குத் தெரியவில்லை. "அப்படியில்லை அப்பாஜி. தாங்களும் அம்மாவும் சொல்லச் சொல்ல என் மனம் கரைந்து கொண்டே வந்தது. கடைசியாகக் காயத்ரியும் வற்புறுத்தவே முற்றிலுமாகக் கரைந்து விட்டது. அவ்வளவுதான். எப்படியானால் என்ன, தங்கள் விருப்பத்தைத்தானே காயத்ரியும் நிறைவேற்று கிறாள்?" என்றேன். 'எங்கிருந்தோ வந்த பெண்' என்று அவர் குறிப்பிட்டது எனக்குப் பிடிக்கவில்லை. அதனாலேயே காயத்ரி என்ற பெயரை அடிக்கடி உபயோகித்தேன்.

அப்பாஜி மேற்கொண்டு விவாதம் செய்து கொண்டிருக்கவில்லை. "பெரிய ராணி தங்களைப் பார்க்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்தார். சக்ரவர்த்தி அவருடைய ஆசியை முதலில் பெறவேண்டும்." என்று கூறி விட்டு விடைபெற்றார்.

அன்னையாரின் அரண்மனையில் அவருடன் தெனாலி ராமகிருஷ்ணகவி இருந்தார். ஆஸ்தானப் புலவர் என்றாலும் அவரை நான் பார்ப்பது அரிது. எங்காவது ஊர் ஊராகப் போய்க் கொண்டேயிருப்பார்.

"உன்னிடம் தன் நூலைக் கொடுப்பதற்காக ராமகிருஷ்ண கவி வந்திருக்கிறார்." என்று கூறிய அன்னை என் கையில் நூலைத் தந்தார்.

"சக்ரவர்த்தி திக் விஜயம் புறப்படுவதற்கு முன்னால் இதைச் சமர்ப்பிக்க வேண்டுமென்று வந்தேன்" என்றார் கவிஞர்.

"பாண்டுரங்க மகாத்மியம்" என்பது அந்த நூலின் பெயர். கொஞ்சம் புரட்டும்போதே அது ஒரு சிறந்த காவியம் என்று தெரிந்துவிட்டது.

"இப்போது படிப்பதற்கு நேரமில்லை. மன்னிக்க வேண்டும். ஆனால், எனக்கு ஒரு ஆச்சரியம்" என்றேன்.

"என்ன, சக்ரவர்த்தி?"

"இவ்வளவு ஆழமாக நூல் இயற்றுகிற தங்களுக்கு விகடகவி என்றும் விதூஷகன் என்றும் பெயர் ஏற்பட்டிருக்கிறதே, அது எப்படி?" என்றேன்.

"நான் பண்டிதர்களின் மத்தியில் இருக்கும்போது அவர்களுக்குச் சமமாக நடந்து கொள்கிறேன். பாமரர்களுடன் இருக்கும்போது பாமரனாக இருக்கிறேன். அவர்களுக்காக வேடிக்கைக் கதைகள் சொல்கிறேன். அதுதான் காரணம்," என்றார் ராமகிருஷ்ணா.

"இப்படியே எப்போதும் இருங்கள்," என்று சொல்லி அனுப்பிய பின்னர், அம்மாவின் காலில் விழுந்து வணங்கி ஆசி பெற்றேன்.

கண்களில் நீர் துளிக்க, "கிருஷ்ணா, உன் மனோரதம் எல்லாமே நல்லபடி நிறைவேறும். காயத்ரி எல்லா விவரமும் சொன்னாள். போருக்குப் புறப்படுகிறாய் எனபதை நினைத்துக் கவலைப்படுவதா, கல்யாணம் செய்து கொள்ளப் போகிறாய் என்பதை நினைத்து ஆனந்தப் படுவதா என்று எனக்குப் புரியவில்லை" என்றார்.

அடுத்த தினம் அவருடன் வியாசதீர்த்தரின் மடத்துக்குப் போய் ராஜகுருவிடம் ஆசிபெற்றேன்.

அதுவரை காயத்ரியோ, ஸ்ரீரங்கப்பட்டணம் மன்னரோ, அவருடைய படையோ, குமாரியோ வரக் காணோம்.

துங்கபத்ரா நதியின் மறு கரைக்குச் சில வீரர்களைச் சாரணர்களாக முன்னதாய் அனுப்பி வைத்தார் தளபதி பெம்மசானி ராமலிங்கம். ஐந்து காதச் சுற்றளவுக்குச் சென்று, அங்குள்ள ஆட்களையும் தானியக் கிடங்குகளை யும் கால்நடைகளையும் கவர்ந்து எதிரிக்கு எதுவும் கிடைக்காமல் செய்ய வேண்டியது அவர்களுடைய வேலை. அதை அவர்கள் திறம்படச் செய்தார்கள்.

அப்போதும் ஸ்ரீரங்கப்பட்டணம் கோஷ்டி வந்து சேரவில்லை.

போருக்குப் புறப்பட வேண்டிய நாளைக் குறித்துத் தந்தார்கள் சாஸ்திர வல்லுநர்கள்.

அப்போதும் அவர்கள் வரவில்லை.

சாம்ராஜ்யத்தின் க்ஷேமத்தைக் கருதிச் சான்றோர்கள் வேள்விகள் நடத்தினார்கள்.

அப்போதும் அவர்கள் வரவில்லை.

விரூபாட்சர் கோயிலுக்கும் ரங்கநாதர் கோயிலுக்கும் சென்று வழிபாடு நடத்தினேன். கிருஷ்ணஸ்வாமி ஆலயத்துக்கும் ராமஸ்வாமி ஆலயத்துக்கும் விட்டல ஸ்வாமி ஆலயத்துக்கும் சென்று பூஜைகள் செய்தேன்.

அப்போதும் அவர்கள் வரவில்லை.

"இனிமேல் ஸ்ரீரங்கப்பட்டணம் படைகளுக்காக நாம் காத்திருக்கத் தேவையில்லை" என்றேன் அப்பாஜியிடம். "எல்லாச் சிற்றரசர்களும் அமரநாயகர்களும் தங்கள் தங்கள் பங்குக்கான படைகளை அனுப்பிவிட்டார்கள். நமக்குச் சொந்தமாக உள்ளதையும் சேர்த்தால், இரண்டு லட்சம் காலாட்படையினரும் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட

குதிரைகளும் ஐந்நூறு யானைகளும் இருக்கும். இது போதும். நாம் புறப்படலாம்" என்று நான் சொன்னதும், இதற்கு மேலும் காத்திருப்பதில் அர்த்தமில்லை என்று அப்பாஜியும் உணர்ந்தார்.

சம்பிரதாயப்படி, அரண்மனைக்கு முன்னிருந்த மைதானத்தில் மூன்று குதிரைகள் நிறுத்தப்பட்டிருந்தன. கண்ணைப் பறிக்கும் வகையில் அற்புதமாக அலங்காரம் செய்யப்பட்டிருந்த அந்தக் குதிரைகளுக்குப் பின்னே பதினொரு யானைகள் நின்றிருந்தன. அவற்றின் முகபடாமும் மெத்தை வைத்த ஆசனமும் தங்கச் சரிகையிட்ட விரிப்புகளும் சூரிய ஒளியில் பளபளத்தன. யானைகள் அசையும்போதெல்லாம் இருபுறமும் தொங்கிய மணிகள் 'கணீர் கணீ' ரென்று ஒலித்தன.

அசுவ பூஜையும் கஜபூஜையும் நடந்தேறின.

அந்தணர் ஒருவர் தங்கப் பாத்திரத்தில் ஏராளமான ரோஜாப் பூக்களை நிரப்பி எடுத்து வந்தார். இரண்டு கையாலும் புஷ்பங்களை அள்ளி, முதலில் குதிரைகளின் மீதும் பின்னர் யானைகளின் மீதும் வாரியிறைத்தேன். பிறகு பன்னீர்ச் செம்பைத் தந்தார். மணக்க மணக்கப் பன்னீர் தெளித்தேன்.

'பேரரசர் வாழ்க!' என்ற வாழ்த்தொலி வானைப் பிளந்தது.

அதே சமயம், 'வந்துவிட்டார்கள்! வந்து விட்டார்கள்!' என்ற இரைச்சலும் கேட்டது.

ஸ்ரீரங்கப்பட்டணம் மன்னரான குமார வீரய்யா, தன் மகள் திருமலாம்பாவுடன் பல்லக்கில் வந்து சேர்ந்தார். திருமணத்துக்கான சீர்வரிசைகளைச் சுமார் நூறு ஆட்கள் சுமந்து வந்தார்கள்.

அவர் பின்னே எண்ணாயிரம் காலாட்படையினரும் நானூறு குதிரைகளும் இருபது யானைகளும் வருவதாகத் தெரிவித்தார் அப்பாஜி.

திருமலாம்பா ஒரு விநாடிதான் என் கண்ணில் பட்டாள். பல்லக்கிலிருந்து இறங்கியவள் வேகமாக என் அன்னையும் மற்ற அரச குடும்பத்துப் பெண்களும் நின்றிருந்த இடத்துக்குச் சென்று அவர்கள் மத்தியில் மறைந்து விட்டாள். காயத்ரி மட்டும் என்னை நோக்கி லேசாகக் கையை உயர்த்திச் சிரித்தாள்.

குமார வீரய்யா என்னை நெருங்கி, "சக்ரவர்த்தி மிகவும் மன்னிக்க வேண்டும். காவிரியில் திடீரென்று வெள்ளம் வந்துவிட்டதால், அது வடியும்வரை காத்திருக்கும்படி நேர்ந்துவிட்டது" என்றார்.

அவருடைய பணிவான பேச்சும் சாந்தமான தோற்றமும் என் மனத்திலிருந்த விறைப்பைத் தளர்த்தின. "அதனாலென்ன, பாதகமில்லை. கடைசி விநாடியிலாவது வந்து சேர்ந்தீர்களே" என்றேன்.

"திருமணத்துக்கு எந்த அவசரமும் இல்லை. சக்ரவர்த்தியின் திக்விஜயம் முடிந்து இங்கே திரும்பிய பிறகு அமோகமாகக் கொண்டாடலாம்" என்றார் அவர்.

ஆனால் திருமணத்தைத் தள்ளிப்போட அப்பாஜிக்கு விருப்பமில்லை. நான் மனம் மாறி விடுவேன் என்று பயந்தார் போலும். அன்னையாரிடம் சென்று அவசரமாக ஆலோசனை செய்த பின் என்னிடம் வந்து, "இன்று மிகவும் நல்ல நாளாக இருக்கிறது. நாளை விடிகாலைதான் நாம் புறப்படப்போகிறோம். அதனால், இன்றே திருமணத்தை நடத்தி விடலாம் என்று தோன்றுகிறது" என்றார்.

வாக்குக் கொடுத்துவிட்டு ஏமாற்றுகிற எண்ணம் எனக்குக் கிடையாது என்பதை நிரூபிப்பதற்காக வேண்டி நானும் சரியென்று சம்மதித்தேன்.

அன்று மாலை சாஸ்திரோக்தமாய்ப் பாணிக்கிர கணம் செய்து கொண்டேன் திருமலாம்பாவை. அவள் கையைப் பற்றிக்கொண்டு அக்னியை வலம் வந்த போதெல்லாம் என் வாய் 'சின்னாதேவி, சின்னாதேவி' என்றே ரகசியமாக உச்சரித்துக் கொண்டிருந்தது.

மக்களுக்குத்தான் பெரும் ஏமாற்றம். விஜயநகர சாம்ராஜ்யத்தின் சக்ரவர்த்திக்கு நடக்கும் திருமணம் இவ்வளவு சாதாரணமாக முடிந்துவிட்டதே என்று,

இரவு வந்தது. பள்ளியறையில் நானும் திருமலாம்பா வும் தனித்து விடப் பட்டோம். ஹம்ஸ தூளிகா மஞ்சத்தில் அமர்ந்தேன். இந்த ராஜகுமாரியிடம் என்ன பேசுவது, எப்படிப் பேசுவது என்று தெரியவில்லை. குழம்பித் தவித்தேன்.

பாதாதி கேசம் பவழமும் முத்தும் பொன்னும் மணியும் துலங்க, ஜகன்மோகினியாகத் திகழ்ந்தாள் திருமலாம்பா. அவள் முகத்தில் இனிமை தெரிந்தது. அசாதாரணமான உறுதியொன்றும் தென்பட்டது.

என் கட்டிலுக்கு எதிரே இன்னொரு கட்டிலும் இருந்தது. எப்போதாவது அன்னையாரோ அல்லது அரச குடும்பத்துப் பெரியவர்களோ வந்தால் உட்காருவதற்காகப் போடப்பட்டிருந்த சிறிய மஞ்சம்.

திருமலாம்பா என் காலில் விழுந்து நான்கு முறை நமஸ்காரம் செய்தாள். பிறகு ஒரு திண்டும் போர்வையும்

எடுத்துக் கொண்டு அந்தச் சிறிய கட்டிலில் போய்ப் படுத்துக் கொண்டாள்..

"ராஜகுமாரி... என்று திகைத்தேன்.

திருமலாம்பா புன்சிரிப்புடன், "இன்னும் கொஞ்ச காலத்துக்கு இப்படித்தான், சக்ரவர்த்தி. சின்னாதேவியைத் தாங்கள் அடையும் வரை இப்படியே இருந்து கொள்கிறேன். தங்கள் மனத்துக்கு எந்தச் சங்கடமும் வேண்டாம்" என்றாள்.

**(முதல் பாகம் நிறைவடைகிறது)**

Printed By : **BALAJI OFFSET PRINTERS.**
Chennai - 106. Ph: 4759094, 4751794.